காளிதாசன் காவியங்கள்

# சாகுந்தலமும் மேகதூதன்

(மூலம்: ஸம்ஸ்கிருதம்)

தமிழாக்கியவர்:
க. சந்தானம், M. A., B. L.,
லெப்டினெண்ட் கவர்னர், விந்தியப் பிரதேசம்

சுந்தரப் பிரசுராலயம்
193, மவுண்ட்ரோடு, சென்னை - 2.

1953

முதல் பதிப்பு—1953.

காபிரைட் பதிவுசெய்தது

அச்சடிப்பு :
ஹோர் & கம்பெனி,
சென்னை—1.

# முகவுரை

அமரகவி காளிதாசரின் கீர்த்தி உலகெங்கும் பரவியுள்ளது. எக்காரணத்தாலோ தமிழில் மட்டும் அவரது கலைமணிகள் காணப்படவில்லை. பழைய தமிழ்க் கவிகள் பக்தர்கள். இராமாயணம், மகாபாரதம் முதலிய புராணங்களிலேயே அவர்களின் கவனம் சென்றது. காளிதாசர் நாஸ்திகர் அல்ல. ஆயினும் அவர் கவிதையும், கலையும், அழகு, அன்பு, இன்பம் என்ற லௌகீக லக்ஷியங்களையே நாடி நிற்பன.

இப்புத்தகத்தில், காளிதாசரின் நூல்களில் மிகச் சிறந்த கணையாழி சாகுந்தலமும், மேகதூதனும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. உலக நாடகங்களுக்குள் சாகுந்தலம் முதன்மை யான தென்றால் மிகையாகாது. அவ்வாறே இனிய கற்பனைச் சித்திரங்களில் மேகதூதனுக்கு சமானமுள்ள கவிதை காண்ப தரிது.

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதர வடமொழி காவியங்களைப்போல் காளிதாசரின் நூல்களை மொழி பெயர்ப்பது எளிதல்ல. மரவுரியுடன் காட்டில் சகுந்தலையை வர்ணிக்கும் சுலோகத்தில் காளிதாசர் அவளை ' வெட்டாத வைரக்கல் ' என்று கூறுகிறார். வேதங்களும், புராணங்களும் வெட்டாத வைரக் குன்றுகள் போல்வன. காளிதாசரின் நூல்களோ நிபுண கலைஞன் பலவித மணிகளை வெட்டி, இழைத்துக் கோர்த்துக் கட்டிக் கலா தேவிக்குச் சூட்டிய அணிகலங்கள். அவற்றை சாரங் குன்றாமல் வேறு பாஷைகளில் மொழி பெயர்ப்பது சாத்தியமல்ல.

சில ஆண்டுகளுக்கு முன் பிரசுரமான பவபூதியின் ‘ உத்தர ராம சரித’த்தின் மொழி பெயர்ப்பைப் போலவே இப்புத்தகத்தின் நோக்கமும் இரண்டு. வடமொழி தெரியாத தமிழர் காளிதாசர் கற்பனையையும், கவிதையையும் ஓரளவு அனுபவிக்கவேண்டு மென்பது முதல் நோக்கம். வடமொழி சிறிது கற்றவர்கள், முதல் நூலை வைத்து அதன் ரசத்தைப் பருக உதவக் கூடிய பதவுரையாக இருக்கவேண்டும் என்பது இரண்டாவது நோக்கம். ஆதலால் கூடிய வரையில் காளிதாசரின் கருத்தையும் சொல் லையும் நேரடியில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சிற்சில இடங்களில் பதத்தை தமிழ்ப் படுத்துவதால் கருத்துப் பிழையாகுமென்றோ, ரசம் மிகவும் குன்றிவிடு மென்றோ தோன்றிய பொழுது கருத்தையும், ரசத்தையும் நாடி மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

கணையாழி சாகுந்தலம் வசனம் சுலோகம் இரண்டும் கூடி யுள்ளது. கதை பெரும்பாலும் வசன நடையிலுள்ளது. நடுவில் உணர்ச்சிகளும், பாவனைகளும் விசித்திர வர்ணனைகளும் அழகு மிகுந்த சுலோகங்களால் அமைக்கப்பட்டுள்ளன. வசனத்தை மொழி பெயர்ப்பதில் அதிகக் கஷ்டமில்லை. சுலோகங்களைத் தமிழ்ப் பாக்களாகச் செய்தால் பொருத்தமாக இருக்கலாம். அது காளிதாசரைப் போன்ற கவியால்தான் முடியும். தவிர கருத்துச் சிறிதும் திரியாமல் மகாகவி ஒருவனாலும்கூட அவ்வாறு செய்ய இயலுமோ வென்பது சந்தேகம். அது எப்படி இருப்பினும் எனக்கு அவ்வித ஆற்றல் இல்லாமையால், சுலோகத்தையும் வசன நடையில் மொழி பெயர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. முதல் நூலில் சுலோகங்கள் என்பதைக் குறிப்பிட பெரிய எழுத் துக்களில் அச்சிடப்பட்டிருக்கிறது.

‘மேகதூதன்’ ஓர் இணையற்ற கற்பனை நூல். அதில் ஒவ்வொரு சுலோகமும் ஒரு அரிய ஓவியத்திற்கு உகந்த கற்பனைச் சித்திரமாகும். ஆதலால் சுலோகத்தின் பதவுரையோடு அதன் கற்பனைச் சித்திரத்தில் பதிந்து கிடக்கும் இனிய கருத்துக்களை ‘சித்திர விளக்கம்’ என்ற குறிப்பின் வாயிலாக வெளியிட

முயற்சி செய்திருக்கிறேன். 1942-ம் வருஷம் திருச்சி சிறையில் இது எழுதப்பட்டது. தனியாகப் பிரசுரிப்பதைக் காட்டிலும், 'சாகுந்தல'த்தோடு சேர்த்துப் பிரசுரிப்பது நலமென்று தோன்றியது. நாடகத்தை மொழி பெயர்க்க அவகாசம் சமீபத்தில்தான் கிடைத்தது.

ஒரு நாட்டின் செல்வப் பெருக்குக்கு விவசாயம், தொழில், வியாபாரம் முதலிய பல முயற்சிகள் தேவை. அவ்வாறே ஒரு பாஷையின் வளர்ச்சிக்கும் பல துறைகளைத் தேடுவது அவசியம். இதர மொழிகளில் அமைந்த உயர் நூல்களை மொழி பெயர்ப்பது ஒரு முக்கியமான வழியாகும். அதிலும் பாரத தேசத்தின் கலைகளுக் கெல்லாம் என்றும் வற்றாத கங்கோத்திரியாக இருக்கும் வடமொழியின் நூல்களைத் தமிழர் தம் சொந்த சொத்தாக்கிக் கொள்வது மிகவும் அத்தியாவசியமானது. அதனால் நமது இனிய தமிழ் ஓங்குவது மட்டுமன்றி, தமிழர் பாரத நாட்டின் முன்னணியில் நிற்பதற்கும் சாதனமாகும். இதில் என்ன குற்றங் குறைகள் இருப்பினும், தமிழ்த் தொண்டே இதன் நோக்கமென்று தமிழன்பரனைவரும் ஏற்பார்களென்று நிச்சயமாக நம்புகிறேன்.

ரேவா.
14-4-53

க. சந்தானம்.

# கவண யாழி சாகுந்தலம்

---

## முதல் அங்கம்.

ஆதிமூலம் ஆதியில் படைத்த நீர்; விதி வழி வழங்கிய அவிசு ஏற்று தெய்வம் சேர்க்கும் தீ; வேள்வி செய்யும் வேதியன்; இரவு பகல் வகுக்கும் சந்திர சூரியர்; ஓசைக்கு உறைவிடமாய் எங்கும் ஓங்கிய வான்; உயிரின் கருப்பை என்று பெரியோர் புகழும் பூமி; ஜீவலோகத்தின் மூலாதார வாயு; இவ்வெண்ணு நவேடுத்து ஐம்பொறி முன் தோன்றும் ஈசன் நமக்கு அருள் புரிக.

(மங்கள முடிவில்)

**சூத்திரதாரன் :** (திரையை நோக்கி) செல்வி, நாடகமேடையின் ஜோடனை முடிந்து விட்டால் இங்கு சற்று வருவாய்.

**நடிகை :** (நுழைந்து) ஐய, இதோ வந்தேன். மேலே நடக்க வேண்டியதைப் பற்றிக் கட்டளை இடுங்கள்.

**சூத்திர :** செல்வி! ஆசைக்கு அதிகமாகவே பெரியோர் குழாம் கூடியுள்ளது. காளிதாசன் இயற்றியுள்ள புதிய நாடகத்தை ஆடி இவர்களை நாம் கௌரவிக்க வேண்டும். நாடக பாத்திரங்களைச் சரிவரத் தயாரிக்க முயற்சி செய்வாய்.

**நடிகை :** தங்களால் ஏற்கெனவே ஏய எல்லாம் நன்கு ஏற்பாடாகிவிட்டது. எவ்விதக் குறையும் இல்லை.

**சூத்திர :** செல்வி! உண்மையைக் கூறுவேன்.

அறிஞர் மகிழ்ந்து புகழும்வரை, கலைத்தேர்ச்சி குறைவு அற்றதாகக்கருதேன்; பெரிய பயிற்சியுடையோருக்கும் சிறிது மனத்தளர்ச்சி இருப்பது இயற்கையே.

**நடிகை :** *ஆமாம். அப்படித்தான், ஐயனே! இனிமேல் செய்ய வேண்டியதற்கு உத்தரவு இடுங்கள்.*

**சூத்திர :** *வேறு என்ன? இனிய கீதத்தால் இக்குழாத்தின் மனத்தை மலரச் செய்வதே.*

**நடிகை :** *ஐய, எப்பருவகாலத்தைப் பற்றிப் பாடவேண்டும்?*

**சூத்திர :** *சமீபத்தில் தொடங்கிய, இன்னும் சகிக்கக்கூடிய இக் கோடை மீது பாடுவாய். இப்பொழுதோ,*

நீரில் மூழ்கிக் குளித்தால் குதூகலம்; வன மலர் மணங்கமழும் காற்று; நிழலில் படுத்தால் இனிய தூக்கம்; பகல் முடிந்தால் பேரானந்தம்.

**நடிகை :** *அப்படியே.*

வண்டினம் மெதுவாக முத்தமிட்ட தாது அவிழ் மெல்லிதழ் மலரைப் பண்புடன் தொடுத்து இள மங்கையர் அன்புடன் கொண்டையில் அணிவர்.

**சூத்திர :** *செல்வி! மிகவும் நன்றாகப் பாடினாய். நாடக சாலை முழுதும் உன் கீதத்தின் கவர்ச்சியில் லயித்து சித்திரத்தில் தீட்டப்பட்டதுபோல் ஸ்தம்பித்து இருப்பதைப் பார்! ஆனால் தற்சமயம் எந்த நாடகத்தை நடித்து இக்குழாத்தை மகிழ்விப்போம்?*

**நடிகை :** *கணையாழி சாகுந்தலம் என்னும் நாடகம் போட வேண்டும் என்று தாங்களால் முதலிலேயே உத்தரவு இடப்படவில்லையா?*

**சூத்திர :** *செல்வி! சமயத்தில் ஞாபக மூட்டினாய். இத்தருணத்தில் முற்றிலும் மெய் மறந்தேன். எனெனில்,*

உன் கானத்தின் ராகவேகம் என் மனத்தை வெகு தூரம் கவர்ந்து சென்று விட்டது; இதோ துள்ளி போடும் புள்ளி மானின் வேகத்தால், துஷ்யந்த மன்னன்போலவே.

(முடிவு)

## காட்சி இரண்டு.

(துஷ்யந்த மன்னன் வில்லம்புடன் வேட்டை ஆடும் கோலத்தில் பாகனுடன் ரதத்தில் நுழைகிறன்)

**பாகன் :** (மன்னனையும் மானையும் நோக்கி)

*திருவாளா !*

புள்ளி மான் மீது பாய்ந்த பார்வை ;
கையில் அம்பு தொடுத்த வில் ;
சூல் பிடித்த சிவனே நேரில் வந்து
வேட்டை ஆடுவது போல் காட்சி அளிக்கின்றீர்.

**அரசன் :** *பாகா ! இப்புள்ளி மான் நம்மை வெகு தூரம் இழுத்து வந்து விட்டது. இன்னும் இதோ பார்.*

அழகாகக் கழுத்தை வளைத்து
ரதத்தை நோக்கிய கண்ணுடன்
முன்னல் துள்ளிப் பாய்கின்றது.
பாணத்தின் பயத்தால் பின்னுடலைப்
பெரும்பாலும் சுருக்கி முன்னுடலில்
நுழைகின்றது. களைப்பால் திறந்த வாயிலிருந்து
பாதி புசித்த புல் வழி நெடுகே வீழ்ந்துளது ;
தாவித் தாவிப் போவதால் வானத்தில் பெரிதும்
பூமியில் சிறிதும் செல்கின்றது.

(ஆச்சரியத்துடன்)

*ஆகா ! ஒரேயடியாகப் பாய்ந்து பார்வைக்குப் புறம் பாகி விடும் போல் தோன்றுகின்றது.*

**பாகன் :** *திருவாளா ! தரை மேடு பள்ளம் ஆனதால் கடிவாளத்தை இழுத்து ரதவேகத்தைக் குறைத்தேன். அதனல் மானுக்கும் நமக்கும் உள்ள தூரம் சிறிது அதிகரித்தது. இப்பொழுது சமதரை வந்து விட்டதால் நெருங்குவது அரிதல்ல.*

**அரசன் :** அப்படியானால், கடிவாளத்தை விட்டு விடு.

**பாகன் :** தங்கள் ஆணைப்படியே! (ரத வேகத்தைக் கவனித்து) திருவாளா! இதோ பாருங்கள்.

கடிவாளம் தளர்ந்தவுடன் முன்னுடலை மிகவும்நீட்டி
பிடரி மயிர் அசைவற்று நிற்க
காதுகள் விறைத்து மேல் நோக்க
தம் குளம்புகள் எழுப்பிய தூசி
கூடத் தாண்டிச் செல்ல முடியாமல்
மான் வேகத்தைப் பொறுக்காதவை
போல் பறக்கின்றன இக் குதிரைகள்.

**அரசன் :** உண்மை. கதிரவனுடைய பச்சைக் குதிரைகளைத் தோற்கடிப்பவைபோல் செல்லுகின்றன நமது புரவிகள்.

தொலைவில் சிறிதாகத் தோன்றியது
நொடியில் நெருங்கிப் பெரிதாகின்றது;
நடுவில் இடவெளி மறைந்து பிரிந்த பொருள்கள்
விநாடியில் காட்டி விடுகின்றன.
இயற்கையில் வளைந்த உருவம்
நோக்குக்கு நேராகப் புலப்படுகின்றது.
தேர் வேகத்தால் எதுவும் கணங்கூட
அருகிலும் இல்லை, விலகியும் இல்லை.
பாகா, இதோ பார். இம்மானை வீழ்த்துகின்றேன்.

(அம்பு எய்தத் தொடங்குகின்றான்.)

(திரைக்குள்)

ஓ, மன்னா! ஆசிரம மான் இது. கொல்லத்தகாது! கொல்லலாகாது!!

**பாகன் :** (காது கொடுத்துக் கேட்டு, உற்றுநோக்கி) திருவாளா ! தங்கள் அம்புக்கும் புள்ளிமானுக்கும் நடுவில் தாபசர்கள் தோன்றியுள்ளனர்.

**அரசன் :** (பரபரப்புடன்) அப்படியானால் குதிரைகளை நிறுத்து.

**பாகன் :** அப்படியே ! (ரதத்தை நிறுத்துகிறான்.)

(இரண்டு சகாக்களுடன் ஒரு தாபசன் நுழைகிறான்.)

**தாபசன் :** (வலது கையைத் தூக்கி) அரசனே ! ஆசிரம மான் இது. கொல்லத்தகாது, கொல்லலாகாது !

பஞ்சுக் கிடங்கில் தீ வைக்கலாகாது அல்லவா?
அதே போல் மெல்லிய மானுடலில்
அம்பெய்தல் கூடவே கூடாது ;
வச்சிரம் போன்ற கொடிய கூர் அம்புக்கு
பசலைப் புள்ளிமான் இன்னுயிர்
இலக்காதல் தகுமோ, நீயே உரைப்பாய் !
ஆதலின், பூட்டிய சரத்தை மீட்டுவாய் ;
துன்பம் தீர்க்கவே அரசன் ஆயுதம் ;
மாசில்லாரை மாய்க்க அல்ல.

**அரசன் :** இதோ மீட்டினேன். (அப்படியே செய்கிறான்.)

**துறவி :** புருகுல விளக்கான உங்களிடம் இப்பணிவு சகஜம்.

புகழ் பெற்ற புரு வம்சத்தில் பிறந்த
நீ இவ்விதம் நடப்பது உசிதமே ;
உன்னைப் போலவே சற்குணங்கூடி
மன்னர் மன்னனாகும் மகனை அடைவாய்.

**மற்றவர்:** (கைகளைத் தூக்கி) சக்ரவர்த்தி மகனை அவசியம் அடைக!

**அரசன் :** (கை கூப்பி) வேதியர் வாக்கை வந்தனத்துடன் ஏற்றேன்.

**துறவி :** அரசே! சமிதை சேகரிக்கப் புறப்பட்டு வந்தோம். இதோ மாலினி நதி தீரத்தில் குலபதி கண்வ முனிவரின் ஆசிரமம் தென்படுகிறது. வேறு வேலைக்குக் குந்தகம் இல்லாவிட்டால் அங்கு சென்று விருந்து உபசாரம் பெற்றுப் போக வேண்டும். தவிர,

தவச் செல்வரின் இனிய கருமங்கள்
தடையின்றி நடை பெறுவதைக் கண்டு
வில் நரம்பின் தழும்பு பட்ட என் கை
உலகைக் காப்பது எவ்வகை என்று உணர்வாய்.

**அரசன் :** குலபதி இப்பொழுது இங்கே இருக்கிறாரா?

**துறவி :** தற்சமயம் விருந்தோம்பலைத் தன்மகளிடம் ஒப்படைத்து விட்டு அவளுடைய கிரஹம் பிரதிகூலமாக இருப்பதற்கு சாந்தி செய்ய சோம தீர்த்தம் சென்றிருக்கிறார்.

**அரசன் :** சரி. அவளைக் காண்கிறேன். எனது பக்தியை அறிந்து அவளே மாமுனிவருக்கு அறிவிப்பாள்.

**துறவி :** இனி நாம் போகவேண்டும். (சீடர்களோடு போகிறான்)

**அரசன் :** பாகா! குதிரைகளைப் போகவிடு. தூய ஆசிரம தரிசனத்தால் நமது ஆத்மாக்களைப் புனிதப் படுத்துவோம்.

**பாகன் :** தங்கள் ஆணைப்படியே.

(மீண்டும் இரதத்தை ஓட்டுகிறான்.)

**அரசன் :** (சுற்றிலும் பார்த்து) பாகா! ஒருவரும் கூறாமலே இது தபோவனத்தின் சுற்றுப் பிரதேசம் என்று தெளிவாகிறது.

**பாகன் :** எங்ஙனம்?

**அரசன் :** உனக்குக் கண் இல்லையா? இதோ.

கிளிப் பொந்துகளிலிருந்து நழுவிய புல்லரிசிகள் மரத் தடிகளில் வீழ்ந்து சிதறிக் கிடக்கின்றன; எண்ணெய் கசிந்து, இலுப்பைக் கொட்டை உடைப்பதைப் பாறைகள் பறைசாற்றுகின்றன; அச்சமில்

லாததால் இச்சைப்படி நடமாடும் மான்கள் ஒதுங்காது ஓசை பொறுக்கின்றன. நனைந்த மரவுரிகளிலிருந்து சொட்டிய நீர்க் கோடுகள் நீரோடைகளுக்கு வழிகாட்டுகின்றன.

**பாகன் :** *அனைத்தும் பொருத்தமானதே.*

**அரசன் :** *(சிறிது தூரம் சென்று) மேலும்,*

காற்றால் ஊசலாடும் வடிகால் வாரிகள் வனமரங்களின் வேர்களைக் கழுவுகின்றன; ஓமப் புகைமூடி தளிர் நிறங்கள் மங்குகின்றன; குசைப் புல்லறுத்த உபவன வெளிகளில் கூச்சமின்றி மான் குட்டிகள் நிம்மதியாக மேய்கின்றன.

*சூதனே! தபோவன வாசிகளுக்குத் துன்பம் தொந்திரவு கூடாது. இரதத்தை இங்கேயே நிறுத்திவை. கீழே இறங்குகிறேன்.*

**பாகன் :** *இதோ நிறுத்தினேன். மன்னரவர்கள் இறங்கலாம்.*

**அரசன் :** *(இறங்கி) ஆடம்பரமின்றி, வணக்கத்துடன், தபோவனங்களில் புகவேண்டும். (தேர்ப்பாகன் கையில வில், ஆபரணங்களைக் கொடுக்கிறான்.) நான் ஆசிரமவாசிகளைப் பார்த்துத் திரும்புமுன் குதிரைகளைக் குளிப்பாட்டி வை.*

**பாகன் :** *திருவாளர் ஆணைப்படியே.*

*(பாகன் போகிறான்.)*

**அரசன் :** *இதோ ஆசிரம மைதானம்; உள்ளே போவேன்.*

*(நுழைந்து சகுனம் நோக்கி)*

அமைதி நிறைந்த ஆசிரமம் இது; என் கையோ துடிக்கிறது; இதன் பலன் இங்கு எங்ஙனம்? ஆயினும் விதிப்படி வருவனவற்கு வாயில்கள் எங்கும் உள.

*(திரைக்குள்)*

*இதோ, இதோ, தோழிகாள்.*

**அரசன் :** (காது கொடுத்துக் கேட்டு) அடே! தென்புற மாச்சோலை யில் பேச்சு வார்த்தை கேட்கின்றது. (சுற்றிப் பார்த்து) ஆகா! இந்தத் தாபச கன்னியர் தங்கள் வடிவத்தை யொத்த நீர்க்குடங் கொண்டு செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வருகிறார் போலும். (உற்றுப் பார்த்து) ஆகா, இவர் தோற்றம் மிகவும் வசீகரம்.

இவ்வனவாசிகளின் உருவம் மாளிகையில் துர்ல பமே! ஆதலின் பூங்காவனக் கொடி வனலதையால் தோற்றதாகும் அல்லவா!

இத தருவின் நிழலில் இருந்து அவர்கள் வருகையை எதிர் பார்ப்பேன். (அங்கேயே இருந்து பார்க்கிறான்.)

(முன் கூறிய பணியில் சகுந்தலை இரு தோழிகளுடன் நுழைகிறாள்)

**சகு :** இதோ, இதோ, தோழிகாள்.

**அனசூயா :** சகி சகுந்தலா, உன்னைக் காட்டிலும் தந்தை காசியபருக்கு ஆசிரம மரங்களிடம் அதிக அன்பு என்று எண்ணுகிறேன்.

**சகு :** இது தந்தை ஆணை மட்டும் இல்லை இவைகளிடம் எனக்கு சகோதரி வாஞ்சை உண்டு. (மரத்திற்கு நீர் வார்க்கிறாள்.)

**அரசன் :** கண்வ முனிவர் பெண் இவள் தானா? இந்தக்காசியப முனிவருக்கு வக்ர புத்தி போலும். இல்லையேல் இவளை இந்த ஆசிரம வேலையில் நியமிப்பாரா?

இயற்கையாகவே மனத்தைக் கவரும் இம்மெல்லி யளைத் தவப்பணி செய்விக்க விரும்புவரேல், நீலத் தாமரையின் மெல்லிதழ் முனையால் சமிதைக் கொடி யைச் சேதிக்க முயலுவதையொக்கும்.

சரி. தருவின் மறைவில் இருந்தே இவளைக் கூச்சமின்றிப் பார்க்கிறேன்.

(அப்படியே செய்கிறான்.)

**சகு :** சகி அனசூயே! மரவுரி ரவிக்கையைக் கருணையின்றி கெட்டியாகக் கட்டிவிட்டாள் பிரியம் வதை ; அதைச் சிறிது தளர்த்தி விடு.

**அன :** அப்படியே. (தளர்த்துகிருள்.)

**பிரி :** (புன்னகையுடன்) இதற்கு தனத்தைப் பெருக்கும் உன் யௌவனத்தை அல்லவா கண்டிக்கவேண்டும் ?

**அரசன் :** இவள் உடலுக்கு மரவுரி முற்றிலும் தகாது. ஆனால் இது கூட இவள் அழகை வளர்க்காமல் இல்லை.

பாசி படர்ந்த போதிலும்
கமலம் கண்ணைக் கவரும் ;
மதியில் காணும் மலினக் குறியும்
அதன் பேரழகைப் பெருக்கும் ;
மரவுரி தரித்தாலும் இச்சிறுமி
மனத்தை மயக்கும் மோகினியே ;
நல்லுருவத்துக்கு எல்லாப் பொருளும்
அலங்காரமாவது ஆச்சரியமே !

**சகு :** காற்றில் அசையும் தளிர் விரல்களால் என்னை அழைக்கின்றது மகிழமரம். அதைக் கவனிக்கிறேன். (சுற்றுகிருள்.)

**பிரி :** தோழி, சகுந்தலா ! அங்கேயே நிமிஷம் நில்.

**சகு :** எதற்காக ?

**பிரி :** உன்னுடன் அம்மகிழமரம் கொடியுடன் கூடியது போலத் தோன்றுகிறது.

**சகு :** இதனால் தான் உனக்குப் பிரியம் வதை என்ற பெயர்.

**அரசன் :** இனிமையோடு உண்மை கூடியுள்ளது பிரியம் வதை கூறியது.

சேந்தளிர் நிறம் அதரம் ;
இளங்கிளை போல்வன கைகள் ;

மலர்போல் மலரும் இளமை
அங்கமெல்லாம் பொங்கி வழிகின்றது.

**அன :** *சகி சகுந்தலா, இந்த இள மாமரத்தைச் சுயம் வரம் செய்து கொண்ட மல்லிகைக் கொடிக்கு வன வெண்ணிலா வென்று பெயர் சூட்டினாய் அல்லவா ? அதை என் மறந்து விட்டாய் ?*

**சகு :** *அதற்குமுன் என்னையே மறப்பேன், தோழி. இவ்வினிய பருவகாலத்தில், இத்தருவும் கொடியும் கூடித் தனிப் பெருமை பெற்றுள்ளன. முதல் மலர் பூத்திருக்கிறது. வெண்ணிலா புதிதாகத் தளிர்த்துத் தழுவுவதற்குத் தகுந்தது இளமாந்தரு.*

**பிரி :** *அனசூயா ! வெண்ணிலா மீது சகுந்தலைக்கு என் இவ்வளவு கவனம் என்று உணர்ந்தாயா ?*

**அன :** *எனக்கு ஒன்றும் தோன்றவில்லை; நீயே சொல்.*

**பிரி :** *வெண்ணிலாவுக்கு உரிய நாயகன் கிடைத்து விட்டான். தனக்கு உரிய நாயகன் எப்பொழுது கிடைப்பானோ வென்று தான்.*

**சகு :** *இது உன் மனத்தின் மனோரதமே.* (குடத்தைக்கவிழ்க்கிறாள்.)

**அரசன் :** *ஒருவேளை குலபதிக்கு மாற்று வர்ணத்தில் பிறந்த பெண்ணாய் இருப்பாளோ இவள் ? இதில் ஐயத்திற்கு இடம் இல்லை.*

அவசியம் அரச வகுப்பிற்கே உகந்தவள் இவள்,
இல்லையேல் என்மனம் இவளை விரும்பாது ;
நல்லோருக்கு ஐயம் பிறக்கும் காரியங்களில்
அவருள்ளத்தின் போக்கே மேற்கோள்.

*ஆயினும் இவளது வரலாற்றை நிச்சயமாக அறிவேன்.*

**சகு :** (பரபரப்புடன்) *ஐயோ ! நீர் வார்ப்பதால் கலைக்கப்பட்டு மல்லிகைக் கொடியை விடுத்து வண்டு என்னைச் சுற்றுகின்றது.*

(வண்டால் துன்புறுவதாகக் காணப்படுகிறாள்.)

**அரசன் :** (ஆசையுடன் நோக்கி) இவளது துன்பமும் இன்பந் தருகிறது.

வண்டு வட்டமிடும் இடமெல்லாம்
மீன் விழி சுழன்று நோக்கும்;
காதல் அறியாக் கன்னியின் புருவம்
பயத்தால் பூசலாட காமக்கலை போதிக்கும்.

(அசூயையுடன்)

மிகவும் நடுங்கிப் புருவமாடும்
விழியை நெருங்கித் தொடுவாய்;
காதின் அருகில் சென்று இரகசியம்
பேசுவது போல் பாடுவாய்;
கைகளை உதறித் தடுக்கும் கன்னியின்
காமக் களஞ்சிய அதரம் பருகுவாய்;
அறத்தின் ஆராய்ச்சியில் யாம் நசித்தோம்;
நீ யல்லவோ, வண்டே, நல்ல காரியவாதி.

**சகு :** *தோழிகாள், இத் தீய வண்டால் துன்புறுத்தப்பட்ட என்னைக் காப்பாற்றுங்கள்.*

**சகிகள் :** (புன் சிரிப்புடன்) உன்னைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் *யார்? துஷ்யந்தனைக் கூப்பிடு. தபோ வனங்களைக் காப்பவன் அரசனல்லவா?*

**அரசன் :** இவர்கள் முன் தோன்றுவதற்கு இது நல்ல சந்தர்ப்பம். *யாரடா அங்கே?* (என்று பாதி கூறுகையில் தனக்குள்) எனது *அரச பதவி வெளிப்பட்டு விடும். ஆதலால் இவ்வாறு உரைப்பேன்.*

**சகு :** இந்தப் போக்கிரி விடமாட்டான் போலும். வேறிடம் போகிறேன். (சில அடிகள் போய்க் கடைக் கண்ணால் பார்த்து) என்ன, இன்னும் தொடருகிறான்.

**அரசன் :** (அவசரமாக நுழைந்து)

போல்லாரை அடக்கும் பௌரவன்
மேதினி காக்கும் காலையில்
இளம் தாபசக் கன்னிகளிடம்
தகாதன செய்யும் துஷ்டன் எவன்?

(எல்லோரும் அரசனைக் கண்டு சிறிது கலக்கம் அடைந்து)

**அன :** ஐயா! ஒரு துன்பமும் நேரிடவில்லை. எங்கள் இந்த பிரிய சகி வண்டால் துன்புறுத்தப்பட்டு அச்சமுற்ருள்.

(சகுந்தலையைச் சுட்டிக் காட்டுகிருள்.)

**அரசன் :** நங்காய், தவம் வளருகின்றதா?

(சகுந்தலை நாணத்தால் தலை குனிந்து நிற்கிருள்.)

**அன :** எங்களுக்கு இப்பொழுது விருந்து உபசரிக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. பெரியார் வரவு நல்வரவு ஆகுக. சகி சகுந்தலா, குடிசை சென்று பழவகைகளோடு அர்க்கிய நீர் கொண்டு வா! அதற்குள் இந்த ஜலம் கால் கழுவ உதவும்.

**அரசன் :** உங்கள் இனிய வாக்காலே போதிய மரியாதை செய்து விட்டீர்கள்.

**பிரி :** அப்படியானல், நிழலடர்ந்து குளிர்ந்திருக்கும் ஆல மரத்து மேடையில் பெரியார் அமரவேண்டும்.

**அரசன் :** நீங்களும் இந்த வேலையால் களைத்திருக்கிறீர்கள்.

**அன :** சகி சகுந்தலா, விருந்தினரை உபசரிப்பது உசிதம். நாமும் உட்காருவோம்.

(அனைவரும் உட்காருகிருர்கள்.)

**சகு :** (யோசனையுடன் தனக்குள்) இதென்ன விபரீதம்? இவரைக் கண்டதும் தபோவனத்தில் தகாத விகாரத்திற்கு இலக்காகி விட்டேன்!

**அரசன் :** (மூவரையும் நோக்கி) வயது, வடிவம் இரண்டிலும் ஒத்து உங்கள் நட்பு ரமணீயமாக இருக்கிறது.

**பிரி :** அனசூயா ! கட்டமைந்த கம்பீரமான உருவம், மகிழ்ச்சி தரும் மதுரமான பேச்சு, இவர் பெரிய பிரபு போல் தோன்றுகிறது அல்லவா ?

**அன :** (தனிமையாக) தோழி, எனக்கும் இதை அறியக் குதூகலம் தான். இவரையே கேட்டு விடுகிறேன். (பகிரங்கமாக) பெரியோரின் இனிய சொல்லால் ஏற்பட்ட விசுவாசம் என்னைத் தூண்டுகிறது. எந்த ராஜரிஷி வம்சம் பெரியோரால் விளங்குகின்றது ? எந்நாட்டு மக்கள் பெரியோரைப் பிரிந்து வருத்தப்படுகின்றனர் ? சுகுமாரராக இருந்தும் தபோவன கஷ்டங்களுக்கு ஆளானதின் காரணம் என்னவோ ?

**சகு :** (தனக்குள்) இதயமே, துடிக்காதே. நீ நினைத்ததையே அனசூயை வினவி விட்டாள்.

**அரசன் :** (தனக்குள்) எப்படி என்னை அறிமுகம் செய்விக்கலாம்? எவ்விதம் உண்மை நிலையை ஒளிக்கலாம்? இப்படிச் சொல்லுவேன். (வெளியில்) நங்காய், பௌரவ மன்னனால் தர்மாதிகாரியாக நியமிக்கப்பட்ட யான் ஆசிரம வாசிகளின் கருமங்கள் தடங்கலின்றி நடை பெறுகின்றனவா என்று கவனித்துப் போக வந்தேன்.

**அன :** அற நெறியில் வாழ்வோருக்கு நல்ல இரக்ஷகர் கிடைத்திருக்கிறார்.

(சகுந்தலையிடம் காதலின் நாணம் காணப்படுகிறது.)

**தோழிகள் :** (இருவர் உருவத்தையும் நோக்கி மறைவாக) சகி சகுந்தலா ! அப்பா இப்பொழுது இங்கு இருந்தாலோ !

**சகு :** (கோபத்துடன்) அப்பொழுது என்னவாகும் ?

**தோழிகள் :** இந்த விசேஷ விருந்தினருக்குத் தமது உயிரினும் உயரிய பொருளை அளித்துத் திருப்தி செய்வார்.

**சகு :** தோழிகாள்! எனக்குத் தெரியும். ஏதோ மனதில் வைத்து வாசாலகம் செய்கிறீர்கள். உங்கள் பேச்சைக் கேட்கமாட்டேன்.

**அரசன் :** நாமும் உங்கள் தோழியைப் பற்றிக் கொஞ்சம் கேட்கலாமா ?

**தோழிகள் :** தங்கள் கேள்வி எங்களுக்கு அருளாகும்.

**அரசன் :** பகவான் காசியபர் நித்திய பிரம்மசாரி என்று உலகறியும். உங்கள் தோழி அவர் மகளாவது எப்படி ?

**அன :** பெரியோய், கேள். கௌசிகர் என்று கோத்திரப்பெயர் பூண்டு மகாப் பிரபாவமுள்ள இராஜரிஷி இருக்கிருர்.

**அரசன் :** கேள்விப்பட்டிருக்கிறேன்.

**அன :** அவர் எமது தோழியின் பிறப்புத் தந்தை யென்று அறிவீர். அவரால் கைவிடப்பட்ட இவளைச் சீராட்டி வளர்த்து வந்ததால் காசியப முனிவர் இவள் தந்தையாவார்.

**அரசன் :** கை விடப்பட்டாள் என்று கேட்கவே எனது ஆவல் அதிகரித்தது. ஆதியிலிருந்து கேட்க விரும்புகிறேன்.

**அன :** ஐயா, கேளுங்கள். முன்னுளில் அந்த இராஜரிஷி உக்கிரமான தவம் செய்யும் பொழுது தேவர்கள் என்னமோ ஐயமுற்று அவர் தவத்தைக் கெடுக்க மேனகை என்ற தேவமாதை அனுப்பினுர்கள்.

**அரசன் :** தேவர்களுக்கு முனிவர்களின் சமாதியில் நடுக்கம் சகஜம். அதன் பின் ?

**அன :** வசந்த காலம் தொடங்கும் பொழுது அவளது மயக்கு உருவம் கண்டு (பாதி கூறுகையில் வெட்கத்தால் நிறுத்துகிருள்)

**அரசன் :** அதற்கு மேல் தானுகவே விளங்கும். தேவமாதுக்குப் பிறந்தவள் இவள் என்று எல்லா விதத்திலும் தெளிவாகிறது.

அன : ஆனால் என்ன ?

அரசன் : பொருத்தமே.

மனிதருள் எவ்வாறு இவ்வுருவம் உதிக்கும்;
பூதலத்திலிருந்து மின்னல் கொடி கிளம்பாது.

(சகுந்தலை தலை குனிகிறாள்.)

அரசன் : (தனக்குள்) என் மனோரதத்திற்கு வழிதிறந்து விட்டது. ஆயினும் இவளுக்கு வரன் தேவதைப்பற்றித் தோழியின் பரிகாசச் சொல்லைக் கேட்டு என் மனம் இரண்டு பட்டு அச்சமுறுகிறது.

ப்ரி : (புன்னகையுடன் சகுந்தலையை நோக்கி, நாயகன் எதிரில் நின்று)

மீண்டும் ஏதோ வினவ விரும்புகிறீர் போலும் !

(சகுந்தலை சகியை விரலால் மிரட்டுகிறாள்.)

அரசன் : சரியாக ஊகித்தாய். நல்வரலாற்றைக் கேட்கும் ஆசையால் வேறொன்றும் வினவ வேண்டும்.

ப்ரி : வீண் விசாரம் எதற்கு ? தவஞ் செய்யும் வனவாசிகள் தடையற்ற சுதந்திரப் போக்கு உடையவர் அல்லவா ?

அரசன் : உன் தோழியைப் பற்றி யான் அறிய விரும்புவது,

காமன் தொழிலைத் தடுக்கும் தவக்கோலத்தை இவள்
காப்பது கன்னிகாதானம் வரையில் தானா ? அல்லது
கள்ளைப்போல் மயக்கும் கண்ணுடைய பெண்
மான்களோடு என்றும் வசிக்க வேண்டுமோ ?

ப்ரி : பெரியோய் ! அறஞ் செய்வதிலும் இவள் தந்தை வசம் நிற்பவள். ஆனால், தகுந்த வரனைத் தேடிக் கொடுக்க வேண்டுமென்றுதான் எங்கள் குருவின் சங்கற்பம்.

அரசன் : (தனக்குள்) எனது கோரிக்கை அடையக் கூடாதது அல்ல

உனது ஆசைக்கு இடமுண்டு, மனமே,
ஐயம் தீர்ந்து விட்டது இப்பொழுது;
தீயென்று சந்தேகித்த பொருள்
அணியக் கூடிய மணியாகி விட்டது.

**சகு :** (கோபத்துடன்) அனசூயா, நான் போகிறேன்.

**அன :** காரணம் என்ன ?

**சகு :** தாறுமாறாகப் பிதற்றும் இப்பிரியம்வதையைப் பற்றிக் கௌதமிக் கிழவியிடம் சொல்லுவதற்கு.

**அன :** சகி, விசேஷ விருந்தினரை முழுதும் உபசரிக்காமல் விட்டு விட்டு இஷ்டப்படிப் போவது ஆசிரம வாசிக்குத் தகாது.

(சகுந்தலை ஒன்றும் பேசாமல் புறப்படுகிருள்.)

**அரசன் :** (தனக்குள்) ஆகா ! போய் விடுகிருளா ? (அவளைப் பிடிக்க விரும்பி, ஆனால் தன்னை அடக்கிக்கொண்டு)

முனி மகளைப் பின் தொடர விரும்பிய நான் வினயத்தால் திடீரென்று தடுக்கப் பட்டேன். இடத்தைவிட்டு அசையா விட்டாலும் கூடப் போய்ப் பின் திரும்பியது போல் உணர்ச்சி.

**பிரி :** (சகுந்தலையைத் தடுத்து) சகி, நீ போகக் கூடாது.

**சகு :** (புருவத்தை நெரித்து) எக்காரணத்தால் ?

**பிரி :** மரங்களுக்கு நீர் வார்ப்பதில் எனக்கு இரண்டு குடம் கடன் பாக்கி. (பலாத்காரமாக அவளைத் திருப்புகிருள்.)

**அரசன் :** நல்லாய் ! தருக்களுக்குத் தண்ணீர் ஊற்றி இவள் களைத்திருப்பதாகக் காண்கிறேன். ஏனெனில்,

குடந் தூக்கித் தோள் தளர்ந்து, உள்ளங்கை இரண்டும் சிவந்து, பெருமூச்சு விட்டு மார்பு படபடக்கிறது; நெற்றியில் வியர்வை வழிந்தோடி காதிலிருக்கும் மலரால் தடைபட்டது; அவிழ்ந்த கூந்தலை ஒரு கையால் கட்டியதால் தலைமயிர் கலைந்திருக்கிறது.

ஆதலின் யான் இவள் கடனைத் தீர்க்கிறேன். (கணையாழி கொடுக்க விரும்புகிறான்.)

(இரு தோழிகளும் அதில் பெயர் முத்திரைகண்டு ஒருவரையொருவர் பார்க்கிறார்கள்)

**அரசன் :** வீணில் வேறு விதமாக எண்ணவேண்டாம். இது அரசனால் அளிக்கப்பட்டது.

**பிரி :** அப்படியானால், தங்கள் விரலை விட்டு இக் கணையாழி நீங்கலாகாது. உங்கள் வாக்காலேயே தோழியின் கடன் தீர்ந்து விட்டது. சகி சகுந்தலா, உன்மேல் கருணையுள்ள இப்பெரியோரால் அல்லது மகாராஜனால் விடுவிக்கப் பட்டாய். இனி போகலாம்.

**சகு :** (தனககுள்) என் மனத்தின் மீது நான் அதிகாரம் செலுத்த முடியுமானால், (பகிரங்கமாக) விடுவதற்கும் தடுப்பதற்கும் நீ யார் ?

**அரசன் :** (சகுந்தலையைப் பார்த்து தனககுள்) ஒருவேளை எனக்கு இவளிடத்தில் இருப்பது போல் என்னிடத்திலும் இவளுக்கு இருக்குமோ ? ஆயின் என் கோரிக்கைக்கு இடம் உண்டு. ஏனெனில்,

என் பேச்சுடன் கலந்து அவள் பேசுவதில்லை ; நான் பேசுகையில் காது கொடுத்துக் கேட்கிறாள் ; எனக் கெதிரில் என்னை நோக்கி நிற்பதில்லை ; ஆனால் வேறிடத்திலும் கவனம் செல்லவில்லை.

(திரைக்குள்)

ஓ, தபோவன வாசிகளே ! தபோவன பிராணிகளைக் காப்பாற்றத் தயாராக இருங்கள். துஷ்யந்த மன்னன் வருகிறான்.

ஈரமரவுரிகள் கிளைகளில் தொங்கும் ஆசிரமத்தருக்கள் மீது குதிரைக் குளம்புகள் எழுப்பும் தூசிகள் அந்தி வானத்தில் அருணப் பிரகாசத்துடன் வெட்டுக்கிளிக் கூட்டம் போல் படிகின்றன.

மேலும்,

மரத்தைக் குத்தி ஒரு தந்தத்தில் தூக்கி கயிறு கட்டி யது போல் காலில் சுற்ற மான் கூட்டங்கள் சிதறி யோட தவத்தைக் கெடுக்கும் கொடிய மூர்த்திபோல ஓடுகின்றது இரதத்தைக்கண்டு பயந்த யானை.

(எல்லோரும் கேட்டுக் கலக்க முறுகின்றனர்.)

**அரசன் :** (தனக்குள்) அடடா, மோசம் போயிற்று. என்னைத் தேடி வரும் துருப்புகள் தபோவனத்தில் ஆக்கிரமிக்கின் றார்கள். சரி, உடனே போவேன்.

**அன :** ஐயா, இந்தக் காட்டு யானை வரலாற்றால் கலக்க முற் றோம். எங்கள் குடிசை செல்ல அனுமதி தரவேண்டும்.

**அரசன் :** நீங்கள் செல்லுங்கள். ஆசிரமத்துக்கு எவ்வித தீங்கும் நேராதபடி நான் ஏற்பாடு செய்கிறேன்.

(எல்லோரும் எழுந்து நிற்கின்றனர்.)

**தோழிகள் :** ஐயா, விருந்து உபசாரம் சரிவர நடைபெறாததால் மீண்டும் தரிசனம் அளிக்குமாறு வேண்டிக் கொள்ள வெட்கமாய் இருக்கிறது.

**அரசன் :** இல்லவே இல்லை. உங்களைப் பார்த்தே திருப்தி அடைந்து விட்டேன்.

**சகு :** அனசூயா ! புதிய தர்ப்பைப்புல் காலில் குத்தி விட்டது. முல்லைக் கொடியில் மாட்டிக் கொண்டு விட்டது என் மரவுரி ; இதை எடுத்துவிடும் வரையில் எனக்காகக் காத்திருங்கள்.

(இந்த சாக்கால் அரசனைப் பார்த்துவிட்டு சகிகளோடு போகிறாள்.)

**அரசன் :** நகரத்திற்குத் திரும்பிப் போகும் ஆவல் குறைந்து விட்டது. கூட வந்தவர்களைக்கண்டு தபோவனத்திற்குச் சற்று தூரத்தில் கூடாரம் போடச் சொல்லுகிறேன். இந்தச் சகுந்தலைச் சிக்கலிலிருந்து மனத்தை மீட்க முடியாதவனாய் ஆகிவிட்டேன். என் நிலையோ,

எதிர் காற்றில் எடுத்துப் போகும் கம்பத்தில் கட்டிய பட்டுக் கொடிபோல் உடல் முன்னே செல்லுகிறது. அதை மறந்த மனம் பின்னே பாய்கிறது.

(எல்லோரும் போகிறார்கள்.)

**(முதல் அங்கம் முற்றிற்று)**

---

## இரண்டாவது அங்கம்

(துக்கப்படும் விதூஷகன் பிரவேசிக்கிறான்.)

**விதூ :** (பெரு மூச்சுவிட்டு) வேட்டைப் பித்துப் பிடித்த மன்னனின் சிறு பிள்ளைத் தனத்தால் செத்தேன். இதோ மான், அதோ காட்டுப்பன்றி, அங்கே வேங்கைப் புலி என்று நடுப்பகலில் கூட கோடையில் காய்ந்து அற்ப நிழலுள்ள வனப் பிரதேசங்களில் சுற்றித் திரியவேண்டும். இலை அழுகி கஷாயம் போல் வெத வெதவென்றிருக்கும் மலை அருவி நீரைக் குடிக்க வேண்டும். சூலத்தால் சமைத்த மாமிசம் மிகுந்த உணவு உண்ணவேண்டும். குதிரை மேல் தாவுவதால் உடல் பூட்டுகளெல்லாம் புண்ணாகி இரவில் கூட நிம்மதியாகப் படுக்க முடியாது. பிறகு மிகவும் அதி காலையில் வேட்டை நாய்க் கூட்டங்களோடு வேடர்களான வேசி மகன்கள் எழுப்பி விடுகிறார்கள். இத்துடன் பீடை முடிவதில்லை. போதாதற்கு கன்னத்தில் கொப்புளம் வெடித்து விட்டது. நேற்று எங்களை விட்டுப் பிரிந்து வேட்டை ஆடுகையில் ஆசிரமத்தில் பிரவேசித்த அரசன் கண்ணில் சகுந்தலை என்ற தாபசக்கன்னி எனது துரதிருஷ்டத்தினால் தென்பட்டு விட்டாள். இப்பொழுதோ பட்டணம் போகும் பேச்சே எடுப்பதில்லை. மிகவும் சிந்தையில் ஆழ்ந்திருந்த அரசன் மீதே

*காலையில் கண் விழித்தேன். என் விதிதான். அதோ காலைக்கடன் முடிந்து மன்னன் தோன்றுகிறான். அம்புடன் வில்லேந்தி வனமலர் மாலை அணிந்திருக்கும் வேடப் பெண்களால் சூழப் பட்டிருக்கிறான். சரி, உடல் நொடிந்து சோர்வுற்றவன் போல் நிற்கிறேன். ஒருகால் அப்படி யாவது சிறிது ஓய்வு கிடைக்கலாம். (தடியை ஊன்றி நிற்கின்றான்)*

(மேலே குறிப்பிட்டபடி அரசன் நுழைகிறான்.)

**அரசன் :** காதலி கிட்டுவது மிகவும் துர்லபம்; என் மனமோ அவள் உள்ளமறியத் துடிக்கிறது; காமன் காரியம் கைகூடாத போதினும் காதலரின் பரஸ்பர அன்பு இன்பந்தரும்.

(புன் முறுவலுடன்)

*இவ்விதம் தன் மனோபாவத்தை அன்பினரின் மனதில் புகுத்திக் காமிகள் பகற்கனவு காண்கின்றனர்.*

வேறு பொருள் மீது சுழன்ற கண்ணின் இன்ப நோக்கு, நிதம்ப கனத்தால் உல்லாச நடை, செல் வதைத் தடுத்த தோழிக்கு ஆத்திர வார்த்தை அனைத்தும் எனைக் குறித்தே! ஆகா! காமிக்கு எல்லாம் தன் மயமே.

**விதூ :** *(முனைபோல நின்றுகொண்டு) ஓ தோழா ! என் கால் கைகளை அசைக்க முடியவில்லை. வாக்கால் மட்டும் உங்கள் வெற்றி கூறுகிறேன்.*

**அரசன் :** (புன் சிரிப்புடன்) *உனக்கு எதனால் உடல் நோவு ?*

**விதூ :** *நீங்களே கண்ணைக் குத்தி விட்டுக் கண்ணீரின் காரணம் கேட்கிறீர்.*

**அரசன் :** *எனக்குப் புரியவேயில்லை.*

**விதூ :** *தோழா, பிரம்புக் கொடி கோணங்கி ஆட்டம் போடுவது அதன் ஆற்றலினாலா ? அல்லது நதியின் வேகத்தினாலா ?*

**அரசன் :** நதி வேகம்தான் அதற்குக் காரணம்.

**விதூ :** என்னுடைய நோவுக்கு நீங்கள்தான் காரணம்.

**அரசன் :** எங்ஙனம் ?

**விதூ :** நீங்கள் இராஜ்ய காரியங்களை யெல்லாம் விட்டு விட்டு இவ்வித க்லேசப் பிரதேசங்களில் இவ்வாறு வசை வாழ்க்கை நடத்துவது சரி. எனக்கோ தினந்தோறும் மிருகங்களைத் துரத்தியோடுவதால் நொந்து தளர்ந்த அங்கங்களை அசைக்க சக்தி இல்லை. ஆதலின் தயவு செய்யவேண்டும். ஒருநாளாவது ஓய்வெடுக்க என்னை விட்டுவிட வேண்டுகிறேன்.

**அரசன் :** (தனக்குள்) தோழனும் இப்படிக் கூறுகிறான். கண்வர் பெண்ணை நினைத்து என் மனமும் வேட்டையை வெறுக்கிறது.
ஏனெனில்,

அர்பு பூட்டிய வில்லின் நாணை மான்கள் மீது இழுக்கச் சக்தி இழந்தேன். எனது காதலியுடன் கூட வசித்து அவளுக்கு உல்லாசப் பார்வை போதித்தன அல்லவா?

**விதூ :** (அரசன் முகம் நோக்கி) இப்பொழுது நீங்கள் மனதில் வேறு ஏதோ நினைத்து முணுமுணுக்கிறீர்கள். என் பேச்சு காட்டில் கதறுவது தான் போலும்.

**அரசன் :** (புன் சிரிப்புடன்) வேறு என்ன? தோழன் சொல் தாண்டலாகாது என்று நானும் நின்று விட்டேன்.

**விதூ :** என்றும் வாழ்க !

**அரசன் :** சிறிது பொறு, தோழா, என் பேச்சு பூர்த்தியாகவில்லை.

**விதூ :** கட்டளையிடுங்கள்.

**அரசன் :** சளைப்படைந்த நீ கஷ்டமில்லாத காரியத்தில் எனக்கு உதவி செய்யவேண்டும்.

**விதூ :** தின்பண்டம் தின்னவா ?

**அரசன் :** கூறும் காரியத்தில்.

**விதூ :** அங்கீகரித்தேன்.

**அரசன் :** யார் அங்கே ?

(வாசற் காப்போன் நுழைந்து)

**வா. கா :** உத்தர விடுங்கள் எஜமான்.

**அரசன் :** ரைவதக ! சேனாதிபதியைக் கூப்பிடு.

**வா. கா :** அப்படியே ! (போய்ச சேனாதிபதியுடன் திரும்பி) ஏதோ கட்டளையிட விரும்பி இவ்விடம் நோக்கி யிருக்கிறார்.

**அரசர் :** தாங்கள் பிரவேசிக்கலாம்.

**சேனாதிபதி :** (அரசனை நோக்கி) இந்த வேட்டையால் வேந்தனுக்கு எவ்விதத் தீமையும் காணப்படவில்லை. சுத்த நன்மை தான் தென்படுகிறது. எப்படி யெனில்,

ஓயாமல் நாண் இழுத்து முன்னுடல் கெட்டியாகி
சூரியகிரணம் சகித்து வியர்வை சிறிதுமின்றி உறுதிப்
பெருக்கால் மெலிவு புலப்படாத தேகம் மலையில்
அலையும் யானை போல்வலிவின் வடிவம் பெற்றது.

(நுழைந்து)

தேவா ! வெற்றி பெறுக !
வனத்தில் காட்டு மிருகங்கள் தடைபட்டுக் கிடக்கின்றன.
இன்னும் சும்மா விருக்கவேண்டுமா ?

**அரசன் :** சேனாதிபதி, வேட்டையை இகழும் தோழனால் என் உற்சாகம் குறைநது விட்டது.

**சேனா :** (மறைவில்) தோழா, நீ மன உறுதியுடன் இருப்பாயாக ! நானும் பிரபுவின் மனப்போக்கை அறிவேன். (பகிரங்கமாக) இம்மூடன் உளறட்டும் பிரபுவே ! இது நிதர்சனமல்லவா ?

கொழுப்புக் கரைந்து வயிறு சுருங்கி
இலகுவாக ஓடியாட சக்திபெறும் சரீரம்;
மிருகங்களின் மனமும் பயத்தாலும் கோபத்தாலும்
விகாரமடையும் வண்ணம் விளங்கும்;
அசையும் குறியில் பாணம் பாயும் பொழுது
வில்லாளிகளுக்கு நிகரில்லாப் பெருமகிழ்ச்சி;
வேட்டையின் வேதனை வெறும் பொய்க்கூற்று;
இதைப்போல் விநோதம் வேறொன்றுண்டோ.

**விதூ :** *அரசர் இப்பொழுது தனதியற்கை நிலை அடைந்து விட்டார். நீயோ காடு விட்டுக் காடு திரிந்து மூக்குக்கு ஆசைப்படும் பழைய கரடியின் வாயில் விழக்கடவாய்.*

**அரசன் :** *நல்லது. சேனாதிபதி, வீண் வாதம் எதற்கு? ஆசிர மத்தின் அருகாமையில் இருக்கிறோம். ஆதலால் உன் பேச்சில் விருப்பமில்லை இப்பொழுது.*

குளங்களில் நீரைக் கொம்புகளால், குத்திக் கலக்கி எருமைகள் எதேச்சையாய் முழுகிக் குளிக்கட்டும்; மரநிழலில் மான் கூட்டங்கள் மந்தை மந்தையாக அசை போட்டு ஆனந்திக் கட்டும்; மூக்கால் குட்டைகளில் சேற்றைக் கிளறி பன்றிக் குழாம் நிம்மதியாகச் சுகிக்கட்டும். நமது இவ்வில்லும் நாண்தளர்ந்து ஓரளவு ஓய்வு பெற்றிருக்கட்டும்.

**சேனா :** *பிரபுவின் இஷ்டப்படியே.*

**அரசன் :** *ஆதலால், முன் சென்ற வேடர்களைத் திரும்பச் செய்வாய். எனது துருப்புகள் தபோவனத்திலிருந்து தூரத்திலேயே விலகி இருக்குமாறு ஏற்பாடு செய். அறிவாய்.*

சாந்தியே சிவமெனக் கருதும் தவச் செல்வரிடம் எரிக்கும் நெருப்பு பதுங்கிக் கொண்டிருக்கிறது. தொடுவதற்கினிமையான சூரியகாந்திக்கல் வேறு, தேசு தீண்ட அனல் கக்குகின்றது.

**சேனு :** தேவர் ஆணைப்படியே.

**விதூ :** உன் குதூகலப் பேச்சு பொசுங்கி விட்டது. மச்சான், இனி நீ போகலாம்.

(சேனுதிபதி போகிறுன்.)

**அரசன் :** (வேலைக்காரனை நோக்கி) நீங்களும் வேட்டை உடைகளைக் களையலாம். ரைவதக, உன் வேலையைப்பார்.

**வேலை :** தேவர் ஆணை.

(போகிறுர்கள்.)

**விதூ :** கொசு இல்லாமல் செய்து விட்டீர்கள். இப்பொழுது மர நிழலில் இடைவெளியின்றிப் பின்னிய கொடிப் பந்தலின் கீழுள்ள ஆசனத்தில் அமரவேண்டும். நானும் சுகமாக வீற்றிருப்பேன்.

**அரசன் :** எல்லோரும் தமக்கினிய பொருளில் மேன்மை காண் கின்றனர். ஆசிரமத்திற்குத் திலகம் போன்ற சகுந் தலையைப் பற்றியே நானும் பேசுவேன்.

**விதூ :** (தனக்குள்) இதற்கு அவகாசம் கொடேன். (பகிரங்கமாக) தோழா, தாபசக்கன்னி கூட இன்று கெஞ்ச வேண்டியவளாகி விட்டாள் போல் தோன்றுகிறது.

**அரசன் :** நேசா, தொடக்கூடாத பொருள் மீது பௌரவர் மனம் என்றும் செல்லாது.

**விதூ :** ஆயின், இது எங்ஙனம் ?

**அரசன் :** தேவ மாதிடம் பிறந்த முனிவர் பெண். அவர் கைவிட்டதால் இவரிடம் சேர்ந்தாள். புது மல்லிகைப் பூ உதிர்ந்து எருக்கஞ் செடி மேல் வீழ்ந்தது போல்.

**விதூ :** தோழா, பேரீச்சம்பழப் பணியாரத்தில் அலுத்துப் போய் புளியம் பழத்தில் ஒருவன் ஆசை கொண்டது போல் இருக்கிறது. தங்களுடைய இவ்விருப்பம் மங்கை மணிகளை அவமதிப்பதாகும்.

**அரசன் :** அவளை நீ பார்க்காததால் இவ்விதம் பேசுகிறாய்.

**விதூ :** தாங்கள் கூட ஆச்சரியப் படுவதனால் அது மிகவும் ரமணீயமாகத்தான் இருக்க வேண்டும்.

**அரசன் :** நேசா, விரித்துப் பயனென்ன ?

பேரழகை உருவாக்கி சித்திரத்தில் வரைந்து
பிரமன் மனதால் ஆக்கிய பெண்ணிவளோ ?
ஈசன் மகிமையும் இவளுருவும் நினைத்து
இப்பெண்மணி ஓர் தனிப் பிறவி
யென்று தீர்மானித்தேன்.

**விதூ :** இதனால், இதர ரூபவதிகளைக் குறைப்பதாகும் அல்லவா ?

**அரசன் :** மனதில் இவ்வாறு தோன்றுகிறது.

நுகராத நறுமலர் ; கை நகம் கிள்ளாத
பசுந்தளிர் ; வெட்டாத வைரக்கல் ;
சுவைக்காத புதியதோர் இனிய தேன் ;
புண்ணிய மனைத்தும் பலிந்தது போல்
மாசில்லா மேனி ; இதை அனுபவிக்கப்
பிரமன் படைத்த பாக்கியசாலி எவனோ ?

**விதூ :** ஆயின் விரைவில் தேவர் இவளைக் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் இனுப் பெண்ணை தடவிய உச்சிக் குடுமி கையில் சிக்கிக் கொள்வாள்.

**அரசன் :** இம்மங்கை பிறர் வசத்தில் இருப்பவள். இவளுடைய பெரியோர் ஊரில் இல்லை.

**விதூ :** தங்களிடம் இவள் கண்ணோட்டம் எவ்விதம் ?

**அரசன் :** *இயற்கையால் தாபச கன்னிகைகள் சூதறியார். ஆயினும்,*

என் கண்முன் அவள் கண் மறையும்; வேறு வியாஜந்தால் புன்முறுவல் பூக்கும். வினயந்தால் அடங்கிய அவள் போக்கில் மதனன் விளங்கவுமில்லை, முற்றிலும் மறையவும் இல்லை.

**விதூ :** *பார்த்தவுடன் மடிமேல் வந்து உட்காருவாளென்று எதிர் பார்த்தீர்களா ?*

**அரசன் :** *சற்குணசாலியாயினும் தோழிகளோடு புறப்பட்டுப் போகும்போது, அவளது மனோபாவம் இரகசியமாக நன்கு தெளிவாயிற்று.*
*எவ்வாறெனில்,*

கூரிய குசப்புல் காலில் குத்தியதென்ற சாக்கிட்டுச் சில அடி சென்று சிறுமி நின்றாள். மரக்கிளையில் சிக்காத மரவுரியை விடுவிப்பதுபோல் வதனத்தை என்பால் வளைத்தாள்.

**விதூ :** *இது உண்மையானால், வழியில் விருந்துண்டு சுகித்திருங்கள். இப்பொழுது தபோவனம் தங்களுக்கு உபவனமாயிற்று என்று காண்கிறேன்.*

**அரசன் :** *நான் இங்கிருப்பது பல தாபசிகளுக்குத் தெரியும். ஒருதரமாவது ஆசிரமத்தில் பிரவேசிப்பதற்குத் தகுந்த சாக்கைச் சிந்திப்பாய்.*

**விதூ :** *சாக்குப் போக்கு எதற்கு ? தாங்கள் அரசர் அல்லவா ?*

**அரசன் :** *இருந்தால் என்ன ?*

**விதூ :** *அரிசியில் ஆறில் ஒரு பாகம் வனவாசிகள் வரி கொடுங்களென்று.*

**அரசன் :** *இவர்களைக் காப்பாற்றுவதால் இரத்தின ராசியைவிட மகிழ்ச்சி தரும் வருமானம் கிடைக்கிறது.*

இதர வர்ணத்தார் ஈவது அழியும் பொருள், வன வாசிகள் தருவது அழியாத் தவத்தின் ஆறில் ஒரு பாகம்.

(திரைக்குள்)

ஆகா ! நமது காரியம் கைகூடிற்று.

**அரசன் :** (காதுகொடுத்து) அடாடா ! சாந்தியுடன் கூடிய இந்த கம்பீரக் குரல் முனிகளிடம்தான் பொருந்தும்.

(வாசற்காப்போன் நுழைந்து)

**வா. கா :** எஜமானனுக்கு ஜெயம். இதோ இரண்டு குமாரர்கள் வாசலில் நிற்கிறார்கள்.

**அரசன் :** அவர்களைத் தாமதமின்றி அழைத்து வா !

**வா. கா :** உடனே அழைத்து வருகிறேன்.

(வெளியே போய் முனிகுமாரர்களோடு நுழைந்து)

நீங்கள் இப்படி வாருங்கள்.

(இருவரும் அரசனை நோக்கி)

**முதல் மு. கு:** ஒளியுடைத்தாயினும் அச்சமின்றி அணுகத்தக்கது இவர் தோற்றம். முனிவரிடமிருந்து சிறிதுதான் விலகியுள்ள ராஜரிஷியிடம இது பொருத்தமே. ஏனெனில், போகம் நிறைந்துள்ள இரண்டாவது ஆசிரமத்தில் இவரும் கட்டுப்பாடுடன் வசிக்கவேண்டும். காக்கும் தொழிலால் தவத்தை தினமும் திரட்டுகிறார்; இவருடைய ஒழுக்கத்தைப் புகழ்ந்து சாரணக் கோடிகள் பாடும் கீதங்கள் வானத்தில் ஒலிக்கின்றன; அரசனென்ற உரிச்சொல்லுடன் இவரும் புனித முனிவராவார்.

**இரண். மு. கு :** கௌதம, இவர்தான் இந்திர சகா துஷ்யந்த மன்னன்.

**மு. மு. கு:** ஆனாலென்ன ?

**இ. மு. கு :** என்னவெனில்,

நீலக்கடல் எல்லையான பூமியெலாம் கோட்டை வாயில் பூட்டும் இரும்புக் கம்பி போன்ற கைகளுடைய மன்னன் தனியாக ஆளுவது ஆச்சரியமல்ல. அசுரர் வெறுக்கும் அமர மங்கையரும் நாண் ஏற்றிய இவர் வில்லையும், இந்திரனது வச்சிராயுதத்தையுமே நம்பி உள்ளார்.

**இருவரும் :** (அருகில் வந்து) அரசன் வாழ்க.

**அரசன் :** (ஆசனத்திலிருந்து எழுந்து) உங்களுக்கு வந்தனம்.

**இருவரும் :** தேவருக்கு மங்களமுண்டாகுக.

(பழங்கள் கொடுக்கிறார்கள்.)

**அரசன் :** (வணக்கத்துடன் ஏற்று) உங்கள் விண்ணப்பம் அறிய விரும்புகிறேன்.

**இரு :** தாங்கள் இங்கிருப்பதை ஆசிரம வாசிகள் அறிந்தனர். ஆதலால் தங்களைப் பிரார்த்திக்கின்றனர்.

**அரசன் :** என்ன கோருகிறார்கள் ?

**இருவரும் :** பகவான் கண்வர் இங்கில்லாமையால் அரக்கர் எங்கள் வேள்விகளுக்கு இடையூறு செய்கின்றனர். சில நாட்கள் பாகனுடன் தாங்கள் இங்கிருந்து ஆசிரமத்தை ஆண்டருள வேண்டும் என்று.

**அரசன் :** அனுக்கிரஹிக்கப்பட்டேன்.

**விதூ :** (தனிமையில்) காலத்திற் கொத்த கோரிக்கை.

**அரசன் :** (புன் சிரிப்புடன்) ரைவதக, நான் கூறியதாகப் பாகனை வில்லம்புடன் இரதத்தைக் கொண்டு வரச் சொல்.

**வா. கா :** எஜமானனுக்கு வெற்றி. தங்கள் ஆணைப்படியே.

(போகிறான்)

**இருவரும் :** (மகிழ்ச்சியுடன்)

முன்னோரைப் பின்பற்றிய உனக்கு இது தகும்; வேள்விக்கு விளையும் அச்சம் தீர்க்கக் கங்கணம் கட்டியுள்ளார் பௌரவர்.

**அரசன் :** (கைகூப்பி) நீங்கள் முன்னே செல்லுங்கள். உடனடியே நானும் வருவேன்.

**இருவரும் :** வெற்றி பெறுக.

(போகிறார்கள்)

**அரசன் :** நேசா, சகுந்தலை காண உனக்குக் குதூகலமா?

**விதூ :** முதலில் வெள்ளமாக வளர்ந்தது. அரக்கர் வரலாற்றைக் கேட்டவுடன் துளிக்கூட மிஞ்சவில்லை.

**அரசன் :** பயப்படாதே. என்னுடன் இருப்பாயல்லவா?

**விதூ :** ஆமாம். அரக்கரிடமிருந்து இரட்சிக்கப் பட்டேன்.

(வாசற்காப்போன் நுழைந்து)

**வா. கா :** எஜமானனுக்கு ஜெயம். இரதம் தயாராகத் தாங்கள் ஏறக் காத்திருக்கிறது. மேலும் நகரத்திலிருந்து தேவிகளின் செய்திகளை ஏற்று காபகன் வந்து சேர்ந்திருக்கிறான்.

**அரசன் :** (ஆதரவுடன்) அன்னையடிகளால் அனுப்பப்பட்டானா?

**வா. கா :** ஆம்.

**அரசன் :** பிரவேசிப்பதில் தயக்கமென்ன?

**வா. கா :** அப்படியே (வெளியில் சென்று காபகனுடன் நுழைந்து) இதோ எஜமான், உள்ளே வா.

**காபகன் :** (நுழைந்த) எஜமானனுக்கு ஜெயம். தேவியடிகள் உத்தரவு இடுகின்றனர். வரும் நான்காவது நாளில் எனது உபவாசம் முடிந்து பாரணை விருந்து நடைபெறும். அன்று சிரஞ்சீவியான நீ அவசியம் வந்திருக்க வேண்டும்.

**அரசன் :** இங்கே முனிவர் கடன். அங்கே பெரியோர் பணி. இரண்டும் தட்ட வொண்ணுது. இதற்கு என்ன வழி தேடலாம் ?

**விதூ :** திரிசங்கு போல் நடுவில் நிற்கலாம்.

**அரசன் :** போதும் பரிகாசம். உண்மையில் கலக்க முற்றேன்.

பணிகள் பிரிந்த இடங்களில்
என் மனம் இரண்டு பட்டது.
முன்னுல் பாறையால் தடுக்கப்பட்ட
ஆற்று வெள்ளம் போல்.

(சிந்தித்து)

தோழனே, அன்னைமாரால் நீ மகன் போல் மதிக்கப் பட்டுள்ளாய். ஆதலால் நீ இங்கிருந்து திரும்பிச்சென்று முனிவர் காரியத்தில் நான் முனைந்திருப்பதைத் தெரி வித்து அவர்களுக்குப் புத்திரப்பணி செய்யவேண்டும்.

**விதூ :** அரக்கரிடம் அச்சம் கொண்டேன் என்று எண்ண வேண்டாம்.

**அரசன் :** (புன் சிரிப்புடன்) ஓ, மகாப் பிராமணனே, தங்களிடம் இவ்விதம் எப்படி எண்ணக்கூடும் ?

**விதூ :** அப்படியானுல், அரசன் தம்பியாகச செல்ல வேண்டு மென்றுல் போகிறேன்.

**அரசன் :** தபோவனத்திற்கு இடையூறு ஒழிய வேண்டுமென்று என்னுடன் கூட வந்தவர்களை யெல்லாம் உன்னுேடு அனுப்பி விடுகிறேன்.

**விதூ :** அதனுல் இளவரசனுகி விட்டேன்.

**அரசன் :** (தனக்குள்) இந்த உளறுவாயன் நிலையற்றவன். எனது விருப்பத்தை ஒரு வேளை ராணிகளிடம் கூறி விடுவான். சரி இவ்விதம் சொல்லுகிறேன். (விதூஷகன் கையைப் பிடித்து பகிரங்கமாக) நேசா, முனிவரிடம் உள்ள மரியாதையால் ஆசிரமம் போகிறேன். உண்மை யில் தாபசக் கன்னி சகுந்தலையிடம் எனக்கு எவ்வித விருப்பமும் இல்லை. ஏனெனில்,

யானேங்கே? கண்ணில் படாத காமன் எங்கே? மான்குட்டிகளோடு வளர்ந்த வன கன்னிகை எங்கே? பரிகாசத்தால் பிதற்றிய பேச்சுகளை பரமார்த்தமாகக் கொள்ளாதே, தோழனே!

**விதூ :** *அப்படியே.*

*(எல்லோரும் போகிறார்கள்.)*

**இரண்டாவது அங்கம் முற்றிற்று.**

---

## மூன்றாவது அங்கம்

*(முனிவனும் சீடனும் குசப்புல்லுடன் பிரவேசிக்கிறார்கள்.)*

**சீடன் :** *ஆகா! துஷ்யந்த மன்னன் மகானுபாவன். அவர் ஆசிரமத்தில் நுழைந்த நொடியிலேயே நமது கருமங் களுக்கு இடையூறுகள் எல்லாம் ஒழிந்தன.*

அம்பு தொடுக்கும் வம்பில்லை;
நாண் செய்யும் நாதத்தால்
ஓங்காரத்தைப் போல் தூரத்திலேயே
விக்கினங்களைப் போக்குகின்றார்.

*வேள்வி மேடையில் பரப்பும் இப்புல்லைப் புரோகிதர் களிடம் கொடுக்கிறேன். (சுற்றிப் பார்த்து வானத்தை நோக்கி) பிரியம்வதா, யாருக்கு இந்த இலாமிச்சை வேர்ப் பூச்சு, தண்டோடு தாமரை இலைகளும் எடுத்துப் போகின்றாய். (காது கொடுத்துக் கேட்டு) என்ன சொல் கிறாய்? வெப்பத்தின் கொடுமையால் சகுந்தலையின் தேகநிலை மிகவும் கெட்டு விட்டது. அவளது உடலெரிச் சலைத் தணிப்பதற்கென்றா? அப்படியானால், தீவிர*

முயற்சி செய்யுங்கள். நமது குலபதியின் இன்னுயிர் இவள். நானும் வேள்வியின் சாந்தி நீரைக் கௌதமி யின் கையில் கொடுத்து அனுப்புகிறேன்.

(போகிறான்)

(காட்சி முடிவு)

### காட்சி இரண்டு

**அரசன் :** தவத்தின் மகிமை நன்கு உணர்வேன்; சிறுமியின் பராதீனமும் அறிவேன். ஆயினும் எனது உள்ளத்தை அவளிடமிருந்து மீட்க முயலுவது வீண்.

(மதனுவஸ்தை தோன்றி) மலராயுதம் பூண்ட காம தேவனே! பிரியத்திற்குப் பாத்திரர்களாயினும் உன் னுலும் சந்திரனுலும் காதலர் கூட்டம் மிகவும் துன்பப் படுத்துகிறது.

ஏனெனில்,

நினது மலரம்பும் மதியின் குளிர் கிரணமும் என்போன்றவர்களிடம் தன்மை திரிகின்றன; பனிக் கதிர்களால் எரிக்கிருன் சந்திரன்; உனது பூச்சரங்களை நீயும் வச்சிரமாக்குகின்ருய்.

ஏனெனில்,

என்றும் உன் மனம் கோடியதேனும் உன்னை விரும்பு வேன், மீன் கோடியோனே; கள்ளைப்போல் மயக்கும் கண்ணுடையாளைக் குறித்தல்லவா என்னை அடிக் கின்ருய்.

ஆனல்,

வேள்வி வேலை முடிந்து சபையோர்களிடம் விடை பெற்றேன். இச்சமயம் சோர்ந்த மனத்திற்குச் சாந்தி எங்கே கிடைக்கும்? (பெருமூச்சுடன்) எனது காதலியைக்

காண்பதைத்தவிர வேறு கதி எது ? ஆதலால் அவளைத் தேடுவேன். (சூரியனை நோக்கி) இக்கொடிய வெய்யில் வேளையைச் சகுந்தலை தோழிகளுடன் கொடி வீடுகள் குழுமிய மாலினி நதிக்கரையில் கழிப்பாள். அவ்விடமே செல்வேன்.

(சுற்றிக்கொண்டு காற்றின் சுகத்தை அனுபவித்து)

ஆகா ! இவ்விடத்தில் இனிய காற்று வீசுகிறது.

மாலினியின் அலைத் துளிகள் தாங்கி
கமல மணங் கமழும் வாயுவை
காதலால் காய்ந்த அங்கங்களால்
இறுகத் தழுவி இன்புறலாம்.

(சுற்றிப் பார்த்து)

நிச்சயமாக இந்த மூங்கில் மூடிய கொடி வீட்டில் சகுந்தலை இருக்கவேண்டும்.

ஏனெனில்,

முன்னடி மேடாகவும் பின்னுடல் பாரத்தால் குதிகால் ஆழ்ந்தும் மணல் தூவிய வாசலில் புதிய காலடிகள் காண்கின்றன. கிளை மறைவிலிருந்து பார்க்கிறேன். (சுற்றி அவ்விதமே) அப்பா ! கண்ணுக்கு பிருமானந்தம் கிடைத்தது. இதோ என் ஆசைக் காதலி மலர் பரப்பிய பாறைப் பலகையில் படுத்து, தோழிகளால் வீசப்படு கிறாள். இருக்கட்டும். இவர்களது அன்னியோன்னிய சல்லாபத்தைக் கேட்கிறேன். (பார்த்துக் கொண்டு நிற்கிறான்.)

(முன் கூறியபடி சகுந்தலையும் தோழிகளும் காணப்படுகிறார்கள்.)

**தோழிகள் :** (வீசிக்கொண்டு) சகி சகுந்தலா, தாமரை இலைக் காற்று இனிமையாக இருக்கிறதா ?

**சகு :** ஏன் இப்படி வீணில் வீசுகிறீர்கள் ? (தோழிகள் வருத்தக் குறியுடன் ஒருவரை யொருவர் பார்க்கிறார்கள்.)

**அரசன் :** சகுந்தலை மிகவும் அசௌக்கியமாகத் தோன்றுகிறாள். இது வெய்யில் வெப்பத்தால் தான் இருக்குமோ? அல்லது என் மனதில் தோன்றுவது போலவா? இனி இதில் சந்தேகமென்ன?

மார்பில் இலாம் பூச்சி வேர்ப் பூச்சு ;
கையில் கழலும் கமலத் தண்டு
வளையல் ; காதலியின் துன்புறும்
உடலும் மனதைக் கவரும்.
காமனும் கோடையும் சமமாக
தபித்தாலும் கோடையின் பீடை
இள மங்கையரிடம் இவ்வாறு
அழகுடன் தீங்கிழைக்காது.

(தனிமையில்)

**பிரி :** அனசூயா! அந்த இராஜ ரிஷியைப் பார்த்தது முதற் கொண்டு சகுந்தலை மனக் கிலேசமடைந்திருக்கிறாள். ஒரு வேளை அதன் காரணமாக இந்தத் துன்பம் ஏற்பட்டிருக்குமோ?

**அன :** சகி, என் இதயத்திலும் இதே சந்தேகம். சரி, இவளைக் கேட்கலாம்.

**பிரி :** (பகிரங்கமாக) சகி, உன்னை ஒன்று கேட்கவேண்டும். உன் பீடை பலமாக இருக்கிறது.

**சகு :** (மலா சயனத்திலிருந்து பாதி எழுந்து) தோழி, என்ன சொல்ல விரும்புகிறாய்?

**அன :** சகி, சகுந்தலா! காம வசப்பட்டவர் போக்கைப்பற்றி எங்களுக்குப் பரிச்சயமில்லை. ஆனாலும், புராணக் கதைகளில் காதலரின் நிலைமை கூறப்பட்டிருக்கிறது. அப்படியே உன்னிடம் காண்கிறேன். சொல்வாய். இந்த உனது ஆயாசத்தின் காரணம் என்ன? நோயின் தன்மையை உண்மையில் அறியாமல் அதற்குப் பரிகாரம் தேடமுடியாது.

**அரசன் :** *அனசூயாவின் தர்க்கத்தை அனுசரித்தது எனதும்.*

**சகு :** *(தனக்குள்) எனது காதல் வலுத்து விட்டது. ஆனால் இவர்களிடம் கூட திடீரென்று தெரிவிக்க முடியவில்லை.*

**பிரி :** *சகி, இவள் பொருத்தமாகப் பேசுகிறாள். உனது பீடையை ஏன் அலட்சியம் செய்கிறாய் ? நாளுக்கு நாள் உனது அங்கங்கள் மெலிந்து வருகின்றன. லாவண்யத்தின் சாயை மட்டும் உன்னை விடவில்லை.*

**அரசன் :** பிரியம் வதா கூறியது
பரமார்த்தமே ; அவ்வாறே,
மிகவும் மெலிந்த கன்னம்,
உறுதி இழந்த தனங்கள்,
மிகச் சுருங்கிய சிற்றிடை,
தளர்ந்து வீழ்ந்த தோள்கள்,
வெளுத்த மேனி, வருந்தத் தக்கவள்,
காண்பதற்கு இனியவள், காமத்தால்
பீடிக்கப்பட்டவள், இலைகளை
உலரச் செய்யும் உஷ்ண வாயு
தீண்டிய மல்லிகைக் கொடிபோல்
காட்சி அளிக்கிறாள்.

**சகு :** *(நாணத்துடன்) சகி, வேறு யாரிடம் சொல்வேன். ஆனால் உங்களுக்குத் துன்பம் செய்கிறவளாகி விட்டேன்.*

**இருவரும் :** *அதனால்தான் இவ்வளவு நிர்ப்பந்தம். நேசர்களிடம் பங்கிட்டால் துக்கம் சகிக்கக் கூடியதாகும்.*

**அரசன் :** சுகமும் துக்கமும் சமமாகக் கருதும் சகி வினவ தன் மனோ வியாதியின் காரணம் சிறுமி கூற மறுக்கிறாள். பன்முறை முயற்சி செய்து என்னை இவள் பார்த்து இருந்தும் இச்சமயம் இவளுரை பற்றி அச்சமுற்றேன்.

**சகு :** சகி, தபோவனம் காக்கும் ராஜரிஷி என் கண் முன் தோன்றியது முதல், அவரிடமுள்ள ஆசையால் இந் நிலை அடைந்தேன்.

**அரசன் :** (மகிழ்ச்சியுடன்) கேட்க வேண்டியது கேட்டு விட்டேன்.

துன்பத்திற்குக் காரணம் காமதேவன். அதைத் தீர்ப்ப வனும் அவனே ஆகிருன். ஜீவலோகத்தைக் கோடை யில் கோளுந்தும் பகல் அதன் முடிவில் நீலமேகங் களால் சுகிப்பதுபோலவே.

**சகு :** ஆதலால், உங்களுக்கு உசிதமென்று தோன்றினுல், அம்மன்னன் அருளுக்கு நான் பாத்திரமாகும்படி செய் யுங்கள். இல்லையேல், எனக்குத் தண்ணீர் தெளித்து விடுங்கள்.

**அரசன் :** சந்தேகத்தை ஒழிக்கும் சொல்.

**பிரி :** (தனிமையில்) அனசூயா! காதல் அளவு கடந்துவிட்டது. இனி கால தாமதம் செய்யலாகாது. இவளை காதலிப் பவர் பௌரவ குல திலகர். ஆதலால் இவள் ஆசை யைத் தீர்ப்பது உசிதமாகும்.

**அன :** (தனிமையில்) சகி, நீ சொல்வதுபோலவே. (பகிரங்கமாக) தோழி, அதிருஷ்டவசமாக, பொருத்தமான விடத்திலே உனது பிரேமை. சமுத்திரத்தை விட்டு மகாநதி எங்கே போய் விழும்?

**பிரி :** அல்லது, மாமரத்தை யன்றித் தளிர்க்கும் முல்லைக் கொடிக்குத் தகுந்த தரு எது?

**அரசன் :** விசாக நக்ஷத்திரங்கள் பிறைச் சந்திரனைப் பின் தொடர்வதில் ஆச்சரியம் என்ன?

**அன :** சகியின் மனோரதம் பூர்த்தி செய்வதற்கு சீக்கிரமாகவும் இரகசியமாகவும் என்ன உபாயம் செய்யலாம்?

**பிரி :** இரகசியமாக என்பது யோசிக்க வேண்டிய காரியம். சீக்கிரமாகச் செய்வது சுலபம்.

**அன :** அதெப்படி ?

**பிரி :** இவளிடம் நேச நோக்கால் தன் ஆசையைத் தெரிவித்து இந்நாட்களில் அம்மன்னன் தூக்க மொழிந்து மெலிந்து வருவது புலப்படவில்லையா ?

**அரசன் :** உண்மையில் இவ்வாறு தானிருக்கிறேன். அப்படியே,

இதய வேதனையால் இரவுதோறும் தலையின் கீழ் வைத்த கை மீது கடைக் கண்ணீரிலிருந்து உஷ்ண நீர் கசிந்து, மணிகளின் வர்ணம் மங்கியுள்ள கனக வளையம் சிறிது தளர்ந்து, நாண் தழம்புபட்ட மணிக் கட்டிலிருந்து நழுவ நழுவ என்னால் தடுக்கப் படுகிறது.

**பிரி :** (யோசித்து) சகி, அவருக்குக் காதல் கடிதம் எழுத வேண்டும். அதைப் பூமாலையில் ஒளித்து தவப் பிரசாதம் என்ற சாக்கால் அம்மன்னன் கையில் சேர்த்து விடுவேன்.

**அன :** இந்த இனிய யோசனை எனக்குப் பிடித்திருக்கிறது. சகுந்தலை என்ன சொல்லுகிறாள் ?

**சகு :** உங்கள் யோசனைக்கு ஆட்சேபணை உண்டா ?

**பிரி :** ஆதலால், உன் உள்ளத்தை வெளிப்படுத்தும் இனிய சொல்லாலான கட்டுரையைச் சிந்தனை செய்.

**சகு :** சகி, சிந்திக்கிறேன். ஆனால், மறுப்புக்கு பயந்து எனது இதயம் துடிக்கிறது.

**அரசன் :** எவன் மறுப்புக்கு பயந்து மனம் கலங்குகிறாயோ, அவனிதோ உன்னை நாடி ஆவலுடன் நிற்கிறான்; சீதேவியைத் தேடுவோன் வெற்றியோ ஏமாற்றமோ அடையலாம்; சீதேவி விரும்பிப் பெறக்கூடாத புருஷனும் உண்டோ ?

**பிரி :** தன் பெருமை அறியாத பேதையே, உடலுக்கு இன்பம் விளைக்கும் சரத் கால சந்திர கிரணத்தைத் திரையால் எவ்ராவது தடுப்பாரோ ?

**சகு :** (புன்முறுவலுடன்) இதோ முனைந்தேன்.

(உட்கார்ந்து ஆலோசிக்கிருள்)

**அரசன் :** இந்த சந்தர்ப்பத்தில் கண் கொட்டாமல் என் காதலியைக் கவனிப்பேன்.

இவளோ,

சொற்களைச் சேர்க்கையில் ஒரு புருவம் மேல் தூக்கி நிற்க, மயிர்க் கூச்சல் எடுத்த கன்னத்தால், இவள் முகம் என் மீது காதலைப் பறை சாற்றுகிறது.

**சகு :** சகி, ஒரு பாசுரம் சிந்தித்திருக்கிறேன். எழுதும் வசதிகள் இங்கில்லையே.

**பிரி :** கிளியுடல் போல் மிருதுவான இந்தத் தாமரை இலையில் நகத்தால் எழுது.

**சகு :** (அப்படியே எழுதி) தோழிகாள், இதைக் கேளுங்கள் அர்த்தம் பொதிந்திருக்கிறதா வென்று கூறுங்கள்.

**இருவரும் :** நாங்கள் தயார்.

**சகு :** (படிக்கிருள்)

உனதுள்ளம் யான் அறியேன்; உன்னிடம் ஆசை கொண்ட அங்கங்களை இரவும் பகலும் இடைவிடாமல் கருணை யின்றிக் காமன் காய்கிறான்.

**அரசன் :** (திடீரென்று புகுந்து)

மெல்லியளே, உன்னைக் காமன் காய்கிறான்; என்னையோ அவன் ஓயாமல் கொளுந்துகிறான்; சந்திரனைச் சிதைப்பதுபோல் பகல் குமுத மலரைக் குலைப்பதில்லை.

**இருவரும் :** (மகிழ்ச்சியுடன் பார்த்து) *மனோரதப்படி தாமதமின்றி வந்த உங்களை வரவேற்கிறோம்.*

(சகுந்தலை எழுந்திருக்க விரும்புகிறாள்.)

**அரசன் :** *வீண் ஆயாசம் வேண்டாம்.*

மலர் விரிப்பு உஷ்ணத்தால் உலர்ந்து போக, நறு மணக் கமலத் தண்டு வாட, பெரிதும் துன்புறுகின்ற உன்னுடல் வீண்உபசாரத்திற்கு உரியதல்ல.

**அன :** *இந்தக் கல் மேடையில் ஒருபுறம் உட்காருங்கள்.*

(அரசன் உட்காருகிறான். சகுந்தலை நாணத்தால் நிற்கிறாள்)

**பிரி :** *அன்பரே ! உங்கள் இருவரது பரஸ்பர காதல் வெளிப் படை. எனது சகி சினேகம், அறிந்த விஷயத்தை மீண்டும் வற்புறுத்தும்படி செய்கிறது.*

**அரசன் :** *நல்லாய் ! விரும்பியதை வெளிப்படக் கூறாமல் இருந் தால் பிறகு பச்சாதாபப் படவேண்டி வரும்.*

**பிரி :** *தங்கள் நாட்டில் வசிப்போரின் துன்பத்தைத் தீர்ப்பது அரசனுடைய அறம் அல்லவா ?*

**அரசன் :** *வேறென்ன வேலை ?*

**பிரி :** *ஆதலின் தங்கள் பொருட்டு எங்கள் பிரியசகி காம தேவனால் இந்நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறாள். இவள் உயிர் வைத்திருப்பதற்குத் தாங்கள் தகுந்த வழி தேடவேண்டும்.*

**அரசன் :** *நல்லாய் ! இக்கோரிக்கை இருவருக்கும் சமம். மிகவும் பாக்கியசாலி ஆனேன்.*

**சகு :** (பிரியம் வதையைப் பார்த்து) *சகி, மாளிகை மங்கைகள் மீது ஆவல்கொண்ட மன்னனை வீணில் ஏன் தொந்திரவு செய்கிறாய் ?*

**அரசன்** : என் உள்ளத்தில் வீற்றிருப்பவளே! தனிமையில் உன்னையே என்னிதயம் நாடி நிற்கிறது. வேறு விதமாக எண்ணுவாயேல் காமன் கொன்ற என்னை மீண்டும் கொல்லுவாய்.

**அன** : *அன்பரே, பல மனைவி படைத்தவர் அரசர். எங்கள் பிரிய சகி தன் பந்துக்களால் வருந்தத்தகாத வண்ணம் நிர்வகிக்க வேண்டும்.*

**அரசன்** : *நல்லாய் ! வீணில் வாக்கை வளர்ப்பானேன்.*

பல மனைவிகள் இருந்தும் என் குலத்தின் பெருமைக்கு இருவரே ஆதாரமாவர். அலைகடல் மேகலையாள் பூதேவியும் உங்கள் அன்பிற்குரிய இந்தோழியுமே.

**இருவரும்** : *மகிழ்ந்தோம்.*

**பிரி** : *(கண்ணால் சமிக்ஞை செய்து) சகி, இங்கு மங்கும் சுற்றி நோக்கி மான் குட்டி கவலையோடு தன் தாயைத் தேடுகிறது. வா, இதைத் தாயுடன் சேர்ப்போம்.*

(இருவரும் புறப்படுகிறார்கள்.)

**சகு** : *சகி, என்னைக் காப்பாரில்லை. உங்களில் ஒருவர் வர வேண்டும்.*

**இருவரும்** : உலகங் காப்போன் உன் பக்கத்திலிருக்கிறான்.

(போகிறார்கள்.)

**சகு** : *நிச்சயம் போய் விட்டார்களா ?*

**அரசன்** : *வீண் கலக்கம் வேண்டாம். உன் தொண்டன் உன்னருகில் இல்லையா ?*

நனைந்த தாமரை இலை விசிறியால் சோர்வு தீரக் குளிர்காற்று வீசலாமா? அல்லது மடியில் வைத்து, உன் கமல வர்ணக் கால்களை இன்புறப் பிடிக்கலாமா?

**சகு :** மதிப்பிற்குரியவர்களிடம் இவ்விதம் குற்றம் செய்ய மாட்டேன்.

**அரசன் :** சுந்தரி, வெப்பம் தணிய நேரமாகவில்லை. உன் நிலையோ இவ்விதம்.

மலர் சயனத்தையும், தனத்தில் பொருந்திய தாமரை இலைப் போர்வையையும் தள்ளிவிட்டு நோயால் மெலிந்த அங்கங்களுடன் வெய்யிலில் எவ்விதம் போகத் துணிந்தாய் ?

(பலவந்தமாகத் திருப்புகிறன்.)

**சகு :** ஒழுக்கங் காப்பாய், பௌரவா. காமன் கையில் சிக்கினும், எனக்கு சுவாதீனமில்லை.

**அரசன் :** பயங்கொள்ளி, வீணில் குருவிடம் அச்சப்படுகிறய். ஆலோசித்துப்பார்.

கந்தர்வ மணமுறையால் பல மன்னர்
குலக் கன்னியரை மணந்தாரென்றும்
அதை அவர் தந்தையர் அனுமதித்து
மகிழ்ந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

**சகு :** இப்பொழுது என்னை விட்டு விடுங்கள்.

**அரசன் :** சரி, விட்டு விடுகிறேன்.

**சகு :** எப்பொழுது ?

**அரசன் :** புண்படாத புதிய மென்மலரை விரும்பும் வரிவண்டு இன்புறுவது போல, உன் அதரத்தைப் பருகப் பேராவல் கொண்ட யான் அதன் சுவையை நோகாமல் நுகர்ந்த பின்.

(அவள் முகத்தைக் கையால் மேலே தூக்க முயலுகிறன்)

**சகு :** (பரபரப்புடன் அதைத் தடுக்கிறள்)

(திரைக்குள்)

சக்கரவாக நாயகி, உன் நாயகனிடம் விடை பெறுவாய். கங்குல் நெருங்குகிறது.

**சகு :** (காது கொடுத்துக் கேட்டுவிட்டு பரபரப்புடன) பௌரவ, நிச்சயமாக என் உடல் நிலையை அறிவதற்கு கௌதமிப் பெரியாள் இங்கே வந்து கொண்டிருக்கிருள். செடிகளுக்குள் மறைந்து கொள்.

**அரசன் :** அப்படியே (மறைவில் நிற்கிருன்.) (கையில் பாத்திரத்துடன் கௌதமி வருகிருள்) இதோ, இதோ.

**கௌதமி :** (சகுந்தலையிடம் வந்து) மகளே, உன் அங்கங்களின் நோய் சற்றுக் குறைந்ததா?

**சகு :** மிகவும் குறைந்தது.

**கௌ :** இந்த மந்திர நீரால் உனதுடல் நோய் அடியோடு தீர்ந்துவிடும். குழந்தாய், பகல் முடிந்தது. குடிசை செல்வோம்.

(புறப்படுகிருர்கள்)

**சகு :** (தனக்குள்) இதயமே! உனது மனோரதம் ஆரம்பத்திலேயே இனிது பூர்த்தியாக இருக்கையில் நீ பயங்குள்ளித்தனத்தை விடவில்லை. இப்பொழுது பிரிவால் ,என் வருத்தப் படுகிருய்? (சில அடி சென்று நின்று பகிரங்கமாக) துன்பம் தீர்க்கும் கொடி வீடே! மீண்டும் கூடி இன்புற விடை கொடுப்பாய்!

(மிக வருத்தத்துடன் மற்றவர்களுடன சகுந்தலை மறைகிருள்)

**அரசன் :** (பழைய இடம் வந்து பெரு மூச்சுடன்) கோரும் பொருள் கூடுவதில் பல இடையூறுகள். யாஞே,

அடர்ந்த புருவத்தாள், தோள் பக்கம் வளைத்து மீண்டும் மீண்டும் உதடுகளை விரலால் மூடி, மாட்டேன் என்று மறுப்புரையால் மனதைக் கவரும் முகத்தை முயற்சியுடன் தூக்கினேன். முத்தமிடவில்லையே!*

*எங்கேயாவது போகலாமா? வேண்டாம். **காதலி** இன்புற்று விடுத்த இக்கொடி மண்டபத்திலேயே சிறிது நேரம் இருப்பேன்.*

அவளுடல் பட்டுக் கலந்த மலர் சயனம் இதோ பாறை மீது பரந்துள்ளது; தாமரை இலையில் நகத்தால் வரைந்த காதல் கடிதம் இதோ வாடிக் கிடக்கிறது. கமலத்தண்டு வளையல் இதோ கைநழுவி வீழ்ந் திருக்கிறது. எனவே கண் புதைந்து, சூன்யமாக இருப்பினும் அதை உடனே விட்டகல எனக்கு ஆற்றல் இல்லை.

(திரைக்குள்)

மாலை வேள்வி கருமம் தொடங்கவே ஓமத்தீ வளரும் மேடையைச் சூழ்ந்து சந்தி கால மேகம் போல் சிவந்த நிறத்தோடு அச்சமூட்டும் அரக்கர்களின் நிழல்கள் எங்கும் சஞ்சரிக்கின்றன.

**அரசன் :** (கேட்டு) *இதோ நான் வந்து விட்டேன்.*

(போகிறான்)

**(மூன்றாவது அங்கம் முற்றிற்று.)**

---

## *நான்காவது அங்கம்.*

(*மலர் கொய்து கொண்டிருக்கும் தோழிகள் தென்படுகிறார்கள்*)

**அன :** *சகி பிரியம்வதா, கந்தர்வ விவாக முறைப்படி மங்கள மாகத் திருமணம் முடிந்து தனக்கொத்த கணவனைச் சகுந்தலை அடைந்தாள் என்று என் இதயம் நிம்மதி பெற்றது. ஆயினும் சிந்திக்க வேண்டியது ஒன்றுளது.*

**பிரி :** *அதென்ன?*

**அன :** இன்று அம்மன்னன் வேள்வியை முடித்து விட்டு முனிவர்களிடம் விடை பெற்று தனது நகரம் போய் மாளிகை மங்கைகளோடு கூடிய பின் இங்கு நடந்த வரலாறு நினைவிருக்குமா இருக்காதா என்பது தான்.

**பிரி :** கவலைப்படாதே. அவ்விதத் தோற்றத்திற்கும் குணத் திற்கும் மாறுபாடு இராது. தந்தை இதைக் கேட்டு எவ்விதம் ஏற்பாரோ என்று புலப்படவில்லை.

**அன :** அனுமதிப்பாரென்று எனக்குத் தோன்றுகிறது.

**பிரி :** எக்காரணத்தால் ?

**அன :** தகுந்த வரனிடம் மகளைச் சேர்ப்பிக்க வேண்டு மென்று ஆதிமுதலே தந்தையின் கருத்து. அதைத் தெய்வமே செய்து விட்டால் அதிக ஆயாசமின்றி குருவின் காரியம் முடிந்து விட்டதல்லவா ?

**பிரி :** (பூக்கூடையை பார்த்து) சகி, அர்ச்சனைக்கு வேண்டிய மலர் சேர்ந்து விட்டது.

**அன :** சகுந்தலையின் அதிருஷ்ட தேவதைக்குத் தனியாக அர்ச்சனை செய்ய வேண்டாமா ?

**பிரி :** அவசியம். (அப்படியே செய்கிறார்கள்.)

(திரைக்குள்)

யார் இங்கே ?

**அன :** (கேட்டு) விருந்தினர் கூப்பிடுவது போல் இருக்கிறது.

**பிரி :** சகுந்தலை குடிசையில் இருக்கிறாள் அல்லவா ?

**அன :** அவள் உள்ளமோ அங்கில்லை.

**பிரி :** இவ்வளவு போதும். (புறப்படுகிறார்கள்.)

(திரைக்குள்)

ஆகா ! அதிதியை அவமதித்தவளே !

எவனை நினைந்து வேறு எதையும் மதியாது தவச் செல்வன் யான் வந்ததை உணராயோ அவன், நினைவு மூட்டிடும் உன்னை அறியான்; மயக்கத்தில் முதலில் சொன்ன செய்தி பித்தம் தெளிந்தபின் மறப்பது போலவே.

**அன :** ஐயோ, ஐயோ, அப்படியே நடந்து விட்டது. இதய மிழந்த சகுந்தலை யாரோ வழிபடும் பெரியோரிடம் தவறு செய்து விட்டாள். (மீண்டும் பார்த்து) அதுவும் சாதாரண பேர்வழியிடம் இல்லை. இந்த துர்வாசர் சுலபகோபி. மகாமுனிவர். இவ்விதம் சபித்து விட்டுப் பரபரப்புடன் விரைந்து திரும்பி வருகிறார். தீயைத் தவிர வேறெதனால் எரிக்கமுடியும்? வா, இவர் காலில் விழுந்து திருப்புவோம்.

**பிரி :** அவ்வாறே செய்வோம்.

(போகிறார்கள்)

**அன :** (வழியில் தடுக்கி விழுந்து) ஐயோ, வேகத்தால் தடுக்கி விழுந்தேன். கையிலிருந்து பூக்கூடை தவறி விழுந்து விட்டது.

(பூக்களைப் பொறுக்குகிறாள்)

**பிரி :** (போய் திரும்பி வந்து) சகி, இயற்கையில் வக்கிர சுபாவ முள்ள அம்முனிவர் எவருடைய சமாதானத்தையாவது ஏற்பாரா? ஆயினும், சிறிது கருணை யுடையவராகச் செய்தேன்.

**அன :** (புன்சிரிப்புடன்) அதே பெரிய காரியம். மேலே சொல்.

**பிரி :** கெஞ்சியும் அவர் திரும்பச் சம்மதிக்கவில்லை. அப்பொழுது நான் பிரார்த்தித்தேன்.

**அன :** எவ்விதம்?

**பிரி :** 'பகவான்! பழைய பக்தியை எண்ணி தங்கள் மகிமை அறியாத மகள் செய்த இந்த ஒரு குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்' என்று.

**அன :** அதன் பின் ?

**பிரி :** ' என் வசனம் வீண் போகாது, ஆனால் அடையாள ஆபரணத்தைக் கண்டதும் சாபம் தீரும் ' என்று கூறி மறைந்தனர்.

**அன :** இப்பொழுது ஆறுதல் அடையலாம். புறப்படும் பொழுது அம்மன்னனால் தன் நாம முத்திரையுள்ள கணையாழி தன்னை மறவாதிருப்பதற்கென்று அவரால் சகுந்தலை யின் விரலில் போடப்பட்டது. ஆதலால், இதற்கு உபாயம் சகுந்தலையின் வசமிருக்கிறது.

**பிரி :** வா, தேவ காரியத்தைப் பூர்த்தி செய்வோம். (சுற்றி வருகிறார்கள். சகுந்தலையைப் பார்த்து) அனசூயா, அதோ பார். இடது கையில் கன்னம் வைத்து சித்திரத்தில் எழுதியவள் போல் இருக்கிறாள் நமது பிரியசகி. கணவன் பால் சென்ற சிந்தனையால் தன் நினைவுகூட இல்லை. விருந்தாளியைப்பற்றி வினவ வேண்டுமா ?

**அன :** பிரியம்வதா, இந்த வரலாறு நம்மிருவர் நாவிலேயே இருக்கவேண்டும். இயற்கையில் மிருதுவான நம் தோழியை நாம் காக்கவேண்டும்.

**பிரி :** இள மல்லிக் கொடிக்கு யாராவது சுடு தண்ணீர் விடு வாரோ ?

(போகிறார்கள்)

## காட்சி இரண்டு

(தூங்கி எழுந்து சீடன் வருகிறான்)

**சீடன் :** யாத்திரையிலிருந்து திரும்பிய காசியபர் என்னை வேளை தெரிந்து வரக் கட்டளை யிட்டிருக்கிறார். வெளியில் வெளிச்சத்தில் போய் இரவு கழிய எவ்வளவு நாழிகை மீதி என்று பார்க்கிறேன். (சுற்றிப் பார்த்து) அடா, விடிந்து விட்டது.

மூலிகைக் கதிபன் மதி ஓர் புறம்
அஸ்தமிக்க, அருணன் முன் செல்ல
கதிரவன் உதிக்கிறுன். ஏககாலத்தில்
இரு ஒளிகள் உதயாஸ்தமனமாவது
மாந்தரின் தசை விதிப்படி மாறுவதைக் குறிக்கும்.
மேலும்,
சந்திரன் மறைந்தவுடன் காந்தி யிழந்த ஆம்பல் எனது கண்ணுக்குஇன்பம் அளிக்கவில்லே. காதலர் அயலூர் சென்ற அபலேகளின் துயரம் சிறிதும் சகிக்கலாகாது.

(திரை மூலேயில் நுழைந்து)

**அன :** *சிற்றின்பத்தில் பற்றில்லாத மனிதருக்கு கூட இது தெரியாமலில்லே. சகுந்தலே பால் அனேத்து மறிந்த அரசனது நடவடிக்கை அக்கிரமம்.*

**சீடன் :** *ஓமவேளே கிட்டி விட்டதை குருவுக்குத் தெரிவிக்கிறேன்.*

(போகிருன்)

**அன :** *நான் அதிகாலேயில் விழித்தும் என்ன பிரயோசனம் ? செய்ய வேண்டிய காரியங்களில் கைகால்கள் செல்ல வில்லே. உள்ளத் தூய்மையுள்ள சகியைப் பொய்ய னிடம் பிணேத்து காமதேவன் திருப்தி அடையட்டும். அல்லது, ஒருகால் துர்வாசரின் சாபம் இவ்விதம் கலக்குகிறதோ ? இல்லேயேல், அம்மன்னன் அவ்விதம் கூறிவிட்டு இதுவரையில் ஒரு கடிதம் கூட அனுப்பாம லிருப்பாரா ? ஆதலால், இங்கிருந்து அவரிடம் அடை யாளத்திற்காகக் கணேயாழி அனுப்புகிறேன். தாபச ஜனங்களுக்கு காய கிலேசம் சுலபம். ஆனுல் இதற்கு எவரைப் பிரார்த்திக்கலாம். யாத்திரையிலிருந்து திரும்பிய தந்தை காசியபரிடம் துஷ்யந்தனே மணந்து கருத்தரித்த சகுநதலேயைப்பற்றிச் சொல்லத் தீர்மானித் திருந்தும் தோழிக்கும் அவதூறுகுமோ வென்று நா எழவில்லே. இன்னிலேயில, நாம் என்ன செய்யலாம் !*

(பிரவேசித்து)

பிரி : (மகிழ்ச்சியுடன்) சகி, சகுந்தலையின் புறப்பாட்டு மங்களங்கள் செய்ய துரிதமாக வா.

அன : சகி, இது எங்ஙனம் ?

பிரி : கேள். சற்றுமுன் சகுந்தலையிடம் சரியாகத் தூங்கினாயா என்று வினவச் சென்றேன்.

அன : அதன் பிறகு ?

பிரி : அப்பொழுது நாணத்தால் தலை குனிந்த சகுந்தலையை அணைத்துத் தந்தை பின்வருமாறு மகிழ்ந்தார். 'அதிருஷ்டவசமாக, புகையால் கண் தெரியாவிட்டாலும், எஜமான் அவிக ர்யில் விழுந்துவிட்டது. குழந்தாய் ! சற்குண சீடனுக்குக் கொடுத்த கல்வி போல் எனக்கு வருந்துவதற்கிடமில்லாத நிலை பெற்றாய் ; மன்னன் உவந்தேற்ற உன்னை நின் கணவனிடம் இன்றே அனுப்புகிறேன்' என்று.

அன : தந்தைக்கு இவ்வரலாறு எவரால் அறிவிக்கப்பட்டது ?

பிரி : வேள்வி சாலையில் பிரவேசித்த பொழுது அசரீரி வாக்கால்.

அன : மேலே சொல்.

பிரி : முனிவரே, உலகின் நலத்துக்காக உன் மகள், அரணிக்கட்டை அக்கினி தாங்குவதுபோல் துஷ்யந்தன் வீர்யம் தரித்தாள் என்றறிவாய்.

அன : (பிரியம் வதையைக் கட்டிக் கொண்டு) தோழி, மகிழ்ந்தேன். ஆனாலும், இன்றே சகி செல்லுகிறாளென்று வருத்தத்துடன் கலந்தது எனது மகிழ்ச்சி.

பிரி : சகி, நாம் எவ்விதமேனும் நமது வருத்தத்திற்கு ஆறுதல் தேடலாம். நமது தலிக்கும் தோழி சுகிக்கட்டும்.

அன : ஆகையால், மாமரக்கிளையில் தொங்கும் கொட்டாங் குச்சியில் இதற்காக நீண்ட நாள் வாடாமலிருக்கக்கூடிய மகிழம்பூ மாலையை வைத்திருக்கிறேன். அதைக் கையில் எடுத்துவா. அதற்குள் நானும் கோரோசனை, திருமண், அறுகம்புல் துளிர் முதலிய மங்கள சாதனங்களைச் சேகரிக்கிறேன்.

பிரி : அப்படியே செய்வோம். (அனசூயா போகிறாள். பிரியம் வதை மாலையிருக்கும் பாண்டத்தை எடுக்கிறாள்.)

(திரைக்குள்)

கௌ : சகுந்தலையை அழைத்துச் செல்ல சார்ங்கரவன் முதலோரைக் கூப்பிடுங்கள்.

பிரி : (காது கொடுத்துக் கேட்டு) அனசூயே, துரிதம் செய். (அஸ்தினா புரம் போகும் முனிவர்களைக் கூப்பிடுகிறார்கள்.)

(சாதனங்களோடு நுழைந்து)

அன : சகி, வா, போவோம்.

(சுற்றுகிறார்கள்)

பிரி : (பார்த்து) இதோ சகுந்தலை சூரியோதயமே தலை முழுகி தாபசத் தாய்மார்களால் அக்ஷதையாலும் வாக்காலும் ஆசீர்வதிக்கபட்டு நிற்கிறாள். நாமும் நுழைவோம்.

ஒருதாபசி : குழந்தாய், கணவன் மதிப்பை குறிக்கும் மகாதேவி என்னும் பட்டம் பெறுவாயாக.

வேறொருத்தி : மகளே, வீரனை மகனைப் பெறுவாயாக.

மற்றொருத்தி : பர்த்தாவின் பேராதரவைப் பெறுவாயாக.

(ஆசீர்வாதம் செய்து விட்டு கௌதமியைத் தவிர மற்றவர்கள் போகிறார்கள்)

தோழிகள் : (நுழைந்து) சகி, சுகமாக ஸ்நாநம் முடிந்தது.

சகு : என்னருமைத் தோழிகாள், நல்ல சமயத்தில் வந்தீர் கள். இங்கே உட்காருங்கள்.

**இருவரும் :** (மங்கல சாதனங்களோடு உட்கார்ந்து) சகி, சகுந்தலா, நாங்கள் உனக்கு மங்களாலங்காரம் செய்வோம்; அதற்கு தயாராகுவாய்.

**சகு :** இது மிகவும் அருமையானது. இனி சகிகளால் அலங்காரம் செய்யப் படுவது துர்லபம் (கண்ணீர் விடுகிறாள்)

**சகிகள் :** மங்கள காலத்தில் அழுவது சரியல்ல.

(கண்களைத் துடைத்து சிங்காரிக்கிறார்கள்)

**பிரி :** சகி, நல்ல ஆபரணத்திற்கு உசிதமான இவ்வுருவம் ஆசிரமத்தில் எளிதில் கிடைக்கும் சாதனங்களால் விகாரம் செய்யப்படுகிறது.

(இரு முனி குமாரர்கள் அலங்காரங்களைக் கொண்டு வருகிறார்கள்)

**மு. கு :** இதோ அலங்காரம். இவளைச் சிங்காரம் செய்யுங்கள்.

(எல்லோரும் பார்த்து ஆச்சரியப்படுகின்றனர்)

**கௌ :** பிள்ளாய், நாரத, இவை எங்கிருந்து ?

**முதல் மு. கு :** தந்தை காசியபரின் மகிமையால்,

**கௌ :** மனதால் படைத்தாரா ?

**இரண். மு. கு :** இல்லை. கேளுங்கள். தந்தை காசியபரால் சகுந்தலையின் பொருட்டு மலர் சேகரித்து வாருங்கள் என்று உத்தரவிடப்பட்டோம்.

அச்சமயம்,

மங்களம் நாடி மதிபோன்ற வெண்பட்டைத் தந்தது ஓர் தரு; கால்களின் அழகை வளர்த்திட அரக்கைப் பெருக்கிற்று வேறோர் மரம்; இதர அணிகலன்களை வனதேவதைகள் புதிய துளிர் தோன்றுவதுபோல் கிளைகளின் நுனியில் நீட்டிய மெல்லிய கைகளால் கொடுத்தன.

**பிரி :** (சகுந்தலையைப் பார்த்து) தோழி, இந்த அதிருஷ்ட சம்பவத்தால் கணவன் மாளிகையில் நீ அடையப் போகும் அரச போகம் குறிப்பிடப்பட்டது.

(சகுந்தலை வெட்கப்படுகிறாள்)

**மூ. மு. கு :** கௌதம, வா போகலாம். ஸ்நானம் செய்யப் போன காசியபருக்கு வனதேவதைகளின் சேவையைத் தெரிவிப்போம்.

**இ. மு. கு :** அப்படியே.

(போகிறார்கள்)

**அன :** சகி, அலங்கார முறை எங்களுக்குத் தெரியாது; ஆயினும் சித்திரங்களில் செய்திருப்பதை அனுசரித்து உனது அங்கங்களில் ஆபரணங்களைப் பூட்டுவோம்.

**சகு :** உங்கள் சாமர்த்தியம் எனக்குத் தெரியும்.

(இருவரும் அலங்கரிக்கிறார்கள். ஸ்நானம செய்து விட்டு காசியபர் வருகிறார்)

**காசியபர் :** இன்று சகுந்தலை செல்லுகிறாளென்ற வருத்தம் என் உள்ளத்தை ஊடுருவியது; நயனங்கள் நீர் சொரிய, தொண்டை அடைத்தது; சிந்தையால் கண்கள் இருண்டன; வனத்தில் வசிக்கும் எனக்கே நேசத்தால் இவ்வித மனத்தளர்ச்சி ஏற்படுமாயின், மகளை முதலில் பிரியும் துயரத்தால் இல்லறத்தார் வருந்துவது எவ்விதமோ?

(சுற்றுகிறார்)

**சகிகள் :** சகி, உன் அலங்காரம் முடிந்தது. இப்பொழுது வெண் பட்டை உடுத்திக்கொள்.

(சகுந்தலை எழுந்து உடுத்திக் கொள்கிறாள்)

**கௌ :** மகளே, ஆனந்த வெள்ளம் பொங்கும் கண்களால் உன்னை ஆலிங்கனம் செய்வார் போல் தந்தை இதோ நிற்கிறார். ஆதலால் மரியாதை செய்.

**சகு :** (நாணத்துடன்) அப்பா, வணங்குகிறேன்.

**காசி :** குழந்தாய்! யயாதிக்கு சர்மிஷ்டை போல், கணவன் மதிப்பைப் பெறக்கடவாய்; புருவைப்போல மன்னர் மன்னனையே மகனாயும் நீ அடைவாயாக.

PUBLIC

**கௌ :** பகவானே, இவை ஆசிகளல்ல; வரங்களாகுக.

**காசி :** குழந்தாய், வா, சற்றுமுன் ஓமம் செய்த வன்னிகளை வலம் செய்.

(எல்லோரும் சுற்றுகிறார்கள்)

**காசி :** (வேதபாசுரத்தால் ஆசீர்வதிக்கிறார்)

ஓரத்தில் தசப்புல்லும் சமிதையும் கூடி மேடையைச் சுற்றிலும் விதிப்படி வளர்ந்து ஓமப் புகையால் தீமையைப் போக்கும் வேள்வி வன்னிகள் உன்னைக் காக்கக் கடவ.

இப்பொழுது புறப்படு (கண்ணைத் துடைக்கி) சார்ங்கரவர் முதலோர் எங்கே ?

(பிரவேசித்து)

**சீடன் :** குலபதி, இதோ வந்தோம்.

**காசி :** சார்ங்கரவ, உன் சகோதரிக்கு வழி காட்டு.

**சார்ங் :** இப்படி வாருங்கள் சகோதரி.

(சகுந்தலை சுற்றுகிறாள்)

**காசி :** தபோவனத் தருக்களில் வனதேவதைகள் காத்திருக்கின்றனர்.

உங்கள் தாகம் தீர்ப்பதற்கு முன் தான் நீர் பருக நினையாதாள்; அலங்கார ஆசை இருந்தும் இளந்தளிரை உங்களன்பால் கிள்ளச் சகியாள்; நீங்கள் முதலில் பூத்துப் பிஞ்சு விடுங்கால் மகிழ்ந்து திருவிழாக் கொண்டாடுவாள்; அந்தச் சகுந்தலை பதிவீடு செல்லுகிறாள்; அனைவரும் அவளுக்கு விடை கொடுங்கள்.

(குயில் குரல் கேட்டு)

இவ்விதம் குயிலின் இனிய குரலால்
எதிர் வாக்கு கிடைத்து விட்டதால்
வனவாசத்தில் சுற்றத்தாரான தருக்களின்
விடை பெற்றாள் சகுந்தலை.

பச்சைத் தாமரை படர்ந்து
அழகார்ந்த ஏரிகளும் கதிரவன்
கிரண வெப்பம் தடுக்கும் நிழல்
மரங்களும், மெதுவான மாருதமும்
இனிது கூட்டி, கமலத்தாது
படிந்து மிருதுவாக மாரிக்கால மெல்லாம்
மங்களம் உண்டாகுக.

(எல்லோரும் ஆச்சரியத்துடன் கேட்கிறார்கள்)

**கௌ :** மகளே, உற்றாரிடம் பற்றுள்ள தபோவன தேவதை களிடம் விடை பெற்றாய். அவர்களை வந்தனை செய்.

**சகு :** (கை கூப்பி வலம் வந்து) (தனிமையில்) சகி பிரியம்வதா, நாதனைக் காண ஆவல் கொண்டிருந்தும் ஆசிரமத்தை விட்டுப் போக முன்னால் காலடி வைப்பது கடினமாய் இருக்கிறது.

**பிரி :** தபோவனத்தை விட்டுப் பிரியத் தோழிக்கு மட்டும் அல்ல துக்கம். தபோவனத்திற்கும் சமநிலை ஏற்பட்டிருப் பதைப் பார்.

அசை போடும் புல்லைக் கக்குகின்றன மான்கள்; நர்த் தனத்தை நிறுத்தின மயில்கள்; உலர்ந்த சருகுகளை உதிர்த்து கொடிகள் கண்ணீர் சொரிகின்றன போலும்.

**சகு :** (நினைத்து) அப்பா, எனது கொடித் தங்கை வனவெண்ணி லாவிடம் விடை பெறுகிறேன்.

**காசி :** அவளிடம் உனது சகோதரி சிநேகம் அறிவேன். இதோ தென்புறம் இருக்கிறாள்.

**சகு :** (கொடியிடம் சென்று) வனவெண்ணிலா, மாமரத்தோடு கூடி யிருந்தாலும் இங்கு படர்ந்திருக்கும் கிளைக் கைகளால் என்னைக் கட்டிக் கொள். இன்று முதல் வெகு தூரத்தில் இருப்பவளாவேன்.

**காசி :** ஆதி முதல் நான் செய்த தீர்மானப்படியே தகுந்த கணவனைப் புண்ணியத்தால் நீ பெற்றாய்; இந்த மல்லிகைக் கொடியும் மாந்தரு தழுவினாள்; இருவர் பாலும் இனி எனக்குக் கவலையில்லை.

*வழியில் மேலே செல்வாய்.*

**சகு :** *தோழிகாள், இவளை உங்கள் இருவர் கையிலும் ஒப்புவித்தேன்.*

**தோழிகள் :** *இந்தப் பேதைகளை எவரிடம் ஒப்புவித்தாய்?*

(கண்ணீர் விடுகிறாகள்)

**சகு :** *அனசூயா, வீணில் அழாதே. சகுந்தலையை நீங்கள் அல்லவோ தைரியப்படுத்தவேண்டும்?*

(எல்லோரும் சுற்றுகிறார்கள்)

**சகு :** *அப்பா, நமது குடிசைக் கருகில் சஞ்சரிக்கும் இப்பெண் மான் கர்ப்பத்தால் மந்தமாக நடக்கிறது. அது தீங்கின்றிப் பிரசவமான நற்செய்தி எனக்கு அனுப்புங்கள்.*

**காசி :** ஆகட்டும். நாம் இதை மறவோம்.

**சகு :** (நடை தடையிடுவதை நோக்கி) *எனது உடையில் ஏதோ அடிக்கடி சிக்கிக் கொள்கிறதே?*

(திரும்பிப் பார்க்கிறாள்)

**காசி :** குழந்தாய்! குசப்புல் குத்திய முகத்தின் மீது இலுப் பெண்ணை தடவி புண்ணாற்றினையல்லவா; சாமையை நீ கையால் ஊட்டி வளர்த்த வளர்ப்பு மான் மகன் உன் வழி விலகாது.

**சகு :** *குழந்தாய், உடன் வசித்தோரைத் துறந்து செல்லும் என்னை ஏன் பின் தொடருகிறாய்? தாயில்லாமலே நீ வளர்க்கப்பட்டாய் அல்லவா? இனியும், நான் சென்ற பின் தந்தை உன்னைக் கவனிப்பார். ஆதலால் இப்பொழுது திரும்பிப் போ.*

(என்று அழுதுகொண்டு போகிறாள்.)

**காசி :** உயர்ந்த புருவமுள்ள கண்களை மறைக்கும் கண்ணீரை உறுதியுடன் தடுப்பாய். மேடு பள்ளத்தை நன்கு நோக்காவிடில் வழியில் உன் அடிகள் தடுமாறும்.

**சார்ங் :** நீர் வரையில் அன்பினரைப் பின் தொடரலாம் என்று கூறுவார்கள் ; இதோ ஏரிக்கரை. இங்கு எங்களுக்கு கட்டளை விடுத்துத் திரும்புவது தகும்.

**காசி :** ஆதலால், இந்த ஆலமரத்து நிழலில் தங்குவோம்.

(சுற்றி வந்து நிற்கிறார்கள்)

**காசி :** (தனக்குள்) துஷ்யந்த மன்னனுக்குத் தகுந்தவாறு என்னசெய்தி அனுப்பவேண்டும் (சிந்திக்கிறார்)

**சகு :** (தனிமையில்) தோழி, அதோ பார். வலது பக்கத்திலுள்ள தாமரை இலையில் மறைந்திருந்த கூட்டாளியைக் காணாமல், சக்கரவாக மனைவி 'என்னால் சகிக்க முடியாது' என்று கத்துகிறது.

**அன :** சகி, இம்மாதிரி கூறாதே.

இவளும் நாயகனின்றி நீளிரவு தள்ளுவாள். பிரிவாற்றாமை பெரிதாயினும், ஆசைப் பிணை சகிக்கச் செய்கிறது.

**காசி :** சார்ங்க்ரவ, சகுந்தலையை முன்னிட்டு மன்னனிடம் என் சார்பில் பின்வருமாறு கூறுவாய்.

**சார்ங் :** உத்தரவு இடுங்கள்.

**காசி :** யாம் தவச் செல்வர் ; உனது குலம் உத்தமம் ; உறவினர் அறியார் இவள் பால் நினது வரலாறு ; இவை யெல்லாம் நன்கு சிந்தனை செய்து, மற்ற மனைவிகள் போல் இவளையும் ஏற்பாய் ; அவள் பாக்கியத்தைப் பொருத்தது அதற்கு மேல் ; பெண்ணின் பந்துக்கள் அதைப்பற்றி கூறத் தகாது.

**சார்ங் :** தங்கள் செய்தி ஏற்றேன்.

**காசி :** குழந்தாய், இனி உனக்கு உபதேசம் செய்யவேண்டும். வனவாசியானாலும் நாம் உலகம் அறிவோம்.

**சார்ங் :** மேதாவிகள் அறியாத பொருள் இல்லை.

**காசி :** உனது பதிகுலம் அடைந்து நீ பெரியோருக்குப் பணிவிடை செய்வாய் ; சக்களத்திகளைப் பிரிய சகி போல் பாவிப்பாய் ; கணவன் கோபித்தாலும் ஆத்திரப் பட்டு

அவனை எதிர்த்து விரோதம் செய்யாய் ; ஊழியருக்கு பெருமிதமாகப் பொருள் தருவாய் ; பெருமை வளருங் கால் கர்வங் கொள்ளாய் ; இவ்விதமே இளமங்கையர் இல்லறக் கிழத்தியாவார் ; வேறு வழி நாடுவோர் குலத்தின் கோடாரி ஆவார்.

*இதைப்பற்றி கௌதமி என்ன நினைக்கிறாள்.*

**கௌ :** *புக்ககம் போகும் பெண்ணுக்கு உபதேசம் இவ்வளவே. மகளே, இதை நன்கு மனதில் வைத்துக் கொள்.*

**காசி :** *குழந்தாய், என்னையும் தோழிகளையும் ஆலிங்கனம்செய்.*

**சகு :** *அப்பா, இதோடு பிரியம்வதை முதலிய சகிகளும் திரும்பி விடுவார்களா ?*

**காசி :** *மகளே, இவர்களும் கன்னிகாதனத்துக்கு உரியவர்கள். அங்கே இவர்கள் போகுதல் தகாது. உன்னோடு கௌதமி செல்வாள்.*

**சகு :** (தந்தையைக் கட்டிக் கொண்டு) *அப்பாவின் மடியிலிருந்து நழுவி மலைய மலைச்சாரலிலிருந்து பிடுங்கிய சந்தனக் கொடிபோல், தேசாந்தரத்தில் எப்படித்தான் உயிர் தாங்குவேனோ ?*

**காசி :** *மகளே ஏன் இவ்வாறு அஞ்சுகிறாய் ?*

உயர் குலக் கணவனின் இல்லறத் தலைவியாகி பெரும் பதவியில் அமர்ந்து அவனது மாபெருஞ் செல்வத்தின் அலுவல்களில் ஈடுபட்டுக் கணந்தோறும் அல்லலுற்று, கிழக்கில் புனித கதிரவன் உதித்தது போல் உயர் மகனை விரைவில் பெற்று எனது பிரிவால் தோன்றிய துன்பத்தை பல நாள் நீ பொருட்படுத்த மாட்டாய். (சகுந்தலை தந்தையின் பாதங்களில் வீழ்கிறாள்)

**காசி :** *விரும்பியதனைத்தும் நீ பெறுவாயாக ?*

**சகு :** (சகிகளிடம் போய்) தோழிகாள், இருவரும் என்னைக் கட்டிக் கொள்ளுங்கள்.

**இருவரும் :** (அப்படியே செய்து) சகி, அம்மன்னனின் ஞாபகம் சிறிது குறைவாக இருப்பின் அவர் நாம முத்திரையுள்ள கணையாழியை அவரிடம் காட்டுவாய்.

**சகு :** உங்களுடைய இந்த சந்தேகத்தால் திடுக்கிட்டேன்.

**இருவரும் :** பயப்படாதே. அதிக அன்பு அனர்த்தத்திற்கு ஐயமுறும்.

**சார்ங் :** சூரியன் அளவுக்கு மேல் ஏறிவிட்டான். துரிதம் செய்வாய், சகோதரி.

**சகு :** (ஆசிரமத்தை நோக்கி நின்று) அப்பா, மீண்டும் தபோ வனத்தை என்று காண்பேன்.

**காசி :** கேள்.

நான்கு கடல் சூழ்ந்த புவி மங்கையின்
சக்களத்தியாக நீண்ட நாள் கழித்து
போரில் நிகரில்லா மகன் பரதனுக்கு பட்டம் சூட்டி
அவனிடம் குடும்ப பாரம் ஒப்படைத்த பின்,
பதியுடன் சேர்ந்து, சாந்தி நிறைந்த இந்த
ஆசிரமத்தில் மீண்டும் அடிவைப்பாய்.

**கௌ :** மகளே, காலதாமதமாகிறது. தந்தையைத் திரும்பச் செய். ஆனால், நேரமானாலும், இவள் ஓயாமல் ஏதாவது பேசிக் கொண்டிருப்பாள். தாங்கள் திரும்பவேண்டும்.

**காசி :** குழந்தாய், எனது தவத்தின் அனுஷ்டானம் பலவந்தப் படுத்துகிறது.

**சகு :** (திரும்பவும் தந்தையை ஆலிங்கனம் செய்துகொண்டு) ஏற்கனவே தவஞ் செய்து இன்னலுற்ற தந்தையின் தேகம், என் பொருட்டு அதிகம் கவலையுற்று மெலிந்து வரும்.

**காசி :** குடிசை வாசலில் நீ பலியிட்ட புல்லரிசி முளைத்திருப்பதைப் பார்த்து எனது துயரம் எவ்விதம் குறையும்?

**இருவரும் :** *தந்தையே, சகுந்தலையைப் பிரிந்து சூன்யமான தபோவனத்தில் எப்படி நுழைவோம்?*

**காசி :** *அன்பின் போக்கு இவ்விதமே.* (தியானத்தோடு சுற்றி வந்து) *ஆகா! சகுந்தலையை அனுப்பிவிட்டு எவ்வாறோ என் மனம் அமைதி பெற்றது. போவாய். உன் வழியெல்லாம் மங்களம் உண்டாகக் கடவது.*

(சகுந்தலையும் அவளுடன் செல்லுவோரும் மறைகிறார்கள்)

**சகிகள் :** *ஐயோ, ஐயோ, தோப்பில் மறைநது விட்டாள் சகுந்தலை!*

**காசி :** (பெருமூச்சுடன்) *அனசூயா, உங்கள் தோழி போய் விட்டாள். சோகத்தை அடக்கி என் பின் வாருங்கள்.*

என்றும் பெண் பிறர் பொருளே;
கணவனிடம் அவளை இன்று அனுப்பி
அடைக்கலப் பொருளை திருப்பிக்
கொடுத்தது போல் என் உள்ளம்
தெளிந்து பேரமைதி பெற்றது.

(எல்லோரும் போகிறார்கள்)

**நான்காவது அங்கம் முற்றிற்று.**

---

## ஐந்தாவது அங்கம்.

(அரசனும் விதூஷகனும் உட்கார்ந்திருக்கிறார்கள்)

**விதூ :** (காது கொடுத்துக் கேட்டு) *நேசா, சங்கீத சாலையில் கவனம் செலுத்து. இனிய குரலில் அழகாக ராகம் பாடப்படுகிறது. செல்வி ஹம்ஸபாதிகா, ஆலாபனம் செய்கிறாள் என்று எண்ணுகிறேன்.*

**அரசன் :** சும்மா இரு. கேட்கிறேன்.

*(மறைவில் பாடப்படுகிறது)*

ஓயாமல் புதிய தேனில் ஆசை கொண்டவன்
மாந்தளிரை தற்சமயம் முத்தமிட்டு
கமலத்தில் வசிப்பதோடு திருப்தி அடைந்தாய் ;
என்னை ஏன் முற்றிலும் மறந்தாய் வரி வண்டே ?

**அரசன் :** ஆகா ! ராக வெள்ளம் பொங்கிய பாட்டு.

**விதூ :** அந்தப் பாட்டின் பதப்பொருள் தங்களுக்கு விளங்கியதா ?

**அரசன் :** (புன்சிரிப்புடன்) இவளோடு ஒருதரமே எனது பரிச்சயம். ஆதலால், ராணி வசுமதியை வைத்து என்னை ஏசுகிறாள் என்று எண்ணுகிறேன். தோழா, என் சார்பில் ஹம்ஸபாதிகாவிடம் சாமர்த்தியமாகப் பழித்தாய் என்று கூறிவா.

**விதூ :** தங்கள் உத்தரவுப்படி. (என்று எழுந்து) ஆனால், நேசா, பற்றற்ற முனிவன் தேவமாதரிடம் சிக்கியது போல் ஹம்ஸபாதிகா என்னைச் சேடிகளால் குடுமியைப் பிடித்துக் கொண்டால் எனக்கு விமோசனம் இல்லை.

**அரசன் :** போ, நாகரிக முறையில் செய்தி சொல்.

**விதூ :** வேறு கதியில்லை. (போகிறான்)

**அரசன் :** இவ்வித கருத்துடைய கீதத்தைக் கேட்டவுடன் அன்பர் எவரையும் பிரியாவிடினும், பெருங கலக்கம் உண்டாகிறது.

ஆயினும்,

கவர்வன கண்டு, மதுரமொழி கேட்டு,
சுகித்தவர் கூட சித்தம் கலங்குவரேல்
வேறு பிறப்பில் பதிந்த நேசபாவங்கள்
மதியில் விளங்காமல் நினைவில் உதிக்கின்றன.

(கலங்கி நிற்கிறான். அப்பொழுது கஞ்சுகி வருகிறான்)

**கஞ்சு :** (பெருமூச்சு விட்டு) ஆகா ! இவ்வித நிலைமையை அடைந்தேன்.

அரச மகளிர் மாளிகையில்
ஆவலுடன் அதிகாரச் சின்னமாக
ஏற்ற இந்தப் பிரப்பங் கோல்,
நெடுங்காலம் கடந்து இன்று நடை தடுமாற
ஊன்று கோலாயிற்று.

*ஓ ! தேவரின் நியாயக்கடன் தள்ளிவைக்க முடியாது. ஆயினும் தர்மாசனத்திலிருந்து இப்பொழுதுதான் எழுந்தவரிடம் கண்வசீடர்கள் வந்ததைத் தெரிவிக்க மனமில்லை. ஆனால் உலகங் காப்பதில் இளைப்பாறுதற்கிடமில்லை. ஏனெனில்,*

ஆதியில் பூட்டியது கதிரவன் குதிரை ;
வாசனை வகிக்கும் வாயு இராப்பகல் செல்லும் ;
ஆதிசேஷன் என்றும் பூமி பாரம் தாங்கவேண்டும் ;
ஆறிலொரு பங்கு பெறுவோரின் அறமு மிதுவோ ;
என் கடமையைச் செய்வேன்.

(சுற்றிப் பார்த்து) *இதோ தேவர்.*

போது மக்களைத் தன் மக்கள் போல் பாவித்து,
மனத்தில் சாந்தியுடன் தனிமை நாடுகிறார் ;
மந்தையை மேய்த்து வெய்யிலில் வாடி கஜராஜன்
தரு நிழல் சார்வது போல.

*இமயமலை அருகிலுள்ள வனவாசிகள் காசியபரின் செய்தி கொண்டு மாதரோடு வந்துள்ளனர். இதை அறிந்து தங்கள் இஷ்டம்.*

**அரசன் :** (ஆதரவுடன்) *காசியபர் செய்தி கொண்டு வந்தனரா ?*

**கஞ்சு :** ஆம். மேலே.

**அரசன் :** அப்படியானால், என் சார்பில் புரோகிதர் சோமநாத ரிடம் சொல்லுங்கள். 'இந்த ஆசிரம வாசிகளை வேத விதிப்படி மரியாதை செய்து அவரே நேரில் உள்ளே அழைத்து வரவேண்டும்' என்று. நானும் இம்முனி ஜனங்களைச் சந்திப்பதற்குத் தகுந்த இடத்தில் காத் திருப்பேன்.

**கஞ்சு :** தேவர் ஆணைப்படி (போகிறார்)

**அரசன் :** (எழுந்து) யார் அங்கே ?

(வாசற் காப்போன நுழைநது)

**வா. கா :** தேவர் உத்திரவு இடவேண்டும்.

**அரசர் :** வேத்திரவதி, வேள்விச் சாலைக்கு வழிகாட்டு.

**வா. கா :** தேவர் இவ்வழியாக.

**அரசன் :** (சுற்றி, அதிகார இலேசம் தோன்ற) எல்லாப் பிராணிகளும் கோரிய பொருளை அடைந்து சுகப்படுகின்றன. அரச ருக்கோ காரியம் கைகூடத் துன்பம் பெருகும்.

கவலை ஒன்றே தீர்க்கும் நிலைபெற்ற கீர்த்தி;
பெற்ற பெருமை காப்பது ஓயாத பெருந் தொல்லை;
தன் கையில் தாங்கிய தாழங் குடை போல்
துன்பம் தீர்ப்பதுமில்லை ; இன்பம் இல்லாமலும்
[இல்லை.

(திரைகருள்)

**இருகட்டியக்காரர்கள் :** தேவர் என்றும் வெற்றி பெறுக.

**முதல் கட்டி :** தனது சுகம் கருதாது உலகத்துக்கு உழைக்கிறீர்;
தினந்தோறும் இதுவே உமது வழுவாத கடமை.
தரு தலைமேல் கொடிய வெப்பத்தால் வேகிறது;
தன்னடியில் தங்கினவர் தாபம் தீர்க்கிறது.

**இர. கட்டி :** உரிய தண்டனையால் நெறி பிறழ்வோரை அடக்கு கிறீர் ; வாதங்கள் தீர்த்துப் பாதுகாப்பு அளிக்கிறீர் ; பெருஞ் செல்வம் படைத்தோருக்கு உறவினர் பலருண்டு ; உமக்கோ நாட்டு மக்கள் அனைவரும் உற்றார் கடன்.

**அரசன் :** *மனச் சோர்வுற்றிருந்த நாம் புத்துயிர் பெற்றோம்.*

(சுற்றுகிறான்)

**வா. கா :** *இதோ புதிதாக சுத்தம் செய்து அருகில் ஓமப்பசுவுடன் அழகாக இருக்கும் வேள்விக்கூட மேடையில் ஏறுங்கள்.*

**அரசன் :** (ஏறி பணிப்பெண் தோளில் சார்ந்து) *வேத்திரவதி, எதைக் குறித்து பகவான் காசியபரால் முனிவர் என்பால் அனுப்பப்பட்டனர் ?*

விரதம் பூண்டு தவஞ் செய்வோருக்கு இடையூறு நேரிட்டு தவம் கெட்டதோ? தபோவனத்தில் திரியும் பிராணிகள் மீது எவரேனும் அடாதன செய்தனரோ? எனது அறக் குறைவால் செடி கோடிகள் வளம் குன்றி பாழ் பட்டனவோ? என்று பலவாறு தர்க்கம் செய்து முடிவு தோன்றாமல் மனம் கலங்கினேன்.

**வா. கா :** *தங்கள் அறநெறியால் மகிழ்ந்து தேவரைப் போற்ற வந்தனர் என்று ஊகிக்கிறேன்.*

(கௌதமியோடு சகுந்தலையை முன்னிட்டு முனிவர்கள் வருகிறார்கள். இவர்களுக்கு முன் புரோகிதரும் கஞ்சுகியும்.)

**கஞ்சு :** *இப்படி வாருங்கள், பெரியோர்களே !*

**சார்ங் :** *சாரத்வதா.*

பெருமை மிகுந்த இம்மன்னன் அறத்தில் நிலைபெற்று நிற்பவன்; இங்கே சாதியில் கடையரேனும் நெறிதவறி

தீயவழி நாடார் ; ஆயினும் தனிமையில் என்றும் பழகிய என் மனத்திற்கு இந்த ஜனக் கூட்டம் தீப்பற்றிய வனம் போல் தோன்றுகிறது.

**சாரத் :** *நகரத்தில் பிரவேசித்தது முதல் இவ்விதம் தாங்கள் உணர்வது உசிதமே. யானும்,*

சுகத்தில் சிக்கிய இம்மக்களை குளித்தவன் எண்ணெய் தடவியது போலும், சுத்தமானவன் மலம் தீண்டியது போலும், விழித்தவன் உறங்குவது போலும், சுதந்திரமானவன் சிறைப்பட்டது போலும் கருதுகின்றேன்.

**சகு :** *(சகுனம் கண்டு) ஐயோ! என் எனது வலது கண் துடிக்கிறது ?*

**கௌ :** *மகளே, தீமை ஒழிக. உனது கணவன் குலதேவதைகள் உனக்கு நன்மை பெருக்குக.*

*(சுற்றுகிறார்கள்)*

**புரோகி :** *(அரசரைச் சுட்டிக காட்டி) ஓ, முனிவர்களே, இதோ வர்ணசிரமங்களைப் பாதுகாக்கும் மன்னன் முன்னதாகவே ஆசனத்திலிருந்து எழுந்து நின்று உங்களை எதிர் பார்க்கிறார் ; அவரைப் பாருங்கள்.*

**சார்ங் :** *ஓ, மாபெரும் வேதியனே, இது மிகவும் போற்றத் தக்கது. ஆயினும் இதில் எமக்குத் தனி உணர்ச்சி யில்லை. எனெனில்,*

பழுங்குவிந்த மரம் தலை குனியும்
நீர் நிறைந்த மேகம் தாழ்ந்து தொங்கும்
செல்வப் பெருக்கால் செருக்கடையார் சீரியர்
பிறர் நலம் பேணுவார் பான்மை இது.

**வா. கா :** *இம்முனிவர்களின் முகங்கள் தெளிவடைந்திருக் கின்றன. ஏதோ கவலைக்கிடமில்லாத காரியமென்று நினைக்கிறேன்.*

**அரசன் :** (சகுந்தலையைப் பார்த்து) ஆனால் அப்பெண்மணி ?

உடலழகு சிறிதளவே வெளியாகும்படி
முகமூடி அணிந்த மங்கை எவளோ!
முனிவர் மத்தியில் இவள் தோற்றம் வெளுத்த
சருகுகள் நடுவில் செந்தளிர் போன்றது.

**வா. கா :** ஐயனே, குதூகலம் நிறைந்து என்மனம் மகிழ்கிறது. இவள் உருவம் கவர்ச்சி உடையதாகத் தோன்றுகிறது.

**அரசன் :** போதும். பிறர் மனைவியைக் கண்ணெடுத்துப் பார்க்கலாகாது.

**சகு :** (கையை மார்பில் வைத்து, தனக்குள்) உள்ளமே, நாதனின் மனோபாவம் உணராமல் என் இப்படித் துடிக்கிறாய் ? அதுவரையில் தைரியங்கொள்.

**புரோ :** (முன சென்று) அரசே, விதிப்படி இம்முனிவர் மரியாதை செய்யப்பட்டனர். இவர்களிடம் ஆசாரியரின் செய்தி ஏதோ வொன்று உளது. அதைத் தாங்கள் கேட்க வேண்டும்.

**அரசன் :** தயாராக இருக்கிறேன்.

**முனிவர் :** (கைகளைத் தூக்கி) வெற்றி பெருக, மன்னா !

**அரசன் :** உங்களனைவருக்கும் வந்தனம்.

**முனிவர் :** தங்களுக்கு மங்களமுண்டாகுக. கோரியது கைகூடக் கடவது.

**அரசன் :** முனிவர்களின் தவத்திற்கு இடையூறு ஒன்றுமில்லையே?

**முனிவர் :** நல்லாரைத் தாங்கள் காக்குங்கால் அறக் கருமத்திற்கு எங்கிருந்து இடையூறு? சூரியன் பிரகாசிக்கையில் இருளுக்கு இடமேது?

**அரசன் :** *எனது அரச பட்டம் பொருளுடைத்தாயிற்று. உலகின் நன்மைக்காக பகவான் காசியபர் சுகமாயிருக்கிருரா ?*

**சார்ங் :** *சித்தியுள்ளோர் வசமுள்ளது சுகம். அவர் தங்களைக் குசலம் விசாரித்துப் பின்வருமாறு கூறுகிருர்.*

**அரசன் :** *பகவான் உத்தரவு என்ன ?*

**சார்ங் :** *தனிமையில் சந்தித்து இந்த எனது மகளைத் தாங்கள் மணம் புரிந்தீர்கள். உங்கள் இருவரிடம் அன்பு கொண்டு அதை யான் அனுமதித்தேன்.*

நமது மதிப்பிற் குரியோரின் தலைவர் தாங்கள் ; சகுந்தலையோ சற்குணம் உருவெடுத்தவள் ; சம சீல முள்ள நாயகி நாயகரைக் கூட்டிய பிரமனை என்றும் பழிக்கலாகாது.

*ஆதலால் கருத்தரித்த இவளை அறநெறிப்படி ஏற்க வேண்டும்.*

**கௌ:** *பெரியோய், நானும் சிறிது சொல்ல விரும்புகிறேன். ஆனால் இதில் எனக்குப் பேசுவதற்கு இடமில்லை. ஏனெனில்,*

பெரியோரைத் தாங்கள் பொருட் படுத்தவில்லை. இவளும் உற்ருேரைக் கேட்கவில்லை. தனித் தனியாகச் செய்த காரியத்தில் நான் உங்களில் எவருக்கு என்ன சோல்வது ?

**சகு :** *(தனக்குள்) நாதர் ஏதோ சொல்லப்போகிருர்.*

**அரசன் :** *இதென்ன கட்டுக்கதை ?*

**சகு :** *(தனக்குள்) கட்டுக்கதை என்ற சொல் எரிக்கிறது.*

**சார்ங் :** *இதென்ன விந்தை ! தாங்களல்லவோ உலக விவகாரங்களில் நிபுணர்.*

பத்தினிப் பெண் பந்துக்களோடு இருந்தால்
பதிவிரதையாகிலும் உலகம் பழிகூறும் ;
ஆதலின் பதிக்கு விருப்ப மில்லாவிடினும்
அவனிடம் அவள் இருக்கவே உறவினர்
விரும்புவார்.

**அரசன் :** *இம்மங்கை என்னால் முன் மணக்கப்பட்டவளா ?*

**சகு :** *(துக்கத்துடன் தனக்குள்) இதயமே, உனது அச்சம் இப்பொழுது உண்மையாகி விட்டது.*

**சார்ங் :** முன் செய்த செயல் மீது வெறுப்பா? அறத்தில் அலட்சியமா அல்லது அவமதிப்பா?

**அரசன்:** *பொய்யாகக் கற்பனை செய்து - இவ்விதம் எவ்வாறு வினவலாம்?*

**சார்ங் :** செல்வத்தின் மதம் பிடித்தவரிடம் இவ்வித விகாரங்கள் தோன்றுகின்றன.

**அரசன்:** *இது கொடிய பழிக்கூற்று!*

**கௌ :** *மகளே, சற்று நாணப்படாதே. உன் முகமூடியை எடுக்கிறேன். அப்பொழுது உன் பதி அறிந்து கொள்ளுவர்.*

*(அப்படியே செய்கிறார்கள்)*

**அரசன் :** *(சகுந்தலையைக் கவனத்துடன் நோக்கி, தனக்குள்)*

ஒப்பில்லா உருவம்; மாசில்லா மேனி;
தேடாமல் என்முன் வந்து நிற்கும்
இவளை முன்னால் மணந்தேனா
இல்லையா என்று முடிவு செய்யக்
கூடாமல் உள்ளே பனி புகுந்த
முல்லை மலரை அதிகாலையில்
தீண்டிய வண்டு போல்
ஏற்று இன்புறவோ, உதறித் தள்ளவோ
முடியவில்லை.

(என்று எண்ணிப் பேசாமல் இருக்கிறான்)

**வேலைக்காரன் :** (தனிமையாக) நமது எஜமானின் அறப்பற்று எந்தோ? சுகமாகத் தன்னிடம் கொண்டு வரப்பட்ட இந்த அழகியைக் கண்டு வேறெவராவது இப்படி ஆலோசிப்பாரோ ?

**சார்ங் :** இவ்விதம் மௌனம் ஏன் சாதிக்கப்படுகிறது ?

**அரசன் :** தவச் செல்வ ! நினைத்துப் பார்த்தும் இம்மங்கையை யான் ஏற்ற ஞாபகமில்லை. இவளுடன் நான் கலந்ததைப்பற்றி ஐயமிருக்கையில், தெளிவாகக் கருத்தரித்த இம்மாதை நான் எப்படி ஏற்பேன் ?

**சகு :** (துக்கத்தோடு தனக்குள்) விவாகத்திலேயே சந்தேகம். வெகு தூரம் சென்ற என் ஆசைகளுக்கு இடமெங்கே ?

**சார்ங் :** வேறொன்றுமில்லை.

மகளைத் தீண்டிய செயல் அனுமதித்த முனிவர் உம்மால் அவமதிக்கத் தக்கவரே; தன் பொருளை அபகரித்த திருடனுக்கே அதை தானம் கொடுத்தவர் போலானரல்லவா ?

**சாரத் :** சார்ங்கரவ, இனி நீ நிறுத்து. சகுந்தலா, எங்களால் கூறவேண்டியது கூறப்பட்டது. இவரோ இவ்விதம் உரைக்கிறார். இவருக்கு நம்பத் தகுந்த உத்தரம் கொடு.

**சகு :** (தனக்குள்) அவ்வித அன்பு இவ்வித நிலைக்கு வந்த பின் நினைவு பெற்றால் தான் என்ன பயன் ? இனி நான் துயரப்படவேண்டுமென்பது நிச்சயமாயிற்று (பகிரங்கமாக) நாதா, (என்று பாதி கூறுகையில்) விவாகத்தில் சந்தேகப் படுவோரிடம் இது தகுந்த மரியாதை அல்ல. பௌரவ, முன்னால் ஆசிரமத்தில் இயற்கையாக சூதறியாத உள்ளத்தாளான இப் பெண்ணைச் சமயோசிதமாக ஏமாற்றி, இப்பொழுது இம் மொழிகளால் தள்ளிவிடுவது தகாது.

**அரசன் :** (காதுகளைப் பொத்தி) தீமை ஒழிக.

மழைகாலத்து வெள்ளம் தெளிந்த நீரைக் கலக்கிக் கரையை உடைப்பதுபோல, எனது குலத்தின் கீர்த்தியைக் கெடுத்து என்னையும் பதிதனுக்கப் பார்க்கிருயா?

**சகு :** இருக்கட்டும். உண்மையில் என்னை மற்றவன் மனைவி என்று ஐயமுற்று இவ்வாறு செய்வதானல், அடையாளம் கொடுத்து உம் சந்தேகத்தைத் தீர்க்கிறேன்.

**அரசன் :** மேலான மார்க்கம்.

**சகு :** (கணையாழி இடத்தைத் தொட்டுப் பார்த்து) ஐயோ, ஐயோ, கையில் கணையாழியைக் காணேன்.

(துக்கத்தோடு கௌதமியைப் பார்க்கிருள்)

**கௌ :** சக்கிராவதார க்ஷேத்திரத்தில் சசி தீர்த்தத்தில் பிரார்த்தனை செய்யும்பொழுது கையிலிருந்து கணையாழி நிச்சயமாக நழுவி விழுந்திருக்கவேண்டும்.

**அரசன் :** (புனசிரிப்புடன்) மாதரின் இயற்கை மதி என்று கூறப்படுவது இதுவே.

**சகு :** இதில் விதி தன் மகிமையைக் காட்டிவிட்டது. வேறு கூறுவேன்.

**அரசன் :** இப்பொழுது கேட்பதில் வந்துவிட்டது போலும்!

**சகு :** ஒருநாள் மல்லிகை மண்டபத்தில் ஜலத்துடன் தாமரை இலைத் தொன்னை தங்கள் கையில் இருந்தது.

**அரசன் :** மேலே கேட்போம்.

**சகு :** அச்சமயம் எனது வளர்ப்புப் பிள்ளை நெடும் புருவம் என்ற மான்குட்டி அருகில் இருந்தது. முதலில் இது குடிக்கட்டும் என்று தயவுடன் தங்களால் அது அழைக்கப்பட்டது. தங்களிடம் பழக்கமில்லாததால் கையருகில் வரவில்லை. பிறகு என் கையிலிருந்த அதே தொன்னையில் குடித்தது. அப்பொழுது 'எல்லாம் தன் இனத்தை நம்புகிறது, இருவரும் காட்டுப் பிராணிகள், என்று பரிகசித்தீர்கள்.

**அரசன் :** இவ்விதமே சுயநலம் தேடும் மாதர்களின் பொய்யுரைகளால் சிற்றின்பப் பிரியர் கவரப்படுகின்றனர்.

**கௌ :** வள்ளலே, இவ்விதம் கூறுவது நியாயமல்ல. இவள் தபோவனத்தில் வளர்ந்து வஞ்சனை அறியாதவள்.

**அரசன் :** ஓ, தாபசக் கிழவியே,

மனிதரல்லாத பிராணிகளிடத்தும் பெண்களின் சாதுர்யம் போதனையின்றிப் புலப்படும். கற்றறிந்தவரிடம் அதைக்காண்பது அதிசயமா? வானத்தில் பறக்கு முன்னமேயே தான் பெற்ற குஞ்சுகளை வேறு குருவிகளால் குயில்கள் போஷித்து வருகின்றன.

**சகு :** (ஆத்திரத்துடன்) தீயோனே, நினது உள்ளத்தின் அளவுகோலால் அனைத்தும் காண்கிறாய். உன்னைப்போல் அறப் போர்வை போர்த்து, புல் மூடிய பாழுங்கிணறு போன்றவர் வேறொருவர் உளரோ?

**அரசன் :** (தனக்குள்) இவள் சினம் என் புத்தியைக்
குழப்புகிறது. சூதற்றதாகத் தோன்றுகிறது.
நினைவற்று கொடிய மனப்பான்மையுடன்
யான் இரகசிய நேசச் செய்தியை
நம்பாதிருக்கக் கண்கள் சிவந்து, புருவங்கள்
வளைந்து பெருகிய கோபத்தால்
காமன் வில் ஒடிந்தது போலும்.

(பகிரங்கமாக) நல்லாய், துஷ்யந்தன் ஒழுக்கம் உலகமறிந்தது. ஆயினும் இதை நான் பொருட்படுத்தவில்லை.

**சகு :** நல்லது. நாக்கின் முனையில் தேனும் உள்ளத்தில் விஷமுள்ளவரின் கையில் சிக்கி இப்பொழுது மானமிழந்த மங்கையாகிவிட்டேன்.

**சார்ங் :** *தானுகவே சிற்றுசையால் செய்த செய்கை இவ்விதந் தான் எரிக்கும்.*

ஆதலின் எதையும் ஆலோசித்துச் செய்யவேண்டும்.
தனிமையில் இருக்குங்கால் தனிவிழிப்பு
வேண்டும். குணமறியாதவரிடம் கொண்ட
நேசம் இவ்விதம் எதிரியாகத் திரிந்துவிடும்.

**அரசன் :** *என்ன ஐயா ! இம்மாதரின் சொல்லை நம்பி நம்மை கோபம் மிகுந்த மொழிகளால் தூற்றுகிறீர்.*

**சார்ங் :** (அவமதிப்புடன்) *தங்கள் கீழ்மொழி கேட்டோம்.*

பிறந்தது முதல் என்றும்
கபடம் கற்காதவரின் மொழிகளை
நாம் முற்றிலும் நம்பலாகாதாம்;
பிறர் வஞ்சனையை வித்தையாகக்
கற்பவரின் பேச்சைப் பெரியோர்
வாக்கென கொள்ள வேண்டுமோம்.

**அரசன் :** *ஒ, சத்தியவாதியே, நீங்கள் சொல்லுவது சரி என்று வைத்துக்கொள்வோம். இவளை ஏமாற்றி எமக்கு என்ன பயன் ?*

**சார்ங் :** *நரக வீழ்ச்சி.*

**அரசன் :** *பௌரவர்கள் நரக வீழ்ச்சியைத் தேடுவோர்களென் பது நம்பத் தகாதது.*

**சார்ங் :** *மன்னரே ! வாக்கு வாதத்தால் பயன் என்ன ? எங்கள் குருவின் கட்டளை நிறைவேற்றப்பட்டது நாம் திரும்பிப் போகிறோம்.*

இவள் உனது காதலி, ஏற்பாய் அல்லது தள்ளுவாய்.
மனைவிபால் கணவனுக்கு உரிமை எல்லையற்றது.

*கௌதமி, முன் செல்லுவாய்.*

(புறப்படுகிறார்கள்)

**சகு :** *இதெப்படி ? இந்தப் போக்கிரியால் ஏமாற்றப்பட்டேன். துயரப்படும் என்னை நீங்களும் துறப்பீர்களா ?*

(கூடப் புறப்படுகிருள்)

**கௌ :** (நின்று) *பிள்ளாய், சார்ங்கரவா, தீராத் துயரத்துடன் சகுந்தலை நம் பின் வருகிருள். கணவன் கொடிய சொல்லுடன் தள்ளிய பின் என் மகள் என்ன செய்வாள் ?*

**சார்ங் :** (ரோஷத்தோடு திரும்பி) *ஆகா, வரம்பு மீறியவளே ! இவ்விதம் என் மனம் போனவாறு செய்கிருய் ?*

(சகுந்தலை பயந்து நடுங்குகிருள்)

**சார்ங் :** *சகுந்தலா !*

அரசன் கூறுவதுபோல் நீ இருப்பாயாளுல் குலங் கெடுத்த உன்னுல் தந்தைக்கு ஆவது என் ? உனது உள்ளத் தூய்மை மெய்யாளுல் பதி வீட்டில் பணியாளாவது மேல்.

**அரசன் :** *ஓ, முனிவரே ! இவளை என் வீணில் இங்கு விட்டுப் போகிறீர்கள் ?*

ஆம்பலையே மதியும், கமலத்தையே கதிரவனும் மலரச் செய்வான். புலனடக்கியோர் பிறர் மனைவி பால் பராமுக சீலர்.

**சார்ங் :** *வேறொருத்தியிடம் பற்றிளுல் முன் நடந்ததை மறந்த தாங்கள் அதர்மத்துக்கு என் அஞ்சுவீர் ?*

(போகிறார்கள்)

**அரசன் :** (புரோகிதரிடம்) *தங்களையே தாரதம்மியம் கேட்கிறேன்.*

யான் மதி யிழந்தேனு இவள்தான் பொய்யுரைத்தாளா என்ற ஐயநிலையில், ஒருகால் இல்லாள் துறந்தவனுவேன் ; அல்லது பிறர் மனைவி தீண்டியனுவேன்.

**புரோ :** (ஆலோசித்து) ஆதலின், இவ்வாறு செய்யலாம்.

**அரசன் :** *எனக்கு நல்வழி காட்டுங்கள்.*

**புரோ :** *பிரசவம் வரையில் இவள் என் வீட்டில் இருக்கட்டும். என் இப்படிக் கூறுகிறேன் எனில், எற்கனவே உனது முதல் மகன் சக்ரவர்த்தியாவான் என்று பெரியோர் தங்களிடம் கூறியுள்ளனர். முனிவரின் பேரன் அந்த லக்ஷணங்களோடு கூடியிருந்தால், மகிழ்ந்து மாளிகையில் இவளைப் பிரவேசம் செய்விக்கலாம். இதற்கு மாறாக இருப்பின், இவள் தந்தையிடம் அனுப்பி வைக்கும் வழி நம் வசம் இருக்கிறது.*

**அரசன் :** *குருக்கள் இஷ்டப்படியே.*

**புரோ :** *குழந்தாய், என் பின் வா.*

**சகு :** *பூதேவியே, எனக்கொரு பொந்து கொடுப்பாய்.*

(அழுதுகொண்டு புரோகிதர், வேலைக்காரர்களோடு போகிறாள்)

(திரைக்குள்)

*ஆச்சரியம் ! ஆச்சரியம் !*

**அரசன் :** (காது கொடுத்துக் கேட்டு) என்ன நடந்தது ?

(நுழைந்து)

**புரோ :** *அரசே, அதிசய சம்பவம்.*

**அரசன் :** என்ன வாயிற்று ?

**புரோ :** *அரசே, கண்வ சீடர்கள் திரும்பிப் போனபின்* தனது பாக்கியத்தை நிந்தித்துக் கைகளை உதறி அழத் தொடங்கினாள் சிறுமி.

**அரசன் :** *அதன் மேலே.*

**புரோ :** பெண்ணுருவில் ஒரு சோதி அவளைத் தூக்கி, தேவ மாதர் தடாகத்தருகில் மறைந்து விட்டது.

(எல்லோரும் ஆச்சரியப்படுகின்றனர்)

**அரசன் :** *பெரியோய், எற்கனவேயே இப்பொருள் தள்ளப்பட்டது. அதைப்பற்றி வீண் தர்க்கத்தில் நாம் இறங்க வேண்டியதில்லை. தாங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.*

**புரோ :** வெற்றி பெறுக (போகிருர்)

**அரசன் :** வேத்திரவதி, கலக்க முற்றேன். படுக்கை அறைக்கு வழி காட்டு.

**வா. கா :** இப்படி வாருங்கள்.

(சுற்றுகிருன)

**அரசன் :** (தனக்குள்) துறந்த முனிமகளை மணந்த நினைவு சிறிது மில்லை, பரிதவிக்கும் என்னிதயமோ நம்பச் சொல்லு கிறது போலும் !

(எல்லோரும் போகிருர்கள்)

**(ஐந்தாவது அங்கம் முற்றிற்று.)**

---

## ஆருவது அங்கம்.

(நாகபாலன் நுழைகிருன். பின்னல் விலங்கிடப்பட்ட மனிதனுடன் இரண்டு காவலாளிகள்)

**காப் :** அடே திருடா, உனக்கு எங்கிருந்து இந்த வைரத்தால் நாம முத்திரை இழைத்த கணையாழி கிடைத்த தென்று சொல்லி விடு.

**மனித :** (பயத்துடன்) அண்ணன்மாரே, தயவு செய்யுங்கள். நான் அவ்வித காரியம் செய்பவன் அல்ல.

**மு. கா :** மங்களமான வேதியன் என்று அரசனுல் தானம் கொடுக்கப்பட்டதல்லவா ?

**மனித :** இதைக் கேளுங்கள். நான் சக்கிராவதார க்ஷேத் திரத்தில் வசிக்கும் செம்படவன்.

**இர. கா :** கொள்ளைக்காரப் பயலே, உனது சாதியைப் பற்றியா கேட்டோம் ?

**நாக பாலன்:** சூசக, அவன் ஒழுங்காக அனைத்தையும் கூறட்டும். நடுவில் தடுக்காதீர்கள்.

**இருவ :** எஜமானன் ஆணைப்படி, (மௌனமாக இருக்கிறார்கள்.)

**மனித :** நான் வலை, தூண்டில் முதலிய உபாயங்களால், மீன் பிடித்து குடும்ப சம்ரக்ஷணை செய்கிறவன்.

**நா. பா :** (சிரித்து) புனிதமான பிழைப்பு உனது.

**மனித :** எஜமான், கேளுங்கள்.

பழியுடைத்தாயினும் தன் சொந்த பணி துறக்க லாகாது; கருணையால் கரையும் வேதியனும் வேள்வியில் மிருகத்தைக் கொல்லும் கொடியனாவன்.

**நா. பா :** சரி, மேலே சொல்.

**மனித :** பிறகு ஒரு நாள் ஒரு சிவப்பு மீனை அறுத்தேன். அதன் வயிற்றில் வைர ஒளி வீசும் இம்மோதிரம் கண்டெடுத்து அதை விற்பதற்காக வெளியில் காட்டி வரும்பொழுது அண்ணன்மாரால் பிடிக்கப்பட்டேன். கொல்லுங்கள் அல்லது விடுங்கள். இதுவே இதன் வரலாறு.

**நா. பா :** ஜானுக, மீன் நாற்றம், கோரமான தோற்றம் இதிலிருந்து இவன் செம்படவன் என்பதில் சந்தேகமில்லை. இவன் கணையாழி கண்டது ஆலோசிக்கத்தக்கது. அரசர் மாளிகை செல்லுவோம்.

**காப் :** அப்படியே போடா, அடே திருடா.

(எல்லோரும் சுற்றுகிறார்கள)

**நா. பா :** சூசகா. இவனைக் கோபுர வாசலில் கவனத்துடன் காவலில் வைத்திருங்கள். நான் கணையாழியின் வரலாற்றை அரசரிடம் தெரிவித்து அவர் கட்டளை ஏற்றுத் திரும்பி வருகிறேன்.

**காப் :** மன்னரை மகிழ்விக்கப் போய் வாருங்கள்.

(நாகபாலன் போகிறான்)

**மு. கா :** ஜானுக, எஜமான் தாமதம் செய்கிறார்.

**இ. கா :** சமயம் பார்த்து மன்னரைப் பேட்டி காண வேண்டுமல்லவா ?

**மு. கா :** ஜானுக, இவன் தலையில் மாலை சூட்ட என் கைகள் துடிக்கின்றன.

(மனிதனைச் சுட்டிக் காட்டுகிறான்)

**மனித :** காரணமின்றி அண்ணன் கொலேயாளி ஆவது உசித மல்ல.

**இ. கா :** (பார்த்து) நமது எஜமான் மன்னர் உத்தரவு பெற்று நம்மை நோக்கி வருகிருர். நீ கழுகுக்குப் பலியாகப் போகிருய்.

(நாகபாலன நுழைந்து)

**நா. பா :** சூசக, இந்த வலே வீசி வாழ்வோனே விட்டு விடு. இவன் கூறிய கணேயாழி வரலாறு பொருத்தமாயிற்று.

**மூ. கா :** எஜமான் ஆணேப்படி.

**இ. கா :** எமன் வீடுபோய் இவன் திரும்பினுன்.

(மனிதனே விடுதலே செய்கிருர்கள்)

**மனித :** (நாகபாலனே வணங்கி) எஜமான்! என்னுயிர் தங்கள் பிச்சை

**நா. பா :** அரசரால் மோதிரத்தின் விலே உனக்கு வெகுமதியாக அளிக்கப்பட்டது.

(மனிதனிடம் தனம் கொடுக்கிருன்)

**மனித :** (வந்தனத்துடன ஏற்று) எஜமான், என்மேல் மிகுந்த தயவு செய்தீர்கள்.

**சூசக :** தூக்கு மரத்திலிருந்து இறக்கப்பட்டு யானே மீது ஏற்றப் பட்டாய். இதல்லவோ தயவு!

**ஜானு :** எஜமான், கணேயாழியால் மன்னருக்கு மகிழ்ச்சி உண்டா யிற்று என்று வெகுமதியே கூறுகிறது.

**நா. பா :** அதிலிருக்கும் விலேயுயர்ந்த இரத்தினத்தை அவர் வெகுவாக மதித்ததாகத் தோன்றவில்லே. அதன் மூலம் யாரோ அன்பரின் ஞாபகம் வந்தது. ஏனென்னில் இயற்கையில் கம்பீர குணமுடையவராய் இருந்தும் கண்களில் நீர் நிறைந்தது.

**சூசக :** எஜமாஞல் நல்ல சேவை செய்யப்பட்டது.

**ஜானு :** இந்த மீன் சத்ருவின் பொருட்டென்று சொல்லுவது சரி

(மனிதனை அசூயையுடன் பார்க்கிறான்)

**மனித :** எஜமான், இதில் பாதி உங்களுக்குப் பூமாலையின் விலையாக.

(கொடுக்கிறான்)

**ஜானு :** இதுதான் சரி.

**நா. பா :** செம்படவா, இப்பொழுது எனது சிறந்த சிநேகிதனை விட்டாய். சாராயத்தை சாக்ஷியாக வைத்து நமது நேச ஆரம்பத்தைக் கொண்டாடுவோம், ஆதலின் சாராயக் கடை செல்வோம்.

## காட்சி இரண்டு

(ஆகாய விமானத்தில் சானுமதி என்ற தேவமங்கை வருகிறாள்)

**சானு :** கிரமப்படி தேவமாதர் தடாகத்தில் சாது ஜனங்களின் அபிஷேக காலம் வரையிலும் எனது காவல் முடிந்து விட்டது. இப்பொழுது மன்னரின் வரலாற்றை நேரில் காண்பேன். மேனகையின் உறவால் சகுந்தலை எனக்கு சொந்த சகோதரி போன்றவள். அவளாலும் தனது மகள் சம்பந்தமாக உத்தரவு இடப்பட்டிருக்கிறேன். இதென்ன? பருவகால உற்சவ சமயமாயிருந்தும் எவ் வித உற்சவ ஏற்பாடும் மன்னர் மாளிகையில் காணப் பட வில்லையே. தியானத்தாலேயே அனைத்தும் அறிய எனக்கு சக்தி உண்டு. ஆனால் சகியின் விருப்பம் மதிக்கத்தக்கது. இருக்கட்டும். எனது திரஸ்கரணீ மகிமையால் மறைந்து இந்த இரு உத்தியான பாலிகை களின் அருகில் போய்ச் செய்தி அறிகிறேன். (என்று இறங்கி நிற்கிறாள்.)

(மாந்தளிரைப் பார்த்துக் கொண்டு ஒரு வேலைக்காரி வருகிறாள். அவளை மற்றொருத்தி பின் தொடருகிறாள்)

**மு. வே.** குயில் களிக்கும், ஆறுகால் வண்டு விரிக்கும், வசந்த மாதத்தின் உயிர் போலாகும்; பருவகால மங்களத்து மாந்தளிரைக் காண்கிறேன்.

**இ. வே :** பரபிருதிகா, தனியாக என்ன முணு முணுக்கிறாய் ?

**மு. வே :** மதுகரிக, மாமரத்தில் மொட்டைக்கண்டு (குயில்) மதங்கொள்ளு மல்லவா !

**இ. வே :** (ஆனந்தத்தோடு வந்து) என்ன, வசந்த மாதம் வந்து விட்டதா ?

**மு. வே :** மதுகரிகா, வண்டுபோல் மதங்கொண்டு நீ ஆடிப் பாடுங் காலமிது.

**இ. வே :** சகி, என்னைப் பிடித்துக கொள். முன்னங்கால் மீது நின்று காமதேவனை அர்ச்சனை செய்ய மாந்தளிர்களைப் பறிக்கிறேன்.

**மு. வே :** அர்ச்சனையின் பலனில் எனக்குப் பாதி தருவாயாகில்.

**இ. வே :** அது கூறாமலே கிடைக்கும். நமது தேகம் இரண்டாயினும் உயிர் ஒன்றே அல்லவா ? (சகியைப் பிடித்துக் கொண்டு மாந்தளிரைக் கிள்ளுகிறாள்) அடி, மலர் மொட்டைப் பொத்துக் கொண்டு நறுமணம் வீசுகிறது.

(கைகூப்புகிறாள்)

வில் தாங்கிய காமனுக்கு உனை அளித்தேன். மாந் தளிரே, காதலர்மேல் கோபங்கொண்ட மங்கையர் மீது, பஞ்ச பாணங்களுக்கு மிஞ்சிய அம்பாவாய்.

(மாந்தளிரை வீசுகிறாள்)

(கோபத்துடன் திரையைத் தள்ளிக் கஞ்சுகி வருகிறான்)

**கஞ்சு :** வேண்டாம். அடக்க மற்றவளே, வசந்த உற்சவம் தடுக்கப்பட்டிருந்தும் நீ மாந்தளிர் பறிக்க ஆரம்பித்து விட்டாய்.

**இருவரும் :** (பயந்து) மன்னிக்க வேண்டும். ஐயா, எங்களுக்கு இச்செய்தி தெரியாது.

**கஞ்சு :** *வசந்த காலத்தில் மலரும் தருக்களுக்கும் அவற்றில் வசிக்கும் பறவைகளுக்குங்கூட மன்னன் ஆணை தெரிந் திருக்கும் பொழுது உங்கள் காதுக்கு மட்டும் எட்ட வில்லையா ?*

மாமரங்களில் மொட்டுக்கள் வெளி வந்து பல நாளா கியும் அவற்றுள் தாது பொருந்தவில்லை. மலரத் தயாரா கியும் முல்லைச் செடியில் மொட்டுக்கள் அந்நிலையி லேயே தங்கி விட்டன ; குளிர் காலம் கழிந்தும் ஆண் குயில்களின் குரல் தொண்டையிலிருந்து வெளிக் கிளம்பவில்லை. அம்புக் கூட்டிலிருந்து சரத்தைப் பாதி இழுத்த காமனும் அஞ்சி எய்தல் ஒழிந்தான் போலும் !

**சானு :** *இதில் சந்தேகம் இல்லை. மிகுந்த மகிமை உள்ளவர் இராஜரிஷி.*

**மு. வே :** *ஐயா, எமது அதிகாரி மித்திராவசுவால் மன்னரருகில் சேவை செய்ய அனுப்பப்பட்டு சில நாட்களாயின. தற்சமயம் இருவரும் இந்த உத்தியானவனத்தின் காப்பு வேலையில் நியமிக்கப்பட்டிருக்கிறோம். ஆதலால் இவ்வரலாறு எங்களுக்குத் தெரியாது.*

**கஞ்சு :** *போகட்டும், மீண்டும் இவ்விதம் செய்யாதீர்கள்.*

**இருவரும் :** *ஐயா, எங்களுக்கு ஆவலாக இருக்கிறது. நாங்கள் அறியக் கூடுமானால், எக்காரணத்தால் வசந்தோற்சவம் நிறுத்தப்பட்டதென்று கூறுங்கள்.*

**சானு :** *மனிதர் உற்சவப் பிரியர். மகத்தான காரணம் இருக்க வேண்டும்.*

**கஞ்சு :** *இது வெளிப்படையானது. ஏன் சொல்லக்கூடாது. சகுந்தலையை ஏற்க மறுத்த தகவல் உங்கள் காதுக்கு எட்டவில்லையா ?*

**இருவரும் :** *கணையாழி கண்டது வரையில் அதிகாரி சொல்லக் கேட்டிருக்கிறோம்.*

**கஞ்சு :** ஆதலின் மீதி சொல்ல வேண்டியது சிறிதே. கணையாழி கண்டது முதல் சகுந்தலையை இரகசியமாக தான் முன் மணந்தது உண்மையென்றும் ஏதோ மயக்கத்தால் தள்ளப்பட்டாளென்றும் நினைவு உண்டாயிற்று. அதன் முதல் அரசன் பச்சாத்தாபப் படுகிறார். ஆதலால்,

இன்பத்தை வெறுக்கிறார் ; முன் போல் மக்களோடு தினந்தோறும் கூடிக் குலாவுவதில்லை ; படுக்கை முனையில் புரண்டு உழன்று நிசி முழுதும் நித்திரை யின்றிக் கழிக்கிறார்; மாளிகை மகளிர்பால் தயவால் மரியாதை மொழிகள் கூறுங்கால் பெயர் தமோறிப் பின்னர் வெட்கத்தால் வெகு நேரம் சிந்தை கலங்கி நிற்கிறார்.

**சானு :** எனக்குப் பிரியம்.

**கஞ்சு :** மன்னரின் இத்துயரத்தால் உற்சவம் தடுக்கப்பட்டது.

**இருவரும் :** பொருத்தமாகும்.

(திரைக்குள்)

இவ்வழி, தேவரே.

**கஞ்சு :** (காது கொடுத்துக் கேட்டு) அடா ! இவ்வழியே மன்ன வருகிறார். உங்கள் வேலையைப் பாருங்கள்.

**இருவரும் :** அப்படியே.

(போகிறார்கள)

**காட்சி மூன்று**

(பச்சாதாபக் கோலத்துடன் அரசனும் விதூஷகனும், வாயிற் காப்பானும் வருகிறார்கள்.)

**விதூ :** இவ்வழியே.

**கஞ்சு :** (அரசனைப் பார்த்து) எந்நிலையிலும் சிறந்த உருவமுள்ளவரின் அழகு குலையாது. இவ்வாறு துயரமுற்றும் மன்னர் மனதைக் கவருகின்றார். எப்படி எனில்,

இடது கையில் மணிக்கட்டைச் சுற்றிய தங்கக் காப்பு ஒன்றைத் தவிர வேறு அலங்கார மெல்லாம் விலக்கப் பட்டது ; உதடு பெரு மூச்சால் நிறமிழந்தது ; சிந்தை யாலும், தூக்கமின்மையாலும், கண்கள்சிவந்து கலங்கி யுள்ளன ; சாணையில் தீட்டிய சிறந்த வைரம் போல் மெலிந்தும் தனது இயற்கை ஒளி இழக்கவில்லை.

**சானு :** (அரசனைப் பார்த்து) *தன்னை நிராகரித்து அவமானப்படுத்திய போதிலும், தகுந்த இடத்தில்தான் துயரப்படுகிறாள்.*

**அரசன் :** (சிந்தையில் ஆழ்ந்து மெதுவாகச் சுற்றுகிறான்)

மான் விழியாள் முதலில் நினைவு மூட்டுங்கால் நாச மான என் இதயம் உறங்கி இருந்தது ; பச்சாத்தாபத் தால் துக்கப்படும் பொருட்டு இப்பொழுது தானே நன்கு விழித்து விட்டது.

**சானு :** *இது எளிய சகுந்தலையின் துரதிருஷ்ட மல்லவா ?*

**விதூ :** (தனக்குள்) *மீண்டும் சகுந்தலை நோய் பிடித்து விட்டது. இதற்கு என்ன வைத்தியம் செய்யலாமென்று புலப்பட வில்லை.*

**கஞ்சு :** (அருகில் வந்து) *மகாராஜனே, வெற்றி பெறுக. உத்தியான வனமெல்லாம் கவனிக்கப்பட்டது. இஷ்டப்படி விநோதப் பிரதேசங்களில் இன்புறலாம்.*

**அரசன் :** *வேத்திரவதி, என் சார்பில் மந்திரி ஆர்ய பிசுனரிடம் சொல்வாய். ' நீண்ட நேரம் கண் விழித்ததால் நியாய சபைக்கு வரமுடியாது. ஆராய வேண்டிய நகரத்தார் மனுக்களைக் கடிதத்தில் எழுதி அனுப்புங்கள் ' என்று.*

**வா. கா :** *தேவர் ஆணைப்படியே.*

(போகிறான்)

**அரசன் :** *வாதாயனரே, நீங்களும் உங்கள் வேலையைப் பாருங்கள்.*

**கஞ்சு :** மன்னர் உத்தரவு.

(போகிறான்)

**விதூ :** கொசுவில்லாமல செய்து விட்டீர்கள். தற்சமயம் வெப்பத்தைப் போக்கி ரமணீயமான இந்த உத்தியான வனத்தில் இன்புறலாம்.

**அரசன் :** தோழனே, பட்ட காலிலே படும் என்ற பழமொழி பொய்யாகாது. ஏனெனில்,

முனி மகள் காதல் நினைவு தடுக்கும் மதியின் இருள் நீங்கியது; கோல்ல விரும்பும் காமனுல் மாந்தளிர் அம்பும் வில்லில் பூட்டப்பட்டது.

**விதூ :** கொஞ்சம் பொறுங்கள். இந்தத் தடியால் மதன சரத்தை நாசம் செய்வேன்.

(தடியைத் தூக்கி மாந்தளிரை அடிக்கப் பார்க்கிறான்)

**அரசன் :** (புன் சிரிப்புடன்) போதும்! தங்கள் பிரம்ம பலம் கண்டேன். எங்கு உட்கார்ந்து என் காதலிக்கு நிகரான கொடிகளைக் கண்டு சிறிது பொழுது போக்கலாம்?

**விதூ :** சற்று முன் தங்கள் பணியாள் சதுரிகா தங்களால் உத்தரவிடப் படவில்லையா? 'மல்லிகைக் கொடி மண்டபத்தில் இவ்வேளையைக் கழிப்பேன், நான் சகுந்தலையை வரைந்திருக்கும் சித்திரப் பலகையை எடுத்து வா, என்று.

**அரசன் :** அதுதான் மனதை மகிழ்விக்கும் இடம். அதன்வழி காட்டு.

**விதூ :** இவ்வழி வாருங்கள். (இருவரும் சுற்றுகிறார்கள்) சானுமதியும் பின் தொடருகிறாள்.

**விதூ :** இதோ சலவைக்கல் ஆசனத்துடன் இம்மல்லிகைக் கொடி வீடு நிச்சயம் நம்மை நல்வரவு கூறி அழைக்கின்றது. உள்ளே நுழைந்து தேவர் உட்காரலாம்.

**சானு :** கொடியருகில் இருந்து சகியின் சித்திரத்தைக் காண்பேன். பிறகு போய் கணவனின் பலவகைப்பட்ட அன்பை அவளுக்குத் தெரிவிப்பேன்.

(அப்படியே சென்று நிற்கிருள்)

**அரசன் :** நேசா, சகுந்தலேயின் முன்வரலாறு அனைத்தும் இப்பொழுது நினைவுக்கு வந்தது. உன்னிடமும் கூறியிருக்கிறேன். நிராகரிக்கும் சமயத்தில் நீ என் பக்கம் இல்லே. அதற்கு முன்னும் நீ அவள் பெயரை எடுக்கவே இல்லே. என்னைப்போல் நீயும் மறந்தாயா ?

**விதூ :** நான் மறக்கவில்லே. ஆனுல் எல்லாவற்றையும் சொல்லி விட்டு முடிவில் 'இது பரிகாசத்தால் பிதற்றியது, பரமார்த்தமாகக் கொள்ளாதே' என்று வற்புறுத்தினீர்கள். களிமண் மண்டையுள்ள என்னுல் அது ஏற்கப்பட்டது. ஆனுல், விதியை வெல்ல முடியுமா ?

**சானு :** இதுவே உண்மை.

**அரசன் :** (நினைத்து) தோழா, என்னைக் காப்பாற்று.

**விதூ :** அடா, இதென்ன ? தங்களிடம் இது பொருத்தமில்லே. தீரர்கள் துயரத்தால் என்றும் தளரமாட்டார்கள். புயல் காற்றிலும் குன்றுகள் அசைய மாட்டா அல்லவா ?

**அரசன் :** நேசா, நிராகரிக்கும் சமயத்தில் என் காதலியின் நிலேயை நினேந்து தாங்க முடியாமல் தளர்ந்தேன். அப்பொழுது அவளோ,

இங்கிருந்து தள்ளப்பட்டு தமர் பின் புறப்பட, தலேவன் முனி சீடன் நில் என்று அதட்ட நின்று, நீர் சோரிந்து கலங்கிய கண்களோடு என் பால் பாய்ந்த பார்வை, விஷம் தோய்த்த பாணம் போல் எரிக்கிறது.

**சானு :** ஆகா ! சுயநலத்தின் தன்மையல்லவா இது. இவர் துக்கத்தால் மகிழ்கிறேன்.

**விதூ :** ஓ, எனக்கு ஒரு சந்தேகம். எவரோ வானசாரியால் அவள் ஆகாய மார்க்கமாகத் தூக்கிச் செல்லப்பட்டாளே!

**அரசன் :** பதியைத் தெய்வமாகக் கொண்ட அவளை வேறு எவன் தீண்ட முடியும்? உன் தோழியின் தாய் மேனகை என்று கேட்டிருக்கிறேன். அவளுடைய சகிகளால் எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டுமென்று என் உள்ளத்தில் உதிக்கிறது.

**சானு :** மறதியே வியக்கத்தக்கது. மீண்டும் நினைவு பெற்றதல்ல.

**விதூ :** அப்படியானால் அவளுடன் சிறிது காலத்தில் கூடுவீர்கள்

**அரசன் :** எவ்வாறு ?

**விதூ :** பதியைப் பிரிந்து துயரப்படும் மகளைத் தாய் தந்தையர் பார்த்திருக்க மாட்டார்கள்.

**அரசன் :** நேசா.

கனவுதானோ இந்திர ஜாலமோ, மதிமயக்கத்தின் மாயத் தோற்றமோ, கழிந்த புண்ணியத்தின் அழிந்த பலனோ, அது மறைந்தது; என்றும் திரும்பாது; ஆசைகளின் வீழ்ச்சிகளுக்கு அடித்தலம் இல்லை.

**விதூ :** இது சரியல்ல. இருவரும் கூடுவது நிச்சயம். கவலைக் கிடமில்லை என்பதற்கு இந்த கணையாழியே அத்தாக்ஷி அல்லவா ?

**அரசன் :** (கணையாழியைப் பார்த்து) ஆகா! கிடைக்கக் கூடாத இடத்திலிருந்து நழுவிய இதுவும் வருந்தத் தக்கது.

உனது நற்கருமமும், கணையாழி, எனது புண்ணியத்தைப் போல் மிகச் சிறியதென்று முடிவால் தெளிவாகிறது; சிவந்து மனதைக் கவரும் அவள் விரலில் பெற்ற பதமிழந்து கீழே விழுந்தாய் அல்லவா ?

**சானு :** இது வேறு கையில் போயிருந்தால் உண்மையில் வருந்தத்தக்கதாகும்.

**விது :** இந்தக் கணையாழி எம்முறையில் அவள் கையில் போய்ச் சேர்ந்தது ?

**சானு :** இவன் கேட்டதைப்பற்றி அறிய எனக்கும் ஆவல்.

**அரசன் :** கேள், நான் நகரத்திற்குப் புறப்படும் தருணத்தில், எனது காதலி கண்ணீருடன் ' எத்தனை நாட்களுக்குள் செய்தி அனுப்புவீர் ' என்று வினவினாள்.

**விதூ :** அதன் பின் ?

**அரசன் :** அப்பொழுது இந்த முத்திரையுள்ள கணையாழியை அவள் விரலில் போட்டபொழுது என்னால் பின்வரும் டதில் உரைக்கப்பட்டது.

ஒவ்வோர் நாளும் இம்முத்திரை மீதுள்ள நாமத்தின் ஓர் எழுத்தை எண்ணி அதன் முடிவடைவதற்குள், அந்தப்புரத்துக்கு உன்னை அழைத்துச் செல்லும் என் பரிவாரம் இங்கு வந்து சேரும், எனதன்பே.

கொடியவனான நான் மதிமயக்கத்தால் அவ்விதம் செய்யவில்லை.

**சானு :** இந்த அழகான எல்லை விதியால் பொய்க்கப்பட்டது.

**விதூ :** செம்படவன் வெட்டிய சிவப்பு மீன் வயிற்றில் எப்படி போயிற்று ?

**அரசர் :** சசி தீர்த்தத்தை வணங்கும் பொழுது உனது தோழியின் கையிலிருந்து ஆற்றில் நழுவியது.

**விதூ :** பொருத்தமாய் இருக்கிறது.

**சானு :** இதனால் தான், அதர்மத்திற்குப் பயந்த மன்னனுக்கு சகுந்தலையை மணம் புரிந்ததில் கூட சந்தேகம் உண்டாயிற்று. ஆனால், இவ்வித காதலுக்கு அடையாளமும் வேண்டுமோ ? இது எப்படிப் பொருந்தும் ?

**அரசன் :** ஆதலால், இந்தக் கணையாழியைக் கண்டிக்கிறேன்.

**விதூ :** (தனக்குள்) இவர் பித்தர் வழி பற்றி விட்டார்.

**அரசன் :** உருண்டு மெலிந்து அழகிய விரலை
விடுத்து எவ்விதம் நீரில் மூழ்கினுய்?
அசேதனப் பொருள் குணமறியாது,
என்ஞல் எவ்விதம் துறக்கப்பட்டாள்?

**விதூ :** (தனககுள்) பசி என்னை எப்படித் தின்னுகிறது?

**அரசன் :** காரணமின்றித் துறந்து பச்சாத்தாபப்படும் என் பேரில் கருணை கூர்ந்து மீண்டும் காட்சி அளிக்கவேண்டும்.

(பரபரப்புடன் சதுரிகா சித்திரப் பலகையைக் கையிலேந்தி வருகிருள்.)

**சது :** இதோ சித்திரத்தில் இருக்கிருள் எஜமானி.

(சித்திரப் பலகையைக் காட்டுகிருள்)

**விதூ :** சபாஷ்! தோழா, இதில் உணர்ச்சியும் காட்சியும் மிகவும் இனிமையாகக் கூடிக் கண்ணை கவருகிறது. மேடு பள்ளத்தில் என் கண் இடறி விழுகிறது போல் தோன்றுகிறது.

**சானு :** அம்மாடி! மன்னன் சித்திரக்கலா சாதுர்யம் இவ்வளவா? எனது சகி எதிரிலிருப்பதுடோல் தோன்றுகிருள்.

**அரசன் :** சித்திரத்தில் தோன்றும் குறையெல்லாம் மாற்றித் திருத்தி அமைக்க வேண்டும். ஆயினும் அவள் அழகில் சிறிதளவே ரேகை போல் வரையக்கூடும்.

**சானு :** மிகவும் பச்சாத்தாபப்படும் இவருடைய அன்பிற்கும் செருககின்மைக்கும் இது ஒத்திருக்கிறது.

**விதூ :** ஓ! இதில் மூன்று மங்கையர் காணப்படுகின்றனர். எல்லோரும் அழகிகள். இதில் எவள் சகுந்தலை?

**சானு :** இதில் அவள் உருவத்தை அறியாத இவன் குருடனே!

**அரசன் :** யாரென்று நீ எண்ணுகிருய்?

**விதூ :** கட்டுக்குலேந்து, மலர் உதிர்ந்த கூந்தலுடன், வியர்வைத் துளி பொருந்திய முகத்துடன் மிகவும் சோர்ந்த கைகளுடன், தண்ணீர் ஊற்றி அழகாகத் துளிர்த் திருக்கும் மாமரத்தருகில் சிறிது களேத்தவள் போல் தோன்றுவது சகுந்தலே என்றும், மற்றவர் சகிகள் என்றும் நினேக்கிறேன்.

**அரசன் :** நீ நிபுணன். எனது உணர்ச்சியின் சின்னமும் இதில் இருக்கிறது.

ரேகை முனேகளில் கரைபோல் தோன்றுவது
எனது வியர்த்த விரல் வைத்த இடங்கள் ;
கன்னத்தில் வர்ணம் கலேந்திருப்பது
கண்ணீர் விழ்ந்திருப்பதைக் குறிக்கும்.

சதுரிகா ! இந்த இனிய சந்தர்ப்பம் பாதி வரையப்பட்டுள்ளது. போய், வர்ணப் பெட்டி எடுத்துவா.

**சது :** ஐயா, மாடவ்ய, நான் வரும் வரையில் சித்திரப் பலகையை வைத்துக் கொள்ளுங்கள்.

**அரசன் :** நானே இதைப் பிடித்துக் கொள்கிறேன். (அப்படியே செய்கிறுன்)

(சேடி போகிருள்)

நேரில் வந்த காதலியை முன் துறந்து, சித்திரத்தில்
வரைந்தவளேக் கோண்டாடும் யான்,
வழியில் வாரி நிறைந்த நதியைக் கடந்து
கானல் நீர் மேல் காமுறும் பதிகனுவேன்.

**விதூ :** (தனக்குள்) இவர் நதியைக் கடந்து கானல் நீரையும் தாண்டி விட்டார். (வெளிப்படையாக) சரி, வேறு என்ன வரைய வேண்டும் ?

**சானு :** எந்தவிடம் எனது சகிக்குப் பிரியமோ அதை வரைய விரும்புவார்.

**அரசன் :** கேள்.

மணல் மேட்டில் அன்ன சோடி வீற்றிருக்கும்
மாலினி நதி தன்னை வரைதல் வேண்டும் ;
அதனைச் சுற்றிலும் மான்கள் உட்கார்ந்து அசை
பார்வதி பிதாவின் புனித மலைச் சாரல்கள்; [போடும்;
கிளையில் மரவுரி தொங்கும் தருவும் அதனடியில்
புள்ளிமான் கிளைக் கொம்பில் இடதுகண் தேய்க்கும்
பெண் மான் வரைய விரும்புகிறேன்.

**விதூ :** *(தனக்குள) இந்த சித்திர பலகை முழுதும் உச்சிக்குடுமி களின் கூட்டங்களால் நிரப்ப வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.*

**அரசன் :** *தோழா, சகுந்தலைக்குப் பிரியமான அலங்கார மொன்று வரைய மறநது விட்டேன்.*

**விதூ :** *அதென்ன ?*

**சானு :** *வனத்தில் வசிக்கும அழகிய இளங்குமரிக்கு ஒத்ததாக இருக்கும்.*

**அரசன் :** கன்னம் வரையில் இதழ் தொங்கும் சிவப்பு மலர் காதில் வைக்கப்படவில்லை ; சரத்கால நிலவு போல அழகான கமலத் தண்டு தனங்களுக் கிடையில் வரையவில்லை.

**விதூ :** *ஏன் அவள் கமலத்தைப் போல் சிவந்த கைகளால் முகத்தை மறைத்து நடு நடுங்கியவள் போல் நிற்கிறாள். (கவனித்துப் பார்த்து) ஆகா ! இந்தத் தந்தை தெரியாத மலர்த்தேன் திருடன், வரிவண்டு அவள் முகத்தைத் தீண்டுகிறான்.*

**அரசன் :** *இந்தப் போக்கிரியைத் தடுக்க வேண்டும்.*

**விதூ :** *துஷ்டர்களைத் தண்டிக்கும் தாங்களே இவனைத் தடுக்க வல்லவர் ?*

**அரசன் :** *பொருத்தமாகும். மலர்ந்த கொடி விரும்பும் விருந்தே, என் வீணில் பறந்து களைக்கிறாய் ?*

இதோ மலரில் அமர்ந்த பெண் வண்டு ;
தாகத்தால் வாடியும் அப்பதிவிரதை உன்மீது
அன்பினால் உனக்காகக் காத்திருக்கிறாள் ;
நீயின்றித் தான் தேன் பருக மாட்டாள் அல்லவா ?

**சானு :** *மிகவும் இனிமையாகத் தடுக்கப்பட்டது.*

**விதூ :** *தடுத்தாலும் இது முரட்டு ஜாதி.*

**அரசன் :** *அடே ! என் கட்டளைக்கு அடங்க மாட்டாயா ? ஆயின் இப்பொழுது கேள்.*

இளந்தருவின் கசங்காத தளிர்போல் கவரும்
காதல் களிப்பில் நான் தயவுடன் பருகிய
கோவப்பழ அதரத்தை நீ தீண்டினால் வண்டே ;
உன்னைக் கமலத்தின் உதரத்தில் சிறை வைப்பேன்.

**விதூ :** *இவ்வளவு கொடிய தண்டனைக்கு என் பயப்பட மாட்டான் ? (சிரித்து தனக்குள்) இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இவரோடு சேர்ந்து நானும் அப்படியே ஆய்விட்டேன். (வெளிப்படையாக) இது சித்திரம் அல்லவா ?*

**அரசன் :** *சித்திரமா இது ?*

**சானு :** *நானும் இப்பொழுது இதை மறந்தேன். நடந்தவாறு அனுபவிக்கும் இவரைப் பற்றிக் கூறவேண்டுமா ?*

**அரசன் :** *தோழா, என் இந்த அக்கிரமம் செய்தாய் ?*

அவள் மேல் லயித்த இதயத்தால் அவளை நேரில் பார்க்கும் சுகத்தை அனுபவிக்கையில் நீ எனக்கு நினைவு மூட்டியதால் மீண்டும் என் காதலி சித்திரமாகி விட்டாள்.

(கண்ணீர் விடுகிறான்)

**சானு :** *முன் பின் முரண்பாடு உள்ளது, விதியின் போக்கு.*

**அரசன் :** தோழா, இவ்விதம் ஓயாமல் எவ்வாறு துயரத்தைச் சகிப்பேன்.

விடாமல் விழிப்பதால் கனவில் கூட வழியில்லை ;
சித்திரத்தில் காண்பதற்கும் கண்ணீர் இடம் தருவதில்லை.

**சானு :** நிராகரித்ததால் சகுந்தலைக்கு ஏற்பட்ட துக்கம் உன்னால் முற்றிலும் தீர்க்கப்பட்டது.

(நுழைந்து)

**சது :** எஜமானனுக்கு வெற்றி. வர்ணப் பெட்டி எடுத்துக் கொண்டு இவ்விடம் வரப் புறப்பட்டேன்.

**அரசன் :** பிறகு.

**சது :** என் கையிலிருந்து பெட்டியை தாலிகையோடு வந்த ராணி வசுமதி 'நான் நாதன் கையில் சேர்ப்பிக்கிறேன்.' என்று பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டாள்.

**விதூ :** அதிருஷ்ட வசமாக நீ விடபபட்டாய்.

**சது :** கிளையில் சிக்கிய தேவியின் புடவையை தாலிகா எடுத்துக் கொண்டிருக்கும் பொழுது நான் ஓடிவந்தேன்.

**அரசன் :** தோழனே ! சுய மரியாதையில கர்வங் கொண்ட தேவி வருகிறாள். இந்த சித்திரத்தை நீ காப்பாற்று.

**விதூ :** தங்களை என்று கூறுங்கள். (சித்திரப் பலகை எடுத்து எழுந்து) இந்த அந்தப்புர கலகத்திலிருந்து விடுதலை அடைந்த பின் மேகப் பிரதிச் சந்த மாளிகையில் இருக்கும் எனக்கு சமாசாரம் அனுப்புங்கள். (என்று துரிதமாகச் செல்லுகிறான்)

**சானு :** வேறிடத்தில் இதயம் சென்றிருந்தும், முன்னிருந்த அன்பை மறக்கவில்லை. உறுதியான நேசமுள்ளவர் இவர்.

(கையில் கடிதத்துடன் நுழைந்து)

**வா. கா :** தேவருக்கு வெற்றி.

**அரசன் :** வேத்திரவதி, நடுவில் தேவியைக் கண்டாயா ?

**வா. கா :** ஆம். கையில் கடிதத்தோடு என்னைப் பார்த்துத் திரும்பி விட்டாள்.

**அரசன் :** சமயோசிதமறிந்தவள், என் வேலைக்குத் தடை செய்ய வில்லை.

**வா. கா :** ஐயனே, அமைச்சர் விண்ணப்பம் செய்கிறார். 'வேறு பல அலுவல்களால் நகர வாசிகளின் மனுக்களில் ஒன்றுதான் பரிசீலனை செய்யப்பட்டது. அது காகிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது மன்னர் பார்க்க வேண்டும்.' என்று.

**அரசன் :** (படித்து) இதென்ன ? ' கடல் கடந்து வியாபாரம் செய்யும் தனமித்திரன் என்னும் வணிகர் தலைவன் கப்பல் கவிழ்ந்து இறந்தான். அவனுக்குச் சந்ததி இல்லை அவன் சொத்து அரசனைச் சேரும் ' என்று அமைச்சரால் எழுதப்பட்டிருக்கிறது. சந்ததி இன்மை கொடியது. வேத்திரவதி, அதிக தனவந்தன் ஆனதால், பல மனைவிகள் இருக்கவேண்டும். அவர்களில் எவளாவது கர்ப்பவதியாக இருக்கிறாளா என்று விசாரிக்கவேண்டும்.

**வா. கா :** ஐயா, சமீபத்தில் தான் இவன் மனைவி, சாகேத செட்டியின் மகள், பூச்சூட்டப்பட்டாள் என்று சொல்லப்பட்டது.

**அரசன் :** கர்ப்பத்தில் இருக்கும் சிசு பிதாவின் சொத்துக்கு உரியதல்லவா ? அமைச்சரிடம் இவ்விதம் சொல்.

**வா. கா:** தேவர் உத்தரவு.

(புறப்படுகிறான்)

**அரசன் :** இங்கே வா.

**வா. கா :** அடியேன்.

**அரசன் :** சந்ததி இருந்தாலென்ன இல்லாமலிருந்தால் என்ன? எந்த பிரஜையும் இனிய உற்றாரை இழந்தால் குற்றவாளியில்லையேல் துஷ்யந்த மன்னன் அவனுக்கு அந்த ஆப்த பந்து ஆவான் என்று விளம்பரம் செய்க.

**வா. கா :** இப்படி அல்லவோ விளம்பரம் செய்யவேண்டும். (வெளியில் சென்று திரும்பி வந்து) காலத்தில் மாரி பெய்தது போல் தேவர் ஆணை மகிழப்பட்டது.

**அரசன் :** (நீண்ட உஷ்ணத்துடன் பெரு மூச்சு விட்டு) ஆகா ! இவ்விதமே சந்ததி ஒழிந்த குலங்களின் மூல புருஷர் மாண்ட பின் அவருடைய சம்பத்துக்கள் பிறரைச் சேருகின்றன. எனக்குப் பின் புரு வம்ச லக்ஷ்மியும் அப்படித்தான்.

**வா. கா :** அமங்களம் ஒழிக.

**அரசன் :** வந்த பெருமையை அவமதித்த நான் அழிவேன்.

**சானு :** நிச்சயமாக சகியை எண்ணித் தான் தன்னை நொந்து கொள்ளுகிருர்.

**அரசன் :** எனது ஆத்மாவை ஏற்று குலந் தாங்கும் தர்மபத்தினி என்னுல் துறக்கப்பட்டாள் ; காலத்தில் விதைத்துப் பெரும் பலன் அளிக்கும் நஞ்சேய் நிலம் போல.

**சானு :** உனது சந்ததிக்கு எவ்வித பங்கமும் நேரிடாது.

**சது :** (தனிமையில் வா. கா. இடம்) ஐயோ ! இந்த வணிகத் தலைவரின் வரலாற்றுல மனச் சோர்வடைந்தார். மன்னன் இவரைத் தேற்றுவதற்கு மேகப்பிரதிச் சந்த மாளிகையிலிருந்து விதூஷகனைப் பிடித்துக் கொண்டுவா.

**வா. கா :** நல்ல யோசனை.

(போகிருன்)

**அரசன் :** ஆகா ! துஷ்யந்தனுடைய முன்னோர்கள் தங்கள் பிண்டத்திற்கு சந்தேகப்படும் நிலையில் இருக்கின்றனர். ஏனெனில்,

எனக்குப்பின் வேத விதிப்படி நமது குலத்தில் கருமங்கள் செய்வார் யார் என்று யானளிக்கும் எள்ளுத் தண்ணீருடன் கண்ணீர் கலந்து முன்னோர் குடிக்கின்றனர்.

(மோகமடைகிருன்)

**சது :** (பரபரப்புடன் பார்த்து) வருந்தாதீர்கள், வருந்தாதீர்கள்.

**சானு :** ஐயோ, ஐயோ, விளக்கை வைத்துக்கொண்டு திரையின் தடையால் இருட்டில் தவிக்கிறார். நான் இவரை மகிழ் விக்கிறேன். ஆனால் சகுந்தலையைத் தேற்றும் பொழுது இந்திரன் தாய் சீக்கிரத்தில் தர்மபத்தினியை தன் கணவன் மகிழ்விக்குமாறு தேவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆதலால் அக்காலத்தை எதிர் பார்த்திருப்பதே உசிதம். தற்சமயம் இந்த வரலாற்றைக் கூறி சகிக்கு ஆறுதல் அளிப்பேன்.

(பரபரப்புடன் சானுமதி போகிறாள்)

(திரைக்குள்)

அக்கிரமம், அக்கிரமம் !

**அரசன் :** (தேறி, காது கொடுத்துக் கேட்டு) மாடவ்யனுடைய துக்கக் குரல் மாதிரி இருக்கிறது. யார் அங்கே ?

(நுழைந்து)

**வா. கா :** (பரபரப்போடு) நெருக்கடியில் இருக்கும் தோழனைக் காப்பாற்றுங்கள்.

**அரசன் :** மாடவ்யன் எவரால் பங்கப்பட்டான் ?

**வா. கா :** காணப்படாத உருவத்துடன் ஏதோ பூதத்தால் தாக்கப் பட்டு மேகப் பிரதிச் சந்த மாளிகையின் மேல் மாடிக்குக் கொண்டு போகப்பட்டான்.

**அரசன் :** (எழுந்து) கவலைப்படாதே. எனது வீடுகளைக்கூட பூதங்கள் தாக்குகின்றனவா ? ஆனால்,

நாள் தோறும் தனது குற்றங் குறைகளை அறிவதே
முற்றிலும் அசாத்தியமாகும் ; மக்களில் எவர் எவ்வழி
செல்கிறாரென்று அனைத்தும் அறியவல்லவர் எவர் ?

(திரைக்குள்)

தோழா, செத்தேன், செத்தேன்.

**அரசன் :** (சுற்றிக் கொண்டு) தோழா, பயப்படாதே பயப்படாதே.
(திரைக்குள் முன்போல் கத்தி) பயப்படாதிருப்பது எப்படி ? என்னை ஏதோ தலைகீழாகப் பிடித்துக் கரும்பைப் போல் ஒடிக்கிறது.

**அரசன் :** (கண்ணைக் காட்டி) உடனே வில்.

(வில்லுடன நுழைந்து)

**யவனிகா :** எஜமான், இதோ கையில் போகும் தோல்பையுடன் வில்லம்பு.

(அரசன் வில்லும் அம்பும் எடுக்கிறுன்)

(திரைக்குள்)

தவிக்கும் மிருகத்தின் கழுத்தைப் பிளந்து உதிரம் பருக விரும்பும் வேங்கைப் புலிபோல் உன்னைக் கோல்லுவேன் ; பீடிக்கப்பட்டவரைக் காப்பதற்கு வில்லேந்திய துஷ்யந்தன் இப்பொழுது உனக்குச் சரணம் ஆகுக.

**அரசன் :** (கோபத்துடன) என்ன என்னையே நேரில் குறிப்பிடுகிறது ? நீச அரக்கனே, நீ அழிந்தாய் ? (வில்லை நாண் பூட்டி) வேத்திரவதி, மாடிப்படி வழிகாட்டு.

**வா. கா :** இப்படி வாருங்கள்.

(வேகமாகப் போகின்றனர்)

**அரசன் :** (நாலா பக்கமும் பார்த்து) இவ்விடம் சூன்யமாக இருக கிறது.

(திரைக்குள்)

ஐயோ, ஐயோ, நான் தங்களைப் பார்க்கிறேன். தாங்கள் என்னைக் காணவில்லை. பூனை வாயில் அகப்பட்ட எலி போல் இனி உயிரில் நம்பிக்கை இல்லை.

**அரசன் :** மறைவு மந்திரத்தில் கர்வங் கொண்டவனே ! என் அஸ்திர பலத்தைக் காண்பாய். அதை வில்லில் தொடுக் கிறேன்.

கோல்லத் தகுந்த உன்னைக் கோல்லும்; காக்க வேண்டிய வேதியனைக் காக்கும்; அன்னம் பாலைப் பிரித்துப் பருகும், கலந்த நீரை ஒதுக்கி நீக்கும்.

*(அஸ்திரம் தொடுக்கிறான்)*

*(விதூஷகனை விட்டு விட்டு மாதலி நுழைகிறான்)*

**மாதலி :** உன் வில்லுக்கு இலக்கான அரக்கர் உளர்; அவர் மீது இந்த அம்பு தொடுக்கலாம்; அன்பர் மீது உள்ளங் குளிரும் இன்ப நோக்கு வீழ்தல் தகும்; கோடிய சரங்களல்ல.

**அரசன் :** *(அஸ்திரததை எடுத்து விட்டு) ஆகா, மாதலியா! மகேந்திர னுடைய தேர்ப்பாகரே, நல்வரவாகுக.*

**விதூ :** *(நுழைந்து) இவனால் நான் யாக மிருகம் போல் கொல்லப் பட்டிருப்பேன். அதற்காக நல்வரவுடன் ஏற்கப்படுகிறான் போலும்.*

**மாதலி :** *(புன் சிரிப்புடன்) திருவாளரே, இந்திரனால் தங்களிடம் அனுப்பப்பட்ட காரணங் கேளுங்கள்.*

**அரசன் :** *தயாராக இருக்கிறேன்.*

**மாதலி :** *கால நேமியின் சநததியான் துர்ஜயன் என்ற அசுரன் இருக்கிறான்.*

**அரசன் :** *நாரதர் மூலம் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன்.*

**மாதலி :** உனது மித்திரன் இந்திரனால் வெல்லக் கூடவில்லை. அவனைப் போர் முன் நின்று கோல்ல நீ நியமிக்கப் பட்டாய். கதிரவன் போக்க முடியாத இரவின் இருளை சந்திரன் அழிக்கிறான் அல்லவா?
*ஆதலால் ஆயுதம் தரித்து தாங்கள் இத்தருணமே இரதமேறி வெற்றிக்காக விஜயம் செய்யவேண்டும்.*

**அரசன் :** *மகேந்திரன் மதிப்பால் பெருமை யடைந்தேன். ஆனால் மாடவ்யன்பால் தாங்கள் ஏன் இவ்விதம் செய்ய வேண்டும்?*

**மாதலி :** *அதையும் கூறுவேன். ஏதோ காரணத்தால் தாங்கள் மனச் சோர்வடைந்ததாகக் கண்டேன். தங்களுக்கு ஆத்திர மூட்டுவதற்காக அவ்விதம் செய்தேன். ஏனெனில்,*

விறகு கிளறினல் தீ மேலெழும்; தீண்டிய பாம்பு படமெடுக்கும்; எப்பிராணிக்கும் எதிர்ப்பின் பரபரப் பால் தனக்குரிய மகிமை மேற்கிளம்பும்.

**அரசன் :** (தனிமையில்)

*தோழா, வானுலக மன்னன் கட்டளை மீறலாகாது. ஆதலால் இதை நன்கு உணர்ந்து அமைச்சர் ஆரிய பிசுனரிடம் கூறுவாய்.*

எனது சரம் தொடுத்த வில் வேறு பணியில் ஈடுபட் டிருக்கும் வரையில், உன் மதியொன்றே மக்களை காக்கவேண்டும்.

**விதூ :** *தங்கள் உத்தரவுப்படி.* (போகிறான்)

**மாதலி :** *திருவாளர் ரதம் ஏறலாம்.* (அரசன ரதமேறுகிறான்)

(எல்லோரும் போகிறார்கள்)

**ஆறுவது அங்கம் முற்றிற்று.**

---

## ஏழாவது அங்கம்.

(ஆகாய வழியாக ரதத்தில் அரசனும் மாதலியும்)

**அரசன் :** *மாதலி, எனது கடன் நிறைவேற்றிய போதிலும், மகேந்திரனுடைய விசேஷ மரியாதையால் ஒரு பணியும் செய்யாதவனுகவே நினைக்கிறேன்.*

**மாதலி :** (புன் சிரிப்புடன்) *திருவாளா, இருவருக்கும் அதிருப்தி தான். எப்படி யெனில்,*

தேவாதிபதிக்கு முதல் செய்த உதவியை அவர் செய்த வெகுமதியால் சிறிதென நினைக்கிறீர்; தங்கள் கருமத் தால் மகிழ்ந்த அவரும் நன்றியின் பெருமையை இகழ்கிறார்.

**அரசன் :** *மாதலி, வேண்டாம். விடை கொடுக்கும் சமயத்தில் அவர் செய்த மரியாதை ஆசைகளின் எல்லையை மீறியது.*

தேவர்களுக்கு முன் தன் ஆசனத்தில் என்னை அமர்த்தி உள்ளத்தில் ஆசையுடன் அருகில் நின்ற ஜயந்தனை நோக்கிப் புன் முறுவலுடன் தனது மார்பில் பூசிய சந்தனம் படிந்த மந்தார மாலையை இந்திரன் என் கழுத்தில் சூட்டினார்.

**மாதலி :** *மகேந்திரன் தங்களுக்கு எதுவும் செய்யத்தகும்.*

இன்பம் நாடி சிறக்கும் மகேந்திரனுடைய தேவலோகம் இருவரால் அசுரர் தொல்லை தீர்த்தது. இன்று தங்கள் கூரிய அம்புகளால், அன்று சிங்க முகத்தானின் நகங்களால்.

**அரசன் :** *இதிலும் இந்திரனுடைய மகிமையே போற்றத்தக்கது.*

மகத்தான கருமங்களில் சேவகர் சித்தி அடைந்தால் அதன் பெருமை தலைவனுக்கே சாரும்; கோடி கிரண பணியில் அமர்த்தாவிட்டால் அருணன் இருளைப் போக்குவது எங்ஙனம்?

**மாதலி :** *இது தங்களுக்குத் தகுந்தது.* *(சிறிது தூரம் சென்று)* *திருவாளா, சுவர்க்கத்தில் நிலை நிற்கும் தங்கள் புகழின் பெருமையைப் பாருங்கள்.*

தேவ மங்கையரின் சிங்கார சாதனங்களின் பல வர்ணங்களில் கல்பதருவின் பட்டாடைகளின் மீது கருத்து அமைந்து பாடத் தகுந்த பாசுரங்களால் தங்கள் சரிதத்தை தேவர்கள் எழுதுகின்றனர்.

**அரசன் :** *மாதலி, அசுரனைக் கொல்லும் உற்சாகத்தால் முந்தா நாள் மேல் ஏறும் பொழுது சுவர்க்க மார்க்கம் கவனிக்கப்படவில்லை. இப்பொழுது எந்த வாயு வழியில் இருக்கின்றோம்?*

**மாதலி :** வானத்தின் ஆதாரமான ஆகாச கங்கை தாங்கி தங்கள் ஒளி குன்றாது நக்ஷத்திரங்களை நடத்துகிற, திரிவிக்கிரமரின் இரண்டாவது அடியால் என்றும் பிரகாசமான பரிவக வாயுவின் வழியென்று இதனைக் கூறுவர்.

**அரசன் :** (ஆச்சரியத்துடன்) *மாதலி, ஆதலால் உள்ளும் புறமும் கூடி என் அந்தராத்மா ஆனந்தமடைகிறது.* (தேரின் சக்கரத்தைப் பார்த்து) *மேக மார்க்கத்திற்கு இறங்கி விட்டோம்.*

**மாதலி :** *எப்படித் தெரியும் ?*

**அரசன் :** ஆரக்கால்களுக்கு நடுவில் பறக்கும் சாதகப் பறவைகளால், மின்னல் பட்டுப் பிரகாசிக்கும் பச்சைக் குதிரைகளால், நீர்த்துளிகள் படிந்து நனைந்த சக்கரத்தால், மேகங்கள் மீது ரதம் செல்வது விளங்கும்.

**மாதலி :** *நொடியில் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட பூமியில் இருப்பீர்கள்.*

**அரசன் :** (கீழே பார்த்து) *வேகமாக இறங்கும் பொழுது மனிதர் உலகம் ஆச்சரியமாகத் தோன்றுகிறது. எவ்வாறு எனில்,* மேல் கிளம்பும் மலையின் உச்சியிலிருந்து பூமி கீழே இறங்குவது போல் காணப்படுகிறது. தங்கள் இலைகளில் மறைந்திருந்த தருக்கள் உறுப்புகள் தோன்றித் தெளிவாகின்றன. குறுகி நீர் புலப்படாது கோடு போன்ற நதிகள் விரிவடைந்து வெள்ளத்தோடு புலப்படுகின்றன. எவரோ தூக்கி எறிந்து என்னருகில் வருவதுபோல் தோன்றுகிறது பூமி.

**மாதலி :** *நன்றாக வர்ணித்தீர்கள்;* (மரியாதையுடன் பார்த்து) *மிகவும் அழகாக இருக்கிறாள் பூதேவி.*

**அரசன் :** *மாதலி, கிழக்கு மேற்கு சமுத்திரங்களில் மூழ்கி பொன் மயமான காந்தி உமிழ்ந்து சந்திர மேகம் போல் தோன்றும் குன்று யாது ?*

**மாதலி :** *திருவாளா, கிம்புருஷர்கள் வசிக்கும் ஹேமகூட பர்வதம் ; முனிவர்கள் சித்தி பெறும் க்ஷேத்திரம் ; பாருங்கள். பிரமன் மகன் மரீசியின் புதல்வரும் சுராசுரர் தந்தையுமானவர் மனைவியுடன் வசிக்குமிடமிது.*

**அரசன் :** ஆதலின், பெரியோரைக் கடக்கலாகாது. பகவானை வலம் வந்து செல்ல விரும்புகிறேன்.

**மாதலி :** மேலானது (இறக்குகிறான்) இதோ இறங்கி விட்டோம்.

**அரசன் :** (ஆச்சரியத்துடன்)

சக்கரம் சுழலும் சப்தமில்லை ;
தூசிமேலெழும் தோற்றமில்லை
புவியில் படாமல் நின்றுவிட்டதால்
இரதம் இரங்கியது புலப்படவில்லை.

**மாதலி :** இதொன்றே தங்களுக்கும் தேவர் கோனுக்கும் உள்ள வித்தியாசம்.

**அரசன் :** மாதலி, மாரீச ஆசிரமம் எவ்விடத்தில் ?

**மாதலி :** (கையால் சுட்டிக் காட்டி)

கறையான் புற்றால் பாதி மூடிய மூர்த்தி ;
பாம்பு விடுத்த தோல் தொங்கும் மார்பு ;
உலர்ந்த கொடிக் கயிறுகள் சுற்றி இறுகியதால்,
மிகவும் துன்புறும் கழுத்து ; குருவிக் கூடு
நிறைந்து தோள்வரை தொங்கும் சடை முடி சூடிய
சிகரம் ; தூண்போல் முற்றிலும் அசைவற்று,
சூரிய பிம்பம் நோக்கி நிற்கிறார் முனிவரர்.

**அரசன் :** கடின தவம் செய்யும் முனிவருக்கு வந்தனம்.

**மாதலி :** (கடிவாளம் இழுத்து இரதத்தை நிறுத்தி) அதிதியால் வளர்க்கப்பட்ட மந்தார மரங்கள் இருக்கும் மாரீச ஆசிரமத்தில் புகுந்தோம்.

**அரசன் :** சுவர்க்க லோகத்தைக் காட்டிலும் சுகந்தருவது; அமிர்த தடாகத்தில் மூழ்கினவன் போலானேன்.

**மாதலி :** (இரதத்தை நிறுத்தி விட்டு) திருவாளர் இறங்கலாம்.

**அரசன் :** (இறங்கி) இப்பொழுது தாங்களோ ?

**மாதலி :** இரதம் நிறுத்தப்பட்டது. நாமும் இறங்குவோம். (இறங்கி) இவ்வழி வாருங்கள். (சுற்றி) முனிவர்களின் தபோவனப் பிரதேசங்களைப் பாருங்கள்.

**அரசன் :** *ஆச்சரியத்துடன் கண்டு வருகிறேனே.*

கோரியதைக் கொடுக்கும் கல்ப தருவனத்தில் மூச்சை அடக்கி சமாதியில் மூழ்கின்றனர்; தாமரைத் தாது வால் பொன் நிறமுள்ள நீரில் நியமப்படி தர்ம ஸ்நானம் செய்கின்றனர்; இரத்தினக் கல்லாசனங் களின் மீது தியானம்; தேவ மங்கையர் முன் புல னடக்கம்; இதர முனிவர் தவத்தால் விரும்பும் பலன்கள் கூடிய இடத்தில் இவர் தவம் புரிகின்றனர்.

**மாதலி :** *பெரியோரின் கோரிக்கை என்றும் உயர் நோக்கிச் சொல்லும். (சுற்றி வானம் நோக்கி) ஆகா, சாகல்யப் பெரி யோரே, பகவான் மாரீசர் என்ன செய்கிறார்? என்ன கூறுகிறாய்? பதிவிரதா தர்மத்தைப்பற்றி வினவிய முனிமனைவிகள் சூழ்ந்த தாக்ஷாயணிக்கு அதைப் பற்றிக் கூறுகிறார் என்றா?*

**அரசன் :** *(காது கொடுத்து)* சந்தர்ப்பத்திற் கேற்ற பிரச்சினை.

**மாதலி :** *(அரசனைப் பார்த்து)* இந்த அசோக மரத்தடியில் திருவாளர் வீற்றிருக்கட்டும். இந்திரன் தந்தையிடம் அறிவிப் பதற்கு அவகாசம் தேடி வருகிறேன்.

**அரசன் :** தங்கள் எண்ணம் போல் செய்யவும்.

*(உட்காருகிறான்)*

**மாதலி :** *திருவாளா, நான் போய் வருகிறேன். (போகிறார்)*

**அரசன் :** *(சகுனம் நோக்கி)*

ஆசை கூடுவதில் நான் நம்பவில்லை,
ஆதலில் வீணில் ஏன் துடிக்கிறாய்?
கையே, முன் அவமதித்த பாக்கியம்
துயரமாக மாறித் துன்புறுத்துகிறது.

*(திரைக்குள்)*

*குறும்பு செய்யாதே. இயற்கை குணம் இவனை விட*

**அரசன் :** (காது கொடுத்து) முரட்டுத் தனத்திற்கு இடமில்லை. இப்படி உபதேசிக்கப்படுவது யார்? (சத்தம் வரும் வழி நோக்கி ஆச்சரியத்துடன்) ஆகா! தாபச மாதர்களால் பின் தொடரப்பட்டு வரும் தன் வயதுக்கு மிஞ்சிய பலசாலியான இச்சிறுவன் யாவன்?

தாய் மடியில் பால் பாதி குடித்திருக்கும் சிங்கக் குட்டியைப் பிடரி மயிர் பிடித்து தன்னோடு விளையாடுவதற்குப் பலவந்தமாகப் பிடித்து இழுக்கிறான் இப்பாலன்.

(மேற கூறியபடி தாபசிகளும் பாலனும் பிரவேசிக்கிறார்கள்)

**பால :** சும்மா வாயைத்திற, உன் பல்லை எண்ணுகிறேன்.

**மு. தா :** முரடா! நமக்குக் குழந்தைகள் போன்ற மிருகங்களை ஏன் தொந்தரவு செய்கிறாய்? அப்பாடா! உன் குறும்பு அதிகரிக்கிறது. உனக்கு முனிவர்களால் சர்வதமனன் என்று சரியாகப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

**அரசன் :** இந்த சிறுவனைச் சொந்த மகனிடம் போல் என் மனம் நேசிக்கிறது. என்ன காரணமோ?

**இ. தா :** இவள் மகனை நீ விடாமற் போனால், பெண் சிங்கம் உன் மேல் பாயப் போகிறது.

**சிறுவன்:** (புன் சிரிப்புடன்) அம்மா! நடுநடுங்கினேன். (உதட்டை நீட்டுகிறான்.)

**அரசன் :** விறகை எதிர்பார்க்கும் நெருப்புப் பொறிபோல், இச்சிறுவன் மகத்தான சக்தியின் வித்தென எனக்குத் தெளிவாக விளங்குகிறது.

**மு. தா :** குழந்தாய், இந்தச் சிங்கக் குட்டியை விட்டுவிடு. வேறு பொம்மை தருகிறேன்.

**சிறுவன்:** எங்கே? நமக்குக் கொடு. (கையை நீட்டுகிறான்)

**அரசன் :** இவனிடம் சக்கரவர்த்தி லக்ஷணம் காணப்படுகிறதே. ஏனெனில்,

விரும்பிய பொருள் வேண்டி நீட்டிய கைவிரல்கள் நெருங்கி இடைவெளி இன்றி சிவந்த அருணோதயத்தில் இதழ் விரிந்த கமலத்தை ஒத்திருக்கின்றது.

**இ. தா :** சுவிரதா, இவனை வெறும்சொல்லால் தடுக்க முடியாது. போய் எனது குடிசையில் இருக்கும் முனி குமாரன் மார்க்கண்டேயனுடைய வர்ணம் தீட்டிய மண் மயிலை எடுத்து வா.

**மு. தா :** சரி. (போகிறான்)

**சிறுவன் :** அதுவரையில் இவனோடு விளையாடுவேன் (தாபசியை நோக்கிச் சிரிக்கிறான்)

**அரசன் :** இந்த முரடன் மீது ஆசை கொண்டேன்.

மொட்டுகள் போன்ற பற்கள் பிரகாசிக்க, காரண மின்றிக் கலகல வென்று சிரித்து, தெளிவற்ற இனிய மழலை மொழிகள் கூறி, மடி மீது இன்பமுடன் தாவி அமரும் புழுதி படிந்த தனயரின் அங்கங்களால் மலின மடைவார் பாக்கிய சாலிகளே.

**தாபசி :** இருக்கட்டும். என்னை இவன் மதிக்க மாட்டான். (பக்கத்தில் பார்த்து) முனி குமாரர்களில் யார் அங்கே? (அரசனைக் கண்டு) நல்லவரே, இங்கே வாருங்கள். குரங்குப் பிடிபோல் பிடித்து குறும்புக்காக இவன் தொந்தரவு செய்யும் சிங்கக் குட்டியை இவன் கையிலிருந்து விடுதலை செய்யுங்கள்.

**அரசன் :** (அருகில் வந்து புன் சிரிப்புடன்) ஓ, முனி குமாரா.

பிராணிகளுக்குத் துன்பம் செய்யலாகாதென்ற ஆசிரம தர்மத்தை மீறி, இவ்விதம், சந்தனத்தில் நல்ல பாம்புக் குட்டிபோல், சிறுவயதிலேயே ஏன் அறத்தைக் கெடுக்கிறாய்?

**தாபசி :** நல்லவரே! இவன் முனி குமாரன் அல்லவே!

**அரசன் :** இவன் வடிவமும் அதனை யொத்த காரியமும் கூறுகின்றன. ஆனால் இவ்விடத்தினால் சந்தேகப் படுகிறேன்.

(சிங்கக் குட்டியை விடுவித்து, சிறுவனைத் தொட்ட சுகத்தால், தனக்குள்)

வேறு குலத்தின் கொழுந்தான இவனுடலைத் தொட்டு எனதின்பம் இவ்விதமாயின், இவனைப் பெற்றவரின் ஆனந்தத்தைக் கூறுவது எங்ஙனம் ?

**தாபசி :** (இருவரையும் நோக்கி) ஆச்சரியம், ஆச்சரியம்.

**அரசன் :** தாயே, எவ்விதம் ?

**தாபசி :** இந்த சிறுவன் உருவத்தோடு தங்கள் வடிவம் ஒத்திருப்பதைப்பற்றி பிரமித்தேன். தங்கள் வரலாறு தெரியாவிடினும் ஒரு குலத்தைச் சேரவேண்டும்.

**அரசன் :** (சிறுவனைக் கொஞ்சி) இவன் முனி குமாரன் இல்லையேல் இவன் குலம் யாது ?

**தாபசி :** புரு வம்சம்.

**அரசன் :** (தனக்குள) எனது குலத்தைச் சேர்ந்தவனு ? அதனுல் தான், என்னைப்போல் இருக்கிறுன் என்று இவள் எண்ணுகிறுள். ஆனுல் பௌரவர்களின் உறுதியான குலவிரதமுண்டு.

முதலில் உலகங் காக்க நிர்மல மாளிகைகளில் வசிக்க விரும்புவார். பின் துறந்து முனி விரதம் பூண்டு வனத்தில் மரத்தடியில் குடியிருப்பர்.

(வெளிப்படையாக) மனிதன் தமது சக்தியால் வரமுடியாத இடமல்லவா இது ?

**தாபசி :** தாங்கள் கூறுவது போலவே தேவ மங்கையின் சம்பந்தத்தால் இச்சிறுவனுடைய தாயார் தேவர் தந்தையின் இத்தபோவனத்தில் பிரசவித்தாள்.

**அரசன் :** (தனக்குள்) இது ஆசை உண்டாக்கும் இரண்டாவது செய்தி.

(வெளிப்படையாக) அம்மாது எம்மன்னருடைய மனைவி ?

**தாபசி :** தர்ம பத்தினியைத் துறந்த அவருடைய பெயரை யார் நினைப்பார்கள் ?

**அரசன் :** (தனக்குள்) இந்த வரலாறு என்னைத்தான் குறிப்பிடுகிறது. சிறுவனின் தாயின் பெயரைக் கேட்பேன் ஆனால் பிறர் மனைவியைப்பற்றி விசாரிப்பது நியாயமல்ல.

(மண் மயில் கையில் கொண்டு நுழைந்து)

**தாபசி :** சர்வதமனா, சகுந்தலாவண்யம் பார்.

**சிறுவன் :** என் அம்மா எங்கே ?

**இருவரும் :** தாய் மீதுள்ள அன்பினால் பெயரைக் கேட்டு ஏமாந்தான்.

**இ. தா :** குழந்தாய், இந்த மண்மயிலின் லாவண்யத்தைப்பார் என்று சொன்னேன்.

**சிறுவன் :** மாமி, எனக்கு இந்த மயில் மிகவும் பிடிக்கிறது.
(பொம்மையை வாங்கிக் கொள்ளுகிறான்)

**மு. தா :** (பார்த்துப் பரபரப்புடன்) ஆகா, இவனுடைய மணிக்கட்டில் காப்பு மந்திர மூலிகை காணவில்லையே ?

**அரசன் :** வீணில் கவலைப்படவேண்டாம். சிங்கக் குட்டியைப் பிடித்த பொழுது கீழே விழுந்தது. (எடுக்கப் போகிறான்)

**இருவரும் :** இதைத் தொடாதீர்கள். என்ன! இதை எடுத்து விட்டாரே ?

(இருவரும் ஆச்சரியத்தால் மார்பில் கையை வைத்துப் பார்க்கிறார்கள்)

**அரசன் :** ஏன் தடுக்கப்பட்டோம் ?

**மு. தா :** மன்னரே, கேளுங்கள். இவனுக்குப் பெயரிடும் பொழுது அபராஜிதா என்ற மூலிகை மாரீசரால் கொடுக்கப்பட்டது. இதைத் தாய் தந்தையர், இவன், இவர்களைத் தவிர வேறொருவரும் பூமியில் விழுந்ததை எடுக்க முடியாது.

**அரசன் :** அப்படி எடுத்தால் ?

**மு. தா :** பாம்பாகமாறிக் கடிக்கும்.

**அரசன் :** இம்மாதிரி செய்து நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?

**இருவரும் :** பல தடவைகளில்.

**அரசன் :** (மகிழ்ச்சியுடன் தனக்குள்) மனோரதம் பூர்த்தியானபின் ஏன் ஆனந்தப்படக் கூடாது.

(சிறுவனைக் கட்டிக் கொள்கிறான்)

**இ. தா :** சுவிரதா, வா. இந்த வரலாற்றை தன் நியமத்தில் ஈடுபட்டிருக்கும் சகுந்தலையிடம் சொல்லுவோம்.

(போகிறார்கள்)

**சிறுவன் :** என்னை விடு. அம்மாவிடம் போகவேண்டும்.

**அரசன் :** மகனே, என்னுடன்கூட அம்மாவை மகிழ்விப்பாய்.

**சிறுவன் :** என் அப்பா துஷ்யந்தன். நீ அல்ல.

**அரசன் :** (புன் சிரிப்புடன்) இந்த மறுப்பே எனக்கு நம்பிக்கை அளிக்கிறது.

(ஒரு பின்னலுடன் சகுந்தலை வருகிறாள்)

**சகு :** விகார காலத்திலும் சர்வதமனனின் மூலிகை மாறும லிருந்ததைக் கேட்டுக்கூட என்னுடைய அதிருஷ்டத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் சானுமதி கூறியதிலிருந்து இது சம்பவிக்கக் கூடியதே.

**அரசன் :** (சகுந்தலையைப் பார்த்து) ஆகா, இவளே அந்த சகுந்தலை.

புழுதி படிந்த புடவை உடுத்தி நியமத்தால் மெலிந்த முகத்துடன் கூந்தலை ஒரு பின்னல் போட்டு கருணை யற்ற என் பால் கொடிய பிரிவாற்றுமையின் வடிவமானள்.

**சகு :** (பச்சாத்தாபத்தால் மேனி மங்கிய அரசனைக் கண்டு) இவர் எனக்கு நாதன் இல்லை அல்லவா ? ஆதலின், காப்பு மூலிகை கையிலில்லாத எனது குழந்தையைத் தழுவி, இவர் எப்படிக் கெடுக்கலாம் ?

**சிறுவன் :** (தாயிடம் வந்து) அம்மா, இவர் யாரோ அறியாதவர். என்னை 'மகனே' என்று கட்டிக் கொள்கிறார்.

**அரசன் :** அன்பே! உன்னிடம் நான் கொடுமை செய்தும் நீ என்னை நினைவில் வைத்திருந்ததால் அது நன்மையாகவே முடிந்தது.

**சகு :** (தனக்குள்) இதயமே, ஆறுதல் அடைவாய். பழைய வெறுப்பு ஒழிந்து, நாதனால் அருள் செய்யப்பட்டேன்.

**அரசன் :** காதலி, கிரகணம் தீர்ந்தபின் சந்திரனோடு சேரும் ரோகிணி போல், நினைவு ஒழிந்த இருள் நீங்கிய என் முன் எனது அதிருஷ்டத்தால் தோன்றினாய், அழகியே.

**சகு :** நாதனுக்கு வெற்றி.

(பாதி கூறுகையில் கண்ணீர் தொண்டையடைத்து நிற்கிறாள்)

**அரசன் :** சுந்தரி,

கண்ணீர் நினது வெற்றி மொழி தடுத்தாலும் இயற்கையால் சிவந்த உதடுகள் கூடிய உன் முகங் கண்டதாலே நான் நிச்சயம் வெற்றி பெற்றேன்.

**சிறுவன் :** அம்மா, இவர் யார்?

**சகு :** குழந்தாய், உனது பாக்கியத்தைக் கேள்.

**அரசன் :** (சகுந்தலையின் காலில விழுந்து)

மெல்லியளே, தள்ளிய தவறை உள்ளத்தில் கொள்ளாதே. அச்சமயம் என் மனத்தை வலுத்த மோகம் மூடியது. நன்மையில் கூட பேரிருள் சூழ்ந்தார் போக்கிதுவே; தலைமேல்சூடிய பூமாலையைக் குருடன் பாம்பெனப் பயந்து தள்ளுவான்.

**சகு :** நாதா, எழுந்திருங்கள். நிச்சயமாக நான் முன் செய்த பாவம் அந்நாளில் பலிதமாயிற்று. அதனால் கருணையுள்ள நாதனும் என்னிடம் அவ்விதம் அன்பிழந்தீர்கள்.

(அரசன் எழுந்திருக்கிறான்)

**சகு :** ஆனால் துயருற்ற இந்த ஏழை மீண்டும் எப்படி நினைவுக்கு வந்தாள்?

**அரசன் :** துயரம் தீர்ந்தபின் அமைதியுடன் சொல்லுவேன்.

வளைத்த புருவத்திலிருந்து வழிந்து அதரத்தில் தங்கித் துன்புறுத்தும் கண்ணீரை அன்று மதிமயங்கி, சிற்றிடையோளே, அலட்சியம் செய்தேன்; அதனை இன்று துடைத்து யான் துயரம் தீர்ப்பேன்.

**சகு :** (நாம முத்திரை கண்டு) நாதா, அதே கணையாழியா இது ?

**அரசன் :** இந்தக் கணையாழி கிடைத்த பிறகே நினைவு வந்தது.

**சகு :** நாதன் என்னை ஏற்கவேண்டிய காலத்தில் இது மறைந்து தீங்கிழைத்தது.

**அரசன் :** பருவ காலங் கூடிய அடையாளமாகக் கொடி தன் மலரைத் தாங்கட்டும்.

**சகு :** இதனிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. நாதனே இதைத் தரிக்க வேண்டும்.

(மாதலி நுழைகிறான்)

**மாதலி :** நல்ல வேளையாக தர்மபத்தினியுடன் கூடி மகனுடைய முகங்கண்டு திருவாளர் மகிழ்கிறார்.

**அரசன் :** என் மனோரதம் மித்திரனால் பூர்த்தியானதால் மிகவும் இனிமையாக இருக்கிறது. மாதலி, இது இந்திரனுக்குத் தெரிந்த வரலாறு தானோ ?

**மாதலி :** (புன் சிரிப்புடன்) பெரியோருக்கு மறைவானது ஒன்று ஏதோ ? வாருங்கள், பகவான் மாரீசர் திருவாளருக்கு தரிசனம் அளிப்பார்.

**அரசன் :** சகுந்தலா, மகனை எடுத்துக் கொள். உன்னை முன னிட்டு பகவானைப் பார்க்க விரும்புகிறேன்.

**சகு :** நாதனோடு கூட குருவின் அருகில் போக வெட்கப் படுகிறேன்.

**அரசன் :** மங்கள காலங்களில் அப்படித்தான் செய்யவேண்டும், புறப்படு.

(எல்லோரும் சுற்றுகிறார்கள்)

(அதிதியுடன் ஆசனத்தில அமர்ந்த மாரீசர் தோன்றுகிறார்.)

**மாரீசர் :** (அரசனைப் பார்த்து) தாக்ஷாயணி, உன் மகன் போரில் முன் செல்லுவோன், உலகம் காக்கும் துஷயந்தன் என் போன், இவனது வில்லால் தனது கருமம் முடியவே புகழ் பெற்ற வச்சிராயுதம் இந்திரனுக்கு அணிகல மாயிற்று.

**அதிதி :** இவனது வடிவம் போற்றத் தக்கது.

**மாதலி :** திருவாளா, மகனிடத்தில் போல அன்பு ததும்பும் கண்களுடன் தேவர்களின் தாய் தந்தையர் தங்களைப் பார்க்கின்றனர். உள்ளே செல்லுங்கள்.

**அரசன் :** மாதலி,

பன்னிரு ஆதித்தியர்களுக்குக் காரணமென்று முனிவர் கூறுவர். மூவுலகுக்கும் தலைவனை வேள்வியின் அதிபதியைப்பெற்றனர். பிரமனைப் படைத்த பரம புருஷன் எவரைத்தன் அவதார வழியாக வரித்தானோ; தக்ஷமரீசிகளுக்குப் பிறந்த இத்தம்பதிகள் பிரமனுக்கு ஒரே தலைமுறை நீங்கியவர்.

**மாதலி :** ஆம், அபபடியே.

**அரசன் :** (நெருங்கி) தங்கள் இருவரையும் மகேந்திரனுடைய தொண்டன் துஷ்யந்தன் வணங்குகிறான்.

**மாரீசர் :** மகனே; புவியைப் பலகாலம காப்பாய்.

**அதிதி :** மகனே, எதிரியின்றி ஆள்வாய்.

**சகு :** குழந்தையோடு பாதங்களில் வந்தனம் செய்கிறேன்.

**மாரீசர் :** மகளே,

மூவுலக நாயகன் போன்ற நாதன்; ஜயந்தனை ஒத்த மகன்; வேறு ஆசி உனக்குப் பொருந்தாது; இந்திராணி போலாவாய்.

**அதிதி :** மகளே, கணவன் பெரு மதிப்பைப் பெறக் கடவாய். உனது மகன் நீண்ட ஆயுள் பெற்று நிச்சயமாக இரு குலத்திறகும் விளக்காவான். உட்காருங்கள்.

(அனைவரும் பிரஜாபதியைச் சுற்றிலும் உட்காருகிறார்கள்)

**மாரீசர் :** (ஒவ்வொருவராகப் பார்த்து) சீலமுள்ள சகுந்தலே, உயர் மகனிவன், நீயும் பாக்கியசாலி. பக்தி, செல்வம், அறம் மூன்றும் போல ஒன்று சேர்ந்தீர்கள்.

**அரசன் :** பகவான், மனோரதப் பூர்த்தி முன்னும், தரிசனம் பின்னுமாதலால் தங்கள் கருணை அபூர்வமானது.

முதலில் பூ மலரும்; பின்னர் பழம். மேகம் படருவது முன், மழை அதன் பின். காரண காரியங்களின் கிரமம் இது. ஆனால் தங்கள் ஆசிக்கு முன்னேயே ஐசுவரியங்கள்.

**மாதலி :** இவ்விதமே உலகம் படைப்போர் உளம் மகிழ்வர்.

**அரசன் :** பகவான், இந்தத் தங்கள் பணிப் பெண்ணை நான் கந்தர்வ முறையால் மணந்து சிறிது காலங் கழிந்து உறவினரால் என்னிடம் அவள் அழைத்து வரப்பட்ட பொழுது நினைவிழந்து நிராகரித்ததால, தங்கள் கோத்திரத்தினரான காசியபருக்குக் குற்றம் செய்தவனவேன். பிறகு, கணையாழியைக் கண்டு அவர் மகளை நான் முன் மணந்த வரலாறு நினைவுக்கு வந்தது. இது எனக்கு விசித்திரமாகத் தோன்றுகிறது.

கண் முன்னிருக்கும் யானை அறியாது, மறைந்ததும் அதனைப்பற்றி ஐயமுற்று, காலடி கண்டு நம்பிக்கை பெற்றதுபோல் விசித்திரமானது என் மனத்தின் விகாரம்.

**மாரீசர் :** மகனே, ஏதோ குற்றம் செய்து விட்டதாக வீணில் சந்தேகப்பட வேண்டாம். உன் மதிமயக்கம் நேரிட வேண்டி இருந்தது கேள்.

**அரசன் :** கவனத்துடன் காத்திருக்கிறேன்.

**மாரீசர் :** தேவமாதர் தடாகத்திலிருந்து நிராகரிக்கப்பட்டு துயரப் படும் சகுந்தலையை எடுத்துக் கொண்டு மேனகை தாக்ஷா யணியிடம் வந்ததும், தியானத்தால் உண்மை அறிந் தேன். துர்வாசரின சாபத்தால் உனது இல்லாள் உன்னால் துறக்கப்பட்டாள். வேறு காரணமில்லை. அச்சாபம் கணையாழி கண்டு தீர்வது.

**அரசன் :** (பெரு மூச்சுடன) அவதூறிலிருந்து விடுபட்டேன்.

**சகு :** (தனக்குள்) நல்ல வேளையாக நாதன் என்னைக் காரண மின்றி தள்ளிவிடவில்லை. விரகத்தால் மதி இழந்த என்னால் சாபம் அடைநததை அடையவில்லை. அதனா லேயே, கணையாழியைக் காட்டவேண்டும என்று தோழி கள் புத்திமதி கூறினர்.

**மாரீசர் :** மகளே, உண்மையை அறிந்தாய். கணவன் பால நீ கோபங் கொள்ளலாகாது. பார்,

நினைவைத் தடுக்கும் கொடிய சாபத்தால் தள்ளப் பட்டாய்; இருள் நீங்கியதும் கணவன் மீது ஆட்சி உனதே; அழுக்கடைந்த கண்ணாடியில் பிரதி பிம்பம் காணப்படாது; அது நிர்மலமானதும் முகம் எளிதில் தோன்றும்.

**அரசன் :** பகவான் கூறியபடியே, இவள் மூலம் என் குலத்தின் கீர்த்தி.

**மாரீசர் :** இச்சிறுவன் வருங்காலச் சக்கிரவர்த்தி என்றறிவாய். பார்,

தடையின்றி வானத்தில் செல்லும் இரதத்தால் கடல் கடந்து எதிர்ப்பார் எவருமின்றி ஏழு தீவுகளையும் இவன் ஜெயிப்பான். இங்கே பிராணிகளை அடக்கி சர்வதமனன் ஆனான்; பின்னர் உலகின் பாரம் ஏற்றுப் பரதன் ஆவான்.

**அரசன் :** தங்களால் வேத கருமங்கள் செய்விக்கப்பட்ட இவனிடம் அனைத்தும் எதிர்பார்ப்போம்.

**அதிதி :** பகவான், தனது மகள் ஆசை நிறைவேறி பெருமை பெற்றதற்குக் கண்வருக்கு விரிவாகச் செய்தி அனுப்ப வேண்டும். மகள் மீது அன்பு மிகுந்த மேனகை எனக்குத் தொண்டு செய்து இங்கேயே இருக்கிறாள்.

**சகு :** (தனக்குள்) இவளால் என் மனத்தின் ஆசை கூறப்பட்டது.

**மாரீசர் :** தவமகிமையால் இதெல்லாம் கண்வர் அறிந்ததே.

**அரசன் :** ஆதலின், என் பேரில் முனிவர் கோபிக்கவில்லை.

**மாரீசர் :** ஆனாலும், இந்தப் பிரிய சமாசாரத்தை அனுப்ப வேண்டும், யார் அங்கே ?

**சீடன் :** (பிரவேசித்து) பகவான், இதோ வந்தேன்.

**மாரீசர் :** காலவா, இப்பொழுதே ஆகாய மார்க்கமாகச் சென்று என் சார்பில் கண்வரிடம் மகளைப் பெற்ற சகுந்தலை சாபந் தீர்ந்து, நினைவு பெற்ற துஷ்யந்தனால் ஏற்கப் பட்டாள் என்ற நற்செய்தி சொல்லுவாய்.

**சீடன் :** பகவான் ஆணைப்படியே.

(போகிறான்)

**மாரீசர் :** மகனே, நீயும் மனைவி மகனுடன் மகேந்திரனுடைய இரத மேறி உன் தலைநகரம் சேர்வாய்,

**அரசன் :** பகவான் கட்டளைப்படியே.

**மாரீசர் :** மேலும்,

வானதிபன் உன் மக்களுக்குப் பெருமாரி பெய் வானாக ; நீயும் வேள்விகள் பல செய்து தேவர்களைப் போற்றுக ; இவ்விதம் ஒருவருக் கொருவர் கீழ் மேல் உலகங்களில் புகழப்படும் கருமங்களால் இருவரும் நீடூழி வாழ்க.

**அரசன் :** பகவான், நான் கூடிய வரையில் மேன்மை பெற முயற்சி செய்வேன்.

**மாரீசர் :** மகனே, உனக்கு வேறு என்ன பிரியம் செய்ய வேண்டும் ?

**அரசன் :** இதைவிட வேறு இனையும் உளதா ? மேலும் பகவான் எனக்குப் பிரியம் செய்ய விரும்பினுல் பின் வரும் பரத வாக்கியம் பலிக்கட்டும்.

மக்கள் நலத்தை மன்னன் நாடுக ; அறிஞர் நாவலர் கலைகள் ஓங்குக ; எல்லாம் வல்ல ஈசன் எனது மறுபிறப்பு அழித்து அருள் புரிக.

(எல்லோரும் போகிறார்கள்)

**(ஏழாம் அங்கம் முற்றிற்று.)**

(சாகுந்தலம் முற்றிற்று.)



# மேகதூதன்

## முதல் பாகம்

### வழி வர்ணனை.

1. **பதவுரை :—**

காதலியைப்பிரிந்த கொடுமையினால் தன் கடமையை மறந்த ஒரு யக்ஷன், அரசன் சாபத்தால் ஓராண்டு தண்டனை அடைந்து, மகிமை இழந்து, ஜனகன் கன்னிகை குளித்த புண்ணிய புனல்களும், அடர்ந்த மரங்களின் படர்ந்த நிழலும் கூடிய ராமகிரியின் ஆசிரமங்களில் வசிக்கலானான்.

**சித்திர விளக்கம் :—**

யக்ஷர்கள் வசிக்கும் அளகாபுரி. அளகேசன அரண்மனையில் அவனுடைய அந்தரங்க அமைச்சன் வேலை செய்கிறான். நாள் நீண்டுகொண்டே போகிறது. காலையில் பிரிந்த காதலியைச் சிநதித்து மதி மயங்குகிறான். உன்மததனைப்போல் உட்கார்ந்திருககிறான். அவனை இந்நிலைமையில் கண்ட குபேரன் கோபித்து, 'காம நோயினால் பீடிக்கப்பட்டுக் கடமையை மறந்த நீ ஓராண்டு மனிதர் மத்தியில் வசிப்பாய்' என்று சபிக்கிறான். யக்ஷன் மூர்ச்சை அடைகிறான். மறு நிமிஷம் விந்திய மலைச்சாரலில் வீழ்ந்திருப்பதை உணருகிறான். ஆனால் என்ன விந்தை! பெரியோர் சாபமும் புனிதமன்றோ! ஜனக குமாரி குளித்துக் களித்த அருவிகளல்லவா இவை? ஸ்ரீராமன் சஞ்சரித்த காடுகள் அல்லவா! நீரும் நிழலும் எவ்வளவு அழகாக இருக்கின்றன? ராமனைப் போலவே தானும் குடிசை கட்டிக்கொண்டு வசிக்கலானான்.

**2. பதவுரை :—**

*கைகளிலிருந்து கனக வளையல்கள் நழுவி சில மாதங்கள் கழித்திருக்கும் காலே, ஆடி மாதம் முதல் தேதியில், குன்றை முட்டி விளையாடும் மதக்கரிபோல், கண்ணைக் கவரும் முகிலே, அம்மலையின் ஒரு பக்கத்தில் பார்த்தான்.*

**சித்திர விளக்கம் :—**

*ஓயாமல் தன் காதலியையே நினைத்திருந்த யக்ஷன் பிரிவாற்றுமையால் மிகவும் மெலிந்தான். அவன் கையில் அணிந்த தங்க வளையல்கள் நழுவிக் காட்டில் விழுந்து விட்டன. துக்கத்தில் நாள் செல்லுவது கூட அவனுக்குத் தெரியவில்லை. ஒரு நாள் மாலைப் பொழுதில் தெற்குப் பக்கம் நோக்கித் திடுக்கிட்டான். 'மலையின்மேல் விளையாடும் கரிய உருவம் என்ன? மதம் பிடித்த யானை குன்றை முட்டிச் சண்டைக்கு இழுக்கின்றதோ? என் அறியாமையை என்ன சொல்வது? ஆடி மாதம் பிறந்து விட்டதல்லவா? கார் முகில் அல்லவா காணப்படுகின்றது? இச்சமயம் என் காதலியுடன் கூடி இருக்க வேண்டுமல்லவா' என்று மேகத்தை உற்று நோக்கினன்.*

**3. பதவுரை :—**

*ஆசையை அதிகரிக்கும் கார் முகிலேக்கண்டு கண்ணீரை கஷ்டப்பட்டு அடக்கி அதன் முன்னின்று செல்வர்கோன் சேவகன் சிந்திக்கலானன். 'சுகித்திருப்போர் கூட மேகத்தைப் பார்த்துச் சபலமடைவார். இறுகத்தழுவிப் பிரேமையைப் பெருக்கும் இனியாளை விடுத்து நெடுந் தூரம் பிரிந்திருப்போரைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ'?*

**சித்திர விளக்கம் :—**

*கார்மேகத்தைக் கண்டு சகல ஜந்துக்களும் ஆசையால் பூரிக்கின்றன. இராஜராஜனை குபேரனுடைய அமைச்சனுக்கோ அடங்காத்துயரம் பொங்கிற்று. மேகத்தை நன்கு பார்க்கலாமோவெனின் கண்களில் நீர் நிரம்பி*

மறைக்கின்றது. அதைப் பிரயாசையுடன் அடக்கி அன்புடன் முகிலை நோக்கித் தனக்குள் சிந்திக்கின்றான். காதலியுடன் வீட்டிலிருக்கும்போதே இம்மேகத்தைக் கண்டால் என்மனம் கலங்குமே. அவளும் ஓடிவந்து என் கழுத்தைக் கட்டிக் கொள்ளுவாள. அவளைப் பிரிந்து தொலையாத தூரத்தில் இருக்கும் நான் என்ன செய்வேன் ? இந்த துக்கக் கடலில் மூழ்கி விடாமல் தப்புவேனே ?

**4. பதவுரை :—**

வானத்தில் மேகத்தைக் கண்டதும் தன் காதலி உயிரைத் துறப்பதைத் தடுக்க எண்ணி, முகில் மூலம் தான் பிழைத்திருக்கும் குசலச் செய்தியை அனுப்ப விரும்பி அன்று மலர்ந்த மல்லிகைகளால் அதற்கு அர்ச்சனை செய்து, மனமுவந்து அன்புடன் வரவேற்று வாழ்த்துக் கூறலானான்.

**சித்திர விளக்கம் :—**

'வானத்தில் கார்முகிலைக் கண்டு துயரப்பட்டாலும் நான் எவ்வாறோ பிழைத்திருக்கிறேன். என் காதலி அவ்விதம் பிரிவாற்றுமையைப் பொறுத்திருக்க மாட்டாள். தன் உயிரை உடனே துறந்துவிடுவாள். இந்த அபாயத்தைத தவிர்க்க, என்னைப்பற்றிய குசலச் செய்தியை இம்மேகமே ஏற்றுத் தூது செல்லும்படி யாசிப்பேன்' என்று எண்ணி யக்ஷன புதிதாக மலர்நத மணம் வீசும் மல்லிகை மலர்களால் மேகத்துக்கு அர்ச்சனை செய்தான். தன் காரியம் கைகூடிய தென்றெண்ணி மகிழ்ச்சி அடைந்தான். மேகத்தை தன் உயிர் நண்பனாகப் பாவிக்கலானான். அதனிடம் அளவில்லாத பிரீதி கொண்டு பேசுகிறான்.

**5. பதவுரை :—**

புகையும் புனலும் காற்றும் கிரணமும் கலநத கார் முகில் எங்கே ? பகுத்தறிவு படைத்த பிராணிகளால் அனுப்ப வேண்டிய தூது விஷயங்கள் எங்கே ? என்று ஆவலின் மிகுதியால் ஆலோசிக்காது யக்ஷன் அதனை

யாசிக்கலானுன். காமத்தால் பீடிக்கப்பட்டோர் சேதன அசேதனங்களின் தன்மையைப்பற்றித் தடுமாறுவது சகஜமன்றோ !

**சித்திர விளக்கம் :—**

புகையின் வர்ணமுள்ளது, நீரையும் மின்னலையும் உள்ளே உடையது, காற்றின்மேல் சவாரி செய்வது, இந்த அசேதன மேகம். சேதனங்களுக்குள்ளும், பகுத்தறிவும், பேசும் திறமையும் பெற்ற மனிதர் மூலம் அனுப்ப வேண்டிய காதல் செய்தியை இது எவ்வாறு எடுத்துச் செல்லும் என்று, தன் அள வில்லாத ஆசையின் காரணத்தால், சிறிதும் ஆலோ சிக்காது, அம் மேகத்தை மனிதனுகவே பாவித்து யக்ஷன் அதனிடம் பிரார்த்தனை செய்யத் தொடங் கினுன். எல்லாக் காதலர்களின் நிலைமையும் இதுவே. சேதனம், அசேதனம் என்று சிறிதும் சிந்திக்காமல் புலம்பித் திரிவார்கள்.

**6. பதவுரை :—**

மூவுலகும் புகழ் பெற்ற புஷ்கர வர்த்தகர்களின் வம்சத்தில் உதித்து, விரும்பிய உருவம் வகிக்கும் வல்லமை பெற்று, தேவேந்திரனுடைய முக்கிய சேவக னென்று உன்னை அறிவேன. ஆதலின் விதி வசத்தால் எனது ஏக பந்துவிடமிருந்து நெடுந்தூரத்தில் நிற்கும் யான் பிரார்த்திக்கப் புகுந்தேன். நீசரை யாசித்து சித்தியடைதலைவிட உயர் குணத்தோரை வேண்டி ஏமாறுதல் மேலன்றோ.

**சித்திர விளக்கம் :—**

உன்னை யார் என்று அறியாமல் யாசிக்கவில்லை. மூவுல கிலும் புகழ்பெற்ற புஷ்கர வர்த்தகர்களின் பெரிய வம்சத்தில் பிறந்தாய். தேவேந்திரனின் முக்கிய கர்மகாரியாக இருந்து உலகத்தை மழையால் பாதுகாக் கும் பதவியில் இருக்கின்றுய். இச்சைப்படி உருவ மெடுக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறுய். இவ்விதம் குலத்திலும் குணத்திலும் காரியத்திலும் உயர்ந்த

உன்னைப் பிரார்த்திப்பதனல் எனக்கு யாதொரு குறைவும் கிடையாது. என் வேண்டுகோளை நீ நிராகரித்தாலும் அவமானமில்லே. நீசர்களிடம் அடைக்கலம் புகுந்து வெற்றி அடைந்தாலும் வெட்கப்பட வேண்டும். பெரியோர்களைச் சரண் புகுந்து பலனடையா விட்டாலும் புண்ணியமுண்டு. அற்பகாரணத்திற்காக உன்னை அணுகவில்லே. இவ்வுலகில் எனக்கு ஒரே பந்துதான். அவள் என்னைப் பிரிந்து நெடுந்தூரத்தில் நிற்கின்ருள். இதை அறிந்து நீயும் உதவ மறுக்கமாட்டாய்.

7. **பதவுரை :—**

கஷ்டப்படுவோரின் கதி நீ அன்றே ! அம்புதமே ! ஆதலின் குபேரன் கோபத்தால் பிரிந்திருக்கும் காதலிக்கு என் செய்தியை எடுத்துச் செல்வாய். பரமசிவன் தலையிலிருந்து பிரகாசிக்கும் சந்திரனல் சோதிமயமாக விளங்கும் உத்தியான வனங்களில் உப்பரிகைகள் பொருந்திய மாளிகைகள் கூடிய யக்ஷேச்வரர்களின் அளகாபுரியும் நீ செல்லவேண்டிய க்ஷேத்திரமே.

**சித்திர விளக்கம் :—**

சூரிய வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் தபிக்கும் உலகம் உன்னை அன்றே சரணடைகின்றது. அதற்கு நீரும், நிழலும் கொடுத்துக் காப்பாற்றுகின்ருய். ஆகையால் விரகவேதனையால் வருந்தும் நானும் நீயே கதி யென்று உன்னை அடைந்தேன். குபேரனுடைய கோபத்தால் காதலியைப் பிரிந்து வருந்துகின்றேன். அங்கு அவளும் மனம் புண்ணுகிப் பரிதவிப்பாள். எனது செய்தியை அவளுக்கு எடுத்துப்போய் உதவவேண்டும். அப்படிச் செய்வதால் உனக்கும் லாபமுண்டு. அளகாபுரியைப் பார்க்காத பிறப்பு ஓர் பிறப்பல்ல. சிவபெருமான் வசிக்கும் கைலாசகிரியில் உள்ளது. அவன் ஜடையில் ஜொலிக்கும் சந்திரன் யக்ஷர்களின் மாளிகைகளையும் உத்தியான வனங்களையும் வெள்ளியைப் போன்ற ஒளிமயமாக்குகிறது. அக்காட்சியைக் கண்டு நீ அவசியம் களிக்கவேண்டும்.

**8. பதவுரை :**

காற்று மார்க்கத்தில் செல்லும் உன்னைப் பிரயாணி களின் பத்தினிகள் தம் முன் தலை மயிரை விலக்கி ஆவலுடன் உற்று நோக்கி ஆறுதலடைவார்கள். பிறருக்கு அடிமை செய்து என்னைப் போல் பிழைக்காத எவன் உன்னைக் கண்டபிறகும் தன் காதலியை அலக்ஷியம் செய்வான் ?

**சித்திர விளக்கம் :—**

வாயு வாகனத்திலேறி நீ செல்ல ஆரம்பிக்கும் பொழுது வெளியூர் சென்றிருக்கும் தம் கணவரைச் சிந்தித்துச் சோர்வுறும் மாதர்கள் உன்னைக் கண்டு ஆறுதலடைவார்கள். ஆடி மேகத்தைப் பார்த்து 'நம்மை விட்டுப் பிரிந்திருக்கக் காதலர்களுக்கு மனம் வராது ; விரைந்து ஓடிவருவார்கள்' என்று எண்ணி அகம் மகிழ்வார்கள் இவ்வித நற்செய்தியைக் கொண்டு வரும் நண்பனைக் கண்ணாரக் காணலாமென்று நெற்றி யில் படர்ந்து பார்வையைத் தடுக்கும் முன்னந் தலை மயிரைக் கையால் விலக்கிக் கொண்டு கண்குளிர நிமிர்ந்து நோக்குவார்கள். ஆனால் சுதந்திரமிழந்து பிறரிடம் சேவகம் செய்து பராதீனமான பாவியேன், ஆடியிலும் கூட முடியாது வாடுகின்றேன்.

**9. பதவுரை :—**

உன் இஷ்டம் போல் வாயு மெதுவாக வீசும்; இடது பக்கத்தில் சாதகப்புள் பெருமையுடன் கூவும் ; உன்னைக கண்டு கர்ப்பம் தரித்த கணப் பரிச்சயத்தால் பலரகப்பட்சி கள் கூட்டமாக வானத்தில் வட்டமிட்டு அவசியம் உன் நேத்திரங்களுக்கு ஆனந்தம் அளித்துத் தொண்டு புரியும்.

**சித்திர விளக்கம் :—**

புறப்படும் பொழுது உனக்கு இராசோபசாரம் செய்யப் பலர் காத்துக் கொண்டிருப்பார்கள். வாயு பகவானே நேரில் உன் பல்லக்கை வகித்து நோகாதபடி மெதுவாகச் செல்லுவான். உன் ஜலத்துளிகளைக் கொண்டு தாகம்

தீர்க்கக் காத்திருக்கும் சாதகம் உனக்குக் கட்டியம் கூறும். உன்னைப் பார்த்தவுடன் கர்ப்பம் தரிக்கும் நாரைகள் நன்றியைச் செலுத்தும் பொருட்டு நூற்றுக் கணக்கில் அணிவகுத்து வானத்தில் வட்டமிட்டு உனக்கு முன் போகும் சைனியம் போல் இன்பக் காட்சி அளிக்கும்.

**10. பதவுரை :—**

வழியில் நின்று விடாமல் சென்று, நாட்களை எண்ணிக் காலம் கழித்து உயிர் பிழைத்திருக்கும் உன் சோதரனின் ஒரே மனைவியான என் காதலியைக் காண்பாய் விரகத்தைத் தாங்காது உடனே வெடித்துப் போகும் தன்மை உடைய மெல்லியர்களின் மலரனைய இதயத்தை ஆசாபாசம் இறுகக் கட்டி நிலை நிறுத்துகின்றது.

**சித்திர விளக்கம் :—**

'அளகாபுரி வரையில் போய்ச் சேருவேனோ' என்ற சந்தேகம் வேண்டாம். உன்னைத் தடுக்கவல்லவர் எவருமில்லை. அங்கே போயும் என் காதலியைக் காணு வது நிச்சயமாவென்று ஐயமுற வேண்டாம். அவள் இதயம் மலரினும் மிருதுவாக இருப்பது உண்மையே. என் வியோகத்தைப் பொறுக்காமல் சிதைந்து போகும தன்மை உடையது. ஆயினும் என்னோடு கூடும் ஆசை என்ற பட்டுக்கயிறு அதைக் கெட்டியாகக் கட்டிக் காப்பாற்றி வரும். 'அவள் கஷ்டப்பட்டாலென்ன? எனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்க மாட்டாய் என்று நம்புகின்றேன். சரணமடைந்ததால் உன் சோதரன் ஆனேன். அவளும் உன மைத்துனியாகி விட்டாள்.

**11. பதவுரை :—**

உலர்ந்த பூமியைப் பசுமை மயமாக்கும் சக்தி வாய்ந்த உன் காதுக்கினிய கர்ஜனையைக்கேட்டு மானஸ ஸரஸை அடைய ஆவல்கொண்ட அரச அன்னங்கள், கைலாசம்

வரையில் உணவிற்காகத் தாமரைத் தண்டின் துண்டு களை எடுத்துக் கொண்டு, உன் வழித்துணைவர்களாக வானத்தில் சேர்ந்து கொள்ளும்.

**சித்திர விளக்கம் :—**

வெகு நாள் பிரிந்திருந்து திரும்பி வந்திருக்கும் காதலன் பேச்சைக் கேட்டு காதலி மயிர் கூச்சல் எடுப்பது போல் உன் இனிய இடியைக் கேட்டுப் பூமாதேவி பசும் புல் மயமாவாள். இராஜ ஹம்ஸங்களுக்கும் மானஸ ஏரிக்குப்போக வேண்டுமென்று அளவில்லா அவா உதிக்கும். உடனே நெடுந்தூரம் செல்லும் வழிப்போக்கன் கட்டுச்சோறு எடுத்துச செல்வது போல அந்த அன்னங்கள் இளந் தாமரைத் தண்டுகளைத் தம் கால்களால் தூக்கிக்கொண்டு உன் துணையாக வானத்தில் வந்து கூடிவிடும். நீ தனிமையாகப் போய்த் தவிக்க நேரிடாது.

**12. பதவுரை :—**

குறிப்பிட்ட காலங்களில் எவனுடன் கூடி, விரக வேதனையின் உஷ்ண நீரைச் சொரிந்து உன் நட்பைத் தெரிவிக்கின்றாயோ, புருஷர்கள் பூஜை செய்யும் இராம பிரான் பாதங்களின் அடிச்சுவடுகள் அமைந்த தாழ் வரைகள் கூடிய உயிர்த்தோழனை அந்த உயர்ந்த கிரியை இறுகத் தழுவி விடைபெற்றுக் கொள்வாயாக.

**சித்திர விளக்கம் :—**

மற்றக் காலங்களில் பிரிந்து மாரி காலத்தில் இக் குன்றுடன் கூடுவது உனது வழக்கம். அவ்வாறு கூடும் பொழுது வெகு நாள் பிரிந்திருந்த வருத்தத்தால் நீ சொரியும் நீர் உஷ்ணமாக இருக்கும். பிறகு நட்பின் மிகுதியால் குளிர்ந்த ஜலத்தைப் பொழிவாய். உன்னை விட்டுப் பிரிய இவனுக்கு இப்பொழுது மனம் வராது. ஆயினும் என் தூதின் அவசரத்தைத் தெரிவித்து அன்புடன் ஆலிங்கனம் செய்து விடைபெற்றுக்

கொள்ளக்கடவாய். இந்த ராமகிரி மலே உனக்குரிய நண்பன். அவனது தாழ்வரைகளில் ஸ்ரீராமச்சந்திர னுடைய பாதத்தின் தூய அடிச் சுவடுகள் இன்றும் காணப்படுகின்றன. அவற்றைப் பூஜிக்கப் பலர் நெடுந் தூரத்திலிருந்து யாத்திரை செய்கின்றனர். இந்தப் புண்ணிய பர்வதத்தை விட்டுச் செல்லுமாறு கேட்கும் என்னே இருவரும் மன்னிக்க வேண்டும்.

**13. பதவுரை :—**

இனி உன் பிரயாணத்திற்குத் தகுந்த வழியை விரித் துரைப்பேன் கேளாய் ; அதன் பின் காதிறகினிய தூது செய்தியைச் செவிகொடுத்து ஏற்பாய் ; களேத்த போதெல்லாம் குன்றுகளின்மேல் அடிவைத்தும் ஆறுகளின் அற்ப ஜலத்தை அருந்தியும் செல்வாய்.

**சித்திர விளக்கம் :—**

'கைலாசகிரிக்குப் பல்லாயிர மைல் இருக்கிறதே ! பாதையில் சோர்ந்து போவேனே' என்று கவலேப் படாதே. ஆங்காங்கு வழியில் களேத்திருக்கும் உன்னே வரவேற்று வகிக்கக் குன்றுகள் காத்துக் கொண்டிருக் கின்றன. உன் தாகத்தைத் தணிக்க ஆறுகளும் ஆவல் கொண்டிருக்கின்றன. சமுத்திரத்தில் தண்ணீர் குடிக்கும் உனக்கு இவ்வாற்று நீர் அற்பமாகத் தோன்றலாம். ஆனல் உப்பு நீரை ருசி பார்த்த உனக்கு இவை அமிர்தமாக இருக்கும்.

**14. பதவுரை :—**

மலேயின் உச்சியை மாருதம் கவர்ந்து செல்லு கின்றதோவென்று மயங்கிய சித்த மாதர்களால் நடுக்கத்துடன் நோக்கப் பட்டு இந்த அழகிய பிரம்புப் புதரிலிருந்து புறப்பட்டு வானமேறி வட திசை நோக்கி திக்கஜங்களின் துதிக்கைகளின் கர்வத்தைப் பங்கம் செய்துக் கொண்டு செல்வாய்.

**சித்திர விளக்கம் :—**

'திடீரென்று காற்றால் முறிக்கப்பட்டு மலையின் சிகரம் மேலெழுந்து வருகின்றதே ; நம் பேரில் மோதி விடுமோ' வென்று வானத்தில் சஞ்சரிக்கும் சித்தர் களின் மங்கையர்கள் மயங்கி உன்னைக் கண்டு அஞ்சி மயிர்க் கூச்சலெடுக்க, உனக்குப் பிரியமான இந்த பிரம்புக் காட்டிலிருந்து மேல்கிளம்பி வட திசை செல் வாய். போகும் வழியில் மதம் பிடித்து துதிக்கையில் மரங்களைப் பிடுங்கி விளையாடும திக்கஜங்கள் உனது உருவத்தையும் பலத்தையும் கண்டு கர்வபங்கம் அடையும். (**சிலேடை :** படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இக்கவிதையும் காளிதாசனிடம் பொறாமை கொண்ட திங்நாதனைத் திரஸ்கரித்து ரஸி கனான நிசுலனுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.)

**15. பதவுரை :—**

வர்ணக் கற்களின் குவியல் போல உனக்கு முன்னால் கரையான் புற்றிலிருந்து கிளம்பும் வானவில் வளைந்து ஒளி பரப்ப, மயில் தோகையை முடியில் அணிந்து கோபால வேஷம் பூண்ட விஷ்ணுவைப்போல் உன் கரிய மேனி ஒளி வீசுகின்றது.

**சித்திர விளக்கம் :—**

வடக்கு திக்கை விஜயம் செய்யப் புறப்படும் உன் பிரகாசத்தை வர்ணிக்க முடியாது. அதோ பார் ! அந்தக் கரையான் புற்றிலிருந்து நீலமும், வைரமும், மரகத மும், வைடூர்யமும் இடைவிடாது இழைத்த இரத்தின மாலைபோல் இந்திர வில் உன் உடலுக்கு ஆபரணமாகப் பிரகாசிக்கிறது. இவ்விசித்திர வர்ணங்கள் பொதிந்த உன் கரிய காந்தி, அன்று வைகுண்டத்தை விடுத்து ஆயர் குலத்தில் அவதரித்து இடையர் உடை தரித்து முடியில் மயில் தோகை சூடி கோப கன்னிகையரின் உள்ளத்தைக் கவர்ந்த கோபால கிருஷ்ணனுடைய திரு மேனியை ஒத்திருக்கிறது.

**16. பதவுரை :—**

உன்னைப் பொறுத்ததன்றோ உழவின் பலனென்று அன்பு ததும்பும் கபடமறியாத கண்களால் கிராம மகளிர் உன்னை விரும்பிப் பருக, புதிதாக உழுத மண்ணின் மணம் வீசும் மால க்ஷேத்திரத்தின் மேலேறி சிறிது மேற்கே சென்று மறுபடியும் வடதிசை செல்வாய்.

**சித்திர விளக்கம் :—**

உனக்கும் உழவர்களுக்கும் நெருங்கிய சம்பந்தமன்றோ ? உன் கருணையின்றி விவசாயம் நடக்காது. ஆதலால் குடியானப் பெண்மணிகள் அகம் மகிழ்ந்து வாழ்த்துவார்கள். அவர்கள் பார்வையில் பட்டணத்தாரின் கள்ளம் கபடங்களைக் காணமாட்டாய். நன்றியும் நல்லெண்ணமும் துலங்கும். அக்கண்களைக் கண்டு களித்தும் புதிதாக மழைபெய்து உழும்பொழுது மேலெழும் மண்ணின் நறுமணத்தை நுகர்ந்தும் மாலமென்னும் மலைப் பிரதேசம் செல்வாய். அங்கிருந்து சிறிது தூரம் சென்று மேற்குப் பக்கம் போய், திரும்பவும் வடதிசை செல்ல வேண்டும்.

**17. பதவுரை :—**

பெருமழை பொழிந்து காட்டுத் தீயை அணைத்த உன்னை அன்புடன் தலையால் தூக்கி களைப்பைத் தீர்ப்பான், மாஞ்சோலை மலை; முன் பேருபகாரம் செய்த நண்பன் உதவியை நாடி வரும் பொழுது கடையரும் மறுக்க மாட்டாராதலின் உயர்ந்தோரைப் பற்றிக் கூறவும் வேண்டுமா ?

**சித்திர விளக்கம் :—**

நீ களைத்து வருவாய் என்று தயாராக தலையைத் தூக்கி நிற்கின்றான் ஆம்ரகூடன். அவனுடைய இனிய மாஞ்சோலைகளை முன்னொருகால் காட்டுத் தீ அழிக்க ஆரம்பிக்கையில் பெருமாரி பெய்து அவனைக் காப்பாற்றினாய். குணத்தில் குறைந்தோரும் பேருபகாரம் செய்த

நண்பன் தன்னை நாடி வரும்போது செய் நன்றி மறந்து அலக்ஷியம் செய்யமாட்டார். வானமளாவி நிற்கும் இவ் வுயர்ந்தோன் உனக்குப் பணிவிடை செய்யத் தயங்க மாட்டான். தாராளமாய் அவன் முடிமேல் படிந்து சோர்வு தீர்வாய்.

**18. பதவுரை :—**

மாஞ்சோலைகளெல்லாம் பக்குவமாகப் பழுத்துப் பிரகாசிக்க, தைலம் தீட்டிய கூந்தல் நிறமுள்ள நீ உச்சியில் உட்கார, தேவ தம்பதிகள் வியந்து தரிசிக்க, நுனியில் கறுத்து சுற்றிலும் சிறிது வெளுத்திருக்கும் பூதேவியின் மென் முலையின் நிலையை ஆம்ரகூடன் அடைவான்.

**சித்திர விளக்கம் :—**

ஆம்ரகூடத்தின் மாஞ்சோலைகளெல்லாம் நன்றாகப் பழுத்து பச்சை இலைகள் பழங்களால் மறைந்து தூரத்திலிருந்து பார்ப்போர்களுக்குப் பாலை வர்ணமாகக் காணப்படும். இளமங்கையர் தைலம் தடவி வாரிய கரும்குழலையொத்த நீ அதன் உச்சியில் அமர்ந்திருக்கும் பொழுது வானத்தில் சஞ்சரிக்கும் அமர மிதுனங்கள் கண்டு வியப்புறுவார்கள். ‘நுனியில் கருத்து சுற்றிலும் சிறிது வெளுத்து இருக்கிறது. முகத்திலிருந்து ஜீவராசிகளை வளர்க்கும் அமிர்தமும் ஒழுகுகிறது. இது பூமாதேவியின் புண்ணிய ஸ்தனமாக இருக்குமா!’ என்று கற்பனைசெய்து களிப்பார்கள்.

**19. பதவுரை :—**

காட்டு மகளிர் களித்த கொடி வீடுகளில் கொஞ்ச காலம் கழித்துவிட்டு மாரி பொழிந்ததால் பாரம் குறைந்து, விரைவில் வழி கடந்து, கரடு முரடான கற்பாறைகள் குழுமிய விந்திய பர்வதத்தின் அடிவாரத்தில், கோவில் யானைக்குப் பக்தர்களால் போடப்பட்ட விபூதிப் பட்டை போன்ற, நர்மதா நதியைக் காண்பாய்.

**சித்திர விளக்கம் :—**

அம்மலையில் எங்கும் கொடி வீடுகள் இயற்கையால் அமைந்திருக்கின்றன. வேட ஸ்திரீகள் அவைகளில் கூத்தாடிக் களிப்பார்கள். அதனைப் பார்த்துப் பரவச மடைந்து சிறிது நேரம் சுகமாகக் கழிப்பாய். கால தாமதமாகிவிடும். ஆதலால், உடனே மாரி பெய்து உன் பாரத்தைக் குறைத்துக் கொண்டு வேகமாகச் செல்ல வேண்டும். சீக்கிரம் விந்திய மலையைத் தாண்டி அதன் அடிவாரத்தில் ஓடும் புனித நர்மதா நதியைப் பார்ப்பாய். யானைகளைப் போன்ற பெரிய கற்பாறைகளின் நடுவில் ஓடும் அந்நதி பரமசிவன் கோவில் யானைக்கு பக்தர்கள் போட்ட பெரிய விபூதிப் பட்டை போல் பிரகாசிக்கும்.

**20. பதவுரை :—**

நாக மரங்களால் தடைப்பட்டு வனகஜங்களின் மத நீரின் வாசனையும் புளிப்பும் கூடிய நர்மதா ஜலத்தைப் பருகிப் போகும் பொழுது, நீருண்ட மேகமே, உன் கனத்தைத் தாங்கமாட்டாது, வாயு வருந்துவான். சத்தில்லாதவனை அசட்டை செய்வதும் உள் நிறைந்தவனைப் போற்றுவதும் உலக இயல்பன்றோ !

**சித்திர விளக்கம் :—**

அவசரமாக ஜலத்தைக் கொட்டி வந்தேனே என்று வருந்த வேண்டியதில்லை. இந்த நர்மதையின் நீர் பரம போக்கியமாக இருக்கும். கரையில் வளர்ந்து வெள்ளத்தைத் தடுக்கும் நாக மரங்களிலிருந்து விழுந்த பழங்களின் சுவையும் காட்டு யானைகளின் மதநீரின் மணமும் கலந்திருக்கும். அதை உன் பசி தீரும் வரையில் பருகிவிட்டு வழியிலே செல்வாய். புதிய கனத்தின் காரணமாகச் சற்றுமுன் பஞ்சைப் போல் விரட்டி வந்த காற்றும் உன்னைத் தூக்கிச் செல்லக் கஷ்டப்பட்டு மெதுவாகவே போகும். கனமில்லாதவனுக்கு கௌரவமில்லை. பொருள் படைத்தோருக்கு என்றும் பெருமை உண்டு. இது உலகில் சாசுவதமான நீதி அன்றோ ?

**21. பதவுரை :—**

பாதி மொட்டுகள் தோன்றி பச்சையும் கரும் சிவப்பு மாக இருக்கும் கதம்ப மரங்களைக் கண்டும், மலையடி களின் காடுகளின் வாழைகளின் முதல் குருத்துக்களைப் புசித்தும், ரம்மியமான மண்ணின் மணத்தை நுகர்ந்தும் புள்ளிமான்கள், நீருண்ட மேகமே நீ சென்ற மார்க்கத்தைத் தெரிவிக்கின்றன.

**சித்திர விளக்கம் :—**

நீ வானத்தில் செல்லும் வழியை பூமியில் புள்ளி மான்கள் எளிதில் அறிந்து பின் செல்லுகின்றன பார். கதம்பங்கள் மொட்டு விட ஆரம்பித்து கருப்பும் சிவப்பு மாக பிரகாசிக்கின்றன. மழை பெய்த காடுகளி லெல்லாம் வாழைகளின குருத்து தோன்றி புசிப்பதற்கு இனிப்பாக இருக்கின்றன. எங்கும் மண் கம்மென்று வாசனை வீசுகின்றது. இவ்வானந்தங்களை அனுபவித் துக்கொண்டு மான்கள் கூட்டங் கூட்டமாக உன்னைப் பின் தொடர்ந்து வருகின்றன.

**22. பதவுரை :—**

மழைத்துளிகளைப் பிடித்துப் பருகுவதில் சாமர்த்திய முள்ள சாதகங்களைப் பார்த்துக் கொண்டும், அணிவகுத் திருக்கும் நாரைக் கூட்டங்களை சுட்டிக் காட்டி எண்ணிக் கொண்டும் இருக்கும் சித்தர்கள், உன்னை அணுகும் பொழுது இடியால் கலங்கிய காதலிகள் தம்மை அவா வுடன் ஆலிங்கனம் செய்ய, உனக்கு மனமுவந்து மரியாதை செய்வார்கள்.

**சித்திர விளக்கம் :—**

தம்பதிகளாக வானத்தில் திரியும் சித்தர்கள் உன்னைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். மழைத் துளியைப் பிடித்துத் தம் தாகத்தைத் தீர்க்கும் சாதகப் பட்சிகளின் சாமர்த்தியத்தையும், சைனியம்போல் அணி வகுத்துப் போகும் நாரைகளின் கூட்டங்களையும் இதர

காட்சிகளையும் தம் காதலிகளுக்குக் காட்டிக் கொண்டு வரும் பொழுது திடீரென்று கர்ஜிப்பாய். அதனால் பயந்தவர்கள் போல் பர்சாங்கு செய்து சித்த மாதர் தம் கணவர்களை இறுகத் தழுவி இன்பமுறுவார்கள். இம் மேகத்தாலன்றோ இவ்வித சுகம் நமக்குக் கிடைத்த தென்று நன்றியுடன் சித்தர்கள் உன்னைப் பெரிதும் போற்றுவார்கள்.

**23. பதவுரை :—**

என் பேரில் பிரியம் கொண்டு வேகமாகச் செல்ல விரும்பினாலும், என் தோழனே, மல்லிகை மணம் கமழ்கின்ற பர்வதங்களில் காலதாமதம் ஆகுமென்று எதிர்பார்க்கிறேன் ; நீர் நிறைந்த கண்களோடு கூவும் மயில்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு விரைந்து போகக் கிருபைசெய்து முயற்சிக்க வேண்டும்.

**சித்திர விளக்கம் :—**

உன் பேரில் குற்றமில்லை. என்னிடமுள்ள தயவால் வேகமாக அளகாபுரி போக விரும்பிய போதிலும் வழியில் பல தடைகள் ஏற்பட்டுக் கால தாமதமாகி விடுமென்று மிகவும் அஞ்சுகின்றேன். ஒவ்வொரு மலையின் மீதும் சற்று சிரம பரிகாரம் செய்யவேண்டும். அங்கெல்லாம் மல்லிகை பூத்து நறுமணம் வீசுவதால் எளிதில் புறப்பட மனம் வராது. மயில்கள் உன்னைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, களிக்குரலோடு நர்த்தனம் செய்து வரவேற்கும். அவற்றையும் அலக்ஷியம் செய்ய முடியாது. கூடிய வரையில் இவை களால் மோகமடையாமல் மனதைத் திடப்படுத்தி, துரித மாகச் செல்லா விட்டால் நான் பிழைக்க மாட்டேன் என்பதை எப்பொழுதும் நினைத்துக்கொண்டு மற்ற விஷயங்களை மறக்க முயற்சித் தருளுவாய்.

**24. பதவுரை :—**

ஊசி முனையுள்ள தாழம்பூக்கள் உபவனங்களின் வேலிகளில் மலர்ந்தும், வீடுகளில் போடப்படும் பிண்டங்

களில் வளர்ந்து வரும் புள்ளினங்கள் கிராம விருக்ஷங் களில் பரபரப்புடன் கூடு கட்டப் புகுந்தும், சுற்றுப் பக்கத் துக் காடுகளில் நாகமரங்கள் நன்கு பழுத்தும் உன் வரவால் விளங்கும் தசார்ண தேசத்திற்குப் பல நாட்கள் ராஜஹம்சங்களின் வாசமும் கிடைக்கின்றது.

**சித்திர விளக்கம் :—**

உன் வரவினால் தசார்ண தேசம் உன்னத தசை அடையும். அதன் காடுகளில் நாகப்பழம் பழுத்துக் குலுங்கும். வேலிகளில் எல்லாம் தாழை பூத்து, அதன் ஊசி முனைகள் பிரிந்து வாசனை வீசும். வீடுகளில் தினந் தோறும் பலியாகப் போடப்படும் அன்னத்தைப் புசித்து வரும் பட்சிகள், மழையைக் கண்டு அவசர அவசரமாகக் கூடு கட்ட அங்குமிங்கும் அலைந்து திரிந்து, புல்லும் வைக்கோலும் கொத்தி வந்த வண்ணமாக இருக்கும். உன்னுடன் வந்த ராஜ ஹம்சங்களும் அங்கு வந்து சேர்ந்து அதன் அழகைப் பூர்த்தி செய்யும்.

**25. பதவுரை :—**

புவன மெங்கும் புகழ் பெற்ற அந்நாட்டின் தலை நகரமான விதீச நகரத்தை அடைந்ததும் உன் பிரேமை யின் பூரண பலன் பெறுவாய். வளைந்த புருவத்தோடு கூடிய முகம் போன்ற வேத்திரவதியின் அலை வீசும் ஜலத்தை அதன் கரையில் உட்கார்ந்து இன்பமுடன் குடிப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

தசார்ண தேசத்தின் பிரதான பட்டணம் விதீச நகரம். உலகெங்கும் புகழ் பெற்ற அந்த நகரின் அருகில் உன் காதலி வேத்ரவதி நதி ஓடுகின்றாள். முதன் முதலில் அவளிடம் போய், கரையில் உட்கார்ந்து, அலைவீசும் புருவத்தைக் கண்டு களித்து, அதராம்ருதம் போன்ற ஜலத்தை ஆரவாரத்துடன் கர்ஜித்துக் குடித் துக் கிருதார்த்தனாவாய்.

**26. பதவுரை :—**

உன் சேர்க்கையால் மயிர்க் கூச்சல் எடுத்தது போல் மலர்ந்த கதம்ப புஷ்பங்கள் பிரகாசிக்கும் நீசன் என்னும் குன்றின் மேல் களைப்பாறி வீற்றிருப்பாய்; அக்குன்றின் குகைகளிலிருந்து கமழும் வாசனைகள், விலை மாதருடன் கூடிக் களித்த அந்நகர் வாலிபர் களின் அடங்காத யௌவனத்தின் அறிகுறிகளாகும்.

**சித்திர விளக்கம் :—**

வேத்ரவதியின் அருகில் நீசன் என்று பெயருள்ள பழைய நண்பனை குன்றின் மேல் தங்கி இளைப்பாறு வாய். அப்பொழுது அம்மலை மீது மலர்ந்த புஷ்பங்களைப் பார்த்தால் உன் வரவால் அவனுக்குப் புளகாங்கிதம் ஆனதுபோல் தோன்றும். அகுன்றுகளில் அனேக குகைகள் உண்டு. செல்வமும் செழிப்பும் மிகுந்த இந் நகரத்தின் கொழுத்த வாலிபர்கள் இரகசியமாக வேசியர்களுடன் அனுபவித்த அடாத போகங்களை இக் குகைகளிலிருந்து கமழும் பரிமள கந்தங்கள் கோள் சொல்லுகின்றன.

**27. பதவுரை :—**

இளைப்பாறியவுடன் வன நதிக் கரைகளில் இருக்கும் உத்தியான வனங்களில் மலர் மொட்டுக்கு நீர் வார்த்து, வெய்யிலில் பூக்கொய்யும்பொழுது கழுத்தில் படரும் வியர்வையைத் துடைப்பதால் கசங்கிய கருநெய்தல் மல ரைக் காதில் வைத்திருக்கும் மலர் மங்கையர்களின் முகங்களுடன் உன் நிழலால் ஓர் நிமிஷம் பரிச்சயம் செய்து விட்டு மீண்டும் வழிச் செல்வாய்.

**சித்திர விளக்கம் :—**

அம்மலையைச் சுற்றிலும் இயற்கை வனங்கள் உள. அவைகளுக்கு நடுவில் நதிக் கரைகளில் செயற்கைப் பூங்காவனங்களும் உண்டு. உன் களைப்புத் தீர்ந்தவுடன் புறப்பட்டுச் சென்று இச்சோலைகளில் வாடி இருக்கும்

மலர் மொட்டுகளுக்கு அரு நீர் தெளிக்கவேண்டும். அங்கே அழகிய மங்கையர் மலர் கொய்துகொண்டிருப் பார்கள். வெப்பத்தால் அவர் முகங்களிலிருந்து வியர்வை வழிந்து கழுத்தில் விழ அடிக்கடி அதைத் துடைப்பதால் காதில் உள்ள கருநெய்தல் பூக்கள் கசங்கி இருக்கும். அவர்களுக்கு ஒரு நிமிஷம் ஆறுதலளித்து உன் நிழலால் அவர்கள் முகங்களை முத்தமிட்டு அங்கேயே மயங்கி நின்று விடாமல் போகக் கடவாய்.

**28. பதவுரை :—**

வடக்கு திக்கை நோக்கிச் செல்லும் உனக்கு, வளைந்து போக வேண்டியிருப்பினும், உஜ்ஜயினியின் உப்பரிகை களைப் பார்க்காமல் போகலாகாது. அந்நகர மங்கைய ரின் ஒளி வீசும் கண்கள் உன் மின்னல் கொடிக்கு அஞ்சி விழிக்கும் காட்சியைக் காணாயாகில் உன் வாழ்க்கை வீணாகுமன்றோ.

**சித்திர விளக்கம் :**

அளகாபுரிக்கு நேர் வடக்கே போகவேண்டும. ஆயி னும் அப்படிச் சென்றால் உன் வாழ்க்கை ஓர் முக்கிய பலனை இழக்க நேரிடும். உஜ்ஜயினி நகரத்தின் மாளிகை கள், வானளாவி நிற்கின்றன. அவற்றின் மேல் உன் மின்னலுக்கு சமானமான மங்கையர் ரமித்துக்கொண் டிருக்கின்றனர். நீ அங்கே போய் மின்னல் வீசினால் அதனைக் கண்டு அஞ்சி அவர்களுடைய நயனங்கள் எதிரொளி வீசும். அக்காட்சியை நீ இழக்காமல் வளைந்து மேற்கே போய் இன்புற்றுப் போகவேண்டும்.

**29. பதவுரை :—**

அலையின் ஓசையுடன் நீர்ப் பறவைகளின் வரிசை களாகிற ஒட்டியாணம் பூண்டு, ஆங்காங்கே அடி தவறி அழகுடன் ஊர்ந்துகொண்டு, சுழல் நாபி வெளியில் தெரியும்படி போகின்ற நிர் விந்தியா நதியை வழி யில் அடைந்து அவளது ரஸத்தை அனுபவிப்பாய்.

பெரும்பாலும் மங்கையர்களின் உல்லாச சேஷ்டைகளே தங்கள் காதலரிடம் கூறும் காதல் மொழிகளாகும்.

**சித்திர விளக்கம் :—**

உஜ்ஜயினிக்கு வளைந்துபோவதற்கு மற்றுமோர் முக்கிய காரணமுண்டு. வழியில் உன்னைக் காதலிக்கும் நிர்விந்தியா நதி ஓடுகிறாள். உன்னைக் கண்டதும் அவள் போக்கு விசித்திரமாக இருக்கும். ஒரு கரையிலிருந்து மற்றக்கரைவரையில் வரிசையாக வீற்றிருக்கும் அன்னங்கள், ஒலிக்கும் அலைகள் மீதிருந்து, சலங்கையுடன் சேர்நத ஒட்டியாணம்போல் விளங்கும். லஜ்ஜையினால் பாறைகளில் மோதிக்கொண்டு தட்டுத் தடுமாறி ஊர்ந்து செல்வாள். வழியில் வஸ்திரம் கலைந்து சுழல் நாபி தென்படும். நாணமுள்ள மங்கைகள் தம் காதலை வசனங்களால் கூறுவதில்லை. காம சேஷ்டைகளால் தெரிவிக்கின்றனர். நிர்விந்தியையின் இக் காரியங்களைக் கண்டு நீயும் அதர பானம் செய்து இன்பரஸம் அனுபவிப்பாய்.

**30. பதவுரை :—**

பின்னுத கூந்தல்போன்ற வற்றிய நீரோட்டமும், கரையில் வளரும் மரங்களிலிருந்து வீழ்நதிருக்கும் சருகுகளின் பாண்டு வர்ணமும் இது காறும் உன்னைப் பிரிந்த பிரிவாற்றாமைத் துயரத்தையும் உன் அதிர்ஷ்டத்தையும் தெரிவிக்கும் அவளுடைய மெலிந்த நிலைமை மாறும் வகையைத் தேடுவாய்.

**சித்திர விளக்கம் :—**

உன்னை வெகு நாட்களாக எதிர்பார்த்திருக்கும நிர்விநதிய நதியின், விரகாவஸ்தையைக் கண்டு அகம் மகிழ்வாய். மிகவும் குறைந்து மத்தியில் ஓடும் ஜலம் பிரிவாற்றாமையால் பின்னி அலங்கரிக்காமல் பின் தொங்கும் கூந்தலைப் போலிருக்கும். ஆற்றங்கரையில் மரங்களிலிருந்து வீழ்ந்து கிடக்கும் உலர்ந்த சருகுகள்

அவளுடைய உடல் வெளுத்திருப்பதைக் குறிக்கும். அவளுடைய துக்கம் தீர அமிர்த மாரி பொழிந்து ஆனந்த வெள்ளம் கரை புரண்டோடுமாறு செய்து மேலே செல்வாய்.

**31. பதவுரை :—**

கிராமந்தோறும் உதயணன் கதையைக் கூறவல்ல கிழவர்கள் நிரம்பியிருக்கும் அவந்தி நாட்டை அடைந்து, பெரிய புண்ணியம் சேர்த்து விண்ணுலகம் சென்றோர் தம் சுகிருதம் குன்ற, மீதியுள்ள புண்ணியத்தால் சுவர்க்கத்தின் ஒரு பாகத்தையே கீழ் கொண்டுவந்தது போல், பரந்த செல்வமும் அகன்ற வீதிகளும் பொருந்திய அத்திரு நகரை நோக்கி விரைவாய்.

**சித்திர விளக்கம் :—**

இப்பொழுது நீ அவந்தி நாட்டைப் புகுவாய். அங்கு கிராமங்கள் தோறும் புகழ் பெற்ற உதயண மகாராஜனின் சரித்திரத்தைக் கிழவர்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவனுடைய பிரதான நகரம் உஜ்ஜயினி. தூரத்திலிருந்து காணும்பொழுது அது அமராவதியின் அம்சமாகத் தோன்றும். இவ்வுலகில் பெரிய தர்மம் செய்து விண்ணுலகு சென்றோர் தம் புண்ணியம் பாதி குறைந்திருக்கும்போது மீதியைக் கொண்டு மகேந்திரபுரியின் ஒரு பாகத்தையே இப்புவிக்குக் கொண்டு வந்து விட்டனரோ என்று நீ சந்தேகிப்பாய்.

**32. பதவுரை :—**

எங்கே விடியற்காலையில் சிப்ரா நதியிலிருந்து வீசும் மந்தமாருதம், கொக்குகளின் காமக் கூவல்களின் தொனியைத் தீர்க்கமாகச் செய்துகொண்டும், மலர்ந்த கமலங்களின் கூட்டால் நறுமணம் வீசிக்கொண்டும் வந்து, இன்பத்தால் சோர்ந்திருக்கும் அங்கனைகளின் அங்கங்களை அணைந்து பல பிரியமான பாஷை பேசும் பிரேமிபோல் சோர்வைப் போக்குகின்றதோ ;

**சித்திர விளக்கம் :—**

அந்த உஜ்ஜயினி சிப்ரா நதிக்கரையில் இருக்கிறது. அதன் ஜலத்தின் துளிகளுடன் அதிகாலையில் மந்த மாருதம் வீசும். காற்றுடன் கொக்குகளின் காமக் கூவல்களும் சேர்ந்து வரும். தாமரையின் வாசனையும் வீசும். அந்நகரின் உப்பரிகைகளில் நேடுநேரம் விழித்துக் களைத்துப் படுத்திருக்கும் குலமாதர்களின் சோர்வை இனிமையான சீதலமும் சப்தமும் சுரபியும் சேர்ந்த இம்மாருதம் மெதுவாகவும் பிரியமாகவும் தீர்த்து அவர்களைக் காலைக்கருமங்களுக்கு எழுப்பி உற்சாகம் அளிக்கும்.

**33. பதவுரை :—**

எதன் கடைத்தெருக்களில் மின்னும் இரத்தினங்கள் பதிந்த முத்துமாலைகளையும், சங்கங்களையும், சிப்பிகளையும் இளம்புல் பசுமை ஒளி வீசும் மரகத மணிகளையும், கோடிக் கணக்கில் கண்டோருக்கு, இரத்னகரங்களான சாகரங்கள் வெறும் ஜலசமுத்திரங்கள் ஆய்விட்டன வென்று தோன்றுமோ ;

**சித்திர விளக்கம் :—**

அந்நகரத்தின் கடைத்தெருக்களில் போகும்பொழுது உன் மின்னல்கூட நாணும்படி பிரகாசமாக இருக்கும். நடுவில் இரத்தினங்கள் பதித்த நல்முத்துமாலைகளும் நிலவைப்போன்ற சங்கங்களும் பெரிய பெரிய சோழிகளும் இளம்புல்லைவிடப் பசுமையாக இருக்கின்ற மரகத மணிகளும் ஜாதிப் பவழங்களும் குவிந்திருக்கும். அவைகளைப் பார்த்து 'நான் தண்ணீர் குடித்த சாகரத்தை ரத்னகரம் என்று எண்ணினேன். அதன் இரத்தினங்களெல்லாம் இவ்வூருக்கு வந்துவிட்டனவோ. அது வெறும் ஜல சமுத்திரமாய் விட்டதோ' வென்று சந்தேகம் கொள்ளுவாய்.

**34. பதவுரை :—**

எங்கே சரித்திரம் அறிந்தோர் வெளியூர் விருந்தாளிகளுக்கு, 'பிரத்தியோதன் பெண்ணை இங்கு வத்ஸராஜன்

*மணந்தான் ; அந்த அரசனுடைய தங்கமயமான பனங் காடுகள் இங்கே இருந்தன ; இங்குதான் பட்டயானை நீல கிரி மதம் பிடித்துத் தூணை உடைத்தது,' என்று கதை கள் கூறிக் களிக்கச் செய்கிறார்களோ;*

**சித்திர விளக்கம் :—**

இவ் விசாலபுரிக்குப் புதிதாக வந்தவர்களுக்கு வத்ஸ ராஜன் சரித்திரத்தைச் சொல்லாமல் விடமாட்டார்கள். இந்தவிடத்தில் உதயணன் பிரத்தியோதன் என்னும் சேனாபதியின் பிரிய புத்திரியான வாஸவதத்தையைத் தூக்கிச் சென்றான் ; அவ்விடம் வத்ஸராஜனுடைய தங்கப் பனைமரத்தோட்டம் இருந்தது ; இந்த இடத்தில் தான் இந்திரனால் கொடுக்கப்பட்ட நீலகிரியென்னும் உத்தம கஜம் மதம் பிடித்து கட்டியிருக்கும் தூணை உடைத்துக்கொண்டு ஊராரை நடுங்கச்செய்தது என்று கேட்பவர்கள் ரஸிக்கக் கதை கூறுவார்கள்.

**35. பதவுரை :—**

எங்கே தினகரனது வாகனங்களோடு போட்டி போட்டுப் பச்சிலையிலும் பசுமையாகக் குதிரைகள் காந்தி வீசுகின் றனவோ; மலையைப்போன்ற மதகரிகள் மேகம்போல் மதநீர் சொரிகின்றனவோ; போரில் பத்துதலை இராவ ணனை எதிர்த்து நின்று சந்திரஹாஸமென்ற அவன் வாளின் காயக்குறிகள் தாம் பூண்ட ஆபரணங்களைத் தூக்கி அடிக்கும் யுத்த வீரர்கள் குழுமி இருக்கின் றனரோ ;

**சித்திர விளக்கம் :—**

அந்த உஜ்ஜயினியில் எங்கும் காணக்கூடாத பச்சைக் குதிரைகளைக் காணலாம். அவற்றின் பசுமையைக் கண்டு பச்சிலையும் பொறாமை கொள்ளும்; சூரியன் பரிதி களும் பரிதபிக்கும். அங்கிருக்கும் ஒவ்வோர் யானையும் குன்றைப்போல் உடல் பெற்று ஓயாமல் மழையைப்போல் மத நீர் பெருகி நிற்கும். அங்கிருக்கும் போர் வீரர்களின் வீரக்குறிகளை அவர்கள் தேகத்திலேயே காணலாம்.

இராவணனோடு யுத்தம் செய்து அவனுடைய சந்திர ஹாஸம் என்னும் வாளால் உடம்பெல்லாம் காயமாகி, இக்காயங்களின் தழும்புகள் இவர்கள் பூண்ட ஆபரணங் களுக்குமேல் பிரகாசிக்கும்.

**36. பதவுரை :—**

கூந்தல் பரிமளிப்பதற்காகப் போடப்பட்ட புகைகளால் பெருகிய உடலோடு, பந்து என்ற பிரீதியுடன ஆடும் வீட்டு மயில்களின் நர்த்தன உபசாரங்களைப் பெற்று, மலர் மணம் வீசிக்கொண்டும், உல்லாச மங்கையர் தம் வர்ணம் தீட்டிய காலடி பதிந்துமுள்ள மேல் மெத்தை களிலிருந்து அந்நகரின் அழகைக் கண்டு வழியின் களைப்பைத் தீர்ப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

உஜ்ஜயினி நகர் சேர்ந்ததும் வெகுதூரம வந்த சிரம மெல்லாம் தீர்ந்துவிடும். நீ உட்காருவதற்கு சௌகரிய மான உப்பரிகைகள் வானளாவி நிற்கும். மேல் மெத்தைகள் புதிய பூமணம் கமழ்வதோடு உன்னைப் பார்ப்பதற்கு வந்த மங்கையர்களின் செம்பஞ்சுக் குழம்பு பூசிய கால்களின் அடிகள் பதிந்து ரம்மியமாக விருக்கும். உன்னை வரவேற்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கன்னிகைகள் கூந்தல் வாசனைக்காகப் போடும் தூபங்கள் உன்னிடம் வந்து சேர்ந்து உன்னைப்பெரியவனாக்கிவிடும். வீடு தோறும் வளரும் மயில்கள் பிரிய பந்து வந்திருப் பதை அறிந்து மதம் பிடித்தவைகள்போல நர்த்தனம் செய்யும். இவ்வுபசாரங்களை ஏற்று சாவகாசமாக அப்பட் டணத்தின் பெருமைகளைப் பார்த்துக்கொண்டு இளைப் பாறக் கடவாய்.

**37. பதவுரை :—**

கந்தவதி நதியில் குதூகலமாக ஜலக்கிரீடைசெய்யும் கன்னியர்களின் ஸ்நாநத் திரவியங்களின் வாசனை யோடு, ஆம்பல்களின் மகரந்தத்தையும் அடித்துவரும்

காற்றுல் அசையும் பூங்காவனத்தில், தம் நாதரின் கண்டத்தின் வர்ணத்தை ஒத்தவன் என்று கண்டு கணங்கள் ஆதரிக்க, மூவுலகுக்கும் முதலோன் பார்வதி பதி அமரும் புண்ணிய க்ஷேத்திரத்தை அடைவாய்.

**சித்திர விளக்கம் :—**

உஜ்ஜயினியில் உலகச் சுகங்களை அனுபவிப்பதோடு கொஞ்சம் புண்ணியமும் சம்பாதிப்பதற்கு வழிதேட வேண்டும். கந்தவதிக்கரையில், இரம்மியமான உத்தி யான வனத்தின் நடுவில் சிவாலயம் இருக்கின்றது. கோவிலுக்கு வரும் கன்னிகைகள் குளிப்பதால் அவர் களின் வாசனைத் திரவியங்கள் கலந்து அவ்வாற்றுநீர் நறுமணம் கமழும். அவ்வாசனையுடன் கரு நெய்தல் பூக்களின் மகரந்தத்தையும் கொண்டு ஜில்லென்று மந்தமாருதம் வீசும். நீ அக்கோயிலை அடையவேண்டும்.

**38. பதவுரை :—**

அப்பொழுது நீலகண்டனுடைய கழுத்தைப்போன்ற உன் வர்ணத்தைப் பார்த்து சிவகணங்கள் ஆதரவுடன் வரவேற்பார்கள். இந்த மகா கால க்ஷேத்திரத்தை எந்த நேரத்தில் சேர்ந்தபோதிலும், கொண்டலே, சூரியாஸ்தமனம் வரையில் காத்திருக்க வேண்டும். சூலாயுதமேந்திய சிவபெருமானின் சந்திய காலப் பறைத் தொண்டுபுரிந்து உன் மத்தகர்ஜனையின் முழு பலத்தையும் பெறுவாய்.

**சித்திர விளக்கம் :—**

இந்த மகா கால க்ஷேத்திரம் மிகவும் புண்ணிய மானது. அதை அடைந்து வெறும் தரிசனத்துடன் போய் விடக்கூடாது. கொஞ்சம் கைங்கரியமும் செய்து செல்லவேண்டும். எந்நேரத்தில் அங்கு சேர்ந்தாலும் சூரியாஸ்தமனம் வரையில் தங்கியிரு. சூலம் தாங்கிய சிவபெருமான் சன்னதியில் சாயங்கால பூஜை வேளையில் பறைக்குப் பதிலாக மெதுவாக கர்ஜிப்பாயாக. இப்படிச் செய்தால் உன் இடியின் அபூர்வ பலத்தை அடைவாய்.

**39. பதவுரை :—**

மேகலைகள் ஒலிக்க அடிகள் வைத்து, மணிகள் பொதிந்த பிடிகள் கொண்ட சாமரங்களை உல்லாசமாக வீசிக் களைத்த கைகளை உடைய தேவதாசிகள், நோகும் விரல் நகங்களுக்கு சுகமளிக்கும் உன் மழைத் துளிகளைப் பெற்று, வண்டினங்கள் மொய்க்கும் நீண்ட கடைக் கண்களை உன் பேரில் வீசுவார்கள்.

**சித்திர விளக்கம் :—**

இத்தொண்டினால் மறுமையில் மோக்ஷமளிக்கும் புண்ணியம் மட்டுமல்ல, இம்மை இன்பமும் கிட்டும். ஒட்டியாணங்கள் ஒலிக்க, நாட்டியத்துடன் சிவபெருமானுக்குச் சாமரம் வீசும் தேவதாசிகளின் கைகள் களைத்திருக்கும். விசேஷமாக அவர்களுடைய விரல் நகங்கள் மிகவும் நோகும். சரியான சமயத்தில் உன் குளிர்ந்த மழைத்துளிகள் பட்டதும் துன்பம் தீர்ந்து இன்பமுற்று நன்றியுடன் வண்டு வரிசை போல் கரிய புருவத்துடன் கூடிய கடைக் கண்களால் உன்னைக் கடாக்ஷிப்பார்கள்.

**40. பதவுரை :—**

பின்னர் ஈசன் கரங்களைப் போன்ற மரங்களின் மீது மண்டலமிட்டு, சாயங்கால ஜோதியால் ஜய புஷ்பங்களைப் போல் சிவப்பு வர்ணம் பெற்று, மன அமைதி அடைந்து, உன் பக்தியைப் பார்த்துப் பரவசமடைந்த பார்வதியால் கண் கொட்டாமல் காணப்பட்டு, நர்த்தனாரம்பத்தில் பரமசிவனின் ஈரமுள்ள யானைத் தோல் போர்வையின் ஆசையைத் தீர்ப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

மாலைப் பூஜைப் பறைத் தொண்டு முடிந்த பிறகு மற்றோர் சேவையும் செய்ய வேண்டும். நர்த்தன காலம் வந்ததும், கஜாசுரனைக் கொன்று ரத்த மொழுகும் அவன் தோலைப் போர்த்துக் கொண்ட காட்சி அளிக்க நீலகண்டர் விரும்புவார். சாயந்திர சூரியனின் சிவப்பு

வர்ணம் பூண்ட நீ, சிவபெருமான் கைகள் போன்ற உத்தியான வனங்களின் மீது மண்டலமிட்டுப் பொருந்தியிருப்பின் அவன் விருப்பம் பூர்ணமாகும். அச்சமயம் பழைய சம்பவத்தை நினைத்து, உன் பக்தியையும் பார்த்து மகிழ்ந்து உன்னைக் கண் கொட்டாமல் காணும் உமையின் பார்வைக்குப் பாத்திரமாவாய்.

**41. பதவுரை :—**

இரவில் மாதர் தம் காதலர் வீடு செல்லுங்கால், ஊசி முனை நுழையாத இருள் சூழ்ந்த ராஜ வீதியில் வழி தெரியாமல் பரிதவிக்க, உரைக்கல் தீட்டிய தங்கம் போல் ஜொலிக்கும் உன் மின்னலால் பாதையைப் பிரகாசிக்கச் செய்வாய். ஏற்கனவே கலங்கி இருக்குமிவர்களை இடி இடித்து மழை பெய்து பயமுறுத்தாதே.

**சித்திர விளக்கம் :—**

உன்னைப் பார்த்துக் காமம் அதிகரித்து விரக வேதனை பொறுக்காமல், காதலிகள் தம் காதலர்களின் வீடு நோக்கி நடு நிசியில் செல்வர். அப்பொழுது சிவபூஜை செய்து திரும்பிய நீ கோபித்துச் சந்திரனை மறைத்ததும் கன இருள் சூழ்ந்து வழி தெரியாமல் வருந்துவார்கள். மனங்கலங்கும் அம்மாதர்களை மென் மேலும் மழை பெய்தும் இடி இடித்தும் துன்புறுத்தாதே. இருட்டால் பயமுறுத்தியது போதும். உரை கல்லில் தேய்த்த தங்கம் போல் பளிச்சென்று மின்னி மனமிரங்கித் துணைபுரியக் கடவாய்.

**42. பதவுரை :—**

புறாக்கள் உறங்கும் ஓர் வீட்டு மெத்தையில், மின்னி மின்னிக் களைத்திருக்கும் உன் மின்னல் மனைவியுடன் அவ்விரவைக் கழித்து, சூரியன் உதயமானதும் மீதி வழிசெல்ல விரைவாய்; தோழர் தொண்டாற்றத் தலைப் பட்டோர் வீண் காலத் தாமதம் செய்யத் தகுமோ ?

**சித்திர விளக்கம் :—**

அதிகத் தொண்டாற்றி விட்டதால் அன்று நீ மிகவும் களைத்திருப்பாய். உன்னைக் காட்டிலும் உன் மின்னல் கொடியும் ஓயாமல் ஒளிவீசிச் சிரமப்பட்டிருப்பாள். இருவரும் ஓர் உயர்ந்த மெத்தை மீது இரவில் தங்க வேண்டும். உன் இடியைக் கேட்ட புறாக்கள் தம் கூண்டுகளில் புகுந்து உறங்கிக் கிடப்பதால் நிசப்தமாகவிருக்கும் அயர்ந்து நித்திரை செய்யலாம். அதிகமாகத் தூங்கி விடாதே. சூரியன் உதயமானவுடன் புறப்பட்டு விரைந்து செல்ல வேண்டும். மித்திரர்களுக்கு சேவை செய்யும் பொழுது மயங்கிப் படுத்திருப்பது தர்மமாகாது.

**43. பதவுரை :—**

அந்நேரத்தில் கோபித்திருக்கும் காதலிகளின் கண்ணீரைக் காதலர்கள் நீக்கி ஆறுதல் அளிக்க வேண்டுமாதலால், வெய்ய கதிரோன் வழியை விடுத்து விரைவில் விலகுவாய்; கமலத்தின் வதனத்தில் வழியும் காலைப் பனியைப் போக்கத் திரும்பிவந்திருக்கும் அவன் கையைத் தடுத்தால் உன் மீது மிகவும் சினம் கொள்ளுவான்.

**சித்திர விளக்கம் :—**

இரவில் பதிகள் பிரிந்திருந்தால் பத்தினிகள் கோபித்திருப்பார்கள் அன்றோ? அதுவும் மழைக் காலப் பிரிவை மிகவும பொறுக்க மாட்டாரகள அன்றோ ? சூரியன் தன் காதலியான கமலத்தோடு பகல் முழுதும் இருந்து இரவில் தனியே விட்டுப் போவதால் அவள கோபித்துக் காலையில் அவனைக் கண்டதும் பனியாகிய கண்ணீர் வடிப்பாள். அவனும் அதைப் பார்த்து வருந்தி தன் கிரணக் கைகளால் துடைத்து மலர் முகத்தை மலரச் செய்ய ஆசைப் படுவான். அச்சமயத்தில் நீ குறுக்கிட்டு மறைத்தால் கமலத்தின் சாபத்தோடு சூரியன் தாபத்தையும் சகிக்க வேண்டி வரும். ஆதலால் அவன் வழியை விட்டு விரைவில் விலகிவிடு.

**44. பதவுரை :—**

மாசற்ற மனம் போல் தெளிந்த கம்பீரா நதியின் நீரில் அழகிய நிழல் உடலால் உட்புகுதல் உனக்கு கிட்டும்; ஆதலின் துள்ளி விளையாடும் மீன்களோடு கூடிய அவளது வெள்ளித் தாமரைக் கண்களின் பிரேமைப் பார்வையை அகங்காரத்தால் அலக்ஷியம் செய்யக் கூடாது.

**சித்திர விளக்கம் :—**

பல நதிகளைக் கடந்து விட்டதால், ஒருவேளை அலுத்துப் போய் கம்பீரா நதியை அலக்ஷியம் செய்ய நீ எண்ணலாம். அது முற்றிலும் தவறு. அவள் நீரின் நிர்மலத்தை முனிகள் மனத்தில் தவிர வேறெங்கும் காண முடியாது. அவளும் உன்னை எதிர் பார்த்திருப்பதால் அவளுடைய வெள்ளைத் தாமரைக் கண்கள், துள்ளி விளையாடும் மீன்களின் சோதியால் பிரகாசிக்கின்றன. இந்த லாவண்யத்தை வீண் வைராக்யத்தால் இழந்து விடாமல் உன் நிழலால் அவளுக்குள் புகுந்து உங்கள் இருவரின் அன்னியோன்யத்தை நேரில் அனுபவித்துப் பரவசமாவாய்.

**45. பதவுரை :—**

உன் மழையால் நனைந்த மண்ணின் மணத்தால் மனோகரமாகவும், துதிக்கையின் துவாரங்களில் இனிய தொனியுடன் மத்த கஜங்களால் குடிக்கப்பட்டும், காட்டு அத்திகளின் காய்களைப் பழுக்கச் செய்து கொண்டும், வரும் மாருதம் தேவகிரிக்குப் போக விரும்பும் உன்னை மெதுவாக அடித்துக் கொண்டு போகும்.

**சித்திர விளக்கம் :—**

நீ கம்பீரா நதியைப் பிரிந்து போக விருப்பமில்லாமலிருந்தாலும், உன் நண்பனான மலயமாருதம் கைலாஸ யாத்திரையை ஞாபகப் படுத்தி மெதுவாக அழைத்துச் செல்வான். நீ வர்ஷித்த பிரதேசங்களின் வழியாக வருவதால் புது மழையால் உண்டாகும் மண்

மணத்தைத் தாங்கி வருவான். துதிக்கைகளால் காட்டு யானைகள் இவ்வாசனையை இன்பமுடன் நுகரும் பொழுது துதிக்கைகளிலிருந்து வெளிவரும் இனிய சப்தத்தையும் வகித்து வருவான். அவனுடைய சேர்க்கையால் குபீரென்று பழுக்கும் அத்திமரச் சோலைகளின் காட்சியையும் கொண்டுவருவான். இவைகளால் உன்னை திருப்தி செய்து மேலே செல்லும்படி தூண்டுவான்.

**46. பதவுரை :—**

அங்கு நியதமாக வசித்து வரும் கந்தனுக்கு நீ மலர் மயமாக மாறி ஆகாச கங்கையின் குளிர்ந்த ஜலத் துளிகளோடு கூடிய புஷ்பங்களால் வர்ஷித்துத் திருமஞ்சனம் செய்யக் கடவாய்; பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானால் இந்திரசேனைகளை ரக்ஷிப்பதற்காக அக்னி முகத்தில்விடப்பட்ட சூரியனைக் காட்டிலும் பிரகாசமான சோதியன்றோ இது ?

**சித்திர விளக்கம் :—**

வழியில் முருகக் கடவுளின் க்ஷேத்திரத்தை அடைந்து அவரை விசேஷ பக்தியுடன் பூஜிக்கக் கடவாய். அதற்காக புஷ்ப மேகமாக மாறி ஆகாச கங்கையில் குளித்து விட்டு தூய மலர் மாரி பெய்து திருமஞ்சனம் செய்ய வேண்டும். இந்த சுப்ரமணியன் சோதியை விவரிக்க முடியாது. பிறக்கும் பொழுதே சூரியனுக்கு மேல் பிரகாசித்தான். மற்றவர் தாங்க முடியாதென்று கண்டு, அக்னியைப் பிரார்த்தித்து, அவனிடம் வைத்து ரக்ஷிக்கப் பட்ட, பிறை சூடும் பரமசிவனின் சக்தி அன்றோ இவர் ?

**47. பதவுரை :—**

கரு நெய்தல் மலர் அணியும் காதில், புத்திர வாஞ்சையால் பவானி, நழுவி விழுந்த எம்மயிலின் சித்திர வர்ணச் சிறகைச் சூடுகின்றனளோ, சிவன் சிரத்தில் உள்ள சந்திரனால் எதன் கண்கள் வெண்மையாகப் பிரகாசிக்கின்றனவோ, முருகக் கடவுளின் அம்மயிலை மலையின் எதிரொலிகளால் பெருகும் உன் கர்ஜனைகளால் நர்த்தனம் செய்விப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

தெய்வத்தைப் பக்தன் மூலமாக அடைய வேண்டுமென்ற விதியுள்ளதை அறிவாய். ஆதலால் முருகரின் மயில் வாகனத்தைத் திருப்தி செய்ய வேண்டும். அதனால், சுப்பிரமணியன் மட்டுமல்ல, பவானியும், பரமசிவனுங்கூடப் பிரீதி அடைவார்கள். தங்கள் புத்திரன் மீதுள்ள பிரியத்தால் இம்மயிலிடம் அவர்கள் அதிக அன்பு கொண்டிருக்கின்றனர். கரு நெய்தல் மலரைத் தள்ளிவிட்டு தரையில் விழுந்திருக்கும் அம்மயிலின் அழகிய தோகையைப் பார்வதி தன் காதில் வைத்துக் கொண்டிருக்கிருள் பார்! சிவபெருமானும் தன் சடையை ஆட்டி சந்திரனொளியால் அதன் கடைக் கண்களை வெண்மையாகச் செய்கின்றதைப் பார்.

**48. பதவுரை :—**

சரவணபவனைத் தொழுது விட்டு சிறிதுதூரம் சென்று, வீணை தாங்கிய சித்த தம்பதிகள் உன் ஜலத் துளிகளுக்கு அஞ்சி வழியை விட்டு விலக, ரந்தி தேவனுடைய கீர்த்தி பூமியில் படர்ந்தது போன்ற, காமதேனுவின் சந்ததியின் இரத்தப் பிரவாகத்தாலுண்டான நதியைக் கௌரவிப்பாயாக.

**சித்திர விளக்கம் :—**

சுப்பிரமணியரைப் பூஜித்து உன் வழி செல்லவேண்டும். அங்கு சித்தர்கள் ஜோடி ஜோடியாக வீணை வாசித்துக் கொண்டிருப்பார்கள். உன் ஜலத் துளிகளால் தங்கள் வீணைகளின் தந்திகள் நனைந்து விடுமென்று பயந்து அவசர அவசரமாக உன் வழியை விட்டு விலகுவார்கள். சிறிது தூரம் சென்றதும் சர்மணவதி என்ற நதி தோன்றும். அது உன்னால் நமஸ்கரிக்கத் தகுந்தது. தசபுர மகாராஜன் ரந்தி தேவன் செய்த மகா யக்ஞத்தில் கொல்லப்பட்ட காமதேனுவின் சந்ததியார்களின்

இரத்தமும் தோல்களும் அவன் கீர்த்திப் பிரவாகம் போல் இந்நதியாக இன்னும் ஓடுகின்றன. அதற்கு நீ மரியாதை செய்ய வேண்டும்.

**49. பதவுரை :—**

கண்ணனின் வண்ணத்தைத் திருடிய கொண்டலே! அவ்வாறு அகன்றிருப்பினும், வெகு தூரத்திலிருந்து வானசாரிகள் கீழ் நோக்கிப் பார்க்குங்கால், ஜலத்தைப் பருகுவதற்கு நீ பூமி மீது வளைந்து தொங்கும் பொழுது அவள் மார்பில் அணிந்த பெரிய முத்து மாலையின் நடுவில் இந்திர நீலக்கல் இழைத்தது போல் காண்பார்கள்.

**சித்திர விளக்கம் :—**

நீ அந்த சர்மணவதியின் ஜலத்தைக் குனிந்து குடிக்கும பொழுது வானசாரிகளுக்கு ரம்மியமான காட்சி கிடைக்கும். அவர்கள் உன் வழி விலகி தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது அந்நதி பூமாதேவியின் முத்து மாலை போல் தோன்றும். அதன் மத்தியில் உன் கரிய நீலமேனி இந்திர நீலக்கல் பதித்தது போலாகும். இந்த மனோகர காட்சியை மீண்டும் மீண்டும் பார்த்துக் குதூகலம் அடைவார்கள்.

**50. பதவுரை :—**

அவளைத் தாண்டி, வண்டினங் கூடிய மல்லிகை மலரின் மாட்சியைக் கவர்ந்து கருப்புப் புருவங்களின் காந்தியோடு மின்னல் வீசும் தசபுர மாதர் கடைக் கண்கள் மேல் நோக்கி குதூகலத்துடன் பார்க்கும் பார்வைகளுக்குப் பாத்திரனாகிப் போவாய்.

**சித்திர விளக்கம் :—**

அந்நதியைத் தாண்டி தசபுர நாட்டின் வழியாகச் செல்ல வேண்டும். அந்நாடு அழகிய மங்கையர் களுக்குப் பெயர் பெற்றது. ஒவ்வொருவரும் மல்லிகைக கொடி போலிருப்பார்கள். கருப்புப் புருவத்துடன்

அவர்கள் கண்கள் வண்டு மொய்க்கும் மல்லிகை மலர் களைப் போன்றிருக்கும். உன்னை அன்புடன் நோக்கும் பொழுது கருப்பும், வெளுப்பும், மற்ற வர்ணங்களும் கலந்த காந்திகளுடன் அவர்கள் பார்வைகள் ஒளி வீசும். நீயும் உன் மின்னலைத் தான் இவர்கள் கவர்ந்து விட்டனரோ வென்று ஆச்சரியமும் ஆனந்தமும் அடைவாய்.

**51. பதவுரை :—**

பிறகு, பிரம்மாவர்த்த தேசத்தை உன் நிழலால் நுழைந்து, க்ஷத்திரியர்களின் நாசத்தை இன்றும் குறிப்பிடும் குரு க்ஷேத்திரததை அடைவாய்; இங்கே தான் அன்று அர்ச்சுனன் காண்டீபத்தைக் கையில் பிடித்து, கமலக் காடுகளின் மீது நீ மழை பெய்வது போல, கோடிக் கணக்கான கூரிய பாணங்களால் எதிரி அரசர்களின் முகங்கள் மீது சரமாரி பெய்தானன்றோ.

**சித்திர விளக்கம் :—**

தசபுர நாட்டிற்கு அடுத்தாற் போல் பிரம்மாவர்த்த பிரதேசம் இருக்கின்றது. அங்குதான் குருக்ஷேத்திரமும் இருக்கிறது. பழங்காலத்தில் நடந்த பாரத யுத்தத்தை அன்று மடிந்த வீரர்களின் அஸ்திகளால் இன்றும் நினைவூட்டும். நீ தாமரை மலர்களின் மீது பொழிவது போல் அர்ச்சுனன் எதிர்க்கட்சி வீரர்களின் முக கமலங்களில் சரமாரி பெய்த இடமன்றோ வென்று அதனை அணுக விரும்புவாய், ஆனால் அப்படிச்செய்தால் ஏதாவது துரதிருஷ்டம் நேர்ந்துவிடும். உயரத்தி லிருந்து உன் நிழல் மட்டும் அப்பிரதேசத்தில் படுவதோடு திருப்தி அடைய வேண்டும்.

**52. பதவுரை :—**

பந்துக்களின் பிரீதியால் போரை விரும்பாமல் ரேவதியின் கண்களில் பிரதிபிம்பம் தோன்றும் மதுபானத்தையும் துறந்து, கலப்பை ஆயுதம் படைத்த பலராமர்

எவள் புனலைப் பருகின்றாரோ அந்த சரஸ்வதியின் ஜலத்தைக் குடித்து கருப்பு மேனியனாயினும் உள்ளம் வெளுப்பாயாக.

**சித்திர விளக்கம் :—**

குரு க்ஷேத்திரத்திற்கப்பால் புனித சரஸ்வதி நதி தென்படும். பாரத யுத்த காலத்தில் இரு தரத்தாரும் தன் பந்துக்களாக இருப்பதால் போரில் சேர விரும்பாமல் பலராமர் தன் நாட்டையும் பிரிய பத்தினி ரேவதியையும் துறந்து இந்த சரஸ்வதிக் கரையை அடைந்து அதன் ஜலத்தை அருந்தி அரண்மனையில் ரேவதியுடன், அவள் கண்களின் பிரதிபிம்பம் தோன்றும் மதுபானத்தைப் பருகும்பொழுது கிடைப்பதைக் காட்டிலும் அதிக ஆனந்தம் அடைந்தார். நீயும் அந்நீரை உட்கொண்டால் உன் உள்ளத்தில் உள்ள மாசு நீங்கி தூய்மை பெறுவாய். திருமாலைப் போலவே கரிய மேனியனும் சோதி உள்ளத்தனுமாவாய்.

**53. பதவுரை :—**

அங்கிருந்து கனகமலைப் பக்கமாக மலையரசன் மகளும் சகரபுத்திரர்களின் சுவர்க்க மார்க்கமும் ஜன்னுவின் கன்னியுமான கங்கையைச் சேருவாய்; நெறித்த புருவம் கூடிய பார்வதியின் முகத்தைப் பார்த்துப் பரிகசிப்பது போல நுரையால் சிரித்து, சந்திரனைத் தொடும் அலைக் கரங்களால் சிவன் சடையைப் பிடித்து இழுத்தவள் அன்றோ அவள்?

**சித்திர விளக்கம் :—**

சரஸ்வதிக்கப்பால் கனக மலையைக் கடந்து கங்கை கரையை அடைவாய். கங்கையின் மகிமையைக் கூறவும் வேண்டுமோ! மலையரசனின் இமயமலையின் மகள். கபிலர் சாபத்தால் சாம்பலான சகர குமாரர்களைச் சுவர்க்கத்திற் கழைத்துச் செல்ல பகீரதன் தவஞ் செய்து வானிலிருந்து பூமிக்கு அழைத்துவரப்பட்டவள்.

அப்படிவரும்பொழுது ஜன்னு மகரிஷியால் பருகப்பட்டு, பகீரதன் பிரார்த்தனையால் புனர் ஜன்மமும், ஜன்னுவின் பெண்ணென்று பெயரும் பெற்றவள். வானத்திலிருந்துவிழும் கங்கையை வகிக்க வல்லார் வேறெவரையும் காணுமல் பகீரதன் பரமசிவனை வேண்டவே அவர் சடையில் குதிக்கும் பொழுது வேகத்தால் கிளம்பிய நுரை, வேருெரு மங்கை நாயகன் தலைமேலேறியிருப்பதைக் கண்டு கோபத்துடன் புருவத்தை நெறித்த பார்வதியைப் பரிகசிப்பது போலிருந்தது. நல்ல வேளையாக அதிலிருந்துபெருகி பூமிக்கு வந்துவிட்டாள். இல்லாவிட்டால் சடையிலேயே பெருகி சந்திரனைத் தொட்ட அலைகள் ஒரு வேளை அவனை மூழ்கும்படி செய்திருப்பாள்.

**54. பதவுரை :—**

படிகத்தைப் போல் பரிசுத்தமான ஜலத்தை, தெய்வ யானை போல் பின்பக்கம் வானத்திலும் முன்பக்கம் கீழேத் தொங்கியும் நீ குடிக்க விரும்பினுல், அவளுடைய பிரவாகத்தில் உன் நிழல் ஊர்ந்து செல்லும் பொழுது மற்ருேர் பிரயாகையில் யமுனு சங்கமம் ஆவதுபோல் மனோகர காட்சி அளிப்பாள்.

**சித்திர விளக்கம் :—**

நிர்மலமான கங்கா ஜலத்தைப் பானம் செய்யாமல் மேலே போகமாட்டாய். உயரத்தில் உன் பின் பக்கம் இருக்க முன்பக்கம் கீழே தொங்கி நீ குடிக்கும்பொழுது, தேவலோகத்து யானை தாகசாந்தி செய்கின்றதோ வென்று சித்தர்கள் சந்தேகிப்பார்கள். உன் கறுப்பு நிழல் வெளுப்பான கங்காஜலத்தில் ஓர் பக்கம் ஊர்ந்து செல்லும் பொழுது, புதியதோர் பிரயாகை என் இங்கே சம்பவிக்கிறதோ வென்றும் ஆச்சரியப் படுவார்கள்.

**55. பதவுரை :—**

கஸ்தூரி மான்கள் உட்காருவதால் அவற்றின் நாபி கந்தங்களின் நறுமணம் வீசும் பாறைகளுடன் பனியால் வெளுத்திருக்கும், கங்கையின் உற்பத்தி ஸ்தானமான

பர்வதத்தை அடைந்து, அதன் முடியில் நீ களைப்பாறும் பொழுது முக்கண்ணன் வாகனன் கொம்பிலிருக்கும் சேற்றைப் போன்ற சோபையை வகிப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

கங்கைக் கரை வழியாகச் சென்று கங்கோத்ரி பர்வதத்தைச் சேருவாய். அங்கே பாறைகளில் கஸ்தூரிமான்கள் உட்காருவதால் கம்மென்று வாசனை வீசும். பனியால் அம்மலை நல்ல வெண்மையாக இருக்கும். கைலாசத்திற்கருகில் உள்ள அதன் உச்சியில் நீ உட்காரும்பொழுது, வெண்மை நிறமுள்ள நந்தி, பூமியைக் குத்தி விளையாடுகையில் கொம்பு நுனியில் ஒட்டிக் கொண்டிருக்கும் சேறுதானு வென்று பார்ப்போர் வியக்கும்படி காட்சி அளிப்பாய்.

**56. பதவுரை :—**

சால மரங்கள் உராய்வதால் தீப்பிடித்துக் காற்றால் வளர்ந்து கவரிமானகளின் வால்களை எரித்துக் கொண்டு படரும் காட்டுத்தீ அதைத் தொந்திரவு செய்தால், ஆயிரக் கணக்கான மாரி சரங்கள் பொழிந்து அதை முற்றிலும் அணைப்பது உன் கடமையாகும்; உத்தமர்களது சம்பத்துக்களின் உண்மையான பலன் ஆபத்திலிருப்போருக்கு அபய மளிப்பதன்றோ ?

**சித்திர விளக்கம் :—**

அம்மலையில் அடர்ந்த சால விருக்ஷங்களின் காடுகள் உண்டு. அம்மரங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் தீப்பிடிக்கும். அத் தீ காற்றால் வளர்ந்து காடு முழுதும் பரவும். தங்கள் வாலின் பாரத்தால் வேகமாக ஓட முடியாத கவரி மான்களின் மயிர்கள் பொசுங்கிப் போகும். இவ்வாறு கஷ்டப்படும் பொழுது நீ தக்க சமயத்தில் தோன்றி ஓயாமல் மழை பெய்து அவைகளின் கஷ்டத்தைத் தீர்ப்பாய். அது தான் உத்தமர் கடமை

பிறர் கஷ்டங்களைப் போக்குவதற்கே தமக்கு சம்பத்து தெய்வத்தால் அளிக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணிப் பரோபகாரம் செய்ய சந்தர்ப்பங்களை எதிர்பார்த்திருப் பார்கள். நீ உத்தமன் என்று உரைக்கவும் வேண்டுமா ?

**57. பதவுரை :—**

யாளிகள் தங்கள் வழியைவிட்டு உடல் நோகும்படித் துள்ளிக் குதித்து, உன்னை எதிர்த்து வருமாயின் கடுமை யான கல்மழை பெய்து அவைகளை வீழ்த்துவாய் ; பலிக்கக் கூடாத காரியங்களில் பிரவேசிப்போர் மான பங்கம் அடையாமலிருக்க முடியுமா ?

**சித்திர விளக்கம் :—**

கங்கோத்திரி மலையின் குகைகளில் வசிக்கும் யாளிகள் உன்னைக் கண்டு கோபித்துத் தங்களால் எட்டியவரை யில் துள்ளிக் குதிக்கும். அதனுல் அவற்றின் உடல் காயப்படுவதைத் தவிர உனக்கு யாதொரு விபத்தும் சம்பவிக்காத போதிலும், கொடிய கல் மழை பெய்து அந்த துஷ்டத்தனத்தைத் தண்டிக்க வேண்டும். தன் சக்திக்கு மீறிய காரியத்தைச் செய்யப் புகும் எவனுக்கும் இம்மாதிரி அனர்த்தம் உண்டாகுமென்று யாளிகளின் நிலையைப் பார்த்தவர் அறிந்து கொள்ளுவார்கள்.

**58. பதவுரை :—**

அங்கே கற்கள் மேல் காணப்படும் சித்தர்களால் எக்காலமும் பலியுடன் பூஜிக்கப்பட்டு வரும் பிறை சூடியின் பாதங்களை வணங்கி பக்தியுடன் பிரதக்ஷிணம் செய் வாய் ; அப்பாதங்களை தரிசித்த பக்தர்கள் பாபங்கள் ஒழிந்து புனிதர்களாகி தேக வியோகமானதும் சிவகணங்களுக்குள் நித்திய நிலை பெறுகிறுர்கள்.

**சித்திர விளக்கம் :—**

அங்கே ஓரிடத்தில் கல்லின்மேல் பரமசிவன் பாதம் தெரியும். அதை அனவரதமும் சித்தர்கள் நைவேத்தி யங்களுடன் பூஜை செய்து கொண்டிருப்பார்கள். மனித

உலகில் பிறந்த எவனும் பக்தியுடன் யாத்திரை செய்து அப்பாதத்தைத் தரிசித்து விட்டால் அவன் கைலாச பதவி அடைந்து சிவகணங்களில் சேருவது நிச்சயம். அப் புனித பாதத்தை நீயும் வணங்கி வலம் வரக் கடவாய்.

**59. பதவுரை :—**

காற்றால் நிரம்பி மூங்கில்கள் மதுரமாக ஒலிக்கும் ; கின்னரர்கள் கூட்டமாகத் திரிபுர விஜயத்தைப் பற்றிய பாடல்களைப் பாடுவார்கள் ; மலைக் குகைகளால் பிரதி ஒலிக்கப்படும் உன் மத்தள ஓசையும் சேர்ந்தால் அங்கு பசுபதி பூஜைக்கு சங்கீதக் கச்சேரி பூரணமாகி விடும்.

**சித்திர விளக்கம் :—**

மூங்கில் காடுகளில் காற்று நிரம்பி புல்லாங்குழல் போல் தொனிக்கும். முக்கண்ணனின் முன்னுள் திரிபுர விஜய திவ்ய கதையைக் கீதங்களாக கின்னரர்களின் கூட்டங்கள் கானம் செய்வர். இப்பாட்டுக் கச்சேரி கோஷ்டிக்கு மிருதங்கம் ஒன்று தான் குறைவு. நீயும் அங்கு போய் மெதுவாக இடித்தால் அவ்வோசை மலைக் குகைகளின் பிரதி தொனிகளால் பெருகி இக்குறை நீங்கி பஜனை பூர்த்தியாகி விடும்.

**60. பதவுரை :—**

இமயமலையின் சாரல்களில் காணப்படும் பற்பல விசேஷங்களைக் கடந்து, அன்னங்களின் மார்க்கமும், பரசுராமரின் புகழ்ப் பாதையுமான கிரௌஞ்சக் கணவாய் வழியாக, மஹாபலியை அடக்கும் பொழுது வளர்ந்த விஷ்ணுவின் உருவம்போல நீயும் நீண்டு வளைந்து விளங்கி வடக்கு திக்கை நோக்கிச் செல்வாய்.

**சித்திர விளக்கம் :—**

இமயமலைச் சாரல்களில் அனேக அற்புதக் காட்சிகளைக் கண்டுகொண்டே கிரௌஞ்சக் கணவாய் சேருவாய். அதன் வழியாகத்தான் ராஜஹம்ஸங்கள் மானஸ

எரிக்குப் போகவேண்டும். முன் காலத்தில் முருகனோடு போட்டி போட்ட பரசுராமனின் பாணத்தால் துளைக்கப் பட்டது இக்கணவாய். அதில் போகும் பொழுது நீ உன் உடலை நீட்டிக் கொண்டு போகவேண்டும். பலிச் சக்கர வர்த்தியின் கர்வத்தைப் பங்கம் செய்ய வாமனாவதாரம் எடுத்து மூன்றடி நிலம் யாசித்து மூவுலகமும் வியர் பித்து வளர்ந்த விஷ்ணுவின் உருவத்திற்கு சமான மாகத் தோன்றுவாய்.

**61. பதவுரை :—**

மேலே சென்று பத்துத்தலை ராவணனால் அசைக்கப் பட்டுத் தளர்ந்த சேர்க்கைகளோடு கூடிய தாழ்வரைகள் கொண்டதும், சிவபெருமானின் சிரிப்புகளைத் தினந் தோறும் சேர்த்துக் குவித்திருப்பது போல் வானமளாவி நிற்கும், மல்லிகை மலர்களைப் போல் வெண்மை நிறமான சிகரங்களுடையதும், சுவர்க்க தேவியின் திருமுகக் கண்ணாடி போன்றதுமான கைலாசத்தின் விருந்தாளி ஆவாய்.

**சித்திர விளக்கம் :—**

கிரௌஞ்சக் கணவாயிலிருந்து சிறிது தூரம் சென்றால் கைலாசகிரி கிட்டி விடும். ஆகாய மளாவி நிற்கும் அதன் வெள்ளி சிகரங்கள் மல்லிகை மலரால் செய்யப்பட்ட னவோ வென்று ஐயங்கொள்வாய். அல்லது அதில் வாசம் செய்யும் சிவபெருமானின் அட்டகாசங்கள் சிவகணங்களால் ஒன்று சேர்க்கப்பட்டதோ வென்றும் சந்தேகிப்பாய். சுவர்க்க லோகத்திலிருக்கும் தேவ கன்னிகைகள் இக்கைலாசத்தையே தம் முகக் கண்ணாடி யாக உபயோகிக்கின்றனர். இம்மலையின் மேண்மையான அதிதியாகிப் பெருமை பெறுவாய்.

**62. பதவுரை :—**

புதிதாக வெட்டிய தந்தத்தைப் போல் வெண்மையான அதன் தாழ்வரையில் எண்ணெய் தீட்டிய கரிய வண்ண முடைய நீ போய்ப் படியுங்கால், கலப்பை ஆயுதம்

தரிப்போன் மாரில் அணிந்த நீல உத்தரீயம் போல், அம்மலைக்குக் கண் கொட்டாமல் பார்க்கக் கூடிய காந்தியைக் கொடுப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

கைலாசத்தின் வெண்மைக்கு உவமை கிடைப்பது கஷ்டம். புதிதாக வெட்டிய யானை தந்தம் ஓரளவு அதனை ஒக்கும். அம்மலைமேல் குறுக்காக நீ போய்ச் சார்ந்து கொள்ளும்போது, பலராமனது வெண்மை யான மார்பில் நீலப்பட்டு போட்டிருப்பது போல் காணப் படுவாய். அப்பொழுது வானத்தில் சஞ்சரிக்கும் தேவர் களும், சித்தர்களும் உங்கள் இருவரின் அழகைக் கண் கொட்டாமல் பார்த்துப் பரமானந்த மடைவார்கள்.

**63. பதவுரை :—**

அரவ வளையல்களை நீக்கி அணைத்திருக்கும் சம்புவின் புஜத்தில் சாய்ந்து கௌரி தனது இந்த லீலா பர்வதத்தில் பாதசாரியாக சஞ்சரிப்பாளாயின் உன் ஜலத்தை உள்ளடக்கிக்கொண்டு படிக்கட்டு வடிவமாகி மணிகள் குவிந்த அம்மலையின் சாரல்களில் ஏறுவதற்கு வழி காட்டிக் கொண்டு அவளுக்கு முன் செல்வாய்.

**சித்திர விளக்கம் :—**

பவானிக்கு இந்தக் கைலாசமே கிரீடா பர்வதம். அதில் அடிக்கடி பாதசாரியாகச் சஞ்சரிப்பது அவள் வழக்கம். அப்பொழுது பரமசிவன், அவள் அச்ச மடைவாளோ வென்றஞ்சிக் கையில் அணிந்திருக்கும் பாம்பு வளையல் களையெல்லாம் கழற்றி விட்டு அவளைப் புஜத்தால் அணைத்து அழைத்துச் செல்வார். நீ அங்கே சேரும் பொழுது இவ்வாறு அவர்கள் உலாவிக் கொண்டிருந் தால் உனக்குப் பெரிய அதிருஷ்டமென்று கண்டு தொண்டு செய்யவேண்டும். அம்மலையில் நிறைந்திருக் கும் இரத்தினங்கள் மீது எக்காலமும் வெண்ணிலவு வீசுவதால் சரியாக வழி தெரியாது. ஆதலால், அழகிய

உருவமெடுத்து பார்வதிக்குப் படிக்கட்டுகளாகி வழி காட்டிக் கொண்டு அவர்கள் முன் பணிவுடன் செல்ல வேண்டும். உன ஜலத்துளிகள் அவளை நனைத்துவிடாமல் ஜாக்கிரதையாக உள்ளே அடக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

**64. பதவுரை :—**

அங்கே தங்கள் கைகளிலுள்ள வைர அங்கிகளில் மோதி ஒழுகும் நீரை, வீட்டிலிருக்கும் யந்திர தாரைகள் போல் பாவித்து, கோடைக் களைதீர விளையாடும் தேவ கன்னிகைகளிடமிருந்து தப்ப முடியாவிட்டால் அவர்கள் காது புடைக்கக் கர்ஜித்து பயமுறுத்த வேண்டும்.

**சித்திர விளக்கம் :—**

தேவகன்னிகைகள் கோடையால் கஷ்டப்பட்டு வெகு காலமாக உன்னை எதிர்பார்த்திருப்பார்கள். உன்னைக் கண்டதும் கூட்டம் கூட்டமாக வந்து கைகொட்டிக் களிப்பார்கள். அவர்களுடைய வளைகளாலும் அங்கி களாலும் அடிக்கப்பட்ட நீ தாரை தாரையாக நீர் சொரி வாய். அவர்கள் வீட்டில் ஸ்நானத்திற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் யந்திர தாரைகள் போலிருக்கும். இவ் விதம் அவர்கள் உல்லாசமாகக் களித்துக் கொண்டிருக் கும்பொழுது, பொழுது போவது தெரியாது. அவ் வழகிகளிடமிருந்து சமாதான முறையில் நீ தப்பிச் செல்ல முடியாது. ஆதலால் சிறிது பயமுறுத்தியாக வேண்டும். அவர்கள் திடுக்கிடும்படி இடித்தால் நடுங்கி உன்னை விட்டுவிடுவார்கள். உடனே தப்பிச் சென்று விடலாம்.

**65. பதவுரை :—**

தங்கத் தாமரை படரும் மானஸ ஏரியின் நீரை ஏற்று ஐராவதத்தின் முகமூடியாக ஒரு நொடி நடித்து, கற்ப விருக்ஷத்தின் பட்டுத்துகில் போன்ற தளிர்களை காற்றால் அசைத்துக் கொண்டு, பலவித லீலைகளுடன் அந்த கிரி அரசனைச் சேருவாய்.

**சித்திர விளக்கம் :—**

உனது நீண்ட யாத்திரை முடிந்து கைலாசகிரியை அடையும் பொழுது, மிகவும் குதூகலம் அடைவாய். அப்பொழுது பலவிதமாக அக்குதூகலத்தைக் காண்பிப் பாய். வழி நெடுக மாரி பெய்து மெலிந்த நீ மானஸ ஏரியின் நீரைப் பருகுவாய். அவ்வேரி முழுதும் தங்கத் தாமரை மைதானம் போல் தோன்றும். நீரெல்லாம் கமலத்தின் கந்தம் கமழும். அளவு கடந்து நீரைக் குடித்து களைத்துப் போவாய். பக்கத்தில் இந்திரனது கஜேந்திரன் ஐராவதத்தைக் கண்டு அதன் தலையில் உட்காருவாய். அப்பொழுது சுவர்க்கத்தில் தேவேந்திரன் ஊர்வலம் வரும் பொழுது போகும் நீல முகமூடி போல் காட்சியளிப்பாய். நீ உட்கார்ந்ததும் குளிர்ச்சியால் களித்து ஐராவதம் தனது காதுகளை வீசும். அக்காற்றி ஞல் பக்கத்திலிருக்கும் கற்பக விருக்ஷத்தின் இலைகள் அசையும். அப்பொழுது பட்டுக்கொடிகள் காற்றில் பறப்பது போல் தோன்றும். இச்சேஷ்டைகளைக்கண்டு, அளகாபுரி உன் வரவை அறிந்து கொள்ளுவாள்.

**66. பதவுரை :—**

காதலன் மடியில் போல் அம்மலை மேல் கங்கையாகிய பட்டுப்புடவை நழுவ வீற்றிருக்கும் அளகாபுரியின் காட்சியை என்றும் மறவாய். மாரி காலந்தோறும் அவள், முத்துச் சரங்களை கோத்த கூந்தலைத் தாங்கும் காமினி போல் தனது உயர்ந்த உப்பரிகைகளால் உன்னைத் தாங்குகிறுள்.

**சித்திர விளக்கம் :—**

கைலாஸகிரி மீது அளகாபுரி அமைந்திருப்பது காதலன் மடியில் காதலி வீற்றிருப்பதுபோல் தோன்றும். இச் சமயம் இருவரும் மெய் மறந்திருப்பதால் அவர்கள் உடை களைந்திருப்பது கவனியார்கள் அல்லவா ? அவ்வாறே கங்கை அளகாபுரி வழியாக ஓடுவது,

அவளது படுத்துகில் நழுவுவதுபோல் காணப்படும். இந்த அற்புதக் காட்சியை நீ என்றும் மறவாய். தவிர, இக்காட்சி பூர்ண சித்திரமாவதற்கு நீயும் தேவை. கோடை முடிவில் நீ போய்ச் சேர்ந்தவுடன், அளகா புரியின் நெற்றிப் போன்ற உயர்ந்த உப்பரிகைகள் மீது அமர்ந்து அவளுடைய கரிய கூந்தல் போலாவாய்.

## இரண்டாம் பாகம்

### தூது வர்ணனை

**67. பதவுரை :—**

எங்கே, மின்னலையொத்த மோகன மங்கையரும், வான வில்லைப்போன்ற வர்ண ஓவியங்களும், இடியின் கம்பீரத் தொனியை நிகர்த்த சங்கீத கோஷ்டிகளின் மிருதங்க ஓசைகளும், உனக்குள்ளிருக்கும் ஜலத்துளி களுக்குச் சமமான ரத்தினங்கள் இழைத்த தரைகளும், வானமளாவிநின்ற உப்பரிகைகளும் பொருந்திய மாளி கைகள் உன்னைப் பலவகைகளில் ஒத்திருக்கின்றனவோ;

**சித்திர விளக்கம் :—**

அளகாபுரியில் உள்ள ஒவ்வோர் மாளிகையும் உனக்கு சமமானதாகும். உன்னிடம் என்னென்ன விசேஷங்கள் இருக்கின்றனவோ அதற்கு ஒத்த விசேஷங்களும் அங்கே இருக்கின்றன. மின்னலைப்போன்ற மின்னற் கொடியார்கள், வானவில்லைப் போன்ற வர்ணப் படங்கள், இடியைப்போன்ற கம்பீரத் தொனியுள்ள மிருதங்கங்கள், உன் உள்ளிருந்து பிரகாசிக்கும் ஜலத் துளிகள்போல் இரத்தினங்கள் இழைத்த தரைகள், மேல்மெத்தைகளோ உன்னைத் தொடுகின்றன. ஆதலால் அளகாபுரியின் ஒவ்வோர் மாளிகையையும் கண்டு உனது சொந்த பிரதிபிம்பமோ என்று பிரமிப்பாய்.

**68. பதவுரை :—**

எங்கே, மாதர்களின் கையில் கமலம் லீலையுடன் தாங்கப்படுகின்றதோ; கூந்தலில் கொடிமல்லிகை கோக்கப்பட்டிருக்கின்றதோ; லோத்ர புஷ்பங்களின் மகரந்தம் படிந்து முகத்தில் வெண்மையான காந்தி வீசுகினறதோ; கொண்டையில் வாடாமல்லிகை சூடப் பட்டிருக்கின்றதோ; அழகிய காதில் சிரீஷ மலர் அணியப்படுகின்றதோ; முன் வகிடில் உன் வரவைக் குறிக்கும் கதம்ப புஷ்பம் சொருகப்படுகின்றதோ;

**சித்திர விளக்கம் :—**

அளகாபுரியிலுள்ள நாரீமணிகள் எல்லோரும் மலர் மயமாக பிரகாசிப்பார்கள். எல்லா ருதுக்களின் மலர் களும் அங்கே எப்பொழுதும் மலர்கின்றனவென்பதை அவர்கள் உடலில் காணலாம். சரத்காலத்தில் மலரும் கமலம் கையில் உல்லாசமாக விசிறியாக வீசப்படும். குளிர்காலக் கொடிமல்லிகை கூந்தலில் கோக்கப்பட்டுக் காணப்படும். பனிகால லோத்ரபுஷ்பங்களின் வெண்மை யான மகரந்தங்களால் முகம் வெளுத்து வாசனை வீசும். வசந்தகாலத்தின் வாடாமல்லிகை கொண்டையில் சூடப்படும்; கோடைக்காலச் சிரீஷம் காதில் ஜொலிக்கும். மாரிகாலத்துக் கதம்பம் முன்தலை வகிடில் விளங்கும்.

**69. பதவுரை :—**

எங்கே, மரங்கள் எப்பொழுதும் பூக்கள் மலர்ந்து மதத்தால் ஒலிக்கும் வண்டினங்களால் சூழப்பட்டிருக் கின்றனவோ; தாமரைக் குளங்கள் என்றும் கமலம் பூத்து அன்ன மேகலை பூண்டிருக்கின்றனவோ; எக் காலமும் குறையாத காந்தியுளள தோகையுடன் வீட்டு மயில்கள் கழுத்தைத் தூக்கிக் கூவுகின்றனவோ; சாயங்கால வேளைகள் சதாகாலமும் இருளகன்று நித்திய பௌர்ணமியின் நிலவுகூடி ரம்மியமாக இருக்கின்றனவோ;

**சித்திர விளக்கம் :—**

அளகாபுரியில் எக்கால்த்திலும் பூக்காத மரங்கள் இல்லை; எப்பொழுதும் மலர்ந்த தாமரைகளும் அன்னங்களும் இல்லாத குளங்கள் இல்லை ; என்றும் முழுத் தோகையுடன் விரித்தாடிக் காதலுடன் கூவும் மயிலில்லாத மாளிகையுமில்லை ; நித்தியமாகக் கைலாசத்தில் வாழும் பிறைசூடியின் சடையிலிருந்து பூர்ண சந்திரன் பிரகாசிக்காத இராக்காலமும் இல்லை.

**70. பதவுரை :—**

எங்கே ஆனந்தத்தாலன்றி மற்ற காரணங்களால் கண்ணீர் பெருகுவதில்லையோ; காதலர் கூடித் தணிக்கக் கூடிய காமதாபத்தைத் தவிர துக்கம் இல்லையோ ; ஊடலாலன்றி இதர விரகமில்லையோ; செல்வத்தில் குறைந்தோரும் வாலிபத்தைத் தவிர வேறு வயதுள்ளோரும் இல்லையோ ;

**சித்திர விளக்கம் :—**

அந்த அளகாபுரியில் கண்ணீர் விடுவதற்கு ஆனந்தமொன்றே காரணம். காமத்தாலன்றித் தாபமில்லை. அதையும் எளிதில், காதலர் கூடித் தணித்துக் கொள்ளுவார்கள் ; காதலர் அன்பின் மிகுதியால் கலகம்செய்து சிறிது பிரிந்திருப்பதால் ஏற்படுவதைத் தவிர வேறு பிரிவாற்றுமை கிடையாது ; தனத்தில் எல்லோரும் குபேரர்கள். வயதில் எல்லோரும் வாலிபர்கள்.

**71. பதவுரை :—**

எங்கே யக்ஷர்கள் உத்தம பத்தினிகளுடன் மணிகள் இழைத்து, நக்ஷத்திரங்களின் நிழல்கள் பூக்கள் போல் பதிந்திருக்கும் உப்பரிகைகளின் உச்சிமீது அமர்ந்து உன்னைப்போல் கம்பீரத் தொனியுடைத்த மிருதங்கங்கள் ஒலிக்க கற்பகத்தரு கொடுத்த இன்பசார மதுவைப் பருகுகின்றனரோ ;

**சித்திர விளக்கம் :—**

*உப்பரிகைகளின் உச்சிதோறும் யக்ஷர்கள் தங்கள் மனைவிகளுடன் ஜோடி ஜோடியாக ரமிக்கும் காக்ஷி உன் கண்ணைப் பறிக்கும். தரைகளில இரத்தினங்கள் இழைத்து நக்ஷத்திரஙகள்போல மினனும்; வானத்தி லுள்ள நக்ஷத்திரங்களின் நிழல்கள் அவற்றின் மத்தியில் மலர் பரப்பியதுபோல் பிரகாசிக்கும்; கம்பீர மான மிருதங்கத்தோடு சங்கீதத்தின் ஆனந்தத்தையும் கற்பக விருக்ஷத்தின் மதுவின் இன்பத்தையும் யக்ஷ தம்பதிகள் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.*

**72. பதவுரை :—**

*எங்கே மந்தாகினியின் மந்தமாருதம் வீச, கரை யில் வளர்ந்து, வெப்பத்தைத் தடுக்கும் மந்தார மரங் களின் நிழலில் தேவர்கள் தேடி விரும்பும் கன்னிகை கள் இரத்தினங்களைக் கையில் மூடிப் பொன் மணலில் ஒளித்து விளையாடுகின்றனரோ;*

**சித்திர விளக்கம் :—**

*அளகாபுரியின் அருகில் ஆகாச கங்கை ஓடுகின்றது. அதன் மணல் பொன் மயமாக இருக்கிறது. அதன் கரையில் பெரிய மந்தார விருக்ஷங்கள் வளர்ந்து படர்ந்து இருக்கின்றன. அவ்வாற்று மணலில், அம்மரங்களின் நிழலில், தம்மைத் தேடி மணக்க விரும்பும் தேவர்களையும் லக்ஷியம் செய்யாத பேரழ குள்ள யக்ஷ கன்னிகைகள் கூடி விளையாடிக்கொண் டிருப்பார்கள். ஒவ்வொருவரும் கையில் இரத்தினங்களை மூடி பொன் மணலில புதைத்து மற்றவர்களைக்கண்டு பிடிக்கச்சொல்லிக் களிப்பார்கள்.*

**73. பதவுரை :—**

*எங்கே கோவைப் பழத்தையொத்த அதரமுள்ள மாதர்கள் தங்கள் பட்டுப் புடவைகளின் முடிச்சுகளை காதல் மிகுந்து துடிக்கும் கைகளால் நாயகர்கள் அவிழ்த்து இழுக்க நாணத்தால் தடுமாறி எதிரில்*

இருக்கும் இரத்தினக் குத்துவிளக்குகளின் மீது கை நிறையக் குங்குமத்தை எடுத்து வீசி அணைக்க வீணுக விரும்புகின்றனரோ;

**சித்திர விளக்கம் :—**

வீடுகள்தோறும் ஸ்வயம்பிரகாசமுள்ள இரத்தினங்களையே தீபங்களாக உபயோகப்படுத்துகின்றனர். தங்கள் நாயகர்களுடன் கூடும் காலத்தில் வெட்கத்தால் மதி மயங்கிய யக்ஷப் பெண்கள் இதை மறந்து எண்ணெய் விளக்குகள் என்று எண்ணிப் பக்கத்திலிருக்கும் குங்குமத்தைக் கைநிறைய வாரி வீசி அணைகக விரும்புகின்றனர். அந்த விளக்குகள் குங்கும வர்ணத்தால் அதிகமாக பிரகாசிக்கக் கண்டு பிரமிக்கின்றனர்.

**74. பதவுரை :—**

எங்கே வாயு வழிகாட்ட மேல் மெத்தைகளை அடைந்து ஜலத்துளிகளால் சித்திரப் படங்கள் கெடுவதைக் கண்டு அச்சமடைந்தவைவாய், உன்னையொத்த மேகங்கள் புகைபோல் சாமர்த்தியமாகப் பாசாங்குசெய்து பலவாகப் பிரிந்து ஜன்னல்வழி வெளிவருகின்றனவோ ;

**சித்திர விளக்கம் :—**

மாளிகைகளின் மேல்பாகங்கள் மேக மார்க்கத்தில் இருக்கின்றன. ஆதலால் உன்னைப்போன்ற கார்முகில்கள் காற்றால் அடிக்கப்பட்டுச் செல்லும் காலையில், வர்ணப் படங்கள் வைத்திருக்கும் சித்திரசாலைகளில் நுழைவது சகஜம். அப்பொழுது ஜலத்துளிகளால் வர்ணங்கள் சிதைந்து ஓவியங்கள் கெடுவதைக் கண்டு தம் சொந்த உருவத்தோடு வெளிவந்தால் யக்ஷர்கள் கோபிப்பார்களோ என்று பயந்து தம்மைப் பல பாகங்களாகப் பிரித்துக்கொண்டு புகைபோல் பாசாங்குசெய்து ஜன்னல் வெளியே வருகின்றன.

**75. பதவுரை :—**

*எங்கே காதலரோடு கூடிக் களைத்து ஆலிங்கனம் தளர்ந்து சோர்ந்திருக்கும் மங்கையர் தம் அங்கங்களின் களைப்பை, நடுநிசியில் உன் தடை நீங்கிப் பெரிதும் பிரகாசிக்கும் சந்திர கிரணங்கள்பட, ஜன்னல்களின் நூல்களில் கோத்துத் தொங்கவிட்டிருக்கும் சந்திரகாந்தக் கற்கள் உருகி வழிந்து போக்குகின்றனவோ ;*

**சித்திர விளக்கம் :—**

*அளகாபுரியின் அழகால் மயங்கி சந்திரனை இரவு முழுதும் மறைத்துவிடாதே. ஜன்னல்தோறும் சந்திர காந்த மணிகள் தொங்கவிட்டிருக்கின்றன. அவைகள் சந்திர கிரணம் பட்டதும் உருகிக் குளிர்ந்த நீர் ஒழுகும். அது அங்கங்களில் பட்டதும் களைப்புத் தீரும். காதலர்களுக்குக் கைகண்ட மருந்து. ஆதலால் நடுநிசியில நீ அகன்று போய் பூர்ணசந்திரனைப் பிரகாசிக்க விட்டுவிடு.*

**76. பதவுரை :—**

*எங்கே குபேரன கீர்த்தியை கின்னரர் இனிய குரலுடன் பாட உத்தம தேவலோக தாசிகளோடு சல்லாபம் செய்துகொண்டு அழியாத செல்வம் நிறைந்த மாளிகைகளில் வசிக்கும் யக்ஷ யுவர்கள் வைப்பிராஜமென்ற வெளி உத்தியானவனத்திற்கு தினந்தோறும் உலவச் செல்லுகின்றனரோ.*

**சித்திர விளக்கம் :—**

*அளகாபுரியில் எங்கும் அழகும் ஆனந்தமும் நிறைந்திருந்தபோதிலும் கேந்திரஸ்தானமாக அதற்கு சற்று வெளியிலிருக்கும் வைப்பிராஜமென்னும் உத்தியான வனம் விளங்கும். அங்கே நீ சாயங்கால வேளையில் போய்ப் பார்க்கவேண்டும். கின்னரர்கள் இனிய குரலோடு பாடும் கீதங்களைக் கேட்டுக் குதூகலமடைவாய். குபேரனையொத்த காதலர்களுடன் உல்லாசமாகக் காலம் கழித்து மர்தர்கள் இருட்டில் வீட்டிற்குத் திரும்புவார்கள்.*

அப்பொழுது அவர்களின் கூந்தலில் அணிந்திருக்கும் மந்தார மலர்களும் காதில் வைத்திருக்கும் பொற்றாமரை பூக்களும் நழுவி விழுந்து, மாரில் பூண்டிருக்கும் முத்து மாலைகளும், இரத்தின ஹாரங்களும் அறுந்து வீழ்ந்து முத்துக்களும், ரத்தினங்களும் சிதறிக்கிடக்கும். ஆதலால் சூரியோதயத்தில் இராஜமார்க்கம் முழுதும் பூக்களாலும் மணிகளாலும் இழைத்ததுபோலக் கண்ணைக் கவரும்.

**77. பதவுரை.**

எங்கே தனபதிக்குத் தோழனாக அங்கேயே நேரில் வசிக்கும் ஈசனை எண்ணி அஞ்சி அனங்கன் வண்டு நாண் கொண்ட வில்லை வளைப்பதில்லையேனும் சுந்தர வனிதைகளின் வளைந்த புருவங்களிலிருந்து காதலர்களிடம் குறிதப்பாது பாயும் கூரிய கடைக்கண் நோக்குகளின் சாமர்த்தியத்தால் அவனது காரியம் சித்தியடைகின்றதோ ;

**சித்திர விளக்கம் :—**

கைலாசத்தில் குபேரனுக்குத் தோழனாக முக்கண்ணன் என்றும் வசிப்பதால், அவன் நெற்றிக் கண்ணால் முன்னொரு தரம் எரிக்கப்பட்ட மன்மதன் அளகாபுரியில் தன் வில்லை வளைத்து அம்பு தொடுப்பதில்லை ; ஆனால் அவன் காரியமட்டும் சித்தியாகி விடுகின்றது. அந்நகரின் மோகன மங்கையரின் கண்களே அவன் வில்லின் வேலையைச் செய்து விடுகின்றன. அவை புருவங்களை வளைத்து கடைக்கண் பார்வைகளை வீசும் பொழுது தங்கள் குறிகளில் பாய்ந்து காமன் காரியத்தைப் பூர்த்தி செய்துவிடுகின்றன. கோபத்தால் எரித்ததுதான் பரமசிவனுக்குப் பிரயோசனம்.

**78. பதவுரை :—**

எங்கே விசித்திர வர்ண வஸ்திரங்களையும் கண்களில் காந்தி உண்டு பண்ணும் மதுவையும் புஷ்பங்களையும் தளிர்களையும் பலவித ஆபரணங்களையும், கைகால்களில்

பூசும் மருதாணியையும் சீமாட்டிகள் சிங்காரத்திற்கு வேண்டிய சகல பொருள்களேயும் ஒரே கற்பக விரு க்ஷம் கொடுக்கின்றதோ ;

**சித்திர விளக்கம் :—**

அளகாபுரியில் கடைகளேக் காணவில்லேயே, மாதர் மட்டும் உடல் முழுதும் உயர்ந்த வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும், பூக்களாலும், வாசனேத் திரவியங் ளாலும், சிங்காரித்துச் சொலிக்கின்றனரே என்று மயங்குவாய். இதையெல்லாம் கேட்போருக்குக் கணக் கின்றி கற்பக விருக்ஷம் ஒன்றே உதவுகின்றது.

**79. பதவுரை :—**

அந்த அளகாபுரியில் குபேரன் மாளிகைக்கு வடக்கில் என் வீடு, தூரத்திலிருந்தே வானவில் போன்ற மனேகரமான வாசற்படியோடு விளங்கும். அதனருகில் என் காதலியால் அபிமான புத்திரனுகப் பரிபாலிக்கப் பட்ட பால மந்தாரமரம் கைநீட்டிப் பறிக்கும்படி பூங் கொத்து நிரம்பிநிற்கும்.

**சித்திர விளக்கம் :—**

இவ்வளவு தூரம் நீ வர்ணித்த அளகாபுரி மாபெரும் நகராயிற்றே. அதில் என் வீட்டை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற கவலே வேண்டாம். மற்ற மாளிகைகளே விட ஓங்கி நிற்கும் குபேரன் மாளிகைக்குச் சிறிது வடக்கே இருக்கிறது. வாசலில் வானவில்லின் வர்ணங் களால் சித்தரிக்கப்பட்ட வாசற்படி தோன்றும். எதிரில் என் மனேவியால் தன் பிள்ளேபோல் பரிபாலிக்கப்பட்ட பால மந்தார விருக்ஷத்தையும் பார்த்து அடையாளம் தெரிந்து கொள்வாய். அந்த மரமும் அவள் மேல் அன்பு கொண்டதுபோல் கை நீட்டிப்பறிக்கும் உயரத் தில் கொத்து கொத்தாகப் பூத்திருக்கும்.

**80. பதவுரை :—**

*அதில் மரகதக் கற்களால் படித்துறை கட்டப்பட்டு, வைடூர்யத் தண்டுடன் பிரகாசிக்கும். பொற்றுமரைப் புஷ்பங்கள் மலர்ந்து நிறைந்த புஷ்கரணியுண்டு; அதன் நீரில் நித்தியமாக வசித்து வரும் அன்னங்கள் உன்னைக் கண்டும் மானஸ ஏரியை விரும்பமாட்டா.*

**சித்திர விளக்கம் :—**

*வாசற்படியைத் தாண்டி முதல் பிரகாரத்தில் ஒரு தடாகம் இருக்கின்றது. அதன் நாலா பக்கங்களிலும் மரகதக் கற்களால் கட்டப்பட்ட படித்துறை பச்சைப் பசேரென்று மின்னும். நிர்மலமான ஜலத்தில் நீல வைடூர்யம் போன்ற தண்டுடன பொன் நிறமான தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும். அக்கமலங்களில் அன்னங்கள் சதா குடியிருக்கும். உன்னைக் கண்டதும் மற்ற விடங்களிலுள்ள அன்னங்களெல்லாம் மானஸ ஏரியை நோக்கிப் புறப்பட்ட போதிலும் என் தடாகத்தி லிருக்கும் ஹம்ஸங்கள் அதற்கு ஆசைப்படமாட்டா. பரிமாணத்தில் அவ்வேரி பெரியதா யிருப்பனும் அழகில் இத்தடாகமே மேலானதென்று அந்த அன்னங்களுக்குத் தெரியும்.*

**81. பதவுரை :—**

*அதன் கரையில் அழகிய இந்திர நீலக் கற்களால் செய்யப்பட்ட சிகரமும் பொன் மயமான வாழை வேலியும் கொண்ட லீலா பர்வதம் அமைக்கப் பட்டுள்ளது. பக்கங்களில் மின்னல்களால் நீ பிரகாசிக் கும் பொழுது உன்னைக்கண்டு என் மனைவிக்கு மிகவும் இஷ்டமான அதையே நடுங்கிய மனத்துடன் நினைக்கின்றேன்.*

**சித்திர விளக்கம் :—**

*தடாகத்தின தீரத்தில் கிரீடைக்காக ஒரு குன்று அமைக் கப்பட்டிருக்கிறது. அதன் உச்சியில் நீலக் கற்கள். சுற்றிலும் பொன்னிறமான வாழை வேலி. இக்குன் றின்மேல் என் பத்தினிக்கு அளவில்லாத பிரீதி.*

ஓரோர் சமயம் பக்கங்களில் பனிச்சென்று மின்னிக் கொண்டு, நடுவில் நீலமாகியிருக்கும் உன்னைக் கண்டு, மேகமே, அந்தக் குன்று என் ஞாபகத்துக்கு வரும். அப்பொழுதெல்லாம் அவளுடன் மறுபடியும் அதில் ஏறி விளையாட விதி வழிவிடுமோவென்று நினைத்து நடுங்குவேன்.

**82. பதவுரை :—**

வாடா மல்லிகைச் செடி சூழ்ந்த மாதவிக் கொடி வீடும், அதனருகில் ஆடும் துளிரோடு சிவப்பான அசோக மரமும், பேரழகுள்ள கேஸர விருக்ஷமும் பொருந்தியுள்ளன. ஒன்று என்னுடன் கூட இருக்கும் உன் தோழியின் இடது காலுதையும், மற்றொன்று அவள் வாய் மதுவையும் மசக்கையென்ற சாக்கால் வேண்டி விரும்பும்.

**சித்திர விளக்கம் :—**

லீலா பர்வதத்தினருகில் ஒரு மாதவிக் கொடி வீடுள்ளது. அதனைச் சுற்றிலும் வாடா மல்லிகைச் செடி. பக்கத்தில் சிவப்பு அசோக மரமும், விநோதமான வகுள மரமும் உள்ளன. நாங்கள் இருவரும் தம்பதிகளாகச் சென்று என் காதலி தன் இடது காலால் உதைத்தாலொழிய அசோக மரம் பூக்காது. அவள் வாயிலிருக்கும் மதுவைத் தன்பேரில் உமிழ்ந்தாலொழிய வகுள விருக்ஷம் மலராது. இது உண்மையில் அவற்றின், அல்லது மசக்கையோ அவளிடம் உள்ள ஆசையோ அறியேன்.

**83. பதவுரை :—**

அவற்றின் மத்தியில், ஸ்படிகத் தட்டோடு கூடியும் அடியில் இளம் மூங்கிலைப் போன்ற பச்சை மணிகள் கட்டியுமுள்ள பொன் மேடை காணுவாய் ; என் காதலியிடமிருந்து வளைகள் ஒலிக்கக் கைகொட்டி நர்த்தனம் செய்யப் பயிற்சி அடைந்த நீலகண்டத்தையுடைய உன் மித்திரன் மயிலின் இராக் கால வாசஸ்தலம் அதுவே.

**சித்திர விளக்கம் :—**

அந்த இரண்டு மரங்களுக்கு மத்தியில் தங்கத் தூண் களின்மேல் ஸ்படிகத் தட்டு போட்ட ஒரு மேடை உள்ளது. அதனடியில் இளம் மூங்கிலைப்போல் நல்ல பச்சை வர்ணமுள்ள மணிகள் கோத்துக் கட்டப்பட்டிருக் கும். அது எங்கள்வீட்டு மயிலின் இராக்கால வாச ஸ்தலம். எல்லா மயில்களும் உன் மித்திரர்கள். மேகத் தைக் கண்டு தோகை விரித்தாடுவன. ஆயினும் இந்த மயிலின் நர்த்தனம் ஒப்பற்றது. என் காதலி தன் கை கொட்டி, வளையல்களின் தாளத்திற்கிசைய ஆட அதற் குக் கற்றுக் கொடுத்திருக்கிறாள். இந்த நீலகண்ட னுடைய நர்த்தனமும் பார்வதிபதியான நீலகண்ட னுடைய நடனத்தை ஒத்திருக்கும்.

**84. பதவுரை :—**

மேதாவியான நீ இக்குறிப்புகளை உன் இதயத்தில் பதிய வைத்து, அவற்றுலும் வாசற்படியில் எழுதப்பட்டிருக் கும் சங்க பத்மங்களின் ஓவியங்களாலும் என் வீட்டைக் கண்டு பிடிப்பாய். எனனைப் பிரிந்து அதன் அழகும் மழுங்கியிருக்கும். சூரியன் அஸ்தமித்த பிறகு கமலத் தின் காந்தி குறையாமலிருக்குமா ?

**சித்திர விளக்கம் :—**

நான் சொன்ன குறிப்புகளையெல்லாம் ஜாக்கிரதையாக மனதில் வைத்துக்கொள்வாய். இன்னும் வேண்டு மானல் மற்றோர் குறிப்பும் கூறுகிறேன். என் வீட்டு வாசற்படியில் அஷ்ட ஐசுவரியங்களுக்கு அதிபதிகளான சங்க பத்மங்களின் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கும். தவிர, அளகாபுரியில் இந்த ஒரே மாளிகை தன் யஜமானனை விட்டுப் பிரிந்திருப்பதால், சூரியஸ்தமான காலத்தில் கமலத்தைப்போல் அதன்மேல் அழுக்குப் படிந்து மங்கலாக இருக்கும். ஆதலால் அதைக் கண்டு பிடிப்பதில் கொஞ்சமும் கஷ்டமிராது.

**85. பதவுரை :—**

உடனே, எளிதில் நுழையும் பொருட்டு இளங்கரி உரு வெடுத்து, முன் கூறிய லீலா பர்வதத்தின் ரம்மியமான தாழ்வரையில் உட்கார்ந்துக் கொண்டு உனது மின்னல் பார்வையை மின்மினி மாலை போல் அற்ப பிரகாசமாகச் செய்துக் கொண்டு வீட்டிற்குள் விழும்படி செய்ய வேண்டும்.

**சித்திர விளக்கம் :—**

என் வீட்டிற்கு நேர் மேலே வந்து சேர்ந்ததும் உன் உருவத்தை யானைக் குட்டி அளவாகச் செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இறங்குவது கஷ்டம். நீ உட்காரவேண்டிய கிரீடா பர்வதமும் பாரம் தாங்காது. அதன் மேல் வீற்றிருந்து வீட்டிற்குள் பார்க்கவேண்டும். ஆனால் உன் மின்னலின் முழுவேகத்துடன் நோக்கினால் அனர்த்த முண்டாகும். ஆதலால் மின்மினிப் பூச்சி வரிசை போல் பிரகாசத்தைக் குறைத்துக்கொண்டு எட்டிப் பார்ப்பாய்.

**86. பதவுரை :—**

மெல்லியாள் ; மங்கைட் பருவத்தினள் ; கூரிய பற்க ளுடையவள் ; கோவைப் பழமொத்த அதரத்தாள் ; குறுகிய இடையுடையவள் ; மயங்கிய மான் விழியாள் ; தாழ்ந்த தொப்புள் உள்ளவள் ; பின் பாரத்தால் ஆடி அசைந்து நடப்பவள் ; தனங்களின் கனத்தால் சிறிது முன் வளைந்து இருப்பவள்; நான்முகன் சிருஷ்டி செய்த கன்னிகைகளின் ஆதி போன்றாள். அன்னாள் அங்கு இருப்பாள்.

**சித்திர விளக்கம் :—**

உள்ளே பார்த்ததும், உன் கண்களின் உத்தம பலனை அடைவாய். பிரம்மா தன் சிருஷ்டி சக்திகளைச் செலவிடு முன், அழகை யெல்லாம் திரட்டி ஒரே உருவமாகச் செய்தது போல் தோன்றுவாள். எனது ஆசையால் அவளைச் சிறிது வர்ணித்தேனுயினும், அவள் அழகை நேரில் கண்டுதான் அறிந்து கொள்ள முடியும்.

**87. பதவுரை :—**

வெகு தூரம் என்னை விட்டுப் பிரிந்து, தன் தோழனை இழந்த சக்கரவாகப் பக்ஷியைப் போல், பிறரிடம் பேச விரும்பாத எனது இரண்டாவது உயிரென்று அவளை அறிவாய் ; இக்கொடிய நாட்களைக் கழித்து வரும் காலை, பனியால் பாழடைந்த கமலம் போல், அச்சிறுமி தீவிர துக்கத்தால் வாடித் தன் உருவமழிந் திருப்பாள் என்று எண்ணுகிறேன்.

**சித்திர விளக்கம் :—**

அவளைக் காண உனக்கே கஷ்டமாக இருக்கும். நானி ருக்கும் பொழுது என்னிடம் ஓயாது பேசுபவள், இப் பொழுது ஆணை இழந்த பெண் சக்கரவாகப் பக்ஷியைப் போல் துக்க சாகரத்தில் மூழ்கி மௌனமாக இருப் பாள். ஒவ்வோர் நாளும் அவளுடைய துக்கம் அதிகரித்து வரும். அதைப் பொறுக்க மாட்டாது அவ ளுடைய உடலும் வாடி வரும். பனி காலத்துத் தாமரை போல் பார்ப்பதற்கு பரிதாபமான சொரூபத்துடன் இருப்பாள்.

**88. பதவுரை :—**

அதிகமாக அழுவதால் வீங்கின கண்களோடும், பெரு மூச்சின் உஷ்ணத்தால் உலர்ந்து வர்ணமிழந்த உதடு களோடும், கலைந்து தொங்கும் கூந்தல் மறைக்க ஒரு கைமேல் வைக்கப்பட்டிருக்கும் அவளது முகம் உன் னால் மூடப்பட்டு ஒளி மழுங்கிய சந்திரனது சோதி போல் சீரழிந்திருக்கும்.

**சித்திர விளக்கம் :—**

அந்த சமயத்தில் பூர்ண சந்திரனை கண்டு மிகவும் அழுதுக் கொண்டிருப்பாள். கண்கள் சிவந்து வீங்கி யிருக்கும். பெரு மூச்சினால் உதடுகள் வெடித்து வாடியிருக்கும். தலை மயிர் அவிழ்ந்து தொங்கி மறைக்க முகத்தைக் கைமேல் வைத்துக் கொண்டு என்னை நினைத்து மனம் நொந்து வருந்துவாள். அப்பொழுது நீ வந்து இந்துவை மறைக்கவே,

சந்திரன் காந்தியும் குன்றிப் போய் அவள் முகத்தை ஒத்திருக்கும். தன் பிரிவாற்ருமையைப் பெருக்கும் சந்திர கிரணங்களைத் தடுப்பதாலேயே உன் பேரில் அவளுக்கு சினேகம் உண்டாகும்.

**89. பதவுரை :—**

நீ அவளைக காணும் பொழுது, நைவேத்தியம் வைத்துப் பூஜை செய்து கொண்டிருப்பாள்; அல்லது விரகத்தால் இளைத்த என் உருவத்தை மனத்தால் நினைத்துச் சித்திரம் வரைந்து கொண்டிருப்பாள்; அல்லது கூண்டிலிருக்கும் மதுர மொழியுள்ள மைனுவை 'உன் பேரில் பேரன்புள்ள நாதனை நினைக்கிருயா, கண்ணே !' என்று கேட்டுக் கொண்டிருப்பாள்.

**சித்திர விளக்கம் :—**

உளளே எட்டிப பார்த்தவுடன் பேச ஆரம்பித்து விடாதே ! அவள் என்ன செய்து கொண்டிருக்கிருள் என்று கவனிப்பாய். நான் சிக்கிரம் திரும்ப வேண்டுமென்று இஷ்ட தெய்வத்திற்கு நைவேத்தியம் சமர்ப்பித்துப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பாள். இல்லாவிட்டால் என நிலையை நினைந்து, மனதால் கற்பனை செய்து, சித்திரப் பலகையில் ஓவியம் எழுதிக் கொண்டிருப்பாள்; அல்லது பக்கததில் கூண்டிலிருக்கும் மைனுவை 'பிரியசகி, நாதனை நினைக்கின்ருயா ? ஊரில் இருக்கும் பொழுது என்னைவிட உன் பேரில் தானே அவருக்குப் பிரியம் ? நான் வளர்த்த போதிலும் நீயும் அவர் மீதுதான் அதிக வாஞ்சை கொண்டிருந்தாய் ? முன்போல் மதுரமாய் பேசுகின்றதைப் பார்த்தால் அவரை மறந்து விட்டாய் போலிருக்கிறதே !' என்று கொஞ்சிக் கேட்டுக் கொண்டிருப்பாள். இந்த இனிய சேஷ்டைகளை அவசரப் பட்டுத் தடுத்து விடாதே.

**90. பதவுரை :—**

அல்லது தனது மடியில் அழுக்கடைந்த வஸ்திரத்தின் மேல் வீணையை வைத்துக் கொண்டு, என பெயரின் கீதங்களை வைத்துப் பாட விரும்பினவளாய், சற்குணனே,

கண்ணீரால் நனைந்த கம்பியை கஷ்டப்பட்டுத் துடைத்து தானே புனைந்த கீர்த்தனையை அடிக்கடி மறந்து விடுவாள்.

**சித்திர விளக்கம் :—**

ஒருகால் தன் மனதிலிருக்கும் காதலைச் சங்கீதமாகச் செய்து என் பெயரைக் கொண்டு ஒரு கீர்த்தனை அமைத்து அழுக்கடைந்திருக்கும் புடவையுடைய தன் மடிமேல் வீணையை வைத்து வாசிக்க ஆரம்பிக்கும் போது கண்ணீர் கொட்டி, தந்திக்கம்பி நனையும். அதை கஷ்டப்பட்டுத் துடைத்தப்பின் பாட்டு மறந்து போகும். வெகு நேரம் சிந்தித்து நினைவு வந்து தொடங்கும் போது மறுபடியும் கம்பி கெட்டுப் போகும். இப்படி மாறி மாறித் தடுமாறுவாள். இதைப் பார்த்து தயாள குணமுள்ள நீ எப்படித்தான் சகிப்பாயோ ?

**91. பதவுரை :—**

அல்லது விரகத்தின் முதல் நாள் முதற் கொண்டு வரிசையாக வாசற்படியில் வைத்து மலர்களால் மீதி மாதங்களைக் கணக்கிட்டுக் கொண்டோ, அல்லது கற்பனை யில் என்னுடன் கூடிக் களித்துக் கொண்டோ இருப் பாள். காதலரை விட்டுப் பிரிந்த வனிதைகளின் விரக வினோதங்கள் பெரும்பாலும் இவை தான் அன்றோ ?

**சித்திர விளக்கம் :—**

தினந்தோறும் மந்தார மலர்களைப் பறித்துத் தன் கூந்தலில் அணியாமல் வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு என்னைப் பிரிந்தது முதல், நாளுக்கு ஒரு மலர் வீதம் வைத்து தனது விரகத்தின் முடிவுக்கு மீதி எத்தனை காலமென்று கணக்கிட்டுக் கொண்டிருப் பாள். அப்படிச் செய்யாமலிருந்தால், என்னுடன் சேர்ந் திருப்பது போல் கற்பனை செய்து பார்ப்போர் பைத் தியமோ என்று எண்ணுமாறு கோபித்தும் சிரித்தும் மற்றும் பல காம சேஷ்டைகள் செய்வாள். முதல் முதலாகப் பிரிந்த உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும் என்று கேட்காதே. எங்களிருவரைப்போல

எல்லை கடந்த காதல் உள்ளவர்கள் பிரிந்தால் விரக தாபம் பொறுக்காத காதலியின் சேஷ்டைகளைப் பற்றிக் கவிகள் இவ்வாறே வர்ணித்திருக்கிறார்கள் அல்லவா ?

**92. பதவுரை :—**

பல காரியங்களில் ஈடுபட்டிருப்பதால் பகல் வேளையில் எனது பிரிவாற்றாமை அவளை அவ்வளவு வருத்தாது; இரவில்தான் காலம் கழிக்க வழியின்றி மிகவும் வாடி வருந்துவாள் என்று கவலைப்படுகின்றேன்; ஆதலால் நடு நிசியில் பூமியில் படுத்துத் தூக்கமின்றி விழித் திருக்கும் அப்பதிவிரதையை மாளிகையின் ஜன்னலில் அமர்ந்து பார்த்து என் செய்தியால் தேற்றக் கடவாய்.

**சித்திர விளக்கம் :—**

முன் கூறிய வண்ணம் சித்திரம் எழுதியும் புஷ்பங்களை வைத்து எண்ணியும், வீட்டு வேலைகளைக் கவனித்தும், பகல் வேளையைப் போக்கி விடுவாள் ; ஆனால், அஸ்த மித்ததும் அவள் துக்கம் சகிக்க முடியாது படுக்கையில் படுக்க மாட்டாள். தரையில சயனித்துச் சிந்தித்துக் கொண்டே இருப்பாள். இரவு அளவில்லாமல் வளரும் ஓரிரவாவது உன்னால் சுகமாகக் கழியும் பொருட்டு, நீ நடுநிசியில் அவளுக்கெதிரிலுள்ள ஜன்னலில் அமர்ந் திருந்து என் செய்தியைத் தந்து இன்புறுத்துவாயாக.

**93. பதவுரை :—**

மனோவியாதியால் மெலிந்து விரக சயனத்தில் ஓர் பக்கமாகப் படுத்து, கிழக்குத் திக்கில் இளம்பும் முதல் பிறைச்சந்திரன் போல் காந்தி குறைந்து, என்னுடன் கூடியிருக்கும் காலத்தில் மனம்போன இன்பங்களால் ஒருக்ஷணம் போல் கழித்த இரவு எனது பிரிவாற்றாமை யால் மிகவும் பெருகப் பெருமூச்சு விட்டுக் கண்ணீ ருகுத்துக் கழிப்பவளை ;

**சித்திர விளக்கம் :—**

ஓயாமல் என்னைப்பற்றிச் சிந்திப்பதால் உடல் மெலிந் திருப்பாள். மெத்தை தலைகணியெல்லாம் விடுத்து வெறும் கோரைப் பாயில் கையின்மேல் தலையை வைத்து ஒரு பக்கமாகப் படுத்துக் கொண்டிருப்பாள். அமாவாசைக்கு அடுத்த நாள் கிழக்கு திக்கில் உதிக்கும் முதல் பிறைச்சந்திரன் போல் முன்னழகின் அம்சமே அவளிடம் காணப்படும். இருவரும் கூடியிருக்கும் காலத்தில் ஒரு க்ஷணம்போல் கழித்த இரவு இப் பொழுது ஒரு யுகமாக வளர்ந்து கொண்டிருக்கும். விரகதாபம் தாங்க மாட்டாமல் பெருமூச்சு விட்டு ஓயாமல் கண்ணீர் சொரிந்துக் கொண்டிருப்பாள்.

**94. பதவுரை :—**

தைலமின்றி வெறும் தண்ணீரில் நீராடுவதால் சுரடு முரடாகிக் கன்னத்தில் கலைந்து வீழ்ந்திருக்கும் கூந்தலை, இளந்தளிர் போன்ற அதரத்தை உலர்த்தும் பெருமூச்சு விட்டு இங்கு மங்கும் அலைக்க, கனவி லேனும் என்னுடன் கூடிக் களிக்கலாமென்று தூக்கத்தை எதிர் பார்த்தும் கண்களிலிருந்து பெருகும் நீரால் அதுவும் தடைபட்டுத் தவிப்பவளை ;

**சித்திர விளக்கம் :—**

என்னைப் பிரிந்ததுமுதல் தலைக்குத் தைலம் போட்டுக் கொள்வதையும் நிறுத்தியிருப்பாள். ஆதலால் அவள் கூந்தல் சரடுதட்டிக் கலைந்து கன்னங்கள்மேல் கிடக்கும். அனல்கொண்ட பெருமூச்சாக விருக்கும் சுவாசத்தால் மெல்லிய உதடுகள் உலர்ந்து போவதுமன்றிக் கன்னத் திலிருக்கும் மயிரும் அங்குமிங்கும் ஆடிக்கொண் டிருக்கும். சிறிது அயர்ந்து நித்திரை செய்து என்னைக் கனவிலாவது கூடி விரகதாபத்தைத் தணிக்கலா மென்று எண்ணிக் கண்ணை மூடுவாள். ஆனால் ஓயாமல் ஆறுபோல் பெருகும் கண்ணீர் தடைப்பட்டு மறுபடியும் கண்ணைத் திறக்கும்படிசெய்து தூக்கத்திற்கு இடங் கொடாது. இவ்வாறு இரவு முழுதும் துயரப்படுவாள்.

**95. பதவுரை :—**

*விரகத்தின் முதல் நாளில் மாலையை விடுத்து முடிச்சுப் போடப்பட்டதும், எனது சாபத்தின் முடிவில் துக்கம் தொலைந்து என்னால் அவிழ்க்க வேண்டியதும், கடின மாகவும் பட்ட விடத்தைப் புண்படுத்துவதுமான ஒரே சடையாகத் தொங்கும் கூந்தலைக் கன்னங்களிலிருந்து விரல் நகங்கள் வெட்டாத கையினால் ஓயாமல் விலக்கிக் கொண்டிருப்பவளை ;*

**சித்திர விளக்கம் :—**

*என்னைப் பிரியும்பொழுது தனது தலையிலிருநது மலர் களையெல்லாம் எடுத்துப் பின்னலை அவிழ்த்து கூந்தல் நுனியில் ஒரு முடிச்சுப்போட்டு 'உன் தண்டனை முடிந்து துக்கம் தொலைந்து நீ வந்து அவிழ்க்கும் வரையில் இப்படியே தொங்கும்' என்று சபதம் செய்து விட்டாள். ஆதலால், அம்மயிர் சடை பிடித்துக் கடின மாகப்போய்க் கெட்டிருக்கும். சரியாக வாரிப் பினைாதை தால் மெல்லிய கன்னத்தில் பரவிப் புண்படுத்தும். அதை ஓயாமல் கையால் விலக்கும்பொழுது, விரல் களின் நகங்கள் வெட்டப்படாமல் வளர்ந்திருப்பதால் அவைகளும் அடிக்கடி காயப்படுத்தும். இவ்வாறு கன்னமெல்லாம் ரணமாக இருக்கும்.*

**96. பதவுரை :—**

*ஆபரணமனைத்தும் களைந்து, மிகவும் மெலிந்த தேகத் தைப் பொங்கியெழும் துக்கத்தோடு, சயனத்தின் மத்தி யில அடிக்கடி படுக்கச்செய்யப் பிரயத்தனம் செய்யும் அவளைக் கண்டு நிச்சயம் நீயும் நன்னீரான கண்ணீர் விடும்படி நேரிடும். ஈரமுள்ள உள்ளமுடையார் கருணை கொள்வது நித்திய நியமமன்றோ.*

**சித்திர விளக்கம் :—**

*அவள் உடலில் ஓர் ஆபரணம் கூடக் காணமாட்டாய். ஏற்கெனவே மெல்லியள் விரகத்தால் மிகவும் இளைத் திருப்பாள். துக்கத்தால் என்ன செய்வதென்று*

புரியாமல் தடுமாறுவாள். உட்கார்ந்தால் படுக்கலா மென்று தோன்றும்; படுத்தால் உட்காரலாமென்று தோன்றும். இப்படிப் படுப்பதும் புரளுவதும், உட்காரு வதுமாகச் சங்கடப்படுவதைப் பார்த்து உன்னை அறி யாமலே கண்ணீர் விடுவதைப்போல் மழைத்துளி தெளிப்பாய். உனது மனம் என்றும் ஈரமுள்ள தன்றோ ? ஈரமுள்ள உள்ளத்தார் என்றும் அருள் உடையாரன்றோ ? பிறர் வருத்தத்தைத் தம் வருத்தம் போல் பாவித்துத் துக்கப்படுவார்கள் அல்லவா ?

**97. பதவுரை :—**

என்பால் உனது தோழிக்குள்ள திடமான நேசத்தை நன்கறிந்தே, அவளது முதல் விரகத்தில் இவ்வாறிருப் பாள் என்று சிந்திக்கின்றேன் ; சொந்தப் பெருமையின் அபிமானத்தால் நான் தற்புகழ்ச்சி செய்துகொள்ள வில்லை. என் வார்த்தையின் உண்மையை நேரில் நீ வெகு சீக்கிரம் அறியப்போகின்றாய்.

**சித்திர விளக்கம் :—**

கண்ணிற்கெட்டாது வெகுதூரத்திலிருப்பவளது நிலை மையை இவ்வாறு விஸ்தாரமாகக் கூறுகின்றாயே ! இது உன் மதிமயக்கமாக இருக்கக்கூடாதா ? ஒரு வேளை சொந்த அழகைப்பற்றியும், குணங்களைப்பற்றியும் தவ றான எண்ணங்கொண்டு, உன்மேல் அவள் அளவு கடந்த மோகங் கொள்ளாமலிருக்கமாட்டாள் என்று கற்பனை செய்கிறாய் போலிருக்கிறது. இல்லாவிடில் கற்பகவிருக்ஷம் இருக்கும் அளகாபுரியில் வசிக்கும் உன் பாரியை உன்னைப் பிரிந்தும் மற்ற சுகங்களை அனுபவிக்க மாட்டாள் என்று என் எண்ணவேண்டும் என்று நீ சந்தேகப்படக்கூடும். ஆனால் நான் சொல்லுவது தற்புகழ்ச்சியால் அல்ல. பொய்யபிமானத்தாலல்ல. உன்தோழியின் தன்மையை நன்குணர்ந்ததாலேயே இவ்வாறு கூறுகின்றேன். என்பேரில் அவளுக்குள்ள அளவுகடந்த அன்பிற்குக் காரணம் என்குணமல்ல. அவளது பதிவிரதா தர்மமே.

**98. பதவுரை :—**

கூந்தலால் தடுக்கப்பட்ட கடைக்கண் பார்வையோடும், மை இட்டப்படாமலும், மதுவை நிராகரித்திருப்ப தாலும் மையல் குணத்தை மறந்திருக்கும் அவ ளுடைய கண் உன்னைக் கண்டு உயர் நோக்கிப் பார்த்துத் துடிக்கும்போது மீன் துள்ளுவதால் அசையும் கரு நெய்தல் மலரின் காந்தியை அடையும்.

**சித்திர விளக்கம் :—**

என் காதலியின் கண்ணின் அழகை இச்சமயம் நன்கு காணமுடியாது. அதன் கடைக்கண், நோக்கே விசித்திர மானது. இப்பொழுதோ சரிவர வாரிப் பின்னாத கூந்தல் படர்ந்து அதை மறைக்கும். அதனை ஒளிவீசச் செய்யும் மை இட்டப்பட்டிராது. என்னுடன் கூடிக் குலாவி மதுவைக் குடித்து விழிக்கும்பொழுது உல கத்தை மயக்கும் மாயம் அதில் தோன்றும். இப் பொழுதோ மது அருந்தா விரதம் மிருப்பாள். இவ் வாறு அதன் உயர்ந்த தோற்றத்தைக் காண உனக்குக கூடாதெனினும், இந்நிலையில்கூட அவள் உன்னை உயர் நோக்கிப் பார்க்கும்பொழுது, அக்கண் அழகைக் கண்டு பிரமிப்பாய். சுப சகுன சூசகமாக இடது கண் துடிக்கும். அது சிறுமீன் துள்ளுவதால் அசையும் கரு நெய்தல் போலும் கரிய மின்னல்போலும் பிரகாசிக்கும். இயற்கை அழகுடையோர் எவ்வித அவஸ்தையிலும் மனோகரர்களாக இருப்பார்கள் என்பதை உணர்வாய்.

**99. பதவுரை :—**

முன் சம்போக முடிவில் என் கையால் பிடிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டும் இப்பொழுதோ என் விரல்களின் ஸ்பரி சத்தையும் பல நாள் பரிச்சயமுள்ள முத்து மாலையின் சேர்க்கையும் இழந்த இளம்வாழைத் தண்டைப் போன்று வெண்மையான இவளது இடது துடையும் துடிக்கும்.

**சித்திர விளக்கம் :—**

மற்றும் பல சகுனங்களும் உண்டாகும். இடது துடையும் துடிக்கும். முத்துக்கள் கோத்த அரைஞாண் இடுப்பில் இராது. ஆனுல் துக்கத்திலும் சுபாவ சௌந்தரியம் மட்டும் அவளை விடாது.

**100. பதவுரை :—**

நீ சேரும் சமயம், முகிலே, அவள் நித்திரையில் சுகமாக ஆழ்ந்திருப்பின் பக்கத்தில் ஒரு யாமகாலம் பொறுமையுடன் காத்திருக்கக் கடவாய் ; வெகு கஷ்டப்பட்டுக் கனவில் கணவனைக் கண்டு கழுத்தில் இரு கைகளாலும் இறுகத் தழுவிய என் காதலியின் ஆலிங்கனம் நடுவில் நழுவிப்போதல் நலமன்று.

**சித்திர விளக்கம் :—**

அவளுக்கு சாதாரணமாக உறக்கம் வருவதில்லையென்றும் அதனுல் கனவில் கூட என்னோடு சேர சந்தர்ப்பம் கிடைப்பதில்லையென்றும் ஏற்கெனவே கூறிவிட்டேன். ஆதலால் ஒருவேளை நீ என் வீடுபோய்ச்சேரும் சமயத்தில் அவள் ஆழ்ந்த நித்திரையிலிருந்தால் அவசரப்பட்டு எழுப்பிவிடாதே. அவளைத் தூங்கும் கோலத்தில் காணும்பொழுது என்னுடன் கனவில்கூடி, கழுத்தில் இருகைகளையும் இறுகக்கட்டி ஆலிங்கனம் செய்து சுகப்படுகிறுள் என்று விளங்கும்; நடுவில் கனவைக்கலைத்தால் ஆராத் துயரடைந்து உன்னிடம் வெறுப்புற்று உன் செய்தியையும் ஒருவேளை கேட்க மறுத்துவிடுவாள்.

**101. பதவுரை :—**

மழைத்துளிகள்கூடிய குளிர்ந்த காற்றுல் அவளை எழுப்பி, புதிதாக மலரும் மாலதி மொட்டுக்களோடு தானும் ஆறுதலடைந்து ஆச்சரியத்தால் கண்களை விரித்து விழிக்கும் அம்மானினியிடம் ஜன்னலில் வீற்றிருந்து, மின்னலை உள்ளடக்கி, மெதுவான இடியின் ஓசை மொழிகளால் பேச ஆரம்பிப்பாய்.

**சித்திர விளக்கம் :—**

*அவள் தானுக விழிக்கும் சமயத்திற்கு காத்திருந்து, அப்பொழுது சிறிதாகத் தூறி மழைத்துளிகளோடு கூடிய குளிர் காற்றை அனுப்பி எழுப்புவாய் ; அக் காற்றுப்பட்டதும் கனவின் களைப்பு நீங்கிக் கண்ணைத் திறந்துபார்ப்பாள்; ஜன்னலுக்கு வெளியில் மாலதி மலர்கள் புதிதாக மலர்ந்திருப்பதைக்கண்டு களிப்பாள். அப்பொழுது அங்கே உட்கார்ந்திருக்கும் உன்னையும் காணுவாள். ஒருபக்கம் ஆச்சரியமும் மற்ருேர் பக்கம் யாரோ அயலான் நம்மைப் பார்க்கிறுன் என்ற நாண மும் அவள் முகத்தில் தோன்றும். உன்னைக் கண் கொட்டாமல் உற்று நோக்குவாள் ; அப்பொழுது பளிச்சென்று மின்னிக் காரியத்தைக்கெடுத்து விடாதே. மெதுவாக இடிமொழியால் பின்வரும் செய்தியைக் காதில் இனிமையாகக் கூறுவாயாக.*

**102. பதவுரை :—**

*சுமங்கிலியே, உன் கணவனின் மித்திரனுன மேகம் யான்; அவன் செய்தியை என் இதயத்தில் வைத்து உன் அருகில் வந்திருக்கிறேன்; வெளியூர் சென்று வழியில் களைப்பாறும் பதிகர்களின் கூட்டங்களை, மந்த மாகக் கர்ஜித்துத் தங்கள் பத்தினிகளின் கூந்தல் முடிச்சுகளை அவிழ்த்துவிட ஆவலுண்டாக்கித் துரிதப் படுத்தும் தன்மையன் என்று என்னை அறிவாய்.*

**சித்திர விளக்கம் :—**

*ஆரம்பத்தில் "சுமங்கலியே" என்று அழைப்பாய். அதனுலேயே சிறிது ஆறுதல் அடைந்து உன் செய் தியில் விசுவாசம் கொள்ளுவாள். முதலில் உன்வர லாற்றைத் தெரிவித்து அடியிற் கண்டவாறு கூறுவாய். உன் பிராணநாதனுக்கு நான் பிரிய மித்திரன். அவன் என்னை உன்னிடம் தூது அனுப்பி இருக்கிறுன். அந்த செய்தியை வெகு நாளாக ஜாக்கிரதையுடன் என் உள்ளத்தில் விலையுயர்ந்த மாணிக்கம்போல் காத்துக்*

கொண்டு வந்திருக்கிறேன். யக்ஷனுக்கு மேகம் எவ்வாறு மித்திரனாகக்கூடும் என்று ஐயங்கொள்ளவேண்டாம். உன் புருஷனைப்போல் விரகவேதனையால் துன்புறுவோரனைவருக்கும் நான் தோழனாவேன். சாதாரணமாகத் தம் காதலிகளைவிட்டு வெளியூர் சென்றவர்கள் என் இடி முழக்கத்தைக் கேட்டதும், தம் பத்தினிகளை நினைத்து, வழியில் இளைப்பாறாமல், விரைந்தோடி வந்து விரகத்தைத் தீர்த்து அதற்கு அடையாளமாக ஏக வேணியாகத் தொங்கும் கூந்தலின் முடிச்சை அவிழ்த்து விரதத்தைப் பூர்த்தி செய்வார்கள். உன் புருஷன் சாபத்தால் அவ்வாறு செய்ய முடியாமல் என்னைத் தூது அனுப்பியிருக்கிறான். அதனால் இந்த அகால வேளையில் உன் அருகில் வந்திருக்கிறேன்.

**103. பதவுரை :—**

இவ்வாறு கூறவே, மாருதியை மைதிலிபோல், உவகை பொங்கும் உள்ளத்தினளாய் உயர் நோக்கிப்பார்த்து மரியாதை செய்து மேற்கூறுவதை மிகக் கவனத்துடன் கேட்பாள். அன்பனே, கற்புள்ள மங்கையருக்குக் கணவரிடமிருந்து கிடைக்கும் செய்தி அவரோடு சேருவதைக் காட்டிலும் சிறிதே குறைந்ததாகும்.

**சித்திர விளக்கம் :—**

நீ இவ்வாறு உரைத்ததும், அவளுக்குண்டாகும் குதூகலத்திற்கு அளவிருக்காது. அன்று அரக்கிகளின் கொடுமைகளுக்கஞ்சி உயிர் துறக்கத் துணிந்த காலை, அசோக மரத்தின்மேலிருந்து இராமன் செய்தி தந்து உயிரளித்த அனுமனைக்கண்ட சீதைபோல், மயிர்க் கூச்சலுடன் உன்னை உயர்நோக்கிப் பார்ப்பாள்; கையெடுத்துக் கும்பிடுவாள். நீ மேலே சொல்லும் ஒவ்வோர் சொல்லையும் பரம சாவதானத்துடன் கேட்டுச் செவி அமிர்தமென்று சந்தோஷப்படுவாள். கண்காணாத கணவரிடமிருந்து செய்தி கிடைக்கும் சமயத்தில் அவரை நேரில் கண்டதுபோல் பதிவிரதைகள் இன்புறுவார்கள் என்று உனக்குத் தெரியாதா ?

104. பதவுரை :—

சிரஞ்சீவியே, எனது பிரார்த்தனையாலும் உனது புண்ணியத்திற்காகவும் அவளிடம் இவ்வாறு உரைப் பாய்; "உன் காதலன் ராமகிரி ஆசிரமத்தில் வசிக்கிறான். உன்னைப் பிரிநதும் உயிருடன் இருக்கிறான். உன்னையும் க்ஷேமம் விசாரிக்கிறான்." சுலபமாக ஆபத்தடையும் பிராணிகளைப்பற்றி முதலில் கூறவேண்டியது இதுதா னல்லவா.

சித்திர விளக்கம் :—

இனி நீ சொல்லவேண்டிய செய்தியைக் கூறுகின்றேன். நீ சாவதானமாகக்கேள். அதை நீ ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்க் கொடுத்து சிரஞ்சீவியாக வாழ வேண்டும், என் பிரார்த்தனை மட்டும் அல்ல ; உனக்கும் புண்ணியமுண்டு. பின்வருமாறு உரைப்பாய்:—உன் கூட் டாளி ராமகிரி ஆசிரமத்தில் வசித்து வருகிறான். உன் னைப்பிரிந்து வாடினாலும் பிராணனுக்கு பயமில்லை. நீயும் அவ்வாறே தைரியமாயிருக்கிறாய் என்று அறிய விரும்புகிறான். முதன் முதலில் இந்த அற்ப தேகத் தைப்பற்றித்தானே சொல்ல வேண்டுமென்று ஆத்திரப் படாதே. நிலையில்லாத தேகிகளுக்கு என்றும் ஆபத்து எதிரில் நிற்கிறது. அந்த தேகமில்லாமலும் வேறு சுகமில்லை. ஆதலால் அவனுடைய மனோரதங்களைக்கூறு முன் உன் க்ஷேமத்தை விசாரிப்பது அவசியமாகிறது.

105. பதவுரை :—

'உன் இளைத்த அவையவங்களைப்போல் அவன் அங்கங் கள் மிகமெலிந்தும் நீ ஆறாத் துயருருவதுபோல் அவனும் வெகு வருந்தியும், உன் கண்ணில் பெருகும் தாரைபோல் அவன் நயனங்கள் நீர் சொரிந்தும், உன் உள்ளத்தில் குடிகொண்ட கவலைபோல் அவன் சித்தத் தில் சிந்தை சூழ்ந்தும், உனது உஷ்ணமான பெருமூச்சு போல் அவனும் நீண்ட சூடான சுவாசம் விட்டும், உன்

மனத்திலுள்ள மனோரதங்களைப்போல் அவனும் விதி யென்னும் விரோதியால் தடுக்கப்பட்டுத் தூரத்தில் இருந்தும் தன் கற்பனைகளால் உன்னை அடைகின்றான்.

**சித்திர விளக்கம் :—**

உன்னைப் பார்த்தால் நீ மெலிந்திருக்கிறாய். அவனை நினைத்தாலோ யார் அதிகமாக இளைத்திருக்கிறார் என்று தீர்மானம் செய்வது துர்லபமாகிவிடுகிறது. அவ்வாறே தேகதாபத்திலும் கண்ணீர் விடுவதிலும் மனவருத்தத்திலும் ஒருவரை யொருவர் ஒத்திருக்கிறீர்கள். ஆதலால் உங்களைப் பிரித்து வைத்திருக்கும் கொடிய விதியைக் கற்பனையால் வென்று அவன் உன்னிடம் வந்திருக்க வேண்டும். நீயும் சதாகாலமும் அவனிடம் வசிக்க வேண்டும் ; இல்லாவிடில் ஒருயிரும் இரண்டு உடலும் போல் ஒருவித மாறுதல் உண்டாகக் கூடுமோ ?

**106. பதவுரை :—**

எவன் தோழிகளுக்கெதிரில் சொல்லக்கூடிய வெளிப் படையான பொருளை உன் முகத்தின் ஸ்பர்சத்திற் காசைப்பட்டுக் காதில் இரகசியமாகச் சொல்லுவானோ, அவன உன்னைக் காதால் கேட்பதற்கும் கண்ணால் காணுவதற்கும் இயலாது, வருத்தத்துடன் தொகுத்த வாக்கியங்களை என் மூலமாகக் கூறுகிறான்.

**சித்திர விளக்கம் :—**

தோழிகள் கூடியிருக்கும்பொழுது உன்னை முத்தமிட வேண்டுமென்று அடங்காத ஆசைக்கொண்டு பகிரங்க மாகச்சொல்லக்கூடிய அற்ப விஷயத்தைப் பரமரகசியம் போல்பாவித்துக் காதிற்குள் பேசுவது அவன் வழக்க மாம். அக் காதலன் இப்பொழுது உன்னுடன் பேசுவ தற்கும் உன்னைப் பார்ப்பதற்கும் முடியாமல் வெகு தூரத்திலிருந்து வருத்தப் படுகின்றான். அந்த துக்கத் தைப் பதங்களில் புகுத்தி என் முகத்தின் மூலம் உனக்குப் பின்வருமாறு கூறுகிறான்.

**107. பதவுரை :—**

பிரியங்குக் கொடியில் உன் அங்கத்தையும், ஒடுங்கிய மான் விழியில் உன் பார்வையையும், சந்திரனில் உன் முகத்தின் காந்தியையும், மயில் தோகையில் உன் கூந்தலேயும், நதிகளின சிற்றலேகளில் உன் புருவத்தின் விசித்திரப போக்கையும் பார்க்கின்றேன். ஆயினும், அந்தோ ! கொடிய கோபமுடையவளே ! இவை ஒன்றினும் உனக்கு உவமை காணவில்லே.

**சித்திர விளக்கம் :—**

உன்னேத்தான் பார்க்க முடியவில்லேயே, உன் அழகை யேனும் இதரபொருள்களில் கண்டு ஆறுதலடையலா மென்று, உன் உடலேப்போல் மெலிந்திருக்கும் பிரியங் குக்கொடியை நோக்கினேன். உன் கடைக்கண் பார் வையை யொத்த பயந்த மான் விழியைப் பார்த்தேன் ; உன் முகத்தினழகைக் களவு செய்திருக்கும் சந்திர னேத் தரிசித்தேன் ; உன் கூந்தலேப்போல் அடர்ந்திருக் கும் மயில் தோகையைக் கவனித்தேன் ; உன்னிட மிருந்து இப்பொருளகளிடம் மனதைச் செலுத்திவிட் டேன் என்று வீணில் அசூயைகொண்டு கோபிககவேண் டாம். இப்பொருள்களேப் பார்த்து உனக்கு சமமான அழகு அவற்றிடமில்லேயென்று எனமனம் உன்னிடம் பன்மடங்கு பிரியத்துடன் திரும்பி வருவதற்குத்தான் அவைகள் பிரயோசனப்பட்டன.

**108. பதவுரை :—**

பிரேமையின் அதிசயத்தால் கோபித்திருக்கும் உன்னே வர்ணக் கற்களால் சிலேயில் எழுதி உன் பாதத்தில் வீழ்ந்திருப்பதாக என்னேயும் வரைய விரும்புங்காலே ஓயாமல்குவியும் கண்ணீரால் என் பார்வை தடுக்கப் படுகின்றது. அதனில்கூடக் கொடிய விதி நமது சேர்க்கையைச் சகிக்கவில்லேபோலும்.

**சித்திர விளக்கம் :—**

நாமிருவரும் பிரணயகலகம் செய்யும்போது நீ கோபித்திருக்கும் காட்சிதான் எனக்கு மிகவும் பிரியமானதாகையால் அதை வர்ண தாதுக்களால் பெரிய பாறையில் ஓவியமாக வரைந்து உன் பாதத்தில் நான் வீழ்ந்திருப்பதாக அதில் எழுத விரும்பி தினம் காலையில் ஆரம்பிப்பேன். ஆனால் ஒருகோடு போடுமுன் என் கண்களில் நீர் நிறைந்து பார்வையைத் தடுத்துவிடும். கண்ணீர் கீழே விழுந்து கோட்டைக் கெடுததுவிடும். வேண்டுமென்று நம்மைப் பிரித்து வைத்திருக்கும் கொடிய விதியை உபாயத்தால் நாம் வென்றுவிட முடியுமா ? சித்திரத்தில்கூட நாம் சேரக்கூடாது என்று அது அதிகாரம் செலுத்தி வருகின்றது.

**109. பதவுரை :—**

எவ்வளவோ கஷ்டப்பட்டு உன்னைக் கனவில் கண்டு கூடி, இரக்கமின்றி இறுகத்தழுவும்பொருட்டு ஆகாயத்தில் கையை விரிக்கும்பொழுது, பார்த்திருக்கும் ஸ்தல தேவதைகளின் முத்துப்போன்ற பெரிய கண்ணீர்த் துளிகள் மரங்களின் துளிர்களின் மீது பெருமிதமாக வீழ்கின்றன.

**சித்திர விளக்கம் :—**

சாதாரணமாகத் தூங்குவதில்லை, ஆதலால் கனவு காண்பது அபூர்வம். ஒரோர் தினம் அதிருஷ்ட வசத்தால் கனவில் உன்னைக் கண்டதும், உன் உடல் நோகுமென்று சிறிதும் கவனியாது இறுகக்கட்டி ஆலிங்கனம் செய்ய ஆரம்பிப்பேன். அப்பொழுது அந்த எண்ணத்திற்கேற்ப உறங்கும் உடலிலிருந்து கைகள் மேலே போகும். திடுக்கிட்டு விழித்துப் பார்த்தால் மேலே மரங்களின் துளிர்களிலெல்லாம் முத்துப் போன்ற பனித் துளிகள் தெரியும். என் செய்கையைக் கண்டு பரிதவித்த ஸ்தல தேவதைகளின் கண்ணீர் தானென்று நினைப்பேன்.

110. **பதவுரை :—**

தேவதாரு விருக்ஷங்களின் தளிர் மொட்டுக்களைப் பிளந்து அவற்றிலிருந்து வழியும் பாலின் நறுமணம் கமழ்ந்து கொண்டு இமயமலையிலிருந்து தென் திசை நோக்கி வீசும் மாருதங்களை, என் கட்டழகியே, ஒருவேளை உன் அங்கங்களை ஸ்பர்சித்து வந்திருக்குமென்று எண்ணி நானும் ஆலிங்கனம் செய்கின்றேன்.

**சித்திர விளக்கம் :—**

எல்லோரும் வஸந்த காலத்தில் வீசும் தென்றலை விரும்புவார்கள். எனக்கோ அவைகள் துக்கத்தை விருத்தி செய்கின்றன. ஆனால் வடதிசையிலிருந்து இமயமலையின் சீதளத்துடன் குளிர்காலத்தில் வீசும் மாருதத்தின் மீது எனக்கு மிகவும் விருப்பம். ஒருவேளை வீட்டுக்கு வெளியிலுள்ள உத்தியான வனத்தில் என்னை நினைத்து நிற்கும் உன் உடல் மீது பட்டு என்னிடம் வந்திருக்குமோ வென்றெண்ணி அதை மிகவும் ஆவலுடன் ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறேன்.

111. **பதவுரை :—**

தொலையாது நீளும் நிசியை எங்ஙனம் கணம் போல் கழிப்பேன்; எல்லா நிலைகளிலும் தினத்தின் தாபமும் எவ்வாறு தணியும்; மின்னல் விழியாளே, இவ்விதம் கிட்டாத கற்பனைகள் செய்து உன் பிரிவாற்றுமையின் துயரத்தால் பெரிதும் பரிதவிக்கின்றேன்.

**சித்திர விளக்கம் :—**

இந்த இரவு மூன்று யாமம் என்பார்கள். எனக்கோ முன்னூறு யாமம் போலிருக்கின்றதே. அவளோடு இருக்கும் பொழுது கணம்போல் காணப்பட்டதே. மறுபடியும் அந்தபாக்கியம் பெறுவேனோ? பகல் பொழுதிலும் என்ன வேலை செய்தாலும் அவள் நினைவால் ஓயாமல் துயருகின்றேன். அவளுடன் இருக்கும் பொழுது

கொடிய கோடையும் குளிர்ந்த நிலவு போல கடந்ததே. அதைத் திரும்பவும் அனுபவிப்பேனோ ? இவ்வாறு சில சமயம் மனக் கோட்டை கட்டியும், இந்த வருஷ முழுதும் பிழைத்திருக்க முடியாதென்று மற்றக் காலங்களில் மனமிழந்தும் விரக வேதனை சகிக்க முடியாமல் வருந்து கின்றேன்.

**112. பதவுரை :—**

வருங்காலத்தைச் சிந்தித்து என் மனத்தை நானே தைரியப்படுத்திக் கொண்டு வருகிறேன் ; இனியாளே ! நீயும் அதிக அதைரியம் அடையவேண்டாம். அழியாத சுகத்தை அடைந்தவர் யார் ? தீராத துக்கத்தைத் தாண்டாதவர் யார் ? சக்கரம் சுற்றுவதுபோல் பாக்கி யமும் மேலும் கீழும் மாறி மாறிச் சுழலுகிறது.

**சித்திர விளக்கம் :—**

மிகவும் வருத்தப்படுகின்றேனே, அதனால் என் பிராண னுக்கு அபாயம் நேரிடுமோவென்று அஞ்சாதே. வருங் காலத்தில் உன்னோடு கூடும் ஆசையால் மனத்தைத் தேற்றித் தைரியத்தைக் கடைப் பிடித்திருக்கிறேன் ; நீயும் அதே ஆசையின பலத்தால் பயத்தை விட்டு உறுதியுடன மீதி காலத்தைக் கழிக்க வேண்டும். விதியின் சுபாவம் உனக்குத் தெரிந்ததுதானே ! ஓயாமல் சக்கரத்தைப்போல் சுழனறு, மேலிருப்பவரைக் கீழும், கீழிருப்பவரை மேலும் கொண்டுபோய்ச் சேர்க் கின்றது. அழியா சுகத்தை அடைந்தவருமில்லை. என்றும் துக்கப்பட்டவர்களுமில்லை. நமது சோகத்தின் முடிவு சீக்கிரம் வந்து விடும். ஆதலால் சிறிது பொறுத் திருப்பாய்.

**113. பதவுரை :—**

சார்ங்க வில்லேந்தும் விஷ்ணு பகவான் தன் சேஷ சயனத்திலிருந்து எழுந்திருக்கும்பொழுது என் சாபம் முடிவடையும் ; இந்த மீதி மாதங்கள் நான்கையும்

கண்களை மூடிக் கொண்டு கழிப்பாய்; பிறகு பூர்ண சந்திரன் பிரகாசிக்கும் சரத்கால இரவுகளில் விரக காலத்தில் கற்பனை செய்த நம் மனோரதங்களனைத்தை யும் பூர்த்தி செய்வோம்.

**சித்திர விளக்கம் :—**

இப்பொழுது ஆடிமாதம். விஷ்ணு இந்த நான்கு மாதங்களிலும் தன் சேஷசயனத்தில் நித்திரை செய் வார். அவர் துயிலெழும் கார்த்திகை மாதத்தில் என் தண்டனை தீர்ந்து திரும்புவேன். அந்நாளை நினைத்து இந்த நான்கு மாதங்களையும் பல்லைக் கடித்துக் கொண்டு கழித்துவிடு. நாம் கூடும் சமயம் நல்ல வேளையாக சரத்காலமாக இருக்கும். சந்திரன் தன் முழுச் சோதியையும் நமக்கு அளித்து அருளுவான். பௌர்ணமி நிலவில் நாம் இப்பொழுது கற்பனையில் காணும் சுகங்களை யெல்லாம் உண்மையில் அனு பவித்து இன்புறுவோம்.

**114. பதவுரை :**

பின்னும் அவன் கூறுகிறான். 'முன்னொரு நாள் படுக்கையில் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு தூங்கிய நீ திடீரென்று பெரிய குரலுடன் அழுதுக் கொண்டு விழித்தெழுந்தாய். பன்முறை நான் கேட்டப் பின், புன்னகையுடன் மாற்றானுடன் நீ களித்திருக்கக் கனவு கண்டேன், கள்வனே' எனறு கூறினாய்.

**சித்திர விளக்கம் :—**

ஓயாமல் உன்னையே நினைத்திருப்பதற்கு அறிகுறியாக முன் நடந்த சம்பவத்தை என்னிடம் சொல்லியனுப்பி யிருக்கிறான். 'ஓரிரவு சயனத்தில் என்னை கழுத்தைக் கட் டிக்கொண்டு நீ அயர்ந்து நித்திரை செய்து விட்டாய். நடு நிசியில் ஓவென்று அலறிக் கொண்டு எழுந்தாய். நான் பன்முறை பிரார்த்தித்துக் கொண்ட பின் புன்சிரிப்புடன் வேறொன்றுமில்லை, ஓர் கனவு கண்டேன், அதில் என்னை

விட்டு வேறோர் மங்கையுடன் நீ உல்லாசமாக இருப்பதைக் கண்டேன். துக்கம் தாங்க முடியாமல் கத்தி விட்டேன். நீ திருடன் என்பதில் சந்தேகமில்லை. உன்னிடம் தப்பு ஒன்றுமில்லையேல், யான் அவ்விதக் கனவு காண்பது எங்ஙனம்' என்று பரிகசித்தாய்.

**115. பதவுரை :—**

இந்த அடையாளத்தால் எனது க்ஷேமத்தை அறிந்து ஊர்வம்பை நம்பி என்னிடம் அவநம்பிக்கை கொள்ளாதே. பிரிவால் அன்பு குன்றி விடுமென்று அறியாதார் கூறுவர். ஆனால் இஷ்டமுள்ள பொருளிடம் அனுபவிக்காத ஆசைகள ஒன்று சேர்ந்து பிரேமைக் குவியல்களாகின்றன.

**சித்திர விளக்கம் :—**

மேற்கூறிய அந்தரங்க அடையாளத்திலிருந்து நான் உயிருடன் க்ஷேமமாக விருப்பதை உணர்ந்து கவலை நீங்குவாய். உன் மாதிரி நிலைமையுள்ளோரைப்பற்றி ஊரார் பலவாறு வம்பு வளர்ப்பது வழக்கம். 'இவள் புருஷன் இறந்திருக்க வேண்டும். பிரிவோடு பிரீதியும் பறந்துபோகும் என்ற பழமொழி பொய்யாகுமா' என்பார்கள். இந்த மூடமொழிகளைக் கேட்டு மனம் புண்ணுக வேண்டாம். நம்மைப்போல் உண்மைக் காதலருக்குப் பிரிவினால் பிரேமை அதிகரிக்குமே ஒழிய ஒருநாளும் குறையாது. செலவழிக்காத பொன்னைப் போல் குவிந்து நாம் கூடும் பொழுது ஆனந்தமாக அனுபவிப்பதற்கு சாதகமாக இருக்கும் என்பதை எண்ணி மனத்தை திடப்படுத்திக்கொள்ளவேண்டும்.

**116. பதவுரை :—**

முதல் விரகத்தால் தாங்காத துக்கமுடைய உன் தோழிக்கு இவ்வாறு ஆறுதல் அளித்து முக்கண்ணன் வாகனத்தின் கொம்பால கீறப்பட்ட சிகரத்தையுடைய மலையிலிருந்து துரிதமாகத் திரும்பி வந்து அறிகுறி

யுடன் அனுப்பப்பட்ட அவளது க்ஷேம வார்த்தைகளால் காலையில் மலரும் மல்லிகைபோல் தளரும் என்னுயிரையும் தாங்கியருளுவாய்.

**சித்திர விளக்கம் :—**

இதோடு என் செய்தி முடிந்து விட்டது. கவனத்துடன் மனத்திலிருத்தி அவளிடம் சேர்த்துவிட்டு, அதற்கு பதிலாக அவள் கூறும் செய்தியையும், அனுப்பும் குறிகளையும் என்னிடம் விரைவில் கொண்டு வந்து கொடுக்கவேண்டும். கைலாசகிரியில் பரமசிவனைத் தரிசிக்கவேண்டும், அவனது வாகனமான நந்தி துள்ளிக் குதித்துக் குன்றைக் கொம்பினால் கிழிப்பதைக் காணவேண்டுமென்று கால தாமதம் செய்து விடாதே; என் உயிர் காலையில் மலர்ந்த மல்லிகையைப் போல் இந்த விரகதாபத்தால் வாடிப் போகும். பதில் செய்தியாகிய நீரை வார்த்து பிழைக்கச் செய்யும் பொறுப்பு இனி உன்னைச் சேர்ந்ததாகும்.

**117. பதவுரை :—**

நல்லோனே, எனக்கு இந்த உறவினர் கடன் தீர்க்க இசைந்தனையோ? கம்பீரமாக மௌனம் சாதிப்பதால் மறுத்து விட்டாய் என்று நான் நினைக்க மாட்டேன. சாதகப்பக்ஷி யாசிக்கும் பொழுது பேசாமலே, நீ, நீர் தருவதில்லையா? அன்பர்களின் பிரார்த்தனைக்குப் பெரியோர் பதில் சொல்வது அதனைச் செய்து முடிப்பதே.

**சித்திர விளக்கம் :—**

என் பேச்சு முடிந்ததும் நீ இடி முழக்கத்தால் பதிலுரைப்பாய் என்று எதிர்பார்த்தேன். ஆனால், நீ கம்பீரத்துடன் மௌனம் சாதிக்கிறாய். என் தூதை மறுத்து விட்டாயோ வென்ற சந்தேகம் உண்டாகிறது. ஆனால் அவ்வாறு ஐயம் கொள்வது அநியாயமாகும். சாதகப் பட்சி கூவும் பொழுது பேசாமல்தான் அதன் தாக சாந்தி செய்கிறாய். பெரியோர்கள் தம்மிடம் அன்பர்கள்

பிரார்த்தனை செய்தால் வாயால் ஒருமுறை ஒப்புக் கொண்டு பிறகு அதைப் பூர்த்தி செய்யப் புகுவதில்லை. காரியத்தை செய்து முடிப்பதுதான் ஒரே பதிலாகும். நீயும் என் கோரிக்கையை ஏற்று அவ்வாறு செய்வாய் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

**118. பதவுரை :—**

உனக்கு ஒவ்வாத இப்பிரார்த்தனையை, நேசத்தாலோ இவன் கஷ்டப்படுகிறான் என்ற கருணையாலோ, அங்கீகரித்துப் பூர்த்தி செய்த பிறகு, மாரிகாலத்து மேன்மையைப் பெற்று, இஷ்டமுள்ள தேசங்களில் திரிவாய். உன் மின்னலை விட்டு எக்கணமும் கார்முகிலே! என்னைப் போல் பிரிந்து வருந்தாதிருக்கக் கடவாய்.

**சித்திர விளக்கம் :—**

பொது ஊழியனான நீ, ஒரு தனிப் புருஷனுக்குத் தூது செல்வது சாதாரணமாக ஒவ்வாத வேலைதான். ஆயினும் நான் உன்னைத் தோழனாகக் கொண்டு விட்டேன். அந்த நேசத்தாலோ அல்லது எனது நிலைமையைக்கண்டு மனமிரங்கியோ இந்தக் காரியத்தை அவசியம் பூர்த்தி செய்யவேண்டும். பிறகு உன்னிஷ்டம் போல் மாரிகால முழக்கத்துடன் பல தேசங்களில் திரியலாம். பிரதியுபகாரத்திற்காக நீ இத்தொண்டு புரியாதிருப்பினும் உனக்கு நான் ஒரு வரம் தருகிறேன். என் காதலியைப் பிரிந்து நான் வருந்துவதுபோல, உன் மின்னல் கொடியைப்பிரிந்து நீ ஒரு கணம் கூட விரகத்தால் வாடமாட்டாய்.

(முடிவு)